216826

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

ஏப்ரல் - 1, 1997 தொகுதி . 27
எண் 1.

D
V211, 31 N97
N97.27.1
216826

ரியீடு 24-7-98 Issued 24-7-98

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, ஏப்ரல் 1, 1997 – தொகுதி 27– எண் 1

Tuesday the 1st April, 1997 – Volume 27 – No. 1

ப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Assembly Secretariat, Fort St. George,
Chennai-600 009

[Price Rs. 3.00

01–04–1997

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii-vi |
| Personnel of the Government of Tamil Nadu | vii-x |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xiii-xiv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xv-xxv |
| 1. **இரங்கல் குறிப்பு--** | |
| முன்னாள் உறுப்பினர் மறைவு குறித்து | 1-2 |
| 2. **வினாக்கள்-விடைகள்--** | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 2-39 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (எட்டாம் பட்டியல்) | 40-70 |
| 3. **அமரர் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் கொலைக் குற்றம் சாட்டப்பட்டவர்கள் முன்னாள் முதல்வர் செல்வி ஜெ. ஜெயலலிதாவுடன் எடுத்துக்கொண்டதாகப் பத்திரிகைகளில் வெளிவந்த புகைப்படம் குறித்து--மாண்புமிகு அவை முன்னவரின் அறிக்கை** | 71-94 |
| 4. **அறிவிப்புகள்--** | |
| (அ) நிகழ்ச்சி நிரலிலுள்ள கவன ஈர்ப்பைப் பின்னர் எடுத்துக் கொள்ளுதல் | 95 |
| (ஆ) பேரவை அலுவல்கள் குறித்து | 169 |

| | பக்கங்கள் |
|---|---|
| 5. அரசினர் சட்டமுன்வடிவு--அறிமுகம் செய்தல்-- | |
| தமிழ்ப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997 | 95 |
| 6. மானியக் கோரிக்கைகள், 1997-98, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி | |
| (அ) கோரிக்கை எண் 32--வீட்டு வசதி<br>(ஆ) கோரிக்கை எண் 33--நகர்ப்பகுதி வளர்ச்சி | 96-169 |
| மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி | 101,114,125, 151-166 |
| *திரு. ப. ரங்கநாதன் | 101-109 |
| *திரு. இரா. மணிமாறன் | 109-115 |
| திரு. சி. வேலாயுதன் | 116-119,133 |
| திரு. பால. ஆனந்தன் | 119-124 |
| திரு. இரா. மூக்கப்பன் | 124-128 |
| *திரு. கே. சுப்பராயன் | 128-133 |
| திரு. பா. கோபால் | 134-136 |
| *திரு. எல். சந்தானம் | 136-139 |
| திரு. மீ.அ. வைதியலிங்கம் | 139-143 |
| திரு. எஸ்.எஸ். மணிநாடார் | 143-145 |
| *திரு. செங்கை சிவம் | 145-151 |
| 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்-- | 169-170 |


2168246.



## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்
## ஆளுநர்--செல்வி எம். பாத்திமா பீவி
## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 1. முதலமைச்சர் | : | **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள்துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன் மற்றும் கடவுச் சீட்டு. |
| 2. கல்வி அமைச்சர் | : | **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை, முன்னாள் இராணுவத்தினர். |
| 3. மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம், மின்சாரம். |
| 4. வருவாய்த் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிர்வாகம், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள். |
| 5. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. கோ.சி. மணி :** நகராட்சி நிர்வாகம், சமுதாய வளர்ச்சி ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல். |

6. **வேளாண்மைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:**
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. **பொதுப்பணித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**
பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம், செயற் திட்டப் பணிகள்.

8. **போக்குவரத்துத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :**
போக்குவரத்து, நாட்டுடமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகம் மற்றும் நெடுஞ்சாலைகள், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. **தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:**
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு.

10. **உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கே.என். நேரு:**
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

11. **பால்வளத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. க. சுந்தரம்:**
பால், பாற்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்று வாரியம், இடவசதிக் கட்டுப்பாடு.

12. **தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:**
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகு கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

13. **சட்டத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆலடி அருணா:**
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், நிறுமப் பதிவு, கம்பெனிகள் பதிவு, கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவை பற்றிய சட்டம் இயற்றுதல் உட்பட).

14. **வணிக வரிகள் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்:**
வணிக வரிகள்.

15. **கைத்தறித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:**
கைத்தறி, துணித் தொழில், சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்பாடு.

16. **பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. **வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:**
வனம், சின்கோனா, கால்நடை பராமரிப்பு.

18. **வீட்டு வசதித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:**
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்பு திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

19. **ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**
கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம், [illegible]ந்துணவு.

20. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:
*செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம்.*

21. இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் : மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:
*இந்து சமய அறநிலையத் துறை.*

22. சமூக நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன் :
*சமூக நலன், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிர்வாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்.*

23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:
*ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்.*

24. சுற்றுலாத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:
*சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.*

25. கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:
*கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை, அரசு அச்சகம்.*

26. மீன்வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:
*மீன் வளம் மற்றும் மீன்வளக் கழகம், மகளிர் மற்றும் குழந்தைகள் நலன், இரவலர் காப்பு இல்லம்.*



# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—SELVI M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi :**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare and Passports.

2. **Minister for Education..** **The Hon. Prof. K. Anbazhagan:**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen.

3. **Minister for Health and Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Revenue** .. **The Hon. Thiru Nanjil K. Manoharan:**
Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

5. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugham:**
Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

7\. **Minister for Public Works** .. **The Hon. Thiru Duraimurugan:**
Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works

8\. **Minister for Transport** .. **The Hon. Dr. K. Ponmudi :**
Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Highways and Chennai Metropolitan Development Authority

9\. **Minister for Tamil Official Language and Tamil Culture** .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:**
Tamil Official Language and Tamil Culture

10\. **Minister for Food, Public Distribution System and Co-operation.** .. **The Hon. Thiru K.N. Nehru:**
Food, Price Control and Civil Supplies, Public Distribution Systems and Co-operation and Statistics

11\. **Minister for Milk** .. **The Hon. Thiru K. Sundaram:**
Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control

12\. **Minister for Labour** .. **The Hon. Thiru A. Rahman Khan:**
Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf

13\. **Minister for Law** .. **The Hon. Thiru Aladi Aruna:**
Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money lending and Legislation on Chits

14\. **Minister for Commercial Taxes** .. **The Hon. Thiru V. Thangapandian:**
Commercial Taxes



15\. **Minister for Handlooms** .. **The Hon. Thiru N.K.K. Periasamy:**
Handlooms, Textiles and Environmental Pollution Control

16\. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M.R.K. Panneer-selvam:**
Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees

17\. **Minister for Forest and Animal Husbandry** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:**
Forest, Cinchona and Animal Husbandry

18\. **Minister for Housing** .. **The Hon. Thiru K. Pitchandi:**
Housing, Rural Housing Development, Town Planning and Urban Development

19\. **Minister for Rural Industries and Registration** .. **The Hon. Thiru I. Periasamy:**
Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals

20\. **Minister for Information and Publicity** .. **The Hon. Thiru V. Mullaivendan:**
Information and Publicity, Film Technology and Cinematography Act

21\. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Pulavar B.M. Senguttuvan:**
Hindu Religious and Charitable Endowments.

22\. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. S.P. Sarkunapandian:**
Social Welfare, Orphanages and Correctional Administration and Integrated Child Development Service Schemes.

**23. Minister for Adi-Dravidar and Tribal Welfare** .. **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:**
Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

**24. Minister for Tourism** .. **The Hon. Thiru N. Suresh Rajan:**
Tourism and Tourism Development Corporation.

**25. Minister for Khadi and Printing** .. **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:**
Khadi Board, Bhoodan and Gramdan, Stationery and Printing and Government Press.

**26. Minister for Fisheries..** **The Hon. Tmt. S. Jenefer Chandran:**
Fisheries and Fisheries Development Corporation, Women's and Children's Welfare and Beggars Home.



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பேரவைத் தலைவர்**

*மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்*

**பேரவைத் துணைத் தலைவர்**

*மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி*

***மாற்றுத் தலைவர்கள் பட்டியல்**

1. திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்
2. திரு. இரா. ஆவுடையப்பன்
3. டாக்டர் வை. இராமசாமி
4. திரு. செ. இராமலிங்கம்
5. திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்
6. திரு. கே. சுப்பராயன்

**செயலாளர்**

*திரு. செ.சு. ஜானகிராமன்*

---

*25-1-1997 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களால் அவையில் அறிவிக்கப்பட்டது.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. டி. சாலமன் ஜெயபால், பி.எஸ்.சி., பி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. வெ. இராசாராமன், பி.எஸ்.சி., பி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 3. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 4. | திரு. டி. சுந்தரராஜலு, எம். ஏ. | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 5. | திரு. கா.ப. இராஜன், டி.ஆர்.எஸ்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 6. | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்.சி., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 7. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 8. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 9. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 10. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்.சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 11. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புச் செயலாளர் |
| 12. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 13. | திரு. எம். ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 14. | திருமதி வீ. நா. உமா, பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| 15. | திரு. க. ராஜகுரு, | .. | குழு அலுவலர் |
| 16. | திரு. எம். ஜோபாய், பி.காம். | .. | சார்புச் செயலாளர் |
| 17. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்.சி., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |

| | | | |
|---|---|---|---|
| 18. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 19. | திரு. ஜி. அனீஸ் அகமத், பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 20. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்.சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 21. | திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 22. | திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 23. | திருமதி என். துளசிபாய், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 24. | திரு. கே. ரவீந்திரன், எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 25. | திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 26. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 27. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 28. | திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 29. | திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 30. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| 31. | திரு. ம. பிலிப், எம்.ஏ. | .. | தலைமை நிருபர் |
| 32. | திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. | தலைமை நிருபர் |
| 33. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. | தலைமை நிருபர் |
| 34. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. | உதவி விவாதப் பதிப்பாளர் |
| 35. | திரு. ம. ஸ்ரீனிவாசலு, பி.காம்., பி.எல். | | உதவி விவாதப் பதிப்பாளர் |
| 36. | திரு. எஸ். அய்யாத்துரை | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)
## பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் செல்வராசு, திரு. ப. | .. | அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். | .. | மயிலாடுதுறை |
| 4. | அப்துல் நாசர், திரு. அ.வ. | .. | புவனகிரி |
| 5. | அப்துல் லத்தீப், திரு. ம. | .. | வாணியம்பாடி |
| 6. | அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 7. | அமரமூர்த்தி, திரு. டி. | .. | அரியலூர் |
| 8. | அய்யலுசாமி, திரு. லி. | .. | கோவில்பட்டி |
| 9. | அருண்குமார், திரு. பா. | .. | மேட்டுப்பாளையம் |
| 10. | அழகராஜா, திரு. என்.ஆர். | .. | தேனி |
| 11. | அழகிரி, திரு. ச. | .. | சிதம்பரம் |
| 12. | அழகுவேலு, திரு. ச. | .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 13. | அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 14. | அன்பழகன், திரு. வ. | .. | செய்யார் |
| 15. | அன்பில் பொய்யாமொழி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 16. | ஆசையன், திரு. பெ. | .. | ஆண்டிப்பட்டி |
| 17. | ஆண்டமுத்து, திரு. வெ. அ. | .. | பவானிசாகர் |
| 18. | ஆண்டி அம்பலம், திரு. எம். | .. | நத்தம் |
| 19. | ஆருண் ரஷீத், திரு. ஜே.எம். | .. | வில்லிவாக்கம் |
| 20. | ஆலடி அருணா, திரு. | .. | ஆலங்குளம் |

21. ஆல்பன், டாக்டர் வே. .. திருவட்டாறு
22. ஆவுடையப்பன், திரு. இரா. .. அம்பாசமுத்திரம்
23. ஆறுமுகம், திரு. வீரபாண்டி எஸ். .. வீரபாண்டி
24. ஆறுமுகம், திரு. டி.பி. .. திருச்செங்கோடு
25. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணாநகர்
26. ஆனந்தன், திரு. பால. .. வந்தவாசி (செ.வ.)
27. இரகுமான்கான், திரு. அ. .. இராமநாதபுரம்
28. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. .. மேலூர்
29. இராசமாணிக்கம், திரு. பி. .. ஒரத்தநாடு
30. இராசன், திரு. வி. பி. .. ராஜபாளையம் (செ.வ.)
31. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை
32. இராமசாமி, டாக்டர் வை. .. பண்ருட்டி
33. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
34. இராமச்சந்திரன், திரு. சி.இரா. .. தொண்டாமுத்தூர்
35. இராமச்சந்திரன், திரு. மா. .. திருவோணம்
36. இராமலிங்கம், திரு. ஏ. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
37. இராமலிங்கம், திரு. செ. .. திருவிடைமருதூர்
38. இராமன், டாக்டர் இ.எஸ். எஸ். .. பள்ளிப்பட்டு
39. இராமஜெயம், திரு. ந.பூ. .. மைலாப்பூர்
40. இராஜரெட்டி, திரு. ச. .. தளி
41. இராஜேந்தர், திரு. டி. .. பூங்காநகர்
42. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. .. ஆண்டிமடம்



43. இளங்கோ, திரு. கோ. .. அவினாசி (செ.வ.)
44. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
45. உதயசூரியன், திரு. தா. .. சங்கராபுரம்
46. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
47. கணேசன், திரு. இ. .. எடப்பாடி
48. கணேசன், திரு. கே. சி. .. ஜெயங்கொண்டம்
49. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்
50. கருப்பண்ண உடையார், திரு. ந. .. பாபநாசம்
51. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
52. கருப்புசாமி, திரு. டி. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)
53. கல்யாணம், திரு. குத்தாலம் பி. .. குத்தாலம்
54. கன்னையன், திரு. க. .. தொட்டியம்
55. காஞ்சனா கமலநாதன், டாக்டர் .. கிருஷ்ணகிரி
56. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை
57. கிட்டு, திரு. சைதை கா. .. சைதாப்பேட்டை
58. கிருட்டிணன், திரு. பசும்பொன் தா. .. சிவகங்கை
59. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஓட்டப்பிடாரம் (செ.வ.)
60. கிருஷ்ணன், திரு. எஸ். வி. .. நாங்குநேரி
61. கிருஷ்ணன், திரு. சீ. வெ. .. வேடசந்தூர்
62. குண்டன், திரு. டி. .. உதகமண்டலம்
63. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
64. கோதண்டம், திரு. ஏ. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)

| | | |
|---|---|---|
| 65. | கோபால், திரு. பா. | .. மேட்டூர் |
| 66. | கோபு, திரு. சி. | .. அணைக்கட்டு |
| 67. | கோமதி சீனிவாசன், திருமதி | .. வலங்கைமான் (செ.வ.) |
| 68. | கோவிந்தன், திரு. ப. | .. தாரமங்கலம் |
| 69. | கோவிந்தன், திரு. வி. | .. பேரணாம்பட்டு (செ.வ.) |
| 70. | சக்ரபாணி, திரு. ஆர். | .. ஒட்டன்சத்திரம் |
| 71. | சண்முகம், திரு. கோ. | .. திருப்பத்தூர் |
| 72. | சண்முகம், திரு. சி. | .. ஆலந்தூர் |
| 73. | சண்முகம், திரு. ம. | .. கிணத்துக்கடவு |
| 74. | சந்தானம், திரு. எல். | .. சோழவந்தான் |
| 75. | சந்திரசேகரன், திரு. சி. | .. சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 76. | சந்திரசேகரன், திரு. துரை. | .. திருவையாறு |
| 77. | சமயநல்லூர் செல்வராசு, திரு. எஸ். | .. சமயநல்லூர் (செ.வ.) |
| 78. | சம்பத், திரு. ஏ.ஜி. | .. முகையூர் |
| 79. | சரஸ்வதி, திருமதி ஆர். | .. தாராபுரம் (செ.வ.) |
| 80. | சற்குண பாண்டியன், திருமதி எஸ்.பி. | .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் |
| 81. | சாமிநாதன், திரு. மு.பெ. | .. வெள்ளக்கோவில் |
| 82. | சிங்காரவேலு, திரு. வி.பி. | .. வால்பாறை (செ.வ.) |
| 83. | சிவபுண்ணியம், திரு. வை. | .. மன்னார்குடி |
| 84. | சிவராமன், திரு. ஆர். | .. திருப்பத்தூர் |
| 85. | சிவராஜ், திரு. சு. | .. ரிஷிவந்தியம் |
| 86. | சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். | .. பனமரத்துப்பட்டி |



| | | |
|---|---|---|
| 87. | சிவானந்தம், திரு. ஆர். | .. ஆரணி |
| 88. | சிவாஜி, திரு. இ.ஏ.பி. | .. திருத்தணி |
| 89. | சின்னய்யா, திரு. வெ. | .. திருமயம் |
| 90. | சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். | .. விருதுநகர் |
| 91. | சுகவனம், திரு. இ.ஜி. | .. பர்கூர் |
| 92. | சுடலைமுத்து, திரு. அ. | .. போடிநாயக்கனூர் |
| 93. | சுதர்சனம், திரு. டி. | .. பூந்தமல்லி |
| 94. | சுந்தரம், திரு. க. | .. பொன்னேரி (செ.வ.) |
| 95. | சுந்தரம், திரு. ந. | .. காரைக்குடி |
| 96. | சுந்தரம், திரு. பி.ஆர். | .. ராசிபுரம் |
| 97. | சுந்தர், திரு. கே. | .. உத்திரமேரூர் |
| 98. | சுப்பராயன், திரு. கே. | .. திருப்பூர் |
| 99. | சுப்பிரமணி என்கிற சி.சு.மணி, திரு. சி. | .. திருவள்ளூர் |
| 100. | சுப்பிரமணி, திரு. பி.என். | .. ஆற்காடு |
| 101. | சுப்பிரமணியன், திரு. அ.லெ. | .. திருநெல்வேலி |
| 102. | சுப்புலட்சுமி ஜெகதீசன், திருமதி | .. மொடக்குறிச்சி |
| 103. | சுரேஷ் ராஜன், திரு. என். | .. கன்னியாகுமரி |
| 104. | செங்குட்டுவன், புலவர் பூ.ம. | .. மருங்காபுரி |
| 105. | செங்கை சிவம், திரு. | .. பெரம்பூர் (செ.வ.) |
| 106. | செல்லக்குமார், டாக்டர் அ. | .. தியாகராய நகர் |
| 107. | செல்வம், திரு. ரெ. | .. குளித்தலை |
| 108. | செல்வராஜ், திரு. டி. | .. உடுமலைப்பேட்டை |

109. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)
110. சேகரன், திரு. ஆர்.ஆர். .. ஓமலூர்
111. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்
112. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி
113. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)
114. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்
115. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
116. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
117. தங்கபாண்டியன், திரு. வே. .. அருப்புக்கோட்டை
118. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
119. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
120. தங்கவேல், திரு. அ. ல. .. சேலம்-2
121. தங்கவேல், திரு. என். .. குன்னூர் (செ.வ.)
122. தண்டபாணி, திரு. சி. டி. .. கோயம்புத்தூர் (மேற்கு)
123. தமிழரசன், திரு. குழந்தை. .. விருத்தாசலம்
124. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி
125. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
126. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
127. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
128. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. .. சேலம்-1
129. தனபால், திரு. வி. ஜி. .. குடியாத்தம்
130. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்



131. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
132. திருஞானசம்பந்தம், திரு. வி. .. பேராவூரணி
133. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி
134. திருவேங்கடம், திரு. பெ.சு. .. கலசப்பாக்கம்
135. துரை, திரு. க. .. திருவெறும்பூர்
136. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
137. துரைமுருகன், திரு. .. காட்பாடி
138. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
139. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)
140. நடராசன், திரு. ஆ. .. பேரூர்
141. நடராஜன், திரு. டி. .. செஞ்சி
142. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
143. நன்னன், திரு. கொ. வி. .. செங்கம் (செ.வ.)
144. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
145. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி
146. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
147. நேரு, திரு. கே.என். .. லால்குடி
148. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
149. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
150. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
151. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
152. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு
153. பன்னீர்செல்வம், திரு. எம். ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி

154. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)
155. பாண்டுரங்கன், திரு. என். .. பெரணமல்லூர்
156. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்
157. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என்... பவானி
158. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை
159. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
160. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
161 புரட்சிமணி, திரு. எஸ். .. மங்களூர் (செ.வ.)
162. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)
163. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
164. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி
165. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு
166. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை
167. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா.)
168. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்
169. பொங்கலூர் நா. பழனிச்சாமி, திரு. .. சிங்காநல்லூர்
170. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்
171. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
172. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
173. மகேந்திரன், திரு. ஆர். .. நாட்ராம்பள்ளி
174. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
175. மணி, திரு. நெல்லிக்குப்பம் அ. .. நெல்லிக்குப்பம்



176. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
177. மணி, திரு. டி. .. விளவங்கோடு
178. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
179. மணிக்கண்ணன், திரு. ஆ.ஜெ. .. திருநாவலூர்
180. மணிநாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்
181. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்
182. மணிவர்மா, திரு. கே. .. தண்டராம்பட்டு
183. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்
184. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
185. மனோகரன், திரு. கு. .. தர்மபுரி
186. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்
187. மாரி அய்யா, திரு. .. புதுக்கோட்டை
188. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)
189. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ். எஸ். .. அரவக்குறிச்சி
190. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை
191. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)
192. முத்துராமலிங்கம், திரு. எம். .. திருமங்கலம்
193. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்
194. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்
195. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
196. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்
197. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்

198. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்
199. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்
200. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்
201. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்
202. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
203. ரவி அருணன், திரு. கு. .. தென்காசி
204. ரவிசங்கர், திரு. கு. .. விளாத்திகுளம்
205. ராசேந்திரன், திரு. ஏ. .. போளூர்
206. ராணி, செல்வி க. .. தலைவாசல் (செ.வ.)
207. ராமசாமி, திரு. ஏ.எம். .. ஆத்தூர்
208. ராமச்சந்திரன், திரு. செ. .. திருப்பரங்குன்றம்
209. ராஜு, திரு. எஸ். .. பொள்ளாச்சி
210. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. .. சத்தியமங்கலம்
211. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். .. காங்கேயம்
212. லட்சுமணன், திரு. வி.கே. .. கோயம்புத்தூர் (கிழக்கு)
213. வல்லரசு, திரு. பி. என். .. உசிலம்பட்டி
214. வாசுகி முருகேசன், திருமதி .. கரூர்
215. விஜயகுமார், திரு. கே.எம். .. சாத்தூர்
216. விஜயன், திரு. டி.சி. .. திருவொற்றியூர்
217. வீரப்பன், திரு. கோ.க. .. கபிலர்மலை
218. வெங்கடசாமி, திரு. பி. .. ஓசூர்
219. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி



220. வெங்கடாசலம், திரு. ஜி.எல். .. பாலக்கோடு
221. வெங்கடேசன், திரு. ச.க. .. மதுராந்தகம்
222. வெங்கடேசன், திரு. பே.வே.ஸ்ரீ. .. காவேரிப்பட்டினம்
223. வெங்கிடு, திரு. ஜி. பி. .. கோபிச்செட்டிப் பாளையம்
224. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். .. அரூர் (செ.வ.)
225. வேணு, திரு. கே. .. கும்மிடிப்பூண்டி
226. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்
227. வேலாயுதன், திரு. சி. .. பத்மநாபபுரம்
228. வேலுசாமி, திரு. வ. .. மதுரை கிழக்கு
229. வேல்சாமி, திரு. க. .. நாமக்கல் (செ.வ.)
230. வேல்துரை, திரு. பா. .. சேரன்மகாதேவி
231. வைதியலிங்கம், திரு. மீ.அ. .. தாம்பரம்
232. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். .. திருச்செந்தூர்
233. ஜோதிகண்ணன், திரு. மு.ந. .. முசிறி
234. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு
235. ஆன் டி' மான்டி, திருமதி .. நியமனம்

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

வெங்கடபதி, திரு. கே.வி. .. தலைமை வழக்கறிஞர்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பங்குனி 19, தாது-திருவள்ளுவர் ஆண்டு 2028**

**1997, ஏப்ரல் 1, செவ்வாய்க்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"அறனறிந்து ஆன்றமைந்த சொல்லான்எஞ் ஞான்றும்
திறனறிந்தான் தேர்ச்சித் துணை."

அறநெறி உணர்ந்தவராகவும், சொல்லாற்றல் கொண்டவராகவும், செயல் திறன் படைத்தவராகவும் இருப்பவரே ஆலோசனைகள் கூறக்கூடிய துணையாக விளங்க முடியும்.

### 1. இரங்கல் குறிப்பு

**முன்னாள் உறுப்பினர் மறைவு குறித்து**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர் திரு. டி.ஆர். இராமாமிர்த தொண்டமான் அவர்கள் 26-3-1997 அன்று மறைவுற்றதை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

விடுதலைப் போராட்ட வீரரான திரு. தொண்டமான் அவர்கள் 1957 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு வரை தஞ்சை மாவட்டம், அன்றைய ஆடுதுறை பொதுத் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றியுள்ளார்கள்.

அன்னாரது மறைவு குறித்து, அவரை இழந்துவிட்ட அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன். மறைந்த இப்பெரியாருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு

உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காத்தனர்.)

## 2. வினாக்கள்-விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள், வினா எண் 381, திரு. டி. அமரமூர்த்தி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**381—**

**கலப்புத் திருமணத் தம்பதியினரின் குழந்தைகளுக்கு இட ஒதுக்கீடு**

***2754-திரு. டி. அமரமூர்த்தி :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கலப்புத் திருமணத் தம்பதியினரின் குழந்தைகளுக்கு பொறியியல் கல்லூரிகளில் ஒதுக்கப்படும் இட ஒதுக்கீட்டை அதிகரிக்க இந்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இட ஒதுக்கீட்டை அதிகரிப்பது குறித்து கருத்துரை ஏதும் இதுவரை அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு மிக முக்கியமான கேள்வி. அதாவது இன்றைக்கு தமிழ்நாட்டில் சமூகத்தைப் பிரிக்கின்ற மிகத் தீங்கான ஒரு சக்தியாக இருந்து கொண்டிருப்பது இந்த ஜாதி. ஜாதியை ஒழிப்பதற்கு மிக முக்கியமான வாய்ப்பாக இருப்பது கலப்புத் திருமணம்தான். எனவே, கலப்புத் திருமணத்தை ஊக்குவிப்பதன் மூலம்தான் ஜாதி வெறியையும், ஜாதியைப் பயன்படுத்தி சமூகத்தில் அந்தஸ்து தேடுகின்ற சுயநலமிகளினுடைய ஆதிக்கத்தையும் வீழ்த்துவதற்கு வழி ஏற்படும். எனவே, மாநில அரசு





மறுபரிசீலனை செய்து, அதிகபட்சமான சலுகைகளை கலப்புத் திருமணம் செய்தவர்களுக்கு வழங்க தன் கருத்தினை மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் இதுகுறித்து எந்த வேண்டுகோளும் வரவில்லை. ஏற்கெனவே, 5 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அந்த 5 இடங்களும், முறைப்படி, தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பொதுப் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கும் இடையில் நடந்த கலப்பு மணத்திற்கும் முன்னுரிமை, பிற்படுத்தப்பட்ட வகுப்புக்கும், தாழ்த்தப்பட்ட வகுப்புக்கும் அடுத்த உரிமை, மிகமிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்புக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் நடைபெற்ற கலப்பு மணத்திற்கு மூன்றாவது நிலை உரிமை என்று ஒதுக்கப்பட்டு 5 இடங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதுகுறித்து வேண்டுகோள் வருமானால், அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** டாக்டர் ஆ. ஞானசேகரன்.

**டாக்டர் ஆ. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர் அல்லாத பிற ஜாதிகளிடையிலே குறிப்பாக எஸ்.சி., எம்.பி.சி., அல்லது பி.சி., எம்.பி.சி. ஆகியோர்களுக்கு இடையில் நடைபெறும் திருமணத்தின் மூலம் பிறக்கும் குழந்தைகளுக்கும், இந்த இட ஒதுக்கீடு முறையை அமல்படுத்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலப்பு மணம் என்பதற்கு ஏதேனும் ஒரு வரையறை தேவைப்படுகிறது. அந்த வரையறையில் தாழ்த்தப்பட்ட சமூகத்தோடு கொள்ளப்பட்ட உறவுக்கு முதலிடம் வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் அப்படிப்பட்ட வேண்டுகோள் விளக்கமாகக் கிடைக்குமானால் பரிசீலிக்கலாம்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் கலப்புத் திருமணங்களை ஊக்குவித்தவர்கள் தந்தை பெரியார், பெருந்தலைவர் காமராஜர், அதற்குப் பின்னால் அண்ணா. இப்போது இங்கே முதலமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் கருணாநிதி ஆகியோர் ஆவார்கள். இந்த

கலப்புத் திருமணம் செய்துகொள்பவர்களுக்கு ஜாதி என்பது இல்லை. ஜாதியை விட்டுத்தான் எம்.பி.சி., எஸ்.ஸி. எஸ்.டி. இன்னும் மலை ஜாதிப் பிரிவினர், உயர்ந்த ஜாதியினர், தாழ்த்தப்பட்ட ஜாதியினர் என்று பல்வேறு பிரிவினரும் கலப்புத் திருமணம் செய்துகொள்கிறார்கள். அவர்கள் எந்த ஜாதியைக் குறிப்பிட முடியும்? அண்மையிலே நீதிமன்றத்திலே ஒரு வழக்கு தொடர்ந்து அந்த வழக்கிலே குறிப்பிட்டுள்ளார்கள், ஒரு ஆண் எந்த ஜாதியோ அந்த ஜாதியைத்தான் குழந்தைகள் குறிப்பிட வேண்டும் என்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியாகக் கேளுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** அப்போது தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு பெண், உயர்ந்த ஜாதியினரைத் திருமணம் செய்துகொண்டால் அவர்களுக்குப் பிறக்கின்ற குழந்தைகளுக்கு இந்த இட ஒதுக்கீட்டில் சலுகைகள் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, அது சொத்துரிமை போன்ற உரிமைகளுக்கு மிக முக்கியமாகக் கருதப்பட வேண்டிய ஒன்றாகும். இட ஒதுக்கீடு என்பதில் இப்போது 5 இடங்கள் வழங்கப்படுகின்றன. அது போதுமா, போதாதா என்பது குறித்து அவ்வப்போது உள்ள நிலைமைக்கு ஏற்ப பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, கலப்புத் திருமணம் செய்துகொள்பவர்கள் ஜாதியை ஒழிப்பதற்கு அடிப்படையாக இருக்கின்ற காரணத்தினால் அதிலே கலப்புத் திருமணம் செய்துகொள்பவர்கள் ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் யார் தாழ்த்தப்பட்டவர்களாக இருக்கிறார்களோ, மலை ஜாதியினராக இருக்கிறார்களோ அந்த வகுப்பை எடுத்துக்கொள்வதற்கு அரசு சட்டம் இயற்றுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலப்புத் திருமணம் செய்துகொள்கிறவர்களில் யார் அதிகம் பாதிக்கப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களோ அந்த அடிப்படையில்தான் இந்த அரசு கருதி வந்தது. ஆனால் நீதிமன்றத் தீர்ப்பு வேறுவிதமாக, வேறு அடிப்படையிலே அமைந்திருக்கிறது. அதுபற்றி ஆலோசிக்கப்பட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. நா. பெரியசாமி.



**திரு. நா. பெரியசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியில் உள்ள சமூகப் பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு சாதிகள் அற்றோர் என்று ஒரு பட்டியல் உருவாக்கப்படுமா? அது கல்வி நிலையத்திலிருந்தே பதிவு செய்யப்பட்டு அதற்கென தனி இட ஒதுக்கீடு கல்வி, வேலைவாய்ப்பிலும் ஒதுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவான ஒரு விளக்கம். யாருக்கும் ஜாதியிலே நம்பிக்கை இல்லை. ஆனால் ஜாதியைக் காட்டிப் பிழைப்பதற்கு யாரும் தவறுவதில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. அ. வெங்கடாசலம்.

**திரு. அ. வெங்கடாசலம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள அனைத்து ஜாதிகளுடைய பட்டியலை முழுவதுமாக எடுத்துவிட்டு வருமான வரம்பு அடிப்படையில் அரசு வழங்குகிற அனைத்துச் சலுகைகளையும் வழங்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜாதியினாலே சமூகம் சீரழிந்துவிட்டது என்பது வரலாறு. பாதிக்கப்பட்ட ஜாதி என்ற அடிப்படையிலே மிக அதிகம் பாதிக்கப்பட்டவர்களுக்கு பல சலுகைகள் வழங்குவதுதான் அரசாங்கத்தினுடைய கொள்கை. சமூக நீதிக் கொள்கை என்பது அந்த அடிப்படையிலே அமைந்ததுதான். பொருளாதார வேற்றுமை என்பது மேற்போக்கானது. எந்த நேரத்திலேயும் மாறிவிடக் கூடியது. அந்த அடிப்படையிலே மட்டும் கருத முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் எத்தனையோ திட்டங்களைக் கொண்டு வந்தாலும் கொள்கைகளை வகுத்தாலும் ஜாதி ஒழிந்தபாடில்லை. ஆகவே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இனி பள்ளியிலோ, கல்லூரிகளிலோ மாணவர்கள் நுழையும்போதே, சேர்க்கப்படுகிறபோதே ஜாதியை யாருமே எழுதக்கூடாது என்கிற ஒரு கடுமையான சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர முன்வருவாரா என்று அறிய · விரும்புகிறேன்.

[1997 ஏப்ரல் 1

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்பதை அவர்கள் உறுதி செய்தால்தான் அவர்கள் பெறக்கூடிய சலுகையைப் பெற முடியும். எனவே சமூகத்தினுடைய சிந்தனை மொத்தமாக மாறுகிற காலம் வரையில் இந்த இட ஒதுக்கீடு இருக்கிற காரணத்தால் ஜாதியைப் பற்றிய குறிப்பு தவிர்க்க முடியாதது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. எல். சந்தானம்.

**திரு. எல். சந்தானம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஞானசேகரன் அவர்கள் குறிப்பிடும்போது ஜாதியே இருக்கக்கூடாது, கல்விக்கூடங்களுக்கு வரும்போது ஜாதிப்பெயரே இருக்கக்கூடாது என்று சொன்னார். அவரைப் பொறுத்த அளவிலே இட ஒதுக்கீடு என்று சொல்கின்ற, அந்த 69 சதவீத இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையில் அவருடைய நிலை என்ன என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இரண்டு பேரும் விவாதம் செய்யும் அரங்கம் இதுவல்ல. உட்காருங்கள்.

வினா எண் 382, திரு. கே. தங்கமணி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**382—**

**கூடுதல் கிராமங்களை மானாமதுரை தொகுதியுடன் இணைத்தல்**

***5469—திரு. கே. தங்கமணி :***

*மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பரமக்குடி சட்டமன்றத் தொகுதியில் இணைந்துள்ள மானாமதுரை ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்திற்குட்பட்ட சோமாத்தூர், புலிக்குளம், மானங்காத்தான் ஆகிய கிராமங்களை மானாமதுரை சட்டமன்றத் தொகுதியுடன் இணைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*சட்டமன்றத் தொகுதிகளின் எல்லைகளில் மாற்றம் செய்யும் அதிகாரம் மாநில அரசுக்கு இல்லை.*



1997 ஏப்ரல் 1]

**திரு. கே. தங்கமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடி சட்டமன்றப் பேரவைத் தொகுதிக்குட்பட்ட அதாவது இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த சோமாத்தூர், புலிக்குளம், மானங்காத்தான் ஆகிய கிராமங்கள் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் மானாமதுரை ஒன்றியத்திலும், சட்டமன்றத் தொகுதி என்று வரும்போது அது பரமக்குடியிலும் 2 மாவட்டத்தையும் சேர்ந்திருக்கக்கூடிய காரணத்தால் அந்த கிராமங்களுக்கு வேண்டிய தேவைகளைப் பூர்த்தி செய்வதில் ஒன்றிய அளவிலும், மாவட்ட அளவிலும் பல்வேறு சலுகைகள் கிடைப்பதில் பிரச்சினைகள் ஏற்படக்கூடிய நிலை இருக்கக்கூடிய காரணத்தால் ஊராட்சி ஒன்றியம் இருக்கக்கூடிய பகுதியிலேயே மேற்படி கிராமங்களை இணைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கி.பி. 2001 ஆம் ஆண்டு வரையில் சட்டமன்றத் தொகுதியினுடைய எண்ணிக்கையை மொத்தத்தில் உள்ள அளவிலிருந்து மாற்றப்படக் கூடாது என்பதும், தொகுதிகளை மாற்றி அமைப்பதற்கு, மத்திய அரசு பாராளுமன்றத்தின் மூலமாகத்தான் அந்த அதிகாரத்தைப் பெற்று மாற்றி அமைக்க முடியும் என்பதும் இன்றைக்குள்ள நிலைமை.

இரண்டாவது, சட்டமன்ற உறுப்பினர்கள் எந்தப் பகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டாலும் தமிழ்நாடு முழுமைக்கும் அவர்கள் உரிமையுடையவர்கள் என்பது கருத்து அளவில் ஏற்கப்பட்டிருக்கிறது. எனவே, அவர்களுடைய தொகுதியில் ஒரு பகுதி இன்னொரு மாவட்டத்தில் இருக்கிற காரணத்தால் அல்லது இன்னொரு பிரிவில் இருக்கிற காரணத்தால் சட்டமன்ற உறுப்பினர்களுடைய பணி எந்த வகையிலும் பாதிக்கப்படமாட்டாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 383, திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**383—**

**மின் பற்றாக்குறையைப் போக்குதல்**

***1978-திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:***

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டில் தற்போது உற்பத்தியாகும் மின்சாரத்தின் அளவு எவ்வளவு?

(ஆ) மின் பற்றாக்குறையைப் போக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) உச்ச பயன் அளவு நேரங்களில் (Lighting and Peak hour Load) தமிழ்நாட்டில் தற்போது உற்பத்தியாகும் மின்சாரத்தின் அளவு 4,460 மெகாவாட் ஆகும்.

(ஆ) தற்போது தமிழகத்தில் நிலவும் மின் பற்றாக்குறையைப் போக்க குறுகிய காலத்தில் பயன் அளிக்கும் நான்கு புனல் மின் திட்டங்களும், தனியார் துறையில் குறைந்த காலத்தில் பயனளிக்கும் டீசல் மற்றும் எரிவாயு திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் சர்க்கரை மற்றும் இரசாயன ஆலைகளின் மூலம் 1997-98-இல் 149 மெகாவாட் உற்பத்தி செய்யவும் மற்றும் சில திட்டங்களும் தீட்டப்பட்டு வருகின்றன.

**திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989-90 ஆம் ஆண்டு கழக ஆட்சி இருந்தபோதுகூட சென்னை மின் திட்டம் துவங்கப்பட்ட பின்பு தமிழ்நாட்டில் வேறு எந்தத் திட்டமும் துவங்கப்படாத காரணத்தால் வரும் 2 ஆண்டு காலத்திற்கு மின் உற்பத்தியை அதிகரிக்க முடியாது என்ற சூழ்நிலை இருக்கிறது. இந்த நிலையில் தனியார் துறையின் மூலம் பல்வேறு திட்டங்களைத்—17—திட்டங்கள் துவங்குவதற்கு அரசு முன்வந்திருந்தாலும் மத்திய அரசு அதை அனுமதிப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது என்ற ஒரு நிலை இருக்கிறது. அது உண்மைதானா? அப்படி ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்ப்பதற்கு தமிழ்நாடு அரசு எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சிகள் என்ன என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஆட்சிப் பொறுப்பு ஏற்றுக்கொண்டதற்கு, பிறகு, ஏற்கெனவே ஒப்பந்தம் ஆகியிருந்த தனியார் மின் உற்பத்திக்கான 6 திட்டங்களை மத்திய அரசுக்கு நாம் அனுப்பி வைத்தோம். ஜி.எம்.ஆர். வாசவி. ஜி.வி.கே. எலக்ட்ரிக் பவர் கம்பெனி போன்ற 6





நிறுவனங்களுடைய பரிந்துரைகளை மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தோம். மத்திய அரசினர் காலதாமதம் செய்யாமல் அதற்கான ஒப்புதலைத் தந்து கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும்கூட கடந்த காலத்தில் 5 ஆண்டு காலமாக மின்சார உற்பத்தியில் அப்போதிருந்த அரசு கவனம் செலுத்தாத காரணத்தால் தொடர்ந்து நாம் 2, 3 ஆண்டுகளுக்கு மின் உற்பத்திக்கு அதிக கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். அதற்காகத்தான் தனியார் மற்றும் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் இருக்கக்கூடிய கோ-ஜெனரேஷன் மூலம் சுமார் 300 மெகாவாட் இந்த ஆண்டில் உற்பத்தி செய்ய முடியுமா என்ற முயற்சியைச் செய்து, 149 மெகாவாட் உற்பத்தி அளவை இப்போது எட்டியிருக்கிறோம். இன்னமும் 200 மெகாவாட் உற்பத்தி செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. ரவி அருணன்.

முற்பகல் 9-45

**திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் தென்காசி மற்றும் கடையம் பகுதிகளில் தினமும் பகலில் 4 மணி நேரமும், இரவு நேரங்களில், அதாவது பீக் ஹவர்சில் (Peak hours) 2 மணி நேரமும் சிங்கிள் பேஸ் லைன் (Single phase supply) கூட இல்லாமல் மின்சாரம் துண்டிக்கப்படுகின்றது. மாணவ, மாணவியர்களுக்கு தேர்வு நடைபெறும் இந்த வேளையில் சிங்கிள் பேஸ் லைனைத் துண்டிப்பதை அரசு தடை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இங்கே தெரிவித்ததைப் போல, என்னுடைய கவனத்திற்கு இரண்டு தினங்களுக்கு முன்னால் இந்தச் செய்தி வந்ததும், மின் வாரியத்தோடு தொடர்பு கொண்டு, இரவு நேரங்களில் எந்தக் காரணத்தைக் கொண்டும் சிங்கிள் பேஸ் கரன்ட்டை ரத்து செய்யக் கூடாது என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அப்படி எங்காவது குறைபாடு இருக்குமானால் உடனுக்குடன் நிவர்த்தி செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

[1997 ஏப்ரல் 1

**திரு. டி. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் பற்றாக்குறையைப் போக்குவதற்கு அரசு எடுத்துள்ள சில நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிலவற்றை இங்கே தெளிவுபடுத்தினார்கள். இரண்டு வருடங்களுக்கு முன்னால் பெருஞ்சாணியில் ஒரு ஆய்வுப் பணி மேற்கொள்ளப்பட்டது. அந்த ஆய்வுப் பணி இன்று முடிவடைந்துள்ளதா? எந்த நிலையில் உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வு நடைபெற்று வாரியத்தினுடைய பரிந்துரைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்.

**திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் இரண்டு ஆண்டுகளில் அதிகமான மின் உற்பத்தி இருக்காது என்ற காரணத்தினால் மின் டிரான்ஸ்மிஷனில் ஏற்படக்கூடிய இழப்பு, அதைப் போல, மின் திருட்டு இந்த இரண்டையும் கட்டுப்படுத்தினால் ஓரளவுக்கு நம்முடைய தமிழ்நாட்டு மக்களுக்குத் தேவையான மின்சாரத்தை வழங்க முடியும் என்று ஆய்வு தெரிவிக்கின்றது. அப்படியானால், டிரான்ஸ்மிஷன் லாஸ் தமிழ்நாட்டில் எவ்வளவு; அதைப்போல, மின் திருட்டு எவ்வளவு என்பதை நான் அறிய விரும்புகிறேன். அதைத் தவிர்ப்பதற்கு அரசு எடுத்திருக்கின்ற நடவடிக்கை என்ன என்பதையும் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லைன் லாஸ் அகில இந்திய அளவிலே 21 சதவிகிதமாக இருக்கிறது. நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையிலே அது 17 சதவிகிதமாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல, இன்னும் இரண்டு சதவிகிதம் லைன் லாஸ் குறைக்கப்படுமானால், நிச்சயமாக தமிழ்நாட்டிற்குத் தேவையான மின்சாரம் ஓரளவிற்குக் கிடைக்கும். அதற்கான நடவடிக்கைகளிலே மின் வாரியம் இப்போது ஈடுபட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிட்டதைப்போல, பெரிய தொழிலதிபர்கள் சிலர் மின்சாரத்தைத் திருடுகிறார்கள் என்று நான் சொல்லத் தயாராக இல்லை; எப்படியோ தவறாகப் பயன்படுத்துகிறார்கள். அதைக் கண்டுபிடித்து, யாராக இருந்தாலும் கடுமையான நடவடிக்கை எடுத்து, இப்படிப்பட்ட



1997 ஏப்ரல் 1]

தவறுகளைத் தொடர்ந்து செய்யாத வகையில் தடுக்க வேண்டுமென்று வாரியம் கட்டளையிட்டு, இப்போது அந்தப் பிரிவு வேகமாகச் செயல்படுகின்ற காரணத்தினால் மின்சாரத் திருட்டு என்பது குறைந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்தோடு, ரஷ்யாவினுடைய உதவியோடு என்னுடைய தொகுதியைச் சேர்ந்த கூடங்குளத்தில் அணுமின் நிலையம் அமைப்பதற்காக 17 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு, தற்போது பாரதப் பிரதமர் அவர்கள் ரஷ்யா சென்றபோது அதை அனுமதித்ததாக பத்திரிகைகளிலே செய்தி வந்துள்ளது. அந்தப் பகுதியிலே காற்றாலை மூலம் 600 மெகாவாட் மின்சாரம் தற்போது உற்பத்தி செய்யப்படுகின்றது. இன்னமும் அதிகமான அளவு கிட்டத்தட்ட 5 ஆயிரம் மெகாவாட் கரன்ட்டைக்கூட உற்பத்தி செய்யக்கூடிய அளவுக்கு அந்த இடத்தில் வாய்ப்பு இருந்தும், ஆபத்தைத் தரக்கூடிய அணுமின் நிலையத் திட்டம் அங்கு தேவைதானா? 17 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் 17 ஆயிரம் மின் காற்றாலைகள் அமைக்கலாம். அதன் மூலம் 8,500 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய அளவிற்கு, ராதாபுரம் பகுதியிலேயே மிக அதிக அளவான வாய்ப்பு இருந்தபோதிலும், அதை நீங்கள் ஏன் ஊக்குவிக்கக் கூடாது? ஆபத்து தரக்கூடிய இந்த அணுமின் நிலையம் தேவைதானா? கிட்டத்தட்ட நெல்லை வரையிலும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை முடியுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** கோவில்பட்டி, திருவனந்தபுரம் போன்ற பகுதிகள் வரைக்கும் இந்த அணுமின் நிலையத்தினால் பாதிப்பு ஏற்படும். ஆகவே, 17 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் அமைய உள்ள இந்த மின் திட்டத்தை மாற்றி அங்கிருந்து காற்றாலைகள் மூலம் மின் உற்பத்தி செய்வதற்கு அதிகமான அளவு தரிசு நிலங்கள் அங்கே உள்ளன. ஆகவே, இந்தத் திட்டத்தை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் கேள்வியை சீக்கிரம் முடியுங்கள். (குறுக்கீடு) சரி, நீங்கள் சொல்லிவிட்டீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் (குறுக்கீடு) உட்காருங்கள், அமைச்சர் பதில் சொல்லட்டும்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பாரதப் பிரதமர் தேவ கவுடா

அவர்கள் ரஷ்யா சென்றிருந்த நேரத்தில் கூடங்குளம் அணுமின் உற்பத்திக்கான ஒப்பந்தத்திலே கையெழுத்து போட்டுவிட்டு வந்திருக்கிறார்கள். 17,000 கோடி ரூபாயிலே அந்தத் திட்டம் அமல் படுத்தப்படும் என்றும் அறிவித்திருக்கிறார்கள். நம்மைப் பொறுத்த வரையிலே அந்தத் திட்டம் வருவதிலே எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. இருந்தாலும்கூட, அந்தத் திட்டத்தினாலே ஆபத்து என்ற ஒரு செய்தி, இன்றுகூட, பத்திரிகையிலே வந்திருக்கிறது. தமிழக அரசு, மத்திய அரசுக்குத் தொடர்ந்து வற்புறுத்தி, சரியாகப் பரிசீலனை செய்த பிறகு இந்தத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்ற வேண்டுகோளை வைப்பதாக இருக்கின்றோம். இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல், அங்கே காற்றாலைகள் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்வதிலே இந்த அரசாங்கத்திற்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. எவ்வளவு முதலாளிகள், எவ்வளவு காற்றாலைகளை அமைக்க வேண்டும் என்று வந்தாலும் அதை இந்த அரசாங்கம் ஊக்குவிக்கத் தயாராக இருக்கிறது.

*முற்பகல் 9-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 384, திரு. அ. வெங்கடாசலம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**384—**

### மின்வாரிய ஊழியர்களுக்கு ஐந்து நாட்கள் வேலை

***2136—திரு. அ. வெங்கடாசலம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு ஊழியர்களைப் போல் மின்சார வாரிய ஊழியர்களுக்கும் வாரத்தில் 5 நாட்கள் வேலை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.



**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழகத்தில் பணிபுரிகிற பல்வேறு அரசுத் துறைகளைச் சேர்ந்தவர்கள், வாரத்தில் ஐந்து நாட்கள் பணிபுரிகிற இந்த நேரத்தில், மின்சார வாரியத்தில் பணிபுரிகிறவர்கள் மற்றும் வருவாய்த் துறையில் பணிபுரிகிறவர்கள் ஆகிய இப்படிப்பட்டவர்கள் மட்டும் ஆறு நாட்கள், ஞாயிற்றுக்கிழமைகூட பணிபுரிகிற நிலை இருக்கிறது. இதை அரசு பரிசீலனை செய்து, அரசு ஊழியர்கள் அனைவருக்கும் வாரத்தில் ஐந்து அல்லது ஆறு நாட்கள் என்ற சமமான வேலை நாட்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த மின்சார வாரிய ஊழியரும் வாரத்திலே ஏழு நாட்கள் வேலை செய்வதில்லை. ஆனால் rotation முறையிலே ஏழு நாட்கள் வேலை செய்துதான் ஆக வேண்டும். இது ஒரு Essential Service. வருடம் 365 நாட்களும் மின்சார வாரியத்திலே யாராவது வேலை செய்துகொண்டேதான் இருக்க வேண்டும். ஆனால், மின்சார வாரியத்தினுடைய ஊழியர்கள் வாரத்திற்கு ஆறு நாட்கள் வேலை செய்ய வேண்டும் என்று ஏற்கெனவே ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அரசாங்க ஊழியர்களைப் போல ஏன் அவர்களைக் கருதக்கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கேட்டார்கள். இந்த மின்சார வாரியம், தொழில் தகராறு சட்டத்தின்கீழ் வருவதாலும், அது ஒரு தொழில் நிறுவனம் என்பதாலும், அவர்களுக்கு அரசாங்க ஊழியர்களைப் போல் விடுமுறைச் சலுகைகள் அளிக்க முடியாது. இருந்தாலும், 1994-ஆம் ஆண்டு அப்போதிருந்த அரசாங்கம் அவர்களுக்கு, ஐந்து நாட்கள் பணி செய்ய வேண்டும் என்றும், இரண்டு நாட்கள் விடுமுறை கொடுப்பது என்றும் முடிவு செய்தது. ஆனால், மின்சார வாரியத்திலே ஒரே வகையான ஊழியர்கள் இல்லை. அங்கே அலுவலகங்களிலே பணிபுரியக்கூடியவர்கள் 25,000 பேர் இருக்கிறார்கள், அவர்கள் தினந்தோறும் 6½ மணிநேரம் பணியாற்ற வேண்டும். கணக்கீட்டாளர்கள் 6,000 பேர் இருக்கிறார்கள், அவர்கள் ஆறு மணிநேரம் பணியாற்ற வேண்டும். களப் பணியாளர்கள் 60,000 பேர் இருக்கிறார்கள், அவர்கள் எட்டு மணிநேரம் பணியாற்ற வேண்டும். எனவே, வேலை நேரத்திலே இப்படிப்பட்ட மாற்றங்கள் இருக்கின்ற காரணத்தினால் அங்கே இருக்கக்கூடிய தொழிற் சங்கங்கள்—ஐந்து நாட்கள் பணியாற்றுங்கள், இரண்டு நாட்கள் விடுமுறை எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னபோது—அதனை அவர்கள் ஏற்றுக்கொள்ளாமல், 'இல்லை, எல்லோரும் ஆறு நாட்கள் வேலை செய்வதற்குத் தயாராக இருக்கிறோம்'

[1997 ஏப்ரல் 1

என்று ஒப்பந்தத்திலே கையெழுத்து போட்ட காரணத்தால், 1994-ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட ஆணை ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 385, திரு. கோ. சண்முகம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**385—**

**குடியிருப்போருக்குப் பட்டா வழங்குதல்**

*** 3892—திரு. கோ. சண்முகம்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம், திருப்பத்தூர் கலைஞர் நகரில் குடியிருப்போருக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'இந்நேர்வில் ஆக்கிரமிப்பாளர்கள் குடியிருக்கும் நிலம் மயானப் புறம்போக்கு என வருவாய் கணக்குகளில் வகைப்பாடு செய்யப்பட்ட நிலமாகும். இவ்வகை நிலங்கள் ஒப்படைக்கு தடை விதிக்கப்பட்டவை. இருப்பினும், ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்களை ஆய்வு செய்ய ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. குழுவின் அறிக்கை பெறப்பட்டதும், அந்த அறிக்கையின் அடிப்படையில் இந்நிலங்களை ஒப்படை செய்வது பரிசீலிக்கப்படும்.'

**திரு. கோ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைஞர் நகரிலே ஆதிதிராவிடர்களும், முஸ்லீம்களும் 40 ஆண்டுகாலமாகக் குடியிருக்கின்றார்கள். முந்தைய ஆட்சியிலே அவர்களுக்குப் பட்டா வழங்கப்படவில்லை. ஏனென்றால், கலைஞர் நகர் என்று பெயர் வைத்ததினாலே வழங்கப்படவில்லை. ஏழை முஸ்லீம் குடும்பங்கள் 700 அங்கே உள்ளன. எனவே, அவர்களுக்கு பட்டா வழங்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்...



1997 ஏப்ரல் 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்குப் பதில் சொல்லிவிட்டார்கள். மாண்புமிகு அமைச்சர் திரும்பவும் அதே பதிலைச் சொல்லப் போகிறீர்களா? உறுப்பினர் அதே கேள்வியைத்தான் மீண்டும் கேட்கிறார்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** எனக்கு ஒன்றும் அப்ஜெக்ஷன் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பதில் சொல்லியிருக்கிறேன். புறம்போக்கு நிலங்களை ஆய்வு செய்ய வேண்டுமென்பதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவின் அறிக்கை பெறப்பட்டவுடன், அந்த அறிக்கையின் அடிப்படையில், இந்த நிலங்கள் ஒப்படை செய்வதுபற்றி பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 386, திரு. கொ.வி. நன்னன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**386—**

**பலமரத்தூர் பழப்பண்ணை ஆரம்பித்தல்**

***2892—திரு. கொ.வி. நன்னன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1989-90-ல் ஆய்வு செய்யப்பட்ட செங்கம் தொகுதியிலுள்ள பலமரத்தூர் பழப்பண்ணை ஆரம்பிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1997 ஏப்ரல் 1

**திரு. கொ.வி. நன்னன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழ்க்கையில் வளம் மற்றும் வசதியற்று வாழ்ந்து கொண்டிருக்கும் இயற்கை வளம் சூழ்ந்த ஜவ்வாது மலைவாழ் மக்களின் வாழ்வு வளம் பெறவும், அந்த மக்கள் வயிறார உண்டு மகிழவும், வேலைவாய்ப்பும் கூலி வாய்ப்பும் கிடைக்கப்பெற்று பொருளாதாரத்தில் மேம்பாடு அடைந்து முன்னேற்றம் காணவும், 1989-90-ஆம் ஆண்டிலேயே ஆய்வு செய்யப்பட்ட செங்கம் தொகுதிக்குட்பட்ட பலாமரத்தூரில் பழப்பண்ணை அமைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கொ.வி. நன்னன், நீங்கள் ஒரு அருமையான நடிகர். இந்தத் துணை வினாவைக் கேட்பதற்குக்கூட எழுதி வைத்துப் படித்தால் எப்படி? (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய கேள்வி சுவையாக இருந்தது. ஆனால் புதிதாக அங்கே பழத்தோட்டம் அமைக்கும் உத்தேசம் இல்லை. (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 387, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**387—**

### பி.எச்.சி.-யைத் தடை செய்தல்

***3772—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

டி.டி.டி.-யைப் போலவே பி.எச்.சி.-யையும் உலகம் முழுவதும் தடை செய்யப்பட உள்ளதை அரசு அறியுமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 388, திரு. எஸ்.கே. ராஜேந்திரன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.



1997 ஏப்ரல் 1]

**388—**

### வேதபாறை நீர்த்தேக்கத் திட்டம்

***1963—திரு. எஸ்.கே. ராஜேந்திரன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்தியமங்கலம் தொகுதிக்குட்பட்ட, கணக்கம்பாளையம் வேதபாறை நீர்த்தேக்கத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

**திரு. எஸ்.கே. ராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்தியமங்கலம் தொகுதி, கணக்கன்பாளையம் வேதபாறை நீர்த்தேக்கத் திட்டம் 1989 ஆம் ஆண்டு நமது கழக அரசால் ஆய்வு செய்யப்பட்டது. இதன் மதிப்பீடு 8.45 கோடி ரூபாய் ஆகும். இத்திட்டம் நிறைவேறுவதற்கான அனைத்து சாத்தியக்கூறுகளும் உள்ளதாக பொதுப்பணித் துறை தலைமைப் பொறியாளர் அரசுக்கு அறிக்கை ஒன்றை அளித்துள்ளார். இடையில், கழக அரசு கலைக்கப்பட்டது. அதன் பின்னர் வந்த, கடந்த அரசால் இது கைவிடப்பட்டது. இத்திட்டம் செயல்படுத்தப்படுமானால், கிணற்றுப் பாசன விவசாயிகளின் கிணறுகளில் நிலத்தடி நீர் அதிகரிக்கும். மேலும் அந்தப் பகுதியில் குடிநீர்ப் பிரச்சினையை சமாளிக்க வறட்சிக் காலங்களில் நீரைத் தேக்கி வைக்கவும் வசதியாக இருக்கும். எனவே, எனது தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல திட்டம் ஆய்வு செய்யப்பட்டது உண்மை. இதன் மூலம் எவ்வளவு பாசனம் பெற முடியும் என்று கேட்டால், 500 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறும் என்று கண்டறியப்பட்டது. ஆனால் இத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமானால், சுமார் 150 அல்லது 200 ஏக்கர் காட்டிலாகாவுக்குச் சொந்தமான

[1997 ஏப்ரல் 1

நிலத்தை எடுக்கவேண்டி வரும். காட்டிலாகா நிலத்தை எடுப்பது என்பது மயில் இராவணன் உயிரைக் கொண்டு வருவது போல. (சிரிப்பு) மேலும் 10 சென்ட், 20 சென்ட் வனத்துறை நிலத்திற்காக பெரிய பெரிய அணைகளே முடிவு பெறாமல் நின்று கொண்டு இருக்கின்றன. எனவே, 500 ஏக்கர் பாசனத்திற்கு 150 ஏக்கர் காட்டிலாகா நிலத்தைக் கையகப் படுத்துவது என்பது இந்த ஜென்மத்தில் நடக்காத விஷயம். ஆகையால் அங்கே ஒரு ஏரி அமைக்கலாம் என்றால், அதற்கும் காட்டிலாகா இடம் இல்லாமல் இருக்கிறதா என்று அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரே வனத்துறை அமைச்சராக இருந்தால், இந்த ஜென்மத்தில் ஏதாவது வாய்ப்பு கிடைக்குமா (சிரிப்பு)

வினா எண் 389, திரு. ச. அழகுவேலு, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**389—**

**பம்பையாற்றில் அணை கட்டுதல்**

***2620—திரு. ச. அழகுவேலு:**

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் வட்டம், எலிகுப்பம் அல்லது மாதிரிமங்கலம் அருகில் பம்பையாற்றில் அணை கட்டும் திட்டம் செயல்படாமல் உள்ளது அரசின் கவனத்திற்கு வரப்பெற்றுள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் விரைவில் செயல்பட நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இந்தக் கேள்வி புதியது. அதாவது திட்டம் செயல்படாமல் இருக்கிறது என்று கேள்வி கேட்டிருக்கிறார். இப்படி ஒரு அணை கட்டும் திட்டம் அரசிடம் இன்னும் அரும்பவேயில்லை. There is no way of thinking about this scheme. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினருடைய இந்தக் கேள்வியை ஆதாரமாக வைத்துக்கொண்டு அரசு இது குறித்து பரிசீலிக்கும் என்ற உறுதியை அவர்களுக்கு அளிக்க விரும்புகிறேன்.



1997 ஏப்ரல் 1]

**திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989 ஆம் ஆண்டு இதே சட்டப் பேரவையில் இதே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டம் பரிசீலிக்கப்படும் என்று உறுதி அளித்திருந்தார்கள். மேலும், புதுவை மாநிலமும் இந்தப் பம்பையாறு திட்டத்தில் சம்பந்தப்பட்டிருப்பதால், புதுவை மாநில அரசு இந்தப் பிரச்சினை பற்றி இந்த அரசோடு பேசுவதற்குத் தயாராக இருக்கிறது. நமது அரசு அவர்களோடு பேசுவதற்குத் தயாராக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1988-89-ஆம் ஆண்டிலேயே மாண்புமிகு உறுப்பினர் இப்படி ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். அவருடைய அந்தக் கேள்வியை வைத்துத்தான் அரசு இதுகுறித்து பரிசிலனை செய்யும் என்று அப்போது சொல்லியிருக்கிறேன். அதற்குப் பிறகு இடையிலே என்ன நடந்தது என்பது உங்களுக்குத் தெரியும். மீண்டும் இந்தக் கேள்வி வந்திருக்கிறது. இருந்தாலும் அதே பதிலைத்தான் இப்போதும் நான் திருப்பிச் சொல்கிறேன். இந்தத் திட்டத்திலே மாண்புமிகு உறுப்பினருக்கு உள்ள அக்கறை தென்படுகிறது. இதுகுறித்து அரசு நிச்சயம் ஆய்வு மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 390, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**390—**

**இரவுப் பேருந்துகள் இயக்குதல்**

***4781—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடியாத்தத்திலிருந்து வேலூருக்கு இரவு 10.00 மணிக்கு மேலும் பேருந்துகள் இயக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சாத்தியக்கூறுகள் இல்லை என்று பதில் தந்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை என்றுதான் அமைச்சர் பதிலளித்தார்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை என்று பதிலளித்திருக்கிறார். இன்று அல்லது நாளை என்று இல்லாவிட்டாலும்கூட, இன்னும் ஒரு வாரம் அல்லது 10 நாட்களுக்குள் ஆவன செய்ய வேண்டும். குடியாத்தம் பகுதி, நெருப்புப் பெட்டித் தொழிலாளர்கள் மற்றும் பலதரப்பட்ட தொழிலாளர்கள் உள்ள பகுதி. இரவு 10 மணி அல்லது 11 மணிக்கு அங்கிருந்து கிளம்பி வர பேருந்து வசதி வேண்டுமென்று கேட்கிறார்கள். ஆகவே தினமும் இரவு 10 மணியிலிருந்து விடியற்காலை வரை நான்கு பஸ்களையாவது ஒரு மாதத்திற்குள் இயக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக உத்தரவிடுவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது குடியாத்தத்திலிருந்து வேலூருக்கு இரவு 9-15, 9-20 மற்றும் 10-00 மணிக்குப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. 10-00 மணிக்கு மேலே தனியார் பேருந்துகள் 2 இயக்கப்படுகின்றன- மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையின் அடிப்படையில் பரிசீலித்ததில் அங்கே இரவு 10-00 மணிக்கு மேல் சராசரியாக 20 பேர்களே பயணம் செய்கிற வாய்ப்பு இருக்கிற காரணத்தால், போக்குவரத்துக் கழகங்களின் மூலமாக இரவுப் பேருந்துகள் விடுவதற்கு தற்போது வாய்ப்பில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 391, திரு. பி.என். வல்லரசு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**391—**

**உசிலம்பட்டியிலிருந்து சென்னைக்குப் பேருந்து இயக்குதல்**

***4791—திரு. பி.என். வல்லரசு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) உசிலம்பட்டியிலிருந்து சென்னைக்கு இரவு நேரங்களில் பாண்டியன் போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இப்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டியிலிருந்து சென்னைக்கு நேரடியாக பாண்டியன் போக்குவரத்துக் கழகப் பேருந்தை விடவேண்டுமென்று தொடர்ந்து உசிலம்பட்டித் தொகுதி மக்கள் வலியுறுத்தி வருகிறார்கள். உசிலம்பட்டியிலிருந்து சென்னைக்கு வர வேண்டுமென்றால், மதுரைக்கு வந்துதான், வரவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூன்று மாதங்களுக்கு முன்னால் மதுரையில் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார்கள். அந்தக் கூட்டத்தில்கூட இந்தக் கோரிக்கையை நான் வைத்தேன். அப்போது அமைச்சர் அவர்கள் பரிசீலிக்கப்படும் என்றுதான் சொன்னார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இதை மீண்டும் கொண்டு வருகிறேன். நடந்த பிள்ளை தவழ்கிறது என்று சொல்வார்கள். அதைப்போல ஏற்கெனவே உசிலம்பட்டியிலிருந்து சென்னைக்கு பஸ் விடப்பட்டது. இடையில், கடந்த கால ஆட்சியில் அது நிறுத்தப்பட்டது. எனவே மீண்டும் கருணையுள்ளத்தோடு இதை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து, உசிலம்பட்டியிலிருந்து சென்னைக்கு இரவு நேர பஸ்கள் விட அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்திலும் 250 கி.மீ.க்கு மேற்பட்ட தொலைவுகளுக்கு 2 பேருந்துகளை இயக்க அனுமதிக்கப் பட்டிருக்கிறது. பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையில் மதுரையிலிருந்து சென்னைக்கு பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற இந்த வழியின் மூலமாக திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தால்

[1997 ஏப்ரல் 1

பல்வேறு பேருந்துகள் இயக்கபபட்டுக் கொண்டிருக்கின்றன. போக்குவரத்துக் கழகங்கள் இணைக்கப்படுகிற முயற்சியின் அடிப்படையிலே, பேருந்துகள விரிவாக்கத்திற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன. ஆகையால்தான் அதைப் பரிசீலிக்கின்றோம் என்று சொன்னேன். அப்படி பல்வேறு போக்குவரத்துக் கழகங்களை இணைக்கிறபோது 250 கிலோமீட்டர் தூரத்திற்கு மேலாக பேருந்துகள் இயக்க முற்படுகிறபோது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 392, திரு. நா. பெரியசாமி, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் மற்றும் திரு. இ. கணேசன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**392—**

**மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு**

***4188—திரு. நா. பெரியசாமி:**
**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**
**திரு. இ. கணேசன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் உள்ள மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் பணிபுரியும் பணியாளர்களின் ஊதியம் மற்றும் பணி நிலைகளை சீரமைப்பதற்காக அரசால் அமைக்கப்பட்ட சீரமைப்புக் குழுவின் பரிந்துரைகள் பரிசீலிக்கப்பட்டு தக்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1997 ஏப்ரல் 1]

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றக்கூடிய ஊழியர்களுக்கு ஊதிய ஒப்பந்தம் ஏற்படுத்தவேண்டிய கால அளவு ஏற்கெனவே காலாவதியாகிவிட்டது. ஊதிய சீரமைப்புக் குழுவினுடைய பரிந்துரைகளை விரைவில் ஆய்வு செய்து, எல்லா மாவட்டங்களிலும் உள்ள பணியாளர்களுக்கு ஒரே மாதிரி ஊதியம் வழங்கிட அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காக அமைக்கப்பட்ட இரண்டாவது சீரமைப்புக் குழு தனது அறிக்கையை ஜூலை 1995-லே அரசுக்கு சமர்ப்பித்தது. அதிலேயிருந்த 60-க்கும் மேற்பட்ட பரிந்துரைகளை அரசு கவனமாகப் பரிசீலித்து, 5-9-1996 நாளிடப்பெற்ற ஒரு ஆணையை உணவுத் துறையின் சார்பாக வழங்கியது. அதனைப் பல்வேறு தொழிற்சங்கங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே, மீண்டும் அதைப் பரிசீலித்து, கிட்டத்தட்ட அவர்கள் சொன்ன கோரிக்கைகளையெல்லாம் ஓரளவிற்கு ஏற்றுக் கொண்டு, தமிழ்நாட்டிலே இருக்கின்ற மூன்றே மூன்று வங்கிகளைத் தவிர மற்ற அனைத்து வங்கிகளிலுள்ள ஊழியர்களும், நிர்வாகமும் இணைந்து அதிலே கையெழுத்து போட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சென்னை, தஞ்சாவூர் மற்றும் கும்பகோணம் ஆகிய இடங்களில் இருக்கின்ற மத்திய கூட்டுறவு வங்கிகளைத் தவிர, மற்ற அனைத்து வங்கிகளிலுள்ள ஊழியர்களும், நிர்வாகமும் இணைந்து கையெழுத்து போட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளிலே பணியாற்றுகின்ற ஊழியர்களுடைய கோரிக்கைகள் ஓரளவிற்குப் பரிசீலிக்கப்பட்டிருப்பதாக இங்கே சொன்னார்கள். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 13-8-1996 அன்று இதே மாமன்றத்திலே, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளிலே பணிபுரிகின்ற ஊழியர்களுடைய சம்பளம் மற்றும் பணிநிலைகளைச் சீரமைப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட குழுவினுடைய அறிக்கை முழுமையாக ஏற்கப்படும் என்றார்கள். இன்றைக்கு அந்த ஊழியர்களிடையில் ஒரு மனக்குறை இருக்கிறது. சுமார் 15 ஆண்டு காலமாக ஊதிய உயர்வே இல்லாமல், எந்தவித

'வெயிட்டேஜ்'-ம் இல்லாமல் அவர்கள் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இன்னும்கூட, 1994-லே அவர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கப்பட்டபோது ஒரு ஏற்றத்தாழ்வு ஏற்பட்டது. அதாவது, மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கு 17 சதவிகித ஊதிய உயர்வும், நகரக் கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கு 12 சதவிகித ஊதிய உயர்வும் வழங்கப்பட்ட நிலையில் இடைப்பட்டிருந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கு 10 சதவிகிதம் மட்டுமே உயர்வு வழங்கப்பட்டது. ஏற்கெனவே, 1989-ல் கழக அரசு அமைந்தபோது, அதே 10 சதவிகித ஊதிய உயர்வுதான் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கு வழங்கப்பட்டது. ஆனால், 5 ஆண்டு காலம் கழிந்த பிறகும், 1994-லே அவர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கப்படுகின்றபோது, அதே 10 சதவிகிதம்தான் வழங்கப்பட்டது. ஆகவே, அவர்கள் 'எங்களுக்கு மட்டும் விலைவாசி உயரவில்லையா?' என்று கேட்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிவோடு, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஊழியர்களுடைய கோரிக்கைகளைப் பரிசீலித்து, எஞ்சியிருக்கின்ற கோரிக்கைகளையும் ஏற்றுக் கொள்வார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீரமைப்புக் குழு கொடுத்த 60 பரிந்துரைகளையும் கவனமாகப் பரிசீலித்து, அரசு ஆணை வெளியிட்ட பிறகும், தொழிற்சங்கத் தலைவர்கள் ஏற்றுக் கொள்ளாத நிலையில், மீண்டும் அவர்களை அழைத்துப் பேசினோம். அதன்படி, மற்ற வங்கிகளில் நடைமுறையில் உள்ளதுபோல, அடிப்படைச் சம்பளம் ரூ.4,800/-க்கு மேல் உள்ளவர்களுக்கு 0.17 சதவிகிதம் பஞ்சப்படி வழங்குதல், 15 ஆண்டுகள் பணி முடித்த ஊழியர்கள் அனைவருக்கும் அடுத்த உயர்நிலைப் பதவிக்கான சம்பளத்தில் சிறப்பு ஊதியம் நிர்ணயித்தல், குறைந்தபட்சப் பயனாக 60 புள்ளிகளுடன் இணைந்த பஞ்சப்படி — அடிப்படைச் சம்பளம் 1-7-1994 அன்று உள்ளவாறு — 10 சதவிகித உயர்வு வைத்து, பணியாளர்களுக்கு உத்தரவாதம் வழங்குதல், வீட்டு வாடகைப்படி மற்றும் நகர ஈட்டுப்படி ஆகியவற்றிற்கான சீரமைப்புக் குழுவின் பரிந்துரைகள் முழுவதையும் ஏற்றல், தேக்க நிலையிலுள்ள ஊதிய உயர்வு வழங்கல், பண்டிகை முன்பணத்தை ரூ.4,000/- ஆக உயர்த்தி அளித்தல் போன்ற கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. மீண்டும், மாண்புமிகு முதல்வர் அவர்களை தொழிற்சங்கத் தலைவர்கள் சந்தித்தார்கள். நிர்வாகத்திலே இருக்கின்ற



அதிகாரிகள், சீரமைப்புக் குழுவின் பரிந்துரைகளை ஏற்று, அதனை நடைமுறைபடுத்திவிட்டோம் என்று சொன்னதற்குப் பிறகும், தொழிற்சங்கத் தலைவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்தித்ததனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு ஒரு உத்தரவை இட்டிருக்கிறார்கள்; 'அவர்களை மீண்டும் அழைத்துப் பேசுங்கள்' என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். இதிலே, ஒருசில தொழிற்சங்கத் தலைவர்கள் நேரடியாக அதிகாரிகளைச் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள். இருப்பினும், மீண்டும் அவர்களை அழைத்துப் பேசி, நல்லதொரு சுமூகமான நிலை உருவாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய நீண்ட பதிலுக்கு என்னுடைய சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருப்பினும், இத்துறையிலே பணிபுரிகின்ற ஊழியர்கள் 13 ஆண்டு காலமாக மிக்க துயரத்திலே இருக்கிறார்கள் என்பதனை மனதிலே கொண்டு, சிறப்பான முறையிலே ஆட்சி நடத்திக்கொண்டிருக்கின்ற நம்முடைய கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே, அவர்களை அழைத்துப் பேசி, அவர்களுக்கு ஊதிய உயர்வு கிடைப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களை அழைத்துப் பேசி, நல்லதொரு நிலை உருவாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் மு. தேவராஜன்.

**டாக்டர் மு. தேவராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறக் கூட்டுறவு வங்கிகள் மூலம் கிராமங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது. இன்று வங்கிகளெல்லாம் தேசியமயமாக்கப்பட்ட நிலையில், கிராமப்புறக் கூட்டுறவு வங்கிகளையும் தேசியமயமாக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. மணிமாறன்.

முற்பகல் 10-10

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டக் கூட்டுறவு வங்கி, நகரக் கூட்டுறவு வங்கி போன்ற பல

நிர்வாகங்களும், தொழிற்சங்கங்களும் இணைந்து பேச்சுவார்த்தை நடத்துகிறபோது, இரண்டு பிரச்சினைகள்தான் முன்வருகின்றன. ஒன்று, நடைமுறை மூலதனத்தின் அடிப்படையிலே ஒப்பந்தம் போடுவது; இன்னொன்று, அந்த வங்கியின் வருமானத்தில் 3 சதவிகிதம் உச்சவரம்பு என்று வருவது. ஒன்று ஒத்து வந்தால், இன்னொன்று ஒத்து வரமாட்டேன் என்கிறது. எனவே, வங்கிகளில், அது மத்திய கூட்டுறவு வங்கியானாலும் சரி, நகரக் கூட்டுறவு வங்கியானாலும் சரி, இலாபத்தில் 3 சதவிகிதம் சம்பளம் மற்றும் இதர செலவுகள் என்று இருப்பதை, 5 சதவிகிதமாக உயர்த்தினால், பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு வழி பிறக்கும். ஆகவே, இதுகுறித்து அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கொள்கைப் பிரச்சினை. இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக் கூறியிருப்பதைப் போல, பதினோராயிரத்திற்கும் மேற்பட்ட கிராமப்புறத்திலே இருக்கிற சங்கங்களின் உறுப்பினர்களைக் கொண்டு சேர்த்த பிறகு, நடைபெறுகின்ற அந்த வங்கிகளிலே, சம்பளம் போன்றவற்றை அதிகப்படுத்துவதன் மூலமாக, வங்கிகளினுடைய நிதிநிலை மோசமாகிவிடுமானால், பல்வேறு உறுப்பினர்கள் பாதிக்கப்படுவார்கள். இருந்தாலும் உறுப்பினர் அவர்களுடைய கருத்தை கவனமாகப் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. வெங்கடாசலம்.

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழகத்தில், மத்திய கூட்டுறவு வங்கிகளில் பல ஊழியர்களுடைய பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அப்படி இருந்தால், மத்திய கூட்டுறவு வங்கிகளில் இருக்கக்கூடிய அந்தப் பணியிடங்களை நிரப்புவதற்கு அரசு முன்வருமா என்பதோடு, இன்றைக்குக் கூட்டுறவுச் சங்கத் தேர்தலை நடத்தியிருக்கிற இந்த அரசு, மத்திய வங்கியின் தேர்தலை நடத்தாமல் இருப்பதை அறிந்து விரைவாக நடத்துவதற்கு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் எங்கும் இருக்கின்ற மத்திய கூட்டுறவு வங்கிகளிலே இருக்கின்ற காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு, வேலைவாய்ப்புத் துறையின் மூலம் இன்றைக்குக் கேட்கப்பட்டிருக்கிறது. அப்படிக் கேட்கின்றபோது, 25 சதவிகிதம் ஊழியர்கள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலேயிருந்தும் மற்றும் மத்திய விற்பனை பண்டக



சாலைகளிலிருந்தும் அதற்காகத் தேர்வு செய்யப்பட்டு—அதாவது அவர்களுக்கு அதிலே முழுமையாக வாய்ப்பு இருக்குமானால், 25 சதவிகிதம் ஊழியர்களை அதற்காக நியமிப்பதாக முடிவு எடுத்து—பாக்கியிருக்கிற 75 சதவிகிதம் ஊழியர்களை நேரடியாக வேலைவாய்ப்புத் துறையின் மூலம் எடுப்பதற்கு அத்தனை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள், மத்திய கூட்டுறவு வங்கிகளுக்குத் தேர்தல் நடத்த வேண்டுமென்று. சென்ற மாதம் 31 ஆம் தேதியோடு, அதாவது நேற்றோடு, பால் கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் முடிவடைந்திருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வந்த பிறகு, அவரோடு கலந்தாலோசித்து, உடனடியாக மத்திய கூட்டுறவு வங்கியின் தேர்தலை நடத்துவதற்குரிய அத்தனை ஆணைகளும் பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இறுதியாக திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளிலும், மாநில தலைமைக் கூட்டுறவு வங்கிகளின் ஊழியர்களைப் போல சம ஊதியம் கொடுக்கப்பட வேண்டும். ஏனென்றால், பணிச் சுமையைப் பார்க்கிறபோது, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிப் பணியாளர்களுக்குத்தான் அதிகமாக இருக்கிறது. எனவே, அவர்களுக்கும், மாநில தலைமைக் கூட்டுறவு வங்கிகளின் ஊழியர்களுக்கு வழங்குவதைப்போல—சமமான அளவிலே கருதி—ஊதிய உயர்வு வழங்க அரசு முன்வருமா என்பதையும், அதே நேரத்தில், இந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளை, மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியினுடைய கிளைகளாக மாற்றினால், ஏழை விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்ற கடன்களில்கூட, 2 சதவிகிதம் வட்டி குறைய வாய்ப்பு இருப்பதாக விவசாயிகள் சொல்கிறார்கள். எனவே, அந்தக் கோரிக்கையை அரசு பரிசீலித்து ஆவன செய்யுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல பார்த்தால், தமிழகமெங்கும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு 4,600 கிளைகள் இருக்கின்றன. ஆனால், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளோ, கிட்டத்தட்ட 4,800 இருக்கின்றன. நேரடியாக, தலைமை வங்கியோடு அதன் கிளைகளாக மாற்றுவதோ, அல்லது இருக்கிற மத்திய கூட்டுறவு

[1997 ஏப்ரல் 1

வங்கியினுடைய கிளைகளாக மாற்றுவதோ நடைமுறையில் ஏற்புடையதாக இருக்காது என்கிற காரணத்தினால்தான், 3 அடுக்குகளாக, இன்றைக்கு அவற்றை வைத்து, அவை நிர்வகிக்கப்படுகின்றன. ஆனால், அவற்றிலே வட்டி விகிதத்தைக் குறைத்துத் தரவேண்டுமென்ற கோரிக்கையைக்கூட, சட்டமன்றத்திலே, அதற்கான மானியத்திலேகூட சொல்லியிருக்கிறார்கள். அதற்கான பதிலைச் சொல்லும்போதுகூட, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலே வழங்கப்படுகிற கடனுக்கு வசூலிக்கிற வட்டி, நேரடியாக எந்தவிதமான பொருள் ஈடும் இல்லாமல், நபர் ஜாமீன் பேரிலேயே வழங்கிக் கொண்டிருக்கிறோம் என்றும், ஆனால், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலே குறைந்த வட்டி என்றால் நகையைப் பெற்றுக்கொண்டு, விவசாயிகளுக்கு அந்த அளவுக்குத் தந்து கொண்டிருக்கிறார்களே தவிர, நாம் குறைந்த வட்டியிலேதான் விவசாயிகளுக்குத் தந்து கொண்டிருக்கிறோம். மற்றும், அங்கிருக்கிற ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு அளிப்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். இதிலே, ஒவ்வொரு வங்கியும், அந்தந்தப் பகுதியிலே இருக்கிற உறுப்பினர்கள் எண்ணிக்கை, அதிலே வரக்கூடிய இலாப நட்டம், ஆகியவற்றைக் கணக்கிலே கொண்டு, ஒவ்வொரு வங்கியாக அது 'ஏ' என்றும், 'பி' என்றும், 'சி' என்றும் பிரிக்கப்பட்டு, அதன் அடிப்படையிலேதான் சம்பளம் வழங்கிக் கொண்டு வருகிறார்கள். அதை மாற்றி, ஒரே நிலைமையை எடுப்போமானால், பல்வேறு வங்கிகள் சிதைந்து விடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 393, திரு. கு. மனோகரன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**393—**

**நுகர்வோர் கூட்டுறவு விற்பனை பண்டகசாலைக்குக் கட்டிடம்**

***5190—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைக்குச் சொந்தக் கட்டிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



1997 ஏப்ரல் 1]

தருமபுரி மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைக்குக் கட்டிடம் கட்ட சொந்த காலிமனை இல்லை. வருவாய்த் துறை மூலம் நில ஒதுக்கீடு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. உரிய நிலம் கிடைத்ததும், இது குறித்து பரிசீலிக்கப்படும்.

முற்பகல் 10-15

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்ட கூட்டுறவுப் பண்டகசாலை கடந்த 30 ஆண்டு காலமாக வாடகைக் கட்டிடத்திலே இயங்கி வருகின்றது. அலுவலகம், கிடங்கு மற்றும் கிளை அலுவலகங்கள் அனைத்தும் வாடகைக் கட்டிடங்களில் இயங்குவதால் வருடத்தில் சுமார் 3.60 லட்ச ரூபாயை வாடகையாகக் கொடுக்க வேண்டிய நிலை உள்ளது. கடுமையான நிதிப் பற்றாக்குறையில் இருக்கும் இந்தக் கூட்டுறவுப் பண்டகசாலையை ஒழுங்குபடுத்த, சொந்தக் கட்டிடத்தில் அது இயங்கும் வகையில், மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் ஒரு நல்ல இடத்தைத் தேர்வு செய்து, மாவட்டக் கூட்டுறவு பண்டகசாலைக்கு சொந்தக் கட்டிடத்தை விரைவில் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதுபோல் 30 ஆண்டு காலமாக, ஒவ்வொரு ஆண்டும் 3.60 இலட்சம் ரூபாய் வாடகை தரக்கூடிய நிலையில் தர்மபுரி மாவட்ட கூட்டுறவு மொத்த விற்பனைப்பண்டகசாலை இருந்து கொண்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அதற்கான நிலம் வேண்டுமென்று கேட்டு, தர்மபுரி நகரில் வெள்ளாளகவுண்டன்பாளையம் என்ற பகுதியில் சர்வே எண் 18/1-பி மற்றும் 18/2-பி ஆகிய இடங்களில் 34 செண்ட் இடம் வேண்டுமென்று கேட்கப்பட்டது. அது ஆய்வில் இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரால் இன்னும் ஒப்புதல் அளிக்கப்படவில்லை. அதேபோல் தர்மபுரி மாவட்டத்தில் அன்னை சத்தியா போக்குவரத்துக் கழகத்தின் தலைமை இடத்திற்கு அருகில் 35—இருப்பாட்சிபுரம் சர்வே எண் 77/2-ல் 20 செண்ட் புறம்போக்கு நிலம் இருக்கிறது. அது குறித்தும் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் எழுதிக் கேட்டிருக்கிறோம். இந்த இரண்டு இடங்கள் தவிர்த்து, வேறு ஏதாவது காலி இடத்தை விலைக்கு வாங்கியாவது கட்டிடம் கட்டலாம் என்றால், இன்றைய நிலையில் அங்கே காலி இடங்கள் சதுர அடி 200 ரூபாயிலிருந்து 1000 ரூபாய் வரை விற்கப்படுகிற நிலை இருக்கிறது. காலி மனை வாங்குவதற்கு 40 லட்ச ரூபாயும்,

கட்டிடம் கட்டுவதற்கு 50 லட்ச ரூபாயும் என கிட்டத்தட்ட 90 லட்ச ரூபாய்க்கு மேல் செலவிடுவதற்கு அந்தச் சங்கத்திலே நிதி வசதி இல்லாத காரணத்தால் அரசாங்கம் காலி மனையை ஒதுக்கித் தந்தால் கட்டிடத்தை இந்த ஆண்டிலேயே கட்டிவிடலாம் என்று இருக்கிறோம். கூடிய விரைவில் மாவட்ட ஆட்சித் தலைவரை தொடர்பு கொண்டு இடத்தைப் பெற்று இந்த ஆண்டே கட்டிடம் கட்டுவதற்குண்டான அத்தனை உரிய முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 394, திரு. அ. மாரிமுத்து, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**394—**

**தொழிற்பயிற்சி மையம் ஏற்படுத்துதல்**

***4554—திரு. அ. மாரிமுத்து:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டம், வானூர், மரக்காணம் ஒன்றியங்களுக்கு தனித்தனியே தொழிற்பயிற்சி மையம் நடப்பாண்டிலேயே ஏற்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மரக்காணம் ஊராட்சி ஒன்றியத்தில் ஏற்கெனவே தனியார் தொழிற் பயிற்சி நிலையம் இயங்கி வருகிறது. 19-9-1996-ல் வெளியிடப்பட்ட அரசாணைகளின்படி, தொழிற் பயிற்சி நிலையம் இல்லாத வானூர் ஊராட்சி ஒன்றியத்தில் புதிய தனியார் தொழிற் பயிற்சி நிலையம் 1997-98 ஆம் ஆண்டில் ஏற்படுத்த வாய்ப்புள்ளது.

**திரு. அ. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997-98 ஆம் ஆண்டில் தனியார் தொழிற்பயிற்சி நிலையத்தை வானூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஏற்படுத்துவதற்காக என்னுடைய நன்றியை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக, தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் இட ஒதுக்கீடு முறையில் மாணவர்களைச் சேர்க்க அரசு முன்வருமா என்றும், அங்கே



எலக்ட்ரிக்கல் மற்றும் எலக்ட்ரானிக்ஸ் போன்ற பாடங்களை தொழிற் பயிற்சி நிலையத்தின் தொடக்கத்திலேயே ஏற்படுத்த அரசு ஆணையிடுமா என்றும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு கவனத்தில் கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 395, திரு. இ.ஜி. சுகவனம், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**395—**

**உரிமையியல் நீதிமன்றம் இணைந்த குற்றவியல் நீதிமன்றம்**

***3959—திரு. இ. ஜி. சுகவனம்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பர்கூர் தொகுதி, போச்சம்பள்ளி வட்டத்தைத் தலைமையிடமாகக் கொண்டு உரிமையியல் நீதிமன்றம் இணைந்த குற்றவியல் நீதிமன்றம்-நிலை-I அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தருமபுரி மாவட்டம், போச்சம்பள்ளியில் உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் அமைப்பதற்கான செயற்குறிப்பு சென்னை உயர்நீதிமன்றத்திடமிருந்து பெறப்பட்டு, பரிசீலிக்கப்பட்டது. அரசு நிதிநிலை காரணமாக 17-1-1997 அன்று இச்செயற்குறிப்பு தள்ளி வைக்கப் பட்டுள்ளது.

**திரு. இ.ஜி. சுகவனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பர்கூர் தொகுதியிலுள்ள போச்சம்பள்ளி வட்டத் தலைமையிடமாக அறிவிக்கப்பட்டுள்ளது. போச்சம்பள்ளியைச் சுற்றியிருக்கிற கிராம மக்கள் நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டுமென்றால் நீண்ட தூரம் செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அங்கே பஸ் போக்குவரத்து

[1997 ஏப்ரல் 1

அதிகமாக இல்லாத சூழ்நிலையும் இருக்கிற காரணத்தால் நீதிமன்றங்களுக்குச் செல்வதற்கு மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வட்டத் தலைநகரமாக இருக்கிற போச்சம்பள்ளியிலே உரிமையியல் நீதிமன்றம் இணைந்த குற்றவியல் நீதிமன்றம் நிலை-1-ஐ இந்த நிதி ஆண்டிலே அறிவிப்பார்களா என்றும், எங்களுடைய தொகுதி மக்களுடைய நீண்டநாள் குறையை விரைவில் போக்குவதற்கு ஆவன செய்வார்களா என்றும் நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போச்சம்பள்ளியில் நீதிமன்றம் அமைப்பதற்காக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 9-8-1996 அன்று சட்டத் துறைக்கு ஒரு கடிதத்தைத் தந்தார். அது உடனடியாக உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. உயர் நீதிமன்றமும் அதனைப் பரிசீலனை செய்து, 12-9-1996-ல் அரசுக்குப் பரிந்துரைத்து அனுப்பியது. சட்டத் துறையும் அதனை தீவிரமாகப் பரிசீலித்து, நிதித் துறையின் ஒப்புதலைக் கேட்டது. நிதித் துறை அதைத் தள்ளிவைக்கும்படி கேட்டுக் கொண்டது. இருந்தாலும் முன்னோடித் திட்டங்களின்கீழ், உயர் நீதிமன்றம் சில நீதிமன்றங்களை அமைக்காமல், அதைத் திரும்பி அரசுக்குத் தர இருக்கிறது. எனவே, அந்த அடிப்படையில், அப்படிப்பட்ட நீதிமன்றங்களை, எங்களுக்குத் தர இருக்கும்போது, அந்தச் சமயத்தில், நம்முடைய உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க போச்சம்பள்ளியிலே ஒரு நீதிமன்றம் அமைப்பதற்கு அரசு தீவிரமாக முயற்சி செய்யும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 396, திரு. டி. மணி, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**396—**

**குடிநீர்க் கிணறுகளில் இரசாயனம் கலப்பதைத் தடுத்தல்**

***2814—திரு. டி. மணி:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணலி அருகிலுள்ள மாத்தூர், மஞ்சம்பாக்கம், அசிசி நகர் போன்ற கிராமங்களில் உள்ள குடிநீர்க் கிணறுகளில் இரசாயனம் கலக்கும் அபாயம் உள்ளதென அரசுக்குத் தகவல் வந்துள்ளதா?



1997 ஏப்ரல் 1]

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) வினா எழவில்லை.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணலி அருகிலுள்ள மாத்தூர், மஞ்சம்பாக்கம், அசிசி நகர் போன்ற கிராமங்களில் உள்ள குடிநீர்க் கிணறுகளில் இரசாயனம் கலக்கும் அபாயம் உள்ளதென அந்தப் பகுதி மக்களிடமிருந்து ஒரு மனு எனக்கு வழங்கப்பட்டது. அதனுடைய பின்னணியில் அதனைச் சரி செய்வதற்கு அரசு உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்குத் தகவல் வந்துள்ளதா என்ற கேள்வியினைப் போட்ட காரணத்தினால்தான், நான் இல்லையென்று தெரிவித்தேன். ஏற்கெனவே, அந்தப் பகுதியிலே 23 இரசாயனத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அதிலே 'பியர்டுசெல்', 'சென்ட்ரல் பெட்ரோ கெமிக்கல் இண்டஸ்டிரீஸ்' போன்றவைகள் 'ரீ-சைக்கிளிங்' முறையிலே திரும்பவும் உபயோகப்படுத்திக் கொள்கின்றன. ஆனால், அது போக, 10 இரசாயன ஆலைகளில் சில தோட்ட வேலைக்குப் பயன்படுத்தி மீதம் உள்ள கழிவு நீரை வெளியே விடுகின்றன. மற்றும் சில ஆலைகள் சூரிய வெளிச்சத்திலே ஆவியாக்குகின்ற பணியிலும் ஈடுபடுகின்றன, மற்றும் சில ஆலைகள் நிலத்தில் வடிக்கின்ற பணியிலும் ஈடுபட்டு வருகின்றன. குறிப்பாக பெட்ரோ கெமிக்கல்ஸ் மற்றும் மெட்ராஸ் ரிபைனரீஸ் போன்ற பெரிய ஆலைகளில் கழிவு நீரில் சரிபாதிக்கு மேல் சுத்திகரிக்கப்பட்டும் மீதிக் கழிவு நீர் கடலிலும் மற்றும் பக்கிங்காம் கால்வாயிலும் விடப்பட்டும் வருகிறது. மாத்தூர், அசிசி நகர் மற்றும் மஞ்சம்பாக்கம் போன்ற பகுதிகள் சற்று உயர்ந்த பகுதியில் இருக்கின்ற காரணத்தினால் மணலி தொழிற்சாலையினுடைய கழிவு நீரால் அங்கு சேதாரம் ஏற்படவில்லை. மற்றபடி, இப்போது ஒரு சில இடங்களிலே பல மாதிரிகள் எடுக்கப்பட்டு 'டாலரன்ஸ் லெவல்' என்று சொல்லப்படுகிற அளவிற்கு அப்பாற்பட்டு கடினத்தன்மை கொண்டிருப்பது, சம்பந்தப்பட்ட ஆலைகளுக்கு சுட்டிக்காட்டப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1997 ஏப்ரல் 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகளிலிருந்து வரக்கூடிய கழிவு நீர் காரணமாக, நிலத்தடி நீரெல்லாம், பல இடங்களிலே பாதிக்கப்பட்டு, இப்போது குடிநீரே கிடைக்காத சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. மணலி பகுதி எப்படி பாதிக்கப்பட்டு இருக்கின்றனவோ, அதேபோல என்னுடைய வடாற்காடு-அம்பேத்கர் மாவட்டத்திலும் நிலத்தடி நீர் சுமார் 200 அடி ஆழத்திற்கு பாதிக்கப்பட்டிருப்பதாக ஆய்வு அறிக்கைகள் கூறுகின்றன. எனவே, எங்கெங்கு எல்லாம் தொழிற்சாலைகள் இருக்கின்றனவோ, அந்தப் பகுதிகளையெல்லாம் நீங்கள் 'இயர்-மார்க்' செய்து, அந்த இடங்களிலே 'கிரவுண்டு வாட்டர் ஸ்டடி' செய்து, நிலத்தடி நீர் பாதிக்கப்பட்ட இடத்திலிருந்து குடிநீர் எடுத்து குடிக்கக் கூடாது என்கிற ஒரு நிலையை உருவாக்கி, குடிநீர் எங்கெங்கு கிடைக்கிறதோ அங்கிருந்து தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லிய ஆலோசனையின்படிதான் அந்தந்தப் பகுதிகளிலே, புதிய தொழிற் சாலைகள் துவங்குவதற்கு முன்பாக 'போர்கள்' போடப்பட்டு, அந்தத் தண்ணீரின் தன்மை அறியப்பட்டு, மாற்றம் ஏற்பட்டால் சரி செய்யக்கூடிய வாய்ப்பு புதிய தொழிற்சாலைகளிலே இருக்கின்றது. பழைய தொழிற்சாலைகளிலே எந்த அளவிற்கு இவை முறையாகக் கண்காணிக்கப்படுகின்றன என்பதற்கான முழு விவரம் வேண்டுமென்றால் தனியாக ஒரு கேள்வியினைப் போட்டோ அல்லது எனக்கு ஒரு கடிதம் அனுப்பி, விவரமாகத் தெரிவித்தால், எப்படிப்பட்ட நிலை இருக்கிறது என்பதனைத் தெரிவிக்கிறேன், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 397, திரு. அ. வ. அப்துல் நாசர், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**397—**

## கழிவுகளை அழித்தல்

***6098—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1997 ஏப்ரல் 1]

(அ) தமிழகத்திலுள்ள மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங் களிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் எந்த முறையில் அழிக்கப் படுகின்றது?

(ஆ) இதற்கென மாசுக் கட்டுப்பாடு வாரியம் எவ்வாறு உதவுகின்றது?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழகத்திலுள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களிலிருந்து வெளியேற்றப்படும் உயிரக மருத்துவக் கழிவுகள் (Bio-medical waste) பொதுவாக அந்தந்தப் பகுதியில் உள்ள மாநகராட்சி மற்றும் நகராட்சி கழிவுகள் சேகரிக்கும் மையங்களின் மூலம் வெளியேற்றப்படுகின்றன. இவற்றுள் சில தனியார் மருத்துவமனைகள் தனியாகவோ அலலது கூட்டு சேர்ந்தோ கழிவுகளை எரிப்பதற்கான எரிப்பானை அமைத்து இயங்குகின்றன.

(ஆ) தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகளை உயிரக மருத்துவக் கழிவுகளையும் மற்றும் திடக் கழிவுகளையும் வெளியேற்ற, தனியாகவோ அல்லது கூட்டு சேர்ந்தோ எரிப்பானை அமைக்குமாறு தனியார் மற்றும் அரசு மருத்துவ மனைகளை வலியுறுத்தி வருகின்றது.

முற்பகல் 10-25

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழிவுகளை எரிப்பதனால் யூரன்ஸ் என்ற கிருமி அதிலிருந்து உண்டாகி, அது தொற்றுக் கிருமியாக மாறி பல உயிர்களை அழிக்கக்கூடிய வகையிலே இருக்கின்ற காரணத்தாலும், இரத்தத் துளி படிந்த துணிகளையும், சிரிஞ்ச் போன்ற உபகரணங்களையும் குப்பைத் தொட்டியில் போடுவதால் ஏற்படக்கூடிய விளைவுகள் மிகவும் மோசமாக இருக்கின்ற காரணத்தாலும், இதை அரசு உடனடியாகப் பரிசீலித்து, அந்த எரிப்பான்கள் தகுந்த பாதுகாப்போடு இருக்கக்கூடிய வகையில் அமைக்கப்படுமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்துக்களை எல்லாம் கணக்கிட்டுத்தான், சேலத்திலே இப்போது 80 தனியார்

மருத்துவமனைகள் ஒன்று சேர்ந்து ரூ. 4.5 இலட்சம் செலவில் 'இன்செனரேட்டர்' அமைத்து அவர்கள், ஏறத்தாழ நாளொன்றுக்கு 650 கிலோ அளவுள்ள கழிவுகளை எரித்துக் கொள்கிறார்கள். அதேபோன்று, திருச்சியிலும், கோவையிலும் அந்தப் பணி துவங்கப்பட்டு முடிந்திருக்கிறது. ஈரோடு போன்ற பகுதிகளில் இனி துவங்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 398, திரு. என்.ஆர். அழகராஜா, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**398—**

**சிட்கோ தொழிற்பேட்டை அமைத்தல்**

***6334—திரு. என்.ஆர். அழகராஜா:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உத்தமபாளையம் வட்டம், சின்னமனூர் பகுதியில் சிட்கோ தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வைகை வீரன் அழகு முத்து மாவட்டம், தேனி தொகுதி, உத்தமபாளையம் தாலுகா, சின்னமனூர் பகுதியில் சிட்கோ தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் எதுவும் தற்போது சிட்கோவிடம் இல்லை.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னமனூர் பகுதி விவசாயத்தையே நம்பி இருக்கக்கூடிய பகுதி. அங்கே பல்வேறுவிதமான விளைபொருட்கள் நல்ல முறையிலே விளைந்து வருகின்றன. உதாரணமாக, திராட்சை, வாழை, கடலை, நெல் மற்றும் தென்னை போன்ற பயிர்கள் அங்கே பயிரிடப்படுகின்றன. இப்படி விவசாயத்தையே நம்பியிருக்கக்கூடிய பகுதியாக அந்தப் பகுதி இருக்கின்ற காரணத்தாலும், அங்கே தொழிற்பேட்டை அமைப்பதற்கு ஏதுவான நிலம் மிகவும் குறைந்த விலையில் கிடைக்கும் என்ற அடிப்படையினாலும், தண்ணீர் வசதி, மின்சார வசதி போன்றவை கிடைப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தாலும் அந்தப் பகுதியிலே





தொழிற்பேட்டை ஒன்றை அமைத்து, அந்தப் பகுதியினுடைய முன்னேற்றத்திற்கு ஆவன செய்ய அரசு முயற்சி மேற்கொள்ளுமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் முனைவோர்கள் ஆர்வத்தோடு முன்வந்தால் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையானது, பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 399, திரு. பா. துரைசாமி, மாண்புமிகு கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**399—**

**நூற்பாலைகளை இயக்குதல்**

***4440—திரு. பா. துரைசாமி:**

மாண்புமிகு கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) வரகூர் தொகுதி, முருக்கன்குடி, நன்னை, ஓணப்பாடி கிராமங்களில் கட்டப்பட்டு திறக்காமலுள்ள நூற்பாலைகளை இயக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது இயக்கப்படும்?

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வரகூர் தொகுதி, முருக்கன்குடி மற்றும் நன்னை கிராமங்களில் வாரிய அலகுகளோ கட்டிடமோ இல்லை. இங்கு நூற்பு நிலையங்கள் துவக்க வாய்ப்பில்லை. ஓணப்பாடி கிராமத்தில் வாரியக் கட்டிடத்தில் இயங்கிவந்த நூற்பு நிலையம் நூற்பாளர்கள் பணிக்கு வராததால் 01-08-1988-ல் மூடப்பட்டு விட்டது. இதனை மீண்டும் திறப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

**திரு. பா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரகூர் தொகுதியில் நன்னை மற்றும் முருக்கன்குடி கிராமங்களில் ஆதிதிராவிடர் நலத் துறை மூலமாகவோ அல்லது கதர்த் துறை

மூலமாகவோ கட்டப்பட்ட இரண்டு கட்டிடங்கள் திறக்கப்படாமல் வெறுமனே உள்ளன. எனவே, அந்த கிராம நூற்பாலைகளை உடனடியாகத் திறந்து, அந்தப் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பினை நல்கிடக்கூடிய வகையில் அந்தக் கட்டிடங்களைத் திறப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்றறிய விரும்புவதோடு, ஓணப்பாடி பகுதியில் உள்ள காகித ஆலையை விரிவாக்கம் செய்யவும் அரசு முன்வருமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரகூர் தொகுதியில் கிராமிய நூற்பு நிலையங்கள் எதுவும் தற்போது இயங்கவில்லை. வரகூர் தொகுதியில் வாழும் மக்கள் நூற்புப் பணிக்கு வர விரும்பாத காரணத்தால், புதிய நூற்பு நிலையங்கள் துவக்க வாய்ப்பில்லை.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓணப்பாடி கிராமத்தில், வாரியத்திற்குச் சொந்தமான கட்டிடத்தில் ஒரு நூற்பு நிலையம் 1-6-1983-லிருந்து செயல்பட்டு வந்தது. நூற்பாளர்கள் நூற்புப் பணிக்கு வராத காரணத்தால் 1-8-1988 அன்று மூடப்பட்டது. இருப்பினும் நெசவு செய்ய பயிற்சி கொடுத்ததால், பணிக்கு வருவதாகத் தெரிவித்து உள்ளதால், வரகூர் தொகுதியில், ஓணப்பாடி என்ற இடத்தில் 28-2-1997-க்குள் நெசவுத் தறி அலகு ஆரம்பிக்க, வாரியத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் அவர்கள் பெண்ணாகரம் தொகுதியில் ஒரு நூற்பாலை அமைக்கப்போவதாக என்னிடத்திலே சொல்லியிருந்தார்கள். ஆகவே, நீண்டகாலமாக தொழில் வசதி இல்லாத என்னுடைய பகுதியிலே கதர்த் துறை வாயிலாக நூற்பாலை துவங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணாகரம் தொகுதி மிகவும் பின்தங்கிய பகுதி



என்பதை நான் நன்கு அறிவேன். ஆகவே அந்தப் பகுதியில், நூற்பாலை துவங்குவதற்கு உண்டான திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 400, திரு. இரா. மதிவாணன், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

**400—**

**மீன்பிடிப்பதற்கு வெளிநாட்டுக் கப்பல்களுக்கு உரிமம் ரத்து**

***1703-திரு. இரா. மதிவாணன்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்கு வெளிநாட்டுக் கப்பல்களுக்கு வழங்கிய உரிமத்தை ரத்து செய்யவும், முராரி குழு அறிக்கையை அமல்படுத்தக்கோரியும் மத்திய அரசை, மாநில அரசு வலியுறுத்துமா?

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். முராரி குழுவின் அறிக்கை 1996-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் மத்திய அரசிடம் கொடுக்கப்பட்டுள்ளது. தற்போது அவ்வறிக்கை மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது. அறிக்கையின் பரிந்துரைகளில் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ஏற்புக்கு உடையவைகளை அமல்படுத்த மாநில அரசு மைய அரசை வலியுறுத்தும். யாருக்கும் பாதிப்பு ஏற்படா வண்ணம் மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்குச் சொந்தமான மீன்பிடிக் கப்பல்கள் எத்தனை உள்ளன? அதில் எத்தனை இயங்குகின்றன என்பனவற்றை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1978-ஆம் வருஷத்திலிருந்து நெல்லை, தஞ்சை என்ற இரண்டு நாவாய்களும், 1990-ஆம் வருஷத்திலிருந்து மிக்சிகானா, சுல்தானா என்ற இரண்டு நாவாய்களும் ஆக மொத்தம் 4 நாவாய்கள் விசாகப்பட்டினத்தில் இயங்கி வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1997 ஏப்ரல் 1

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

### (எட்டாம் பட்டியல்)

1—

**ஓய்வூதியம் பெறும் சுதந்திரப் போராட்ட வீரர்கள் விவரம்**

**வினா எண் 644—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள ஓய்வூதியம் பெறும் சுதந்திரப் போராட்ட வீரர்களின் எண்ணிக்கை எத்தனை?

(ஆ) அவர்களுக்கு மாநில அரசு செய்து கொடுத்துள்ள வசதிகள் யாவை?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் சுதந்திரப் போராட்ட வீரர்களின் ஓய்வூதியத் தொகை பெறுபவர்களின் எண்ணிக்கை 11,155 ஆகும்.

(ஆ) அவர்களுக்கு அரசு செய்து கொடுத்துள்ள வசதிகள் பின்வருமாறு:—

1. 1966-ஆம் ஆண்டு ரூ.50/- மட்டும் பெற்று வந்த ஓய்வூதியம் தற்போது ரூ. 1,500/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

2. 1-8-1990 முதல் மருத்துவப்படியாக ரூ.15/- வழங்கப்பட்டு வருகிறது.

3. 1-8-1989 முதல் மாநில/மத்திய ஓய்வூதியம் பெற்ற விடுதலைப் போராட்ட வீரர்கள் இறந்தால், அவர்களது இறுதிச் சடங்குகளுக்காக அவர்களுடைய மனைவி (அல்லது) நேரடி வாரிசுதாரர்களிடம் ரூ. 1,000/- வழங்கப்படுகிறது. சம்பந்தப்பட்ட வட்டாட்சியரால் இத்தொகை பட்டுவாடா செய்யப்படுகிறது. விடுதலைப் போராட்ட வீரர்கள் மறைவுக்கு மரியாதை செலுத்தும் வகையில் வட்டாட்சியர் அந்தஸ்துக்கு குறையாத அதிகாரியால் அரசு சார்பில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செய்யப்படுகிறது.



1997 ஏப்ரல் 1]

4. ஓய்வூதியதாரரும் அவரைச் சார்ந்தவர்களும் மருத்துவமனையில் சிகிச்சையும் 'பி' (B) வகுப்பில் படுக்கை வசதியும் பெறுகிறார்கள்.

5. கல்விச் சலுகையாக விடுதலைப் போராட்ட வீரர்களின் பிள்ளைகளுக்கு பட்ட மேற்படிப்பு வரையில் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. பொறியியல் பட்டப்படிப்பில் ஓர் இடமும், மருத்துவக் கல்லூரிகளில் 3 இடங்களும், சித்த மருத்துவம் பயில ஓர் இடமும், பாலிடெக்னிக்/சிறப்பு நிறுவனங்களில் ஒரு இடமும் வழங்கப்பட்டு வருகின்றது.

6. வீட்டு வசதி வாரியத்தால் வழங்கப்படும் வீடு/வீட்டுமனை/குடியிருப்பு தள ஒதுக்கீட்டில் ஒரு சதவீதமும் கொடுக்கப்படுகின்றது.

7. போக்குவரத்துக் கழக பேருந்துகளில் இலவசமாக பயணம் செய்ய ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2—

**தீயணைப்பு நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்டுதல்**

**வினா எண் 5879—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குத்தாலம் தீயணைப்பு நிலையத்திற்கு நிரந்தரக் கட்டிடம் கட்டிக்கொள்ள குத்தாலம் ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில் இடம் ஒதுக்கித் தரப்படும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.

3—

**ஓவிய ஆசிரியர்கள், கைத்தொழில் ஆசிரியர்கள் நியமனம் செய்தல்**

**வினா எண் 2447—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1997 ஏப்ரல் 1

(அ) தமிழகத்தில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளில் பல ஆண்டுகளாக ஓவிய ஆசிரியர்கள், கைத்தொழில் ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படாததை அரசு அறியுமா?

(ஆ) எப்போது அவர்களை அரசு நியமனம் செய்யும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) உடற்கல்வி ஆசிரியர் மற்றும் ஓவிய ஆசிரியர்கள் காலி பணியிடங்களை நிரப்பிட தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(ஆ) இதர சிறப்பாசிரியர்கள் பணியிடங்களை நிரப்புதல் குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

4—

**உதவிக் கல்வி அலுவலர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டுதல்**

**வினா எண் 3998—திரு. டி. செல்வராஜ்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை நகரில் உதவிக் கல்வி அலுவலர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

உடுமலைப்பேட்டை உதவிக் கல்வி அலுவலகத்திற்குச் சொந்தமாக கட்டடம் கட்டுவதற்கு எந்தவிதமான கருத்துருவும் கோவை மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலரிடமிருந்து பெறப்படவில்லை.

5—

**நூலக ஊழியர்களுக்கு வழங்கும் சலுகைகளின் விவரம்**

**வினா எண் 4046—திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1997 ஏப்ரல் 1]

தஞ்சாவூர் சரஸ்வதி மகால் நூலக ஊழியர்களுக்கு அரசு வழங்கும் சலுகைகள் பற்றிய விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

சரஸ்வதி மகால் நூலக ஊழியர்களுக்கு கீழ்க்காணும் சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன:—

1. அரசுப் பணியாளர்களுக்கிணையான ஊதியம் அரசு மானியத்திலிருந்து வழங்கப்பட்டு வருகிறது.
2. அரசு அறிவிக்கும் அகவிலைப்படி முதலியன.
3. பொங்கல் போனஸ்
4. மருத்துவப்படி
5. ஈட்டியவிடுப்பு ஒப்படைப்பு ஊதியம்
6. விழாக்கால முன்பணம்
7. வாகன முன்பணம் மற்றும் இதர கடன் வசதிகள்.
8. 1991-ஆம் ஆண்டுக்குப் பின் ஓய்வுபெற்ற இந்நூலகப் பணியாளர்களுக்கு ஓய்வூதியச் சலுகையாக குறைந்தபட்ச ஓய்வூதியம் ரூ.375/- வழங்கப்பட்டு வருகிறது.

6—

**நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுதல்**

**வினா எண் 5498—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, புவனகிரி பேரூராட்சியில் உள்ள நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1997 ஏப்ரல் 1

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): புவனகிரி கிளை நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட இதுநாள்வரை காலிமனை ஏதும் பெறப்படவில்லை. காலிமனை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. காலிமனை பெறப்பட்டதும் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

7—

**டெங்கு காய்ச்சல் தமிழ்நாட்டில் பரவாமல் தடுத்தல்**

**வினா எண் 5363—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆட்கொல்லி நோயான டெங்கு காய்ச்சல் தமிழ்நாட்டில் பரவாமல் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஆட்கொல்லி நோயான, ரத்தப்போக்குண்டான டெங்கு காய்ச்சல் (Hemorrhage Dengue) தமிழ்நாட்டில் இதுவரை எவ்வித பாதிப்பினையும் ஏற்படுத்தவில்லை. நம் மாநிலத்தில் சாதாரண வகை டெங்கு காய்ச்சல்தான் காணப்படுகிறது. இந்த டெங்கு காய்ச்சல் ஏடிஸ் என்னும் கொசு மூலமாக பரவுகிறது. தமிழ்நாட்டில் இவ்வகையான டெங்கு காய்ச்சல் நோய் பரவாமல் தடுக்க கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:—

1. டெங்கு நோய் கண்டுள்ளது பற்றி தகவல் கிடைத்தவுடன் அப்பகுதிகளில் பூச்சியியல் வல்லுநர்களால் பூச்சியியல் ஆய்வுகள் மேற்கொண்டு அதன் அடிப்படையில் நோய் பரவாமல் தடுக்க புகை மருந்து மற்றும் கொசுப் புழுக் கொல்லி மருந்து தெளிக்கப்படுகிறது.

2. நோய் கண்ட இடங்களை சுற்றியுள்ள பொது மக்களுக்கும் டெங்கு காய்ச்சல் நோய் பரவாமல் தடுக்கும் வகையில் சுற்றுப்புறங்களை தூய்மையாக வைத்துக் கொள்ளுமாறும், பழைய, உபயோகமற்ற



பொருட்கள், ரப்பர் துண்டுகள், தேங்காய் ஓடுகளை வெளியில் சேர்த்து வைக்க வேண்டாமென்றும் அறிவுறுத்தப்படுகிறார்கள். இவ்வாறு பொது மக்கள் விழிப்புடன் இருந்து இந்நோயைப் பரப்பும் கொசுக்களின் உற்பத்தியைத் தவிர்க்குமாறும் ஆலோசனை வழங்கப்படுகிறது.

3. டெங்கு காய்ச்சல் பற்றியும் அதனைத் தடுப்பதற்கான வழிமுறைகள் பற்றியும் துண்டுப் பிரசுரங்கள் தயாரித்து மக்களுக்கு வழங்கப்படுகின்றன.

8—

**அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் வழங்குதல்**

**வினா எண் 5624—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு அரசு மருத்துவமனைக்கு கூடுதலாக ஆம்புலன்ஸ் மற்றும் சவ ஊர்திகள் வழங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

9—

**பாதை வசதி செய்தல்**

**வினா எண் 457—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், எர்ணாபுரம் கிராமம், மேட்டுத் தெருவிற்கு பாதை வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எர்ணாபுரம் கிராமத்தின் மேட்டுத் தெருவிற்குச் செல்லும் சாலையில், பேருந்து செல்லும் 3 பர்லாங் நீளமுள்ள சாலையை தார்ச்சாலையாக அமைக்கும் பணி, 1996-97 ஆம் ஆண்டிற்கான வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டு உள்ளது.

**10—**

**கிணறு அமைக்கும் தொகை கூடுதலாக்குதல்**

**வினா எண் 997—திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1995-96-இல் செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் எத்தனை கிணறுகள் அமைக்க திட்டமிடப்பட்டது?

(ஆ) அவற்றில் திருக்கழுக்குன்றம் ஊராட்சியில் எத்தனை கிணறுகள் அமைக்கப்பட்டன?

(இ) ஒரு கிணற்றிற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு? அந்தத் தொகையைக் கூடுதலாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) 830 கிணறுகள் அமைக்கத் திட்டமிடப்பட்டது.

(ஆ) 16 கிணறுகள்

(இ) ஒரு கிணற்றிற்கு 1995-96-ம் ஆண்டில் ரூ.42,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1996-97-ல் ஒரு கிணற்றிற்கு ரூ.48,000/-ஆக கூடுதலாக்கி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.





**11—**

**சாலையைப் புதுப்பித்தல்**

**வினா எண் 1411—திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், திருக்குறுன்குடியிலிருந்து நம்பிகோவிலுக்குச் செல்லும் சாலையைப் புதுப்பிக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், திருக்குறுன்குடியிலிருந்து நம்பிகோவிலுக்குச் செல்லும் சாலையில், 1994-95 ஆம் ஆண்டில் தார்ச்சாலையாக போடப்பட்ட ஒரு பகுதி நல்ல நிலையில் உள்ளது. மற்ற பகுதியை செப்பனிட வனத்துறையுடன் கலந்து முடிவெடுக்க வேண்டுமாதலால், உடனே நடவடிக்கை எடுக்க இயலாது.

**12—**

**பழுதுபட்ட சிறு தாம்போதியை பாலமாகக் கட்டுதல்**

**வினா எண் 1412—திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தொகுதி, கடையம்-முக்கூடல் சாலை ஐந்தாம் கட்டளை அருகில் உள்ள பழுதுபட்டுள்ள சிறு தாம்போதியை பாலமாகக் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கடையம்-முக்கூடல் சாலையில் ஐந்தாம் கட்டளை அருகிலுள்ள சிறு தாம்போதியை பாலமாகக் கட்டும் வேலை "மாவட்ட பரவலாக்கப்பட்ட

திட்டத்தின்" கீழ் 1996-97 ஆம் ஆண்டில் கட்டிக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

13—

**வத்தல்மலை-பெரியூர் பகுதியில் சாலை**

**வினா எண் 2238—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி ஒன்றியம், வத்தல்மலை-பெரியூர் பகுதியில் சாலை போட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தருமபுரி ஒன்றியத்திற்குட்பட்ட கொண்டகரஅள்ளி ஊராட்சிப் பகுதியில் அமைந்துள்ள வத்தல்மலை-பெரியூர் ஏறத்தாழ 10 கி.மீ. தூரம் மலைப்பகுதியாக உள்ளதால், இச்சாலையை அமைக்க கோடிக்கணக்கான ரூபாய் செலவாகும். எனவே, மேற்படி திட்டத்தினை தற்போது செயல்படுத்த இயலாது.

14—

**சாலையைச் செப்பனிடுதல்**

**வினா எண் 2438—திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், செங்கோட்டை ஒன்றியம், கலங்காதகண்டி அணை வழியாகச் செல்லும் சாலையைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், செங்கோட்டை ஒன்றியம், கலங்காதகண்டி அணை வழியாகச் செல்லும் சாலை சீரமைப்புப் பணி நான்கு பகுதிகளைக் கொண்டது. 400 மீட்டர் உள்ள முதல் பகுதி சாலை நல்ல நிலையில் உள்ளது. மற்ற பகுதிகளைச் செப்பனிட சுமார் 200 மீட்டர் நீளத் தோப்பு மற்றும் புஞ்சை நிலங்களை ஆர்ஜிதம் செய்ய வேண்டி உள்ளது. இச்சாலை முழுவதும் செப்பனிட தற்போது திட்டமோ, நிதி ஆதாரமோ அரசிடம் ஏதும் இல்லை.

15—

**மயானப்பாதை சீர்படுத்தல்**

**வினா எண் 2962—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், சித்தூர் கிராமம், கூலையனூர் மயானத்திற்குச் செல்லும் பழுதடைந்த பாதையைச் சீர்செய்ய அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி ஊராட்சி ஒன்றியம், சித்தூர் கிராமம், கூலையனூர் மயானச் சாலையை மேம்பாடு செய்யும் பணி ரூ.15,000/- மதிப்பீட்டில் 1996-97-ஆம் ஆண்டிற்கான ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

16—

**அருந்ததியர் குடியிருப்புப் பகுதி கால்வாயில் தடுப்புச்சுவர்**

**வினா எண் 3545—திரு. சி. கோபு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி

மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வடஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதி, மகமதுபுரம் ஊராட்சி, பாட்டை வீதி, அருந்ததியர் குடியிருப்புப் பகுதியில் செல்லும் கால்வாயில், தடுப்புச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வடஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதி, மகமதுபுரம் ஊராட்சி, பாட்டை வீதி, அருந்ததியர் குடியிருப்புப் பகுதியில், அடிப்படை வசதி நிதி ஒதுக்கீட்டின்கீழ் தற்போது சுமார் 100 மீட்டர் நீளத்திற்கு தடுப்புச் சுவர் அமைத்துத் தர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**17—**

**மயானத்தில் சுற்றுச் சுவர் கட்டுதல்**

**வினா எண் 3865—திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் சலவாதி சாலையிலுள்ள மயானத்தில் ஆக்கிரமிப்புகளை அகற்றி சுற்றுச்சுவர் அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : திண்டிவனம் நகரம், திண்டிவனம் கிராமத்தில் பு.எண் 97/1, (9.68 ஏக்கர்) மயானம் புறம்போக்கு நிலத்தில் 6.40 ஏக்கர் கலவை உர திடலாகவும், 3.28 ஏக்கர் மயானப் பகுதியாகவும் தற்போது அனுபவத்தில் இருந்து வருகிறது. மயானமாக பயன்படுத்தி வரும் பகுதியில் எந்தவித ஆக்கிரமிப்பும் இல்லை. மேற்கண்ட பகுதியில் சுற்றுச்சுவர் அமைக்க நகர்மன்ற ஒப்புதல் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும்.



**18—**

**கஸ்பா, பெருமாள்நகர் பகுதியில் பொதுக் கழிப்பிடம் கட்டுதல்**

**வினா எண் 4259—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் நகராட்சி, கஸ்பா, பெருமாள்நகர் பகுதியில் பொதுக் கழிப்பிடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர் நகராட்சி, கஸ்பா, பெருமாள் நகர் பகுதியில் கழிப்பிடம் கட்டும் திட்டம் எதுவும் தற்சமயம் இல்லை. இருப்பினும், இப்பகுதியில் கழிப்பிடம் கட்ட நடவடிக்கை எடுத்து இந்த நிதி ஆண்டிற்குள் கட்டி முடிக்கப்படும்.

**19—**

**கால்வாய்களை தூர் எடுத்தல்**

**வினா எண் 4264—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மற்றும் சத்துவாச்சாரி பகுதிகளில் மலையிலிருந்து வரும் மழைநீர்க் கால்வாய்களில் குப்பைகளைக் கொட்டுவதால் வாய்க்கால் தூர்ந்து வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வேலூர் நகராட்சிப் பகுதியில் உள்ள காகிதப்பட்டையில் தெற்குப் பகுதியில் மலையில் இருந்து பாயும்

மழைநீர், கால்வாய்கள், ஆறு வழியாக வடக்கு நோக்கி கீழே வருகிறது. இந்தக் கால்வாய்கள் நீண்ட காலமாக தூர் எடுக்காமல் அடைபட்டுள்ளது. மேலும் இக்கால்வாய்களில் குப்பைகளும் அடித்து வரப்படுகின்றன. அப்படி அடித்து வரும் குப்பைக் கூளங்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் அப்பகுதியில் குப்பைகள் கொட்டாவண்ணம் பாதுகாக்கப்படுகிறது. மண் தூர் வாரும் பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**20—**

**சாலைகள் செப்பனிடுதல்**

**வினா எண் 4290—திரு. ஆர். மகேந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாட்ராம்பள்ளி தொகுதி, கந்தலி ஒன்றியம், கந்தலியிலிருந்து இராஜாவூர் (வழி) கரகப்பட்டி, அலும்பட்டி, கிழக்குப்பதனவாடி சாலையைச் செப்பனிட்டுச் சீர்செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நாட்ராம்பள்ளி தொகுதி, கந்தலி ஒன்றியம் கந்தலியிலிருந்து இராஜாவூர் (வழி) கரகப்பட்டி, அலும்பட்டி, கிழக்குப்பதனவாடி சாலையைச் செப்பனிட்டு சீர்செய்யும் பணி தலசாலை மானியத் திட்டத்தில் தார்ச்சாலையாக மாற்ற மதிப்பீடு தயார் செய்து 1996-97-ஆம் ஆண்டில் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**21—**

**சாலை செப்பனிடுதல்**

**வினா எண் 4292—திரு. ஆர். மகேந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, திம்மாம்பேட்டை முதல் நாராயணபுரம் வரையிலான சாலையைச் செப்பனிட்டு சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): நாட்ராம்பள்ளி தொகுதி, திம்மாம்பேட்டை முதல் நாராயணபுரம் வரையிலான சாலையைச் செப்பனிட்டு சீரமைக்கும் பணி, தற்போதுள்ள நிதிபற்றாக்குறை கருதி செய்வதற்கில்லை.

**22—**

**நவீன கழிப்பிடங்கள் கட்டுதல்**

**வினா எண் 4311—திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரக்கோணத்தில் அம்பேத்கர் நகர், சோமசுந்தர வீதி ஆகிய இடங்களில் நவீன கழிப்பிடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அரக்கோணம் அம்பேத்கர் நகரில் நவீன கழிப்பிடம் கட்டுவதற்கு மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டத்தின் கீழ் 1996-97-க்கு ரூ.1.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பகுதியில் நவீன கழிப்பிடம் 31-3-1997-க்குள் கட்டி முடிக்கப்படும். சோமசுந்தரம் நகரில் ஏற்கெனவே பெண்களுக்கு என கழிப்பிடம் ஒன்று சோமசுந்தரம் நகர் முதல் தெருவில் கட்டப்பட்டு தற்போது பயனற்ற நிலையில் உள்ளது. அதனைப் புதுப்பிக்க பாரதப் பிரதமரின் ஒருங்கிணைந்த நகர்ப்புற வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் 1996-97-ஆம் ஆண்டில் செயல்படுத்த திட்டம் உள்ளது. இப்பணி 31-3-1997-க்குள் செய்து முடிக்கப்படும்.

23—

**சீர்காழி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குக் கூடுதல் கட்டிடம்**

**வினா எண் 4507—திரு. கோ. மோகனதாசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குக் கூடுதல் கட்டிடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சீர்காழி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு தற்போது போதுமான இடவசதி உள்ளதால் கூடுதல் கட்டிடம் தேவையில்லை.

24—

**திருப்பூர் நகரில் புதிய பேருந்து நிலையம்**

**வினா எண் 4690—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகர், புதிய பேருந்து நிலையம் கட்டியுள்ள இடம் உள்ளாட்சித் துறைக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டு விட்டதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருப்பூர் நகர், பிச்சம்பாளையம் மாரியம்மன் விநாயகர் கோயிலுக்குச் சொந்தமான 7.98 ஏக்கர் நிலத்தை சதுர அடிக்கு ரூ.93.13 என்ற அடிப்படையில் மேற்படி நிலத்திற்கு ரூ.3,23,72, 807.54 ஆக விலை நிர்ணயம் செய்து அத்தொகையில் கோயில் நிர்வாகத்திற்கு ரூ.25.00 லட்சம் 1-6-1993-ல் செலுத்தப்பட்டு, நிலத்துக்காகச் செலுத்தப்பட்ட ரூ.25/- லட்சம் தவிர மீதித் தொகையை ரத்து செய்யக் கோரி இந்து அறநிலையத் துறை ஆணையருக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதற்கான



ஆணை பெற்று பின் உரிமை மாற்றம் செய்ய திருப்பூர் நகராட்சி ஆணையரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

25—

**நவீன கழிப்பிடம் கட்டுதல்**

**வினா எண் 4749—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி நகரில் பெண்களுக்கு நவீன கழிப்பிடம் கட்ட அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி நகராட்சிப் பகுதியில், பாரதப் பிரதமரின் வறுமை ஒழிப்பு திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்று தருமபுரி நகரில் மிட்டாரெட்டிஅள்ளி சாலையில் பெண்களுக்கு கழிப்பிடம் ஒன்று கட்ட மதிப்பீடு ரூ.1.00 லட்சத்திற்கு தயார் செய்யப்பெற்று நிர்வாக மற்றும் தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு வேலை துவங்கும் நிலையில் உள்ளது. மேலும் 1996-97-ஆம் ஆண்டிற்கு அடிப்படை வசதி திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்று சந்தைப் பேட்டையில் பெண்களுக்கு நவீன கழிப்பிடம் ஒன்று கட்ட ரூ.1.00 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு உள்ளது. விரைவில் கட்டி முடிக்கப்படும்.

26—

**கானாற்றில் தூர் எடுத்தல்**

**வினா எண் 4764—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூரிலுள்ள கானாற்றை தூர் எடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூரிலுள்ள கானாற்றில் தற்சமயம் தூர் எடுக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**27—**

## கிராமங்களுக்குச் சாலை வசதி

**வினா எண் 4987—திரு. சி. இராஜரெட்டி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி தொகுதி, தளி ஒன்றியம், மஞ்சுகொண்டப்பள்ளி, தொட்டமச்சி ஊராட்சி, மற்றும் கெலமங்கலம் ஒன்றியம், பெட்டமுகிலாளம் ஊராட்சி, ஆலஹள்ளி, புல்லள்ளி, காலிகெட்டு ஆகிய கிராமங்களுக்குச் சாலை வசதி அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தளி தொகுதி, தளி ஒன்றியம், மஞ்சுகொண்டப்பள்ளி, தொட்டமச்சி ஊராட்சி, மற்றும் கெலமங்கலம் ஒன்றியம், பெட்டமுகிலாளம் ஊராட்சி, ஆலஹள்ளி, புல்லள்ளி, காலிகெட்டு ஆகிய கிராமங்களுக்குச் சாலை வசதி அமைக்கும் திட்டம் தற்போது ஏதுமில்லை.

**28—**

## பாலம் அமைத்தல்

**வினா எண் 4989—திரு. ச. இராஜரெட்டி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், தளி தொகுதியில் தளி கொத்தனூர் ஊராட்சிக்கு அருகில் உள்ள தாசரப்பள்ளி மற்றும் குப்பட்டி ஆகிய இரு கிராமங்களுக்கு இடையே பாலம் கட்டப்படுமா?





விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், தளி தொகுதியில் தளி கொத்தனூர் ஊராட்சிக்கு அருகில் உள்ள தாசரப்பள்ளி மற்றும் குப்பட்டி ஆகிய இரு கிராமங்களுக்கு இடையே பாலம் அமைக்கும் திட்டம் தற்போது ஏதுமில்லை.

**29—**

## திருப்பூர் தினசரிச் சந்தை ஏலம் விடுதல்

**வினா எண் 5058—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தினசரிச் சந்தை இரண்டாண்டுகளாக ஏலம் விடப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், ஏலம் விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருப்பூர் காமராஜர் சாலை, தினசரி காய்கறி அங்காடியில் கட்டணம் வசூலித்துக் கொள்ளும் உரிமத்திற்கு 1995-96-ஆம் ஆண்டிற்கு 10 முறை ஏலமும், 8 முறை ஒப்பந்தப்புள்ளிகளும் 1996-97-ஆம் ஆண்டுக்கு 6 முறை பொது ஏலமும், 6 முறை ஒப்பந்தப்புள்ளிகளும் கோரப் பெற்ற போதிலும், சுங்க ஏலம் கோர யாரும் முன்வராததால் பொது ஏலத்தில் விட இயலவில்லை. அதனால் துறை மூலம் சுங்கம் வசூலிக்கப்பட்டு வருகிறது. தற்போது தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்றம் பதவியேற்றுள்ளதால் தினசரிச் சந்தையை ஏலத்தில்விட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**30—**

## பெரியநற்குணம் ஆதிதிராவிடர்கள் மயானத்திற்குப் பாதை

**வினா எண் 5159—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1997 ஏப்ரல் 1

புவனகிரி ஒன்றியம், பெரியநற்குணம் ஆதிதிராவிடர்கள் மயானத்திற்குப் பாதை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

1996-97-ஆம் ஆண்டு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் மயானப் பாதை அமைக்கும் திட்டம் இடம் பெறாததால், பெரியநற்குணம் காலனிக்கு மயானப்பாதை அமைக்கும் பணியை நடப்பாண்டில் செய்ய இயலாது.

**31—**

### பள்ளிக்கூடத்திற்கு சுற்றுச்சுவர் கட்டுதல்

**வினா எண் 5182—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், சி. கொத்தங்குடி ஊராட்சி ஒன்றிய பள்ளிக்கூடத்திற்குச் சுற்றுச்சுவர் கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், சி. கொத்தங்குடி ஊராட்சி ஒன்றிய பள்ளிக்கூடத்திற்குச் சுற்றுச்சுவர் கட்டும் திட்டம் ஏதும் அரசின் செயற்குறிப்பில் இல்லை.

**32—**

### நேரு நகருக்குப் பாதை அமைத்தல்

**வினா எண் 5217—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1997 ஏப்ரல் 1]

திருப்பூர், தொட்டிப்பாளையம் ஊராட்சி, நேரு நகருக்குப் பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

1996-97-ஆம் நிதியாண்டில் திருப்பூர், தொட்டிப்பாளையம் ஊராட்சி, நேரு நகருக்குப் பாதை அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

**33—**

### சாலைகளை தார்ச் சாலைகளாக மாற்றுதல்

**வினா எண் 5297—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியம், எறும்புர்-மதுவானமேடு, எறும்புர்-சின்னநற்குணம் ஆகிய சாலைகளை தார்ச்சாலைகளாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): எறும்புர்-மதுவானமேடு வரை உள்ள சாலை, எறும்புர்-நெல்லிக்கொல்லை 2/4 கி.மீ. வரை உதவிக் கோட்ட பொறியாளர் (நெடுஞ்சாலை பணி) குறிஞ்சிப்பாடி பராமரிப்பில் உள்ளது. பெரிய நெல்லிக்கொல்லையில் இருந்து தொடரும் மதுவானமேடு சாலையின் ஒரு பகுதி 1996-97-ஆம் ஆண்டு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

எறும்புர்-சின்னநற்குணம் சாலைப்பணி 0/0-2/8 கி.மீ. வரை 1996-97-ஆம் ஆண்டு வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் மற்றும் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழே எடுக்கப்பட்டுள்ளது.

34— [1997 ஏப்ரல் 1

**பறங்கிப்பேட்டை இணைப்புச் சாலையைப் புதிதாக்குதல்**

**வினா எண் 5302—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பறங்கிப்பேட்டை ஒன்றியம், பெரியகுமட்டி-குத்தாபாளையம் (மன்னார்சாமி சாலை) பறங்கிப்பேட்டை இணைப்புச் சாலையைப் புதிதாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): புவனகிரி தொகுதி, பறங்கிப்பேட்டை ஒன்றியம், பெரியகுமட்டி-குத்தாபாளையம் (மன்னார்சாமி சாலை) பறங்கிப்பேட்டை இணைப்புச் சாலைப் பணி 1996-97-ஆம் ஆண்டின் கிராமச் சாலை மேம்பாட்டு திட்டத்தில் செய்யப்பட்டு வருகிறது.

35—

**பொழிக்கரை சாலைக்கு தெருவிளக்கு அமைத்தல்**

**வினா எண் 5376—திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், சேரன் மகாதேவி பேரூராட்சி, பொழிக்கரை சாலைக்கு மின்விளக்கு வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேரன்மகாதேவி பேரூராட்சிப் பகுதி, 17 மற்றும் 18-வது வார்டுகளை உள்ளடக்கிய பொழிக்கரை ஆர்.எல். காலனி பகுதிகளில்



1997 ஏப்ரல் 1]

17 தெருவிளக்குகள் உள்ளன. இப்பகுதிக்குச் செல்லும் சாலையிலும் 15 தெருவிளக்குகள் உள்ளன. மேலும் 1996-97-ஆம் ஆண்டில் 3 தெருவிளக்குகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

36—

**வாய்க்காலுக்குப் பற்றுச்சுவர் கட்டுதல்**

**வினா எண் 5115—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மானம்பார்த்தான் வாய்க்கால் மதகு எண் 4-ஐ புதுப்பித்து வாய்க்காலின் இருமருங்கிலும் பற்றுச்சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

ஆம். தமிழ்நாடு நீர் ஆதார ஒருங்கிணைந்த திட்டத்தில் சேத்தியாத்தோப்பு துணைத் திட்டத்தின் கீழ் மானம்பார்த்தான் வாய்க்காலை புதுப்பித்து நவீனப்படுத்தும் வேலையினை எடுத்துச் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

37—

**பாலாற்றின் மீது தரைப்பாலம் அமைத்தல்**

**வினா எண் 1035—திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு நெரும்பூர் - கன்னிக்கோயில் சாலையிலிருந்து எடையாத்தூருக்கு பாலாற்றின் மீது தரைப்பாலம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

நெரும்பூர்-கன்னிக்கோயில் சாலை 8.2. கி.மீ. (கி.மீ.0/0 - 8/2) நீளமுடைய கரும்புச் சாலை அபிவிருத்தி திட்ட சாலையாகும். இச்சாலை நெரும்பூர்-புதுப்பட்டினம் சாலை (அரசு இதர மாவட்டச் சாலை) கி.மீ. 0/2-ல் பிரிந்து சென்று நெல்வாய் திருக்கழுக்குன்றம் சாலை

[1997 ஏப்ரல் 1

(அரசு இதர மாவட்டச் சாலை) கி.மீ. 23/6-ல் இணைகிறது. இச்சாலை கி.மீ.4/10-ல் விளாகம் எனும் கிராமம் பாலாற்றின் இடது கரையிலும், எடையாத்தூர் எனும் கிராமம் வலது கரையிலும் அமைந்துள்ளன. இவ்விரு கிராமங்களையும் இணைக்கும் வகையில் பாலாற்றில் பழைய வண்டிப்பாதை உள்ளது. இந்த பழைய வண்டிப்பாதையில் பாலாற்றின் குறுக்கே தரைப்பாலம் அமைக்க வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது. இவ்விடத்தில் ஆற்றின் நீர்வழிப்பாதை அகலம் 800 மீட்டர் ஆகும். இக்குறுக்கீட்டில் குழாய்கள் பதித்து தரைப்பாலம் அமைக்கத் தோராயமாக ரூ.12 கோடி தேவைப்படும். இப்பணி அரசால் ஒப்புதலளிக்கப்பட்டுள்ள திட்டங்கள் எதிலும் இடம் பெறவில்லை. அரசு ஆண்டுதோறும் இத்துறையின் பகுதி-2 திட்டத்திற்கு குறைந்த அளவே நிதி ஒதுக்கீடு செய்து வருவதால் பெருந்தொகை தேவைப்படும் இப்பணியை அண்மைக்காலங்களில் இத்துறையின் பகுதி-2 திட்டத்தில் மேற்கொள்ளும் வாய்ப்புகள் இல்லை.

**38—**

### தார்ச் சாலைகள் பழுதடைவதைத் தடுத்தல்

**வினா எண் 2350—திரு. சி. சுப்பிரமணி (எ) சி.சு. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை - திருப்பதி சாலையில் அரண்வாயல் - புட்லூர் பகுதியில் மணல் எடுப்பதால் அங்குள்ள தார்ச்சாலைகள் பழுதடைவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையானது இத்துறையின் மூலம் பராமரிக்கப்படும் பிரதான மாவட்டச் சாலையான திருமழிசை - சத்தியவேடு சாலையாகும். இச்சாலையில் கி.மீ. 29/2-லிருந்து 44/0 வரை வலது பக்கமாக கூவம் ஆறு செல்கிறது. இக்கூவம் ஆறு திருமழிசை சத்தியவேடு சாலையில் கி.மீ. 36/0 - 38/8 வரை மிகவும் குறுகலாகச் செல்கிறது. இந்த இடைப்பட்ட தூரத்தில் ஆயிரக்கணக்கான லாரிகள் மணல் எடுத்துச் சென்றதாலும், 1991-ஆம் ஆண்டின் வெள்ளத்தின் காரணமாகவும் கி.மீ. 36/10-ல் 90 மீட்டர் அளவிற்கு தார்ப்பகுதியில்



1997 ஏப்ரல் 1]

அரிப்பு ஏற்பட்டு, அதனைச் சீர்செய்ய ரூ.16.00 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் கான்கிரீட் தடுப்புச் சுவர் கட்டப்பட்டது. பொதுப்பணித் துறை வாய்க்காலின் இடங்களில் மணல் எடுத்துச் செல்ல எந்தவித அனுமதியும் இதுவரை வழங்கப்படவில்லை. மணல் எடுப்பதைத் தடுக்க வருவாய்த் துறையினரும், காவல் துறையினரும் இணைந்து நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சியர், எம்.ஜி.ஆர். மாவட்டம், அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

**39—**

### பணியாளர்களின் நிரந்தரம்

**வினா எண் 3464—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகக் கூட்டுறவுச் சங்க சிற்றுண்டிச் சாலையில் பணிபுரியும் பணியாளர்களை நிரந்தரம் செய்து கூடுதலாக ஊதியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பணி நிரந்தரம் செய்யப்படும்?

விடை —

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணியாளர் கூட்டுறவு அருந்தகப் பணியாளர்களின் பணி வரன்முறைப் படுத்தப்பட்டு அவர்களின் சம்பளத்தை உயர்த்துவது என்பது தற்போது சாத்தியப்படாது. ஏனெனில் மேற்படி அருந்தகம் பல ஆண்டுகளாக நட்டத்துடன் இயங்கி 1994-95-ல் 7.94 லட்சம் ரூபாய் நட்டத்துடன் செயல்படுகிறது. இந்நிலையில் பணியாளர்களுக்குச் சம்பளம், குறைந்தபட்சம் ஊதியம், அரசாணை எண் (2டி) 65, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 10-10-1995-ன் அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் இந்த அருந்தகத்தில் தனி அலுவலர் பதவி இதுவரை இலவச அடிப்படையில் அரசால் வழங்கப்பட்டு வந்தது. அதுவும் மறுக்கப்பட்டு விட்டதால், சம்பளத்தை உயர்த்திக் கொடுத்தால் சங்கம் மேலும் அதிக நட்டம் அடையும் சூழ்நிலையில் உள்ளது. எனவே இப்பணியாளர்களின் பணி வரன்முறையைப் பரிசீலிக்க இயலாத சூழ்நிலை தற்போது உள்ளது.

சங்கம் நட்டம் குறைந்து லாபகரமான முறையில் இயங்கும்போது இதுகுறித்து பரிசீலிக்க இயலும்.

**40—**

## கூட்டுறவுச் சங்கக் கட்டடம் கட்டுதல்

**வினா எண் 4347—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, மேலதிருப்பாலக்குடியில் 1996-97-ல் கூட்டுறவுச் சங்கக் கட்டிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்குக் கட்டிக் கொடுக்கப்படும் கிட்டங்கியில் அலுவலகப் பணிக்கும், நகைக் கடன் வழங்கும் பணிக்கும், பொது விநியோக திட்டப் பணிக்கும் மற்றும் விளைபொருட்களை சேமித்து வைக்கவும் தனித்தனியாக இடங்கள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. 1996-97-ல் மேலதிருப்பாலக்குடியில் கூட்டுறவுச் சங்கக் கட்டிடம் கட்ட திட்டமேதுமில்லை. இருப்பினும் 1997-98-ஆம் ஆண்டிற்கு தேசிய கூட்டுறவு வளர்ச்சி திட்டத்தின் கீழ் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு கிடங்கு கட்ட பரிசீலிக்கும்பொழுது மேலதிருப்பாலக்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கும் கிட்டங்கி கட்டுவது பற்றி பரிசீலிக்கப்படும்.

**41—**

## ஆவின் பால் நிலையங்களின் விவரம்

**வினா எண் 5330—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆவின் பால் நிலையங்கள் எத்தனை இயங்குகின்றன?





(ஆ) அவற்றில் ஒப்பந்த முறையில் தனியாருக்கு விடப்பட்டவை எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) சென்னையில் தற்சமயம் 504 ஆவின் பால் நிலையங்களும், 200 தானியங்கி பால் வழங்கும் நிலையங்களும் இயங்கி வருகின்றன.

(ஆ) ஆவின் பால் நிலையங்கள் ஒப்பந்த முறையில் தனியாருக்கு பால் விநியோகம் செய்ய அனுமதிக்கப்படவில்லை. சென்னையிலுள்ள 200 தானியங்கி பால் வழங்கும் நிலையங்களில் 180 நிலையங்கள் ஒப்பந்த முறையில் தனியாருக்கு விடப்பட்டுள்ளன.

**42—**

## ஆரணியில் துணை வேலைவாய்ப்பு அலுவலகம்

**வினா எண் 4202—திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் துணை வேலைவாய்ப்பு அலுவலகத்தை ஆரணியில் ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்திலுள்ள ஆரணியில் துணை வேலைவாய்ப்பு அலுவலகம் ஏற்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. திருவண்ணாமலையில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் ஒன்றும், பழங்குடியினருக்கான தொழில்முறை வழிகாட்டி நிலையம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது. மேலும் ஆரணி, திருவண்ணாமலையில் இருந்து 25 கிலோ மீட்டருக்குள்ளேயே அமைந்துள்ளதாலும், திருவண்ணாமலையிலிருந்து ஆரணிக்குச் செல்ல போக்குவரத்து வசதிகள் நிறைந்ததாகவும் உள்ளது. எனவே ஆரணியில் தனியாக துணை வேலைவாய்ப்பு அலுவலகம் அமைக்க வாய்ப்பில்லை.

[1997 ஏப்ரல் 1

43—

### கைத்தறித் துணி தேங்கிக் கிடத்தல்

**வினா எண் 5400—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கைத்தறித்துணி எவ்வளவு தேங்கிக் கிடக்கிறது?

(ஆ) அதற்கான காரணம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் கைத்தறித்துணி ரூ. 12,353.10 இலட்சம் மதிப்புள்ள 1,33,77,896 மீட்டர் தேங்கிக் கிடக்கிறது.

(ஆ) நாளுக்கு நாள் மாறி வரும் நாகரிகம், ஆலை மற்றும் விசைத்தறி பதனிடப்பட்ட துணிகளின் விலைகளுடன் கைத்தறித்துணி ரகங்கள் போட்டியிட வேண்டிய நிலையினால் துணித்தேக்கம் ஏற்பட்டுள்ளது.

44—

### நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டுதல்

**வினா எண் 6042—திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1995-96-ஆம் ஆண்டு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் எத்தனை வீடுகள் நெசவாளர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்டன?

(ஆ) இந்த நிதியாண்டில் எத்தனை வீடுகள் கட்டப்பட்டன?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் நெசவாளர்களுக்கான வீடுகள் கட்டுவதற்கென ஒதுக்கீடு இல்லை. எனவே நெசவாளர்களுக்கு வீடுகள் எதுவும் கட்டித் தரப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1997 ஏப்ரல் 1]

45—

### சத்துணவு மையங்களுக்குக் கட்டடம் கட்டுதல்

**வினா எண் 5164—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, சி. கொத்தங்குடி காலனி, சி. கொத்தங்குடி தோப்பு சத்துணவு மையங்களுக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், புவனகிரி தொகுதி, சி. கொத்தங்குடி காலனி, சி. கொத்தங்குடி தோப்பு, சத்துணவு மையங்களுக்குக் கட்டடம் கட்ட தேவையான நடவடிக்கை மாவட்ட ஆட்சித் தலைவரால் எடுக்கப்பட்டு வருகிறது.

46—

### ஒருகால பூஜை திட்டம்

**வினா எண் 3111—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதியில், பல கிராமங்களில் அறநிலையத் துறை மூலம் கோயில்கள் கட்டுவதற்கும் ஏற்கெனவே உள்ள கோயில்களைச் சீரமைத்து ஒருகால பூஜை நடைபெறவும் உதவி வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் :**

பாபநாசம் தொகுதியில் இந்து சமய அறநிலையத் துறையின் கீழ் உள்ள திருக்கோயில்களில் ஒருகால பூஜை செய்வதற்கு நிதி வசதியில்லாத

திருக்கோயில்களில் பெரும்பாலானவற்றிற்கு ஒருகால பூஜை வைப்பு நிதி திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கப்பட்டு ஒருகாலபூஜை திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

47—

**சாமூண்டீஸ்வரி கோயில் திருப்பணி விரிவுபடுத்துதல்**

**வினா எண் 4131—திரு. ஆர். மகேந்திரன்:** மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாட்ராம்பள்ளி தொகுதி, நாட்ராம்பள்ளி ஆற்றங்கரையிலுள்ள அருள்மிகு சாமூண்டீஸ்வரி கோயில் திருப்பணியை மேலும் விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

மேற்படி திருக்கோயில் தற்போது நல்ல நிலையில் உள்ளதாலும், திருக்கோயிலின் முன் மண்டபம், மூலஸ்தான கோபுரம் ஆகியவற்றை புதிதாக நிர்மாணித்து கடந்த 11-3-1992-ல் கும்பாபிஷேகம் நடந்தேறியுள்ளதாலும், தற்போது கோயில் திருப்பணியை மேலும் விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

48—

**அருந்ததியர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்குதல்.**

**வினா எண் 2313—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, சுஞ்சல்நத்தம் ஊராட்சி, தின்னபெல்லூர் மூபெல்லூரில் வாழும் அருந்ததியர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பு ஆண்டில் பட்டா வழங்கப்படுமா?



விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, சுஞ்சல்நத்தம் ஊராட்சி, தின்னபெல்லூர் மூபெல்லூரில் வாழும் 36 அருந்ததியர் குடும்பங்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க நில எடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஆ) நடப்பு நிதியாண்டு முடிவதற்குள் நில எடுப்பு முடிக்கப்பட்டு பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

49—

**சாதிச்சான்றிதழ் பெற காலதாமதமாவதைத் தவிர்த்தல்**

**வினா எண் 3725—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலைவாழ் மக்கள் (எஸ்.டி.) சாதிச்சான்றிதழ் பெற என்ன நெறிமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன?

(ஆ) சான்றிதழ் பெறுவதற்கு ஆகும் காலதாமதத்தைத் தவிர்க்க துரித நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மலைவாழ் மக்களுக்கு சாதிச்சான்றிதழ் வழங்குவதற்கு காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டு அந்த காலக்கெடுவிற்குள் சான்றிதழ்களை வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

(ஆ) அரசு வருவாய்த்துறை கடித எண் 47263/டபிள்யூ1/95, நாள் 21-8-1995-ல் கீழ்க்கண்ட அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன:

(1) மலைவாழ் மக்களுக்கு சாதிச்சான்றினை தக்க விசாரணைகள் மேற்கொண்டு மனுக்கள் பெற்ற தேதியிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் வழங்க வேண்டும்.

[1997 ஏப்ரல் 1

(2) அரசு மற்றும் முதன்மை ஆணையருக்கு மலைவாழ் சாதிச்சான்றுகள் குறித்து பெறப்படும் மனுக்கள், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அனுப்பி, ஆய்வு செய்து உடனுக்குடன் தக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(3) மலைவாழ் சாதிச்சான்றினை கோட்டாட்சியரே கொடுக்க வேண்டும்.

(4) மலைவாழ் மக்களுக்குச் சான்றிதழ் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் எவ்வித புகார்களுக்கும் இடமின்றி வழங்க வேண்டும்.

50—

## ஆதிதிராவிடர்களுக்குப் பட்டா வழங்கல்

**வினா எண் 4850—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்குப் விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் ஆதிதிராவிடர்களுக்குப் பட்டா வழங்கக் கோரி எத்தனை மனுக்கள் பெறப்பட்டு, எத்தனை மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டன என அரசு அறிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் பட்டா வழங்கக் கோரி 1-4-1995 முதல் 31-10-1996 முடிய 23 கிராமங்களில் இருந்து மொத்தம் 23 மனுக்கள் பெறப்பட்டுள்ளன. அனைத்து மனுக்களையும் ஏற்று தமிழ்நாடு நிலம் எடுப்புச் சட்டம் 31/78-ன்படி நிலம் எடுப்பு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நிலம் எடுப்பு நடவடிக்கைகள் முடிந்தவுடன் அனைத்து மனுதாரர்களுக்கும் மனைப்பட்டா வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]



1997 ஏப்ரல் 1]

## 3. அமரர் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் கொலைக் குற்றம் சாட்டப்பட்டவர்கள் முன்னாள் முதல்வர் செல்வி ஜெ. ஜெயலலிதாவுடன் எடுத்துக்கொண்டதாகப் பத்திரிகைகளில் வெளிவந்த புகைப்படம் குறித்து — மாண்புமிகு அவை முன்னவரின் அறிக்கை

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன பாயின்ட் ஆஃப் ஆர்டர் உட்காருங்கள். நான் சொல்கிறேன். உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அறிக்கையை அளித்த பிறகு, உங்கள் பாயின்ட் ஆஃப் ஆர்டரைச் சொல்லுங்கள். நான் முதலிலேயே உங்களிடம் சொன்னேன், அறிக்கை வைத்த பிறகு பேச வாய்ப்புத் தருவதாக, மாண்புமிகு அவை முன்னவர்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மாதம் 27-ஆம் தேதி இந்த அவையிலே எழுப்பப்பட்ட ஒரு பிரச்சினை குறித்து மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் விசாரித்து அறிவிப்பதாக இந்த அவைக்குத் தெரிவித்தார்கள். நேற்று காலை இந்த அவைக்கு வர முடியாமல் டெல்லி செல்லும் நிலையில், விமான நிலையத்தில் இருந்து இந்த அறிக்கையை எனக்கு அனுப்பி வைத்து, நான் இந்த அவைக்கு வழங்க வேண்டுமென்று தெரிவித்தார்கள். அந்த அடிப்படையிலே தங்கள் அனுமதியோடு இந்த அறிக்கையை நான் படிக்கிறேன்.

சட்டமன்றத்தில் 27-3-1997 அன்று தினமணியிலும், இந்தியன் எக்ஸ்பிரஸிலும், ஜூனியர் விகடனிலும் வெளியான புகைப்படத்தைக் குறித்து உறுப்பினர்களிடையே வாதம் எழுந்தது. சில உறுப்பினர்கள் புகைப்படத்தில் இருப்பவர்களில் தாணுவும், சிவராசனும் உள்ளனர் என்றும், மற்றும் சில உறுப்பினர்கள் ஓசூரைச் சேர்ந்த வழக்கறிஞர்கள் தாட்சாயிணி, நஞ்சே கவுடர் என்றும், மறுத்தும் கூறினர். இதில் உண்மை என்ன என்று விசாரித்து அறிக்கை தருமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் காவல் துறை அதிகாரிகளைப் பணித்தார்கள். காவல்துறை அதிகாரி தெரிவிக்கிறார். "இத்தகவல் குறித்து உடனடியாக விசாரணை மேற்கொண்டேன். புகைப்படம் நாளிதழ்களில் வெளியானவுடன், ஓசூர் காவல்நிலைய ஆய்வாளர் திரு.வி. பழனி அவர்களிடம் கெலமங்கலத்தைச் சார்ந்த வழக்கறிஞர் தாட்சாயிணியும்,

ஓசூரைச் சார்ந்த வழக்கறிஞர் நஞ்சேகவுடர் மற்றும் சிலரும் வந்து பத்திரிகைகளில் காணப்படும் புகைப்படத்தில் தோன்றுவோர் தாணுவும், சிவராசனும் அல்ல; நாங்கள்தான் எனவும், இப்புகைப்படம் பத்திரிகையில் குறிப்பிட்டதைப்போல 1990-இல் எடுக்கப்பட்டது அல்ல. 1988-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13-ஆம் தேதி அன்று தாங்கள் அ.இ.அ.தி.மு.க.-வில் இணைந்தபோது எடுக்கப்பட்ட புகைப்படம் என்றும் கூறி உள்ளனர். இதற்குச் சாட்சியமாக நாளிதழ்களில் வெளியான புகைப்படத்தின் நகல்களையும், தாங்கள் 13-2-1988-ல் அ.இ.அ.தி.மு.க(ஜெ) அணியில் சேர்ந்ததற்கு ஆதாரமாக 15-2-1988-ஆம் தேதி இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் வெளியான செய்திக் குறிப்பையும் தாங்கள் வைத்து இருந்ததைக் காண்பித்து காவல் துறையிடம் வழங்கி உள்ளனர்.

முற்பகல் 10-35

ஓசூர் காவல் நிலைய ஆய்வாளர் இப்புகைப்படத்தை, பத்திரிகைகளில் வெளியான புகைப்படத்துடன் நன்கு ஒப்பிட்டு ஆய்ந்து பலரிடம் விசாரித்து, புகைப்படத்தில் உள்ள பலரையும் அடையாளம் கண்டு 27-3-1997 அன்று பகல் 2.00 மணிக்கு நஞ்சே கவுடர் அவர்களால் தரப்பட்ட புகைப்படத்தின் நகலையும், 15-2-1988-ல் இந்தியன் எக்ஸ்பிரஸில் வெளியான செய்திக் குறிப்பையும் சென்னை காவல் துறை தலைமை இடத்திற்கு பேக்ஸ் செய்துள்ளார். அவர் அனுப்பிய புகைப்பட நகலில் பத்திரிகைகளில் வெளியான புகைப்படத்தில் காணப்படுபவரைத் தவிர சேலம் கண்ணனும் இருக்கிறார் என அடையாளம் காட்டி உள்ளார். அவர் பேக்ஸில் அனுப்பிய புகைப்படத்தில் காணப்படுபவருடைய விவரம்—திரு. சேலம் கண்ணன், டாக்டர் எச்.வி. ஹண்டே, திரு. சுகுமார், பலே கிருஷ்ணப்பா என்னும் படே கிருஷ்ணன், திரு. எம். விஜயகுமார், முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா, செல்வி தாட்சாயிணி, ஓசூர் வழக்கறிஞர், ஓசூர் நகரத்தைச் சேர்ந்த ஒரு நபர் திரு. எம்.ஜி. சேகர், எக்ஸ். எம்.எல்.ஏ. பாலக்கோடு திரு. நாராயணசாமி, அ.இ.அ.தி.மு.க. ஒன்றியச் செயலாளர் திரு. ராமபிரகாஷ், தேன்கனிக்கோட்டை வழக்கறிஞர், திரு. தே. நஞ்சே கவுடர், வழக்கறிஞர் ஓசூர், திரு. மாதப்பன், எக்ஸ். எம்.எல்.ஏ., பாலக்கோடு, திரு. திருநாவுக்கரசு, அ.இ.அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்.

ஆய்வாளரின் கள விசாரணையும், நான் இதன்மீது மேற்கொண்ட விசாரணையும் புகைப்படத்தில் காணப்படும் சர்ச்சைக்குரிய நபர்கள் தாணு மற்றும் சிவராசன் அல்ல; தாட்சாயிணியும், நஞ்சே கவுடரும்தான் எனத் தெளிவாகப் புலப்படுத்துகின்றது. நாளிதழ்களில் வெளியான



புகைப்படத்தை உன்னிப்பாகப் பார்த்தால் தாணுவைப் போல் தாட்சாயிணிக்கும், சிவராசனைப் போல நஞ்சே கவுடருக்கும் உருவ ஒற்றுமை இருப்பதைக் காண முடிகிறது. தாட்சாயிணியையும் நஞ்சே கவுடரையும் நேரில் பார்க்காது, புகைப்படத்தை மட்டும் காண்பவர்கள், இவர்கள் இருவரும் தாணு, சிவராசன் என்று நம்ப இடம் உண்டு. செல்வி ஜெயலலிதா அவர்கள் தனது வழக்கறிஞர் மூலம் மேற்படி புகைப்படத்தை வெளியிட்ட நாளிதழ்கள், வார இருமுறைப் பத்திரிகைகள் ஆகியவற்றின் ஆசிரியர் மற்றும் அச்சிட்டு வெளியிடுவோருக்கு அனுப்பி உள்ள வக்கீல் நோட்டீஸில் இந்த உருவ ஒற்றுமையை ஒப்புக் கொண்டு உள்ளார்;

"The similarity in the appearance of the two persons referred to above do suggest that they are Sivarasan and Dhanu"

என்று சொல்லி ஜெயலலிதாவின் வழக்கறிஞர் குறிப்பிட்டு உள்ளார். உருவ ஒற்றுமை காணப்பட்டாலும், புகைப்படத்தில் காணப்படும் சர்ச்சைக்குரிய இரு நபர்களும் வழக்கறிஞர்கள், தாட்சாயிணி மற்றும் நஞ்சே கவுடர்தான் என்று விசாரணையின் முடிவில் தெரியவருகிறது" என்று காவல் துறையிலே விசாரிக்கப்பட்டு 28-3-1997 அன்று மாலை அல்லது இரவு அந்தத் துறைத் தலைவர் முதலமைச்சர் அவர்களுக்கு அறிக்கை வழங்கி இருக்கிறார். இதை முதலமைச்சர் அவர்கள் சார்பாக இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். திருநாவுக்கரசு.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமரர் ராஜிவ் காந்தி அவர்கள் இந்த நாட்டினுடைய முன்னாள் பிரதமர்; அவருடைய கொலை வழக்கு சம்பந்தமான முக்கிய விசாரணை முக்கியமான கட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது, இந்த வழக்கினுடைய போக்கை திசை திருப்புகிற விதத்திலே இந்தப் புகைப்படம் மற்றவர்களைச் சந்தேகிக்க வேண்டும் என்று, அ.இ. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் புரட்சித் தலைவி அவர்களையோ அல்லது, கூட இருக்கிற எங்களைப் போன்றவர்களையோ அதில் சம்பந்தப்படுத்துகிற விதத்திலே வழக்கினுடைய போக்கை திசை திருப்புகின்ற விதத்திலே ஒரு புகைப்படம் பிரசுரம் ஆகி இருக்கிறது; அதுவும் ஏறக்குறைய 10 ஆண்டுகள் கழித்து. இதிலே இன்றைக்கு அரசாங்கத்தின் சார்பிலே விசாரித்து இப்போது ஒரு அறிக்கை தந்து

இருக்கிறீர்கள். அதிலே என்னுடைய அபிப்பிராயம், அன்றைக்கே உடனடியாக இந்தச் செய்தியை — இது எவ்வளவு முக்கியமான ஒரு பிரச்சினை; முன்னாள் முதலமைச்சரை சம்பந்தப்படுத்தி வருகிறது: எனவே உடனடியாக அப்போதே, இங்கிருந்து ஒயர்லெஸ்ஸிலோ அல்லது எஸ்.பி. யிடமோ உடனடியாகத் தொடர்பு கொண்டு, அரசாங்கம் உடனே என்ன செய்து இருக்க வேண்டுமென்று சொன்னால், இந்தச் செய்தியை காலையில் பார்த்த உடனேயே, அதில் இருக்கிற பல பேர் அடையாளம் தெரிந்தவர்கள்தான்; முன்னாள் எம்.எல்.ஏ. மாதப்பன் இருக்கிறார்; முன்னாள் எம்.எல்.ஏ. சேகர் இருக்கிறார்— இப்படிப் பலர் எங்களைப் போன்ற முன்னாள் அமைச்சர்களை, யாரையாவது காவல் துறையின் சார்பிலே தொடர்பு கொள்ள வைத்து, இது எப்போது எடுக்கப்பட்ட படம்; இது உண்மைதானா; அதில் இருப்பது யார் என்கிற விவரங்களை காவல் துறையைச் சேர்ந்தவர்கள், உண்மையிலேயே விளம்பரத்திற்காகவோ, வேறு கெட்ட நோக்கத்திற்காகவோ பயன்படுத்தும் எண்ணம் அரசுக்கு இல்லை என்றால், உடனடியாக அப்போதே, சட்டசபை 9.30 மணிக்குக் கூடுவதற்குள்ளாக அறிந்திருக்கலாம்.

முற்பகல் 10-40

இந்த விஞ்ஞான யுகத்திலே செய்தித் தொடர்பு சம்பந்தமாக எத்தனையோ தொழில் நுட்ப முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கின்ற இந்த நேரத்தில், பத்து நிமிடத்திற்குள் இதைக் கண்டு பிடித்துவிட முடியும். ஆனால் அப்படிச் செய்யாமல், இங்கே தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள், அவர்கள் ஆட்சியில் இல்லையென்றாலும், தோழமைக் கட்சிதான் என்றாலும், அவர்களும் அரசின் மூலமாகவோ அல்லது வேறு வகையிலோ இதை விசாரித்திருக்க முடியும். ஆனால் அவசர அவசரமாக . . . (குறுக்கீடு) நான் விசாரித்து வந்துதான் நீங்கள் சொல்வது தவறு என்று சொன்னேன், நான் விசாரித்துவிட்டுத்தான் வந்தேன். எனவே, நானே விசாரித்துவிட்டு வந்திருக்கிறபோது, ஆட்சியில் இருக்கிற நீங்களோ, தோழமைக் கட்சிகளோ அதை முழுமையாகத் தெரிந்து கொண்டு வந்து இந்தப் பிரச்சினையை இங்கே எழுப்பாமல் இருந்திருக்க வேண்டும். ஆகவே இங்கே அதை எடுத்துக்கொண்டு வந்ததில் நிச்சயமாக உள்நோக்கம் இருக்கிறது. தமிழ் மாநில காங்கிரசைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் ஞானசேகரன், அதைப்போல குமாரதாஸ், மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் ஆகியோர் இந்த அவைக்குத் தவறான செய்தியை misleading-ஆகக் கொடுத்து இருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள், தங்களுக்குக் கிடைக்கின்ற



தகவல்களை இங்கே வந்து தெரிவிக்க அவர்களுக்கு உரிமை இருக்கிறது. ஆனால் அந்தத் தகவல் உண்மைதானா என்பதை எதிர்க்கட்சியாக இருக்கிற அனைத்திந்திய அண்ணா தி.மு.க. தான் உறுதி செய்து கொண்டு வந்து பேச வேண்டும் என்று இல்லை.

இங்கே தாமரைக்கனி கூட பேசினார். உறுதி செய்யாமல் பேசினார் என்ற காரணத்தால்தான் இந்தக் கூட்டத் தொடர் முழுவதும் அவரை நீக்குவதாக நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள். அதே பொறுப்பு, அதே கடமை எல்லோருக்கும் இருக்கிறது. இந்தச் செய்தியை ஒட்டி, அதில் முன்னாள் முதலமைச்சர் இருக்கிறார், பக்கத்தில் தாணு இருக்கிறார், சிவராசன் இருக்கிறார் என்று சொல்கிறபோது, அதை விசாரித்து வந்திருக்க வேண்டாமா? ஆகவே அப்படி விசாரிக்காமல், அவசரக் கோலத்தில் வந்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைப் பொறுப்பில் இருக்கிற ஒருவரை, அதிலும் முன்னாள் முதலமைச்சர் மீது களங்கம் கற்பிக்கின்ற விதத்திலே இங்கே வந்து தவறான விதத்திலே வேண்டுமென்றே தமிழ் மாநில காங்கிரசின் , மாண்புமிகு உறுப்பினர்களும், மாண்புமிகு சுப்பராயன் அவர்களும் தகவலைத் தந்திருக்கிறார்கள்.

எனக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் இந்தச் செய்தியில் உண்மை இல்லை என்று அப்போதே நான் சொன்னேன். அதற்குப் பிறகு கழகத்தின் பொதுச் செயலாளரும் நேரே அவர்களை வரச்சொல்லி, பத்திரிகையாளர்களை எல்லாம் அழைத்து, அங்கே உண்மை விளக்கப் பட்டது; நிரூபிக்கப்பட்டது. இப்போது மாண்புமிகு அவை முன்னவர், மாண்புமிகு பேராசிரியர் அவர்களும், அரசாங்கத்தின் சார்பிலே, நீங்கள் சொல்வதுதான் சரி என்று சொல்லி அவர்கள் அறிக்கையைத் தந்திருக்கிறார்கள். எனவே, இந்தச் சூழ்நிலையிலாவது இந்தப் பிரச்சினையை எழுப்பிய தமிழ் மாநில காங்கிரசின் உறுப்பினர்களும், திரு. சுப்பராயன் அவர்களும் தவறான தகவலைச் சட்டமன்றத்தில் தந்ததற்காக மன்னிப்பு கேட்கவேண்டும். இல்லையென்றால், தாமரைக்கனியை நீக்கியது மாதிரி இவர்களையும், சுப்பராயன் உட்பட இந்த மூன்று பேரையும் நீக்கிவைக்க வேண்டும். ஒரு சில நாட்கள்—இந்தக் கூட்டத் தொடர் முழுவதும் என்றுகூட நான் கேட்கமாட்டேன். ஏனென்றால் அது ஜனநாயக விரோதமானது. ஆகவே கூட்டத் தொடர் முழுவதும் வேண்டாம் என்பதுதான் என்னுடைய வாதம்—எனவே குறைந்தபட்சம் ஒரு நாளாவது, தவறான தகவலைத் தந்தவர்கள் என்பதற்காக, இந்தச் சட்டமன்றத்தில் இருக்கிற இந்த மூன்று பேரையும் நீக்கி வைக்கவேண்டும். இல்லையென்றால், அவர்கள் அதற்கு வருத்தம்

தெரிவிக்கவேண்டும், மன்னிப்பு கேட்கவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, எப்படி இவர்கள் தங்களுக்குக் கிடைத்த தகவல் அடிப்படையில் பேசினார்களோ.............. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சில உறுப்பினர்கள் உட்கார்ந்து கொண்டே பேசுவது சரியல்ல. அப்படிப் பேசினால் நடவடிக்கை எடுப்பேன். திரு. எஸ். திருநாவுக்கரசு, நீங்கள் பேசுங்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** அதுபோல, மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனியும் தனக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில்தான் பேசியிருக்கிறார். அவரை நீக்கி 15 நாள் ஆகிவிட்டது. ஜனநாயக ரீதியாக அவர் செயல்பட நீங்கள் அனுமதிக்க வேண்டும். சொல்லப்போனால் மார்ச் மாதம் முழுவதும் முடிந்துவிட்டது. 15 நாள் முடிந்துவிட்டது. முதலமைச்சரே 15 நாள், 20 நாள் போதும் என்று நினைத்ததாக அப்போது சொன்னார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இதிலும் நீங்கள் தவறான தகவல் கொடுக்கக்கூடாது. 20 நாள் ஆகவில்லை. 15 நாளும் ஆகவில்லை. அதையும் பார்த்துக்கொண்டு நீங்கள் பேசவேண்டும்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** ஏறக்குறைய 15 நாள், சுமாராக 2 வாரம் ஆகிறது. எனவே இது போதும். எனவே இந்த ஏப்ரல் மாதத்திலாவது—இது நீண்ட கூட்டத் தொடர், இதிலாவது அவர் வந்து கலந்து கொண்டு தனது தொகுதி மக்களுக்கு, கழகத்தின் சார்பிலே பணியாற்ற நிச்சயமாக நீங்கள் வாய்ப்புத் தரவேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொண்டு, தயவுசெய்து அந்த உத்தரவை நீங்கள் திரும்பப் பெறவேண்டும், தாமரைக்கனிக்கு வாய்ப்புத் தரவேண்டும். இந்த மூன்று பேரையும் ஒரு நாளாவது நீக்கி வைக்கவேண்டும். இல்லையென்றால் அவர்கள் வருத்தம் தெரிவித்தோ, மன்னிப்பு தெரிவித்தோ, எங்களுக்குக் கிடைத்த தகவலைச் சொன்னோம் என்று தவறுக்கு வருத்தம் தெரிவிக்க வேண்டும். மன்னிப்பு கேட்க வேண்டுமென்று அனைத்திந்திய அண்ணா தி.மு.க.சார்பிலே வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவது, இந்தப் புகைப்படம் இந்த பத்திரிகைகளில் வந்ததில், அதற்குப் பின்னாலே சதி இருப்பதாகத் தெரிகிறது. அதற்கு சி.பி.ஐ. விசாரணை வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். எப்படி இந்தப் படம்



வந்தது, இது யாரால் தரப்பட்டது, எந்த நோக்கத்தோடு இது தரப்பட்டது, எதை திசை திருப்புவதற்கு இது தரப்பட்டது என்று சி.பி.ஐ. விசாரிக்க வேண்டுமென்று அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வற்புறுத்துகிறது. அதை நானும் வற்புறுத்தி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கே தெரிவித்த இந்த அறிக்கையையொட்டி எழுந்த பிரச்சினையில், வேறு சில பிரச்சினைகளும் அதிலே எழுப்பப்பட்டிருக்கின்றன. இந்த அவைக்குரிய பிரச்சினை அளவுக்குத்தான் இந்தப் பிரச்சினையை நாம் கவனிக்க முடியும். இந்த அவைக்கு அப்பாற்பட்ட பிரச்சினைகளை நாம் இந்த அவையின் சார்பாகக் கவனிப்பது என்பது நமக்கு ஏற்புடையதல்ல.

ஒன்று, இந்த அறிக்கை—முதலமைச்சர் அவர்கள் உடனே, அன்றைக்கே தெரிவித்து, உடனே விசாரணை நடைபெற்று, காவல்துறை அதை உறுதி செய்துகொண்டு, 28-ஆம் தேதி இரவு ஆகி முதலமைச்சர் கலைஞருக்கு, அறிக்கையாகக் கிடைத்திருக்கிறது. அதற்குப் பின்னால் சட்டமன்றத்திலேதான் இதனைத் தெரிவிக்க வேண்டுமென்ற ஒரு நிலை இருக்கிறது, வெளியிலே தெரிவிப்பது சட்டமன்ற மரபுக்கு அப்பாற்பட்டது. எனவே முதலமைச்சர் அவர்கள் அதை இங்கே நேற்று காலை தெரிவிப்பதாகக் கருதியிருந்தார்கள். ஆனால், டெல்லிக்குச் செல்லவேண்டுமென்ற அவசிய நிலைமை ஏற்பட்டபோது, விமான நிலையத்திலிருந்து இதைக் கொடுத்தனுப்பியபோது, இங்கே இந்த அறிக்கையைத் தரவேண்டிய நேரம் கடந்துவிட்டது. இதை கேள்வி நேரத்திற்குப்பிறகு நான் தந்திருக்க வேண்டும். அப்படித் தருவதற்கு வாய்ப்பில்லை. எனவே இன்று இந்த முதல் வாய்ப்பு—first opportunity—கிடைக்கிற நேரத்தில் இந்த அறிக்கை தரப்பட்டிருக்கிறது.

முற்பகல் 10-45

ஆனால் இதிலே ஏதோ உண்மை மறைக்கப்பட்டுவிட்டது என்று வருத்தப்படுவதற்கு இடமில்லை. அன்றைக்கே அது முழு உண்மையல்ல என்ற கருத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் பேசியதன் மூலமாகவும், மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. வெங்கடசாமி அவர்கள் எழுந்து சொன்னதன் மூலமாகவும், தெரிந்தது. அந்தப் பத்திரிகைகளிலே வந்த படத்தை வைத்து, தோற்ற ஒற்றுமையை வைத்து

ஒரு ஐயுறவு ஏற்பட்டிருக்கிறது என்ற உண்மை அன்றைக்கே தெரிந்தது, நாட்டுக்கும் தெரிந்திருக்கிறது. எனவே உண்மை தெரியாமல் மறைக்கப்பட்டுவிட்ட ஒரு சூழ்நிலை உருவாகி அதனாலே ஒரு பாதகமான நிலைமை ஏற்பட்டதாகக் கருதுவதற்கில்லை. எனவே இந்த உண்மை தெரிந்ததற்குப் பின்னால் சி.பி.ஐ. விசாரணை நடத்துவதிலே எந்தப் பொருளும் கிடையாது. ஏனென்றால் சி.பி.ஐ. குறித்து ஏற்கெனவே முன்னாள் முதலமைச்சர் அவர்கள் சொன்ன கருத்து, "அவர்கள் ஒன்றும் வானத்திலேயிருந்து குதித்தவர்கள் அல்ல. இங்கேயுள்ள அதிகாரிகளைவிட அதிக உண்மையைக் கண்டுபிடிக்கக் கூடியவர்கள் அல்ல" (மேசையைத் தட்டும் ஒலி) என்ற கருத்து அவர்களாலே தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த உலகத்திலே உள்ளவர்களைக் கொண்டே இதை விசாரித்து இந்த உண்மை (மேசையைத் தட்டும் ஒலி) திட்டவட்டமாக இந்த அவைக்குத் தெரிந்ததற்குப் பிறகு இந்தப் பிரச்சினை குறித்து மேலும் கருதுவதற்கு அவசியமில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றொன்று, பத்திரிகையாளர்களுக்கு முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் தந்திருக்கிற அந்த நோட்டீசில், போலித் தன்மை காரணமாக இந்த ஐயுறவு ஏற்பட்டு யாரோ தவறாகப் பயன்படுத்திவிட்டார்கள் என்ற செய்தி, அந்தக் கருத்து இருக்கிறது. எனவே, ஒன்றுபோல் ஒன்று தெரிகிற காரணத்தால் யாரும் அந்த நேரத்தில் ஐயுறவுக்கு ஆளாவது இயற்கை. ஒருவர் மட்டும் என்றால் அந்த ஐயுறவு, அழுத்தமாக மனதிலே இருக்கிற காரணத்தால் உறுதி செய்ய முடியாது. இரண்டு பேருடைய தோற்றமும் குறிப்பிட்டவர்கள் மாதிரி இருந்த காரணத்தால் ஏற்பட்ட விளைவு இது. இருந்தாலும்கூட, இப்படியொரு நிலைமை ஏற்படாமல் இருக்க வேண்டுமென்ற விருப்பத்தை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று. இதையொட்டி திரு. தாமரைக்கனி அவர்களைப் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் எழுப்பினார்கள். அதிலே இந்த அவைக்குரிய பிரச்சினை, அவர் தவறாகச் சொன்ன செய்தியைத் திரும்பப் பெறுவதற்கோ, வருத்தம் தெரிவிக்கவோ அவரும் தயாராக இல்லை; அவர் சார்பாகவும் யாரும் தெரிவிக்கவில்லை. ஆனால் இந்தப் பிரச்சினையில், இந்தப் பிரச்சினையை எழுப்பியவர்கள் பத்திரிகையிலே பார்த்து எழுப்பிய செய்தியை இங்கு வலியுறுத்தவில்லை. ஆனால் திரு. தாமரைக்கனி அவர்கள் வலியுறுத்தினார்கள். அதனுடைய விளைவு அந்த முடிவுக்கு வரவேண்டியிருந்தது. எனவே, இந்தச் செய்தியை முதன்முதலாக இந்த அவையிலே எழுப்பிய தமிழ் மாநில காங்கிரஸ்



கட்சியைச் சேர்ந்த நண்பர்களும், அதையொட்டி எழுப்பிய மற்ற கட்சித் தலைவர்களும் யாரும் அவர்கள் சொன்னதை உண்மை என்று வலியுறுத்தாத காரணத்தால் இந்தப் பிரச்சினையை மேலும் நீடிக்க அவசியமில்லை என்று நான் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கு என்னை பதில் சொல்ல விடமாட்டீர்களா? நான் சொன்னதற்குப் பிறகு, அதற்கு மேல் நீங்கள் ஏதாவது சொல்லுங்கள். நான் உங்களுக்கு அனுமதி தருகிறேன். கொஞ்சம் அமைதியாக இருங்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள், மாண்புமிகு அவை முன்னவர் சொன்ன தகவலையொட்டி சில பிரச்சினைகளை எழுப்பியிருக்கின்றார்கள். அவையை முறையாக நடத்த வேண்டும் என்று நான் முயற்சி எடுக்கும்போது, ஆளும் கட்சியினுடைய உதவி இருந்தால் மட்டும் நான் அவையை ஒழுங்காக நடத்த முடியாது. எல்லா உறுப்பினர்களும், எல்லாக் கட்சித் தலைவர்களும் எனக்கு ஒத்துழைப்புத் தர வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள், இதை நான் சொல்வதற்காக வருத்தப்படக்கூடாது; திரு. தாமரைக்கனி அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு முன்னால் எல்லாக் கட்சித் தலைவர்களையும் என்னுடைய அறைக்கு அழைத்தேன். அவர் வரவில்லை. இந்தத் தகவலைப் பொறுத்தவரையில் அன்று சரியாக அவைக்கு வந்தார்கள்.

ஆனால் எந்த நேரமும் என்னோடு தொலைபேசியிலே பேசுகின்ற உரிமை அவருக்குண்டு. அதை அவர் மறுக்கமாட்டார். இப்படி, எனக்கு ஒரு தகவல் இருக்கின்றது என்று தொலைபேசி மூலமாக என்னிடம் அவர் சொல்லியிருந்தால்கூட நான் இந்தப் பிரச்சினையை அவர் வந்தபிறகு அவரிடம் பேசிவிட்டுத்தான் அவையில் எழுப்ப அனுமதி அளித்திருப்பேன். ஆனால் மாறாக, நேராக சட்டமன்றத்திலே வந்து அதற்குப் பதில் சொல்வதற்குத் தயாராக இருந்தார்கள். ஆகவே இந்தச் சட்டமன்றத்திலே இந்தப் பிரச்சினை எழுப்பப்படும் என்று அவருக்கு நன்றாகத் தெரியும். இப்போது இந்தத் தகவலைப் பேசிய உறுப்பினர்கள் வருத்தம் தெரிவிக்க வேண்டுமென்று அவர்கள் சொன்னார்கள். அதிலே நான் ஒரு வேறுபாடு காண்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் திரு.

ஞானசேகரன் அவர்கள் பேசினார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் பேசினார்கள். உறுப்பினர் திரு. குமாரதாஸ் அவர்கள் பேசினார்கள்; எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் பேசினார்கள். அன்றே கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு குமாரதாஸ் பேசியது முறையற்றது, முறைகேடானது, எனவே அதை அனுமதிக்கக் கூடாது என்று ஒரு பிரச்சினையைக் கிளப்பி, அதை முதலமைச்சர் அவர்களும் ஏற்றுக் கொண்டு, அவைக்குறிப்பிலிருந்து திரு. குமாரதாஸ் பேச்சை நீக்கி விட்டோம். இப்போது திருநாவுக்கரசு அவர்கள் குறைந்தபட்சம் இந்த உறுப்பினர்கள் வருத்தம் தெரிவிக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். ஏற்கெனவே அவை முன்னவர் சொன்னதைப் போல தாமரைக்கனி அவர்கள் 'ஒரு அமைச்சர்' என்று சொல்லி, அதற்குப் பிறகு அவர் 'உறவினர்' என்று சொல்லி, 'ஆதாரம்' என்று சொல்லி '4, 5 அமைச்சர்கள்', 4, 5 சட்டமன்ற உறுப்பினர்கள் மீது அவதூறுகளை ஆதாரமாக அவர் கருதிக் கொடுத்தார்கள்.

முற்பகல் 10-50

அதிலே நான் எடுத்த நடவடிக்கைக்கு மாண்புமிகு உறுப்பினர் அ.இ.அ.தி.மு.க. கட்சித் தலைவர் என்ற முறையிலே திருநாவுக்கரசு அவர்கள் வருத்தம் தெரிவித்தால் போதும்; தாமரைக்கனி தெரிவிக்க வேண்டியதில்லை என்று முதலமைச்சர் சொன்ன பிறகும்கூட திரு. திருநாவுக்கரசு அவர்கள் வருத்தம் தெரிவிக்கவில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் இவர்கள் வருத்தம் தெரிவிக்க வேண்டுமென்று எந்த அடிப்படையில் கேட்கிறார் என்று தெரியவில்லை. இன்னொன்றும் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அன்று மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் பேசிய நேரத்தில், முன்னாள் மத்திய அமைச்சர் திருமதி மரகதம் சந்திரசேகர் அவர்களும், அவருடைய மகள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திருமதி இலதா பிரியகுமார் அவர்களும், இவர்கள் இருவரும் தாணுவுடனும் சிவராசனுடனும் புகைப்படம் எடுத்தார்கள் என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திருமதி இலதா பிரியகுமார் என்னைச் சந்தித்து, இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பான தகவல்; ஆகவே மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு மீது நீங்கள் நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று என்னைக் கேட்டார்கள். அரசியல் சட்டப்படி சட்டமன்றத்திலே பேச்சுரிமை மாண்புமிகு



சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உண்டு. ஆகவே அதில் நிச்சயமாக நான் நடவடிக்கை எடுக்க முடியாது என்று அவர்களுக்குச் சொல்லி விட்டேன். ஆகவே, என்னைப் பொறுத்தவரையில் இப்படிப்பட்ட பிரச்சினைகளில்—இதிலே ஒரு அவதூறு வழக்குப் போடுவதாக முன்னாள் முதலமைச்சர் சொல்லி இருக்கிறார்கள். அவதூறு வழக்கிலே பலவிதமான வாதங்களை குற்றம் சாட்டப்பட்டவர்கள் வைக்கலாம். ஒன்று, justification by truth என்று சொல்வார்கள். அது அவதூறல்ல, அது உண்மை. இரண்டாவது, justification in good faith என்று ஒரு வாதத்தை எழுப்பலாம். அதாவது உண்மை என்று நம்பி சொன்னதாகச் சொல்லலாம். ஆகவே, என்னைப் பொறுத்தவரையில் இதிலே வருத்தம் தெரிவிப்பது அந்தந்த உறுப்பினர்களுடைய மனப்போக்கைப் பொறுத்தது. நான் கட்டாயப்படுத்த முடியாது. ஆகவே, இந்தப் பிரச்சினையில் இதற்குமேல் நான் ஒன்றும் சொல்லத் தயாராக இல்லை.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் நீங்களே உங்களுடைய தீர்ப்பிலே சில பிரச்சினைகளை எழுப்பியுள்ளதால் அதற்கு நான் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. ஒன்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கு முன்னாலே நீங்கள் எழுந்து விட்டீர்கள். நான் சொன்னதற்குப் பிறகு எழுந்திருக்கவில்லை. அதற்கு முன்னாலேயே அமைச்சர் அவர்கள் சொன்னவுடனேயே எழுந்தீர்கள். நான் சொன்னேன், உங்களுக்கு வாய்ப்பு கொடுக்கிறேன் என்று.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** இப்போது நீங்கள் சொன்ன பிரச்சினைகளில்........... (குறுக்கீடு)

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, தீர்ப்பின் மேலே...

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** தீர்ப்பு இல்லை. பிரச்சினைகளில் ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்களுக்குச் சொல்கிறேன். நான் அவருக்கு அனுமதி கொடுக்கிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1997 ஏப்ரல் 1

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரபுக்காகச் சொல்கிறேன். பேரவைத் தலைவர் அவர்கள் வழங்கிய தீர்ப்பின் மேலே கருத்து சொல்லக்கூடாது. அப்படிச் சொன்னால் அது முறையல்ல என்றுதான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது தீர்ப்பல்ல. ஏனென்றால் இதில் ஒரு பிரச்சினையும் இல்லை. தாமரைக்கனியைப் பொறுத்தவரையில், அவருக்கு வழங்கிய தண்டனை நாட்களைக் குறைக்க வேண்டுமென்று சொல்கிறாரேயொழிய, என்னுடைய தீர்ப்பை விமர்சனம் பண்ணுவதாக எனக்குத் தெரியவில்லை. விமர்சனம் செய்தால் அதை அனுமதிக்க முடியாது.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் சரியாகச் சொன்னீர்கள். இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் கொடுத்த ஆவணங்கள் அடிப்படையில் முடிவு செய்கிறபோது, அழைத்தபோது நான் வரவில்லை. உண்மைதான். நீங்கள் சொல்வது உண்மை. நான் உடனே தொலைபேசியில் உங்களோடு தொடர்புகொண்டு தண்டனை ரொம்ப அதிகபட்சம் இல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொன்னேன். அன்றைக்கு நான் பல காரணங்களால் உள்ளே வரவில்லை. வந்திருந்தாலும் நீங்கள் இதைத்தான் காண்பித்து இருப்பீர்கள் அன்றைக்கு. எனவே நான் என்ன நினைத்தேன் என்றால், இன்றைக்கு வேண்டாம், நேரமும் ஆகிவிட்டது; எனவே போனில் மட்டும் பேசினேன். லெட்டர் அனுப்பி இருந்தீர்கள். அதனால் சம்பிரதாயப்படி, மரபுப்படி கர்ட்டசி அடிப்படையில் உங்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்லி, தண்டனையை குறைக்கப் பாருங்கள் என்று சொன்னேன். அதற்குப் பிறகு நீங்கள் எடுத்த முடிவை அறிவித்தீர்கள். இந்தப் பிரச்சினையில் நீங்கள் வந்து சொல்லியிருக்கலாமே என்று சொன்னீர்கள். எனக்கு எப்படித் தெரியும்? 9.00, 9.30 மணிக்குத்தான் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, இதையெல்லாம் குறித்துக் கொண்டு நான் வருகிறேன். வருகிறபோது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் தவறாக நினைக்கக் கூடாது. இது நட்பின் அடிப்படையில் சொல்கிற கருத்து. தமிழ் மாநில காங்கிரஸ் உறுப்பினர்களைப் பின்னாலே பார்த்தபோதுகூட நான் சொன்னேன்.



1997 ஏப்ரல் 1] [பேரவைத் தலைவர்]

என்றுமே காலதாமதமாக வரக்கூடிய மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு சரியான நேரத்தில் வந்து உட்கார்ந்திருக்கிறார். நிச்சயமாக ஏதாவது ஆதாரத்தோடுதான் வந்திருப்பார் என்ற ஒரு எண்ணம்கூட உங்களுக்குத் தோன்றவில்லையே என்று அவர்களிடம் கூறினேன்.

முற்பகல் 10—55

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகச் சரியாகவே சொல்லியிருக்கிறீர்கள். (சிரிப்பு) நான் எங்கே, எப்போது இருக்கவேண்டிய அவசியம் இருக்கிறதோ அங்கே அப்போது கண்டிப்பாக இருப்பேன் என்று என்மேல் நீங்கள் வைத்திருக்கிற நம்பிக்கைக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு) அதனால் உரிய நேரத்திலே வந்து உரிய பதிலைத் தந்து இருக்கிறேன். எனவே நான் வருகிறபோது, இதுகுறித்து விசாரித்துக்கொண்டு வருகிறபோது தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் நிச்சயமாக இதுகுறித்து விசாரித்துத்தான் வந்திருப்பார்கள். இந்தப் பிரச்சினையை எழுப்புவார்கள் என்று எனக்குத் தெரியாது. எனவே அவர்களிடம் தொலைபேசியிலே தொடர்பு கொண்டும், நேரடியாகக் கேட்டும் இந்தப் பிரச்சினையை எழுப்பப் போகிறார்கள் என்று எனக்குத் தெரியாது. ஏனென்றால் அந்தக் கட்சியிலே அந்த மாவட்டத்தைச் சார்ந்த பல பேர் இருக்கலாம்; அல்லது ஆளும் கட்சியிலே இருக்கலாம். தர்மபுரி மாவட்டத்திலே நீங்கள் சொன்ன மாதிரி அந்தப் புகைப்படத்தில் இருக்கிற எல்லோருமே அடையாளம் தெரியாதவர்கள் அல்ல. சரி, முன்னாள் அமைச்சர்களைக்கூட விட்டுவிடுங்கள். அந்த மாவட்டத்தைச் சார்ந்த எக்ஸ் எம்.பி., எக்ஸ். எம்.எல்.ஏ. இவர்கள் எல்லாம் அடையாளம் தெரிந்தவர்கள்தான். இதனுடைய அடிப்படையில் எந்த மாவட்டம் என்பது தெரிந்து இருக்கிறது. எனவே அந்த மாவட்டத்தைத் தொடர்பு கொண்டு இந்த ஆட்கள் இருக்கிறார்களா, இல்லையா, யார் அவர்கள் என்பதை உளவு செய்திருக்கலாம். ஆனால் அப்படிச் செய்யாமல் இங்கே வந்து அவர்கள் கேள்வி எழுப்புவார்கள் என்று எனக்குத் தெரியாது. அன்றைக்கு நான் உங்களிடத்திலே தொலைபேசியிலே பேசவும் இல்லை. இதுகுறித்து நான் விவாதிக்கவும் இல்லை. நேராக நான் வந்தேன். அவர்கள் சொன்னவுடனே பாயின்ட் ஆப் ஆர்டர் ரெய்ஸ் செய்தேன். ஆனால் நீங்கள் என்ன செய்தீர்கள் என்றால் இன்றைக்குமாதிரி பேசட்டும் என்று சொன்னீர்கள். அவர் பேசி முடித்தவுடனேயே மீண்டும் நான் பாயின்ட் ஆப் ஆர்டர் ரெய்ஸ் செய்து சொல்ல முயன்றேன். அப்போது நீங்கள் சுப்பராயன்

அவர்களைப் பேச அனுமதித்தீர்கள். 'அவர் பேசட்டும் அதற்குப்பின்னால் பேசலாம்' என்றீர்கள். எனவே எனக்கு உடனடியாகச் சொல்வதற்கு, வந்தவுடன் சொல்வதற்கு வாய்ப்பு இல்லை. அதனால்தான் மூன்றாவதாகப் பேசவேண்டிய சூழ்நிலை வந்தது. அப்போது நான் விளக்கமாக இவற்றையெல்லாம் சுட்டிக்காட்டினேன். அதற்கடுத்து, மாண்புமிகு முன்னாள் மத்திய அமைச்சர் மரகதம் சந்திரசேகர், அவர்களுடைய மகள் இலதா பிரியகுமார் இங்கே வந்து ஒரு கருத்தைச் சொன்னதாகக் கூறினீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கருத்து இல்லை, எனக்குக் கடிதமே கொடுத்தார்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** வெளியேகூட நான் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றெல்லாம் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அதில் கூட, நான் பண்பான அரசியல்வாதி என்று இதுவரை நினைத்திருந்த திருநாவுக்கரசு இப்படிப் பேசியிருக்கிறாரே என்று வருத்தப்பட்டு ஒரு அறிக்கையை கொடுத்திருந்தார்கள். ஆனால் எப்போதும் நான் ஒரு பண்பான அரசியல்வாதியாகத்தான் இருக்க விரும்புகிறேன். எனவே என்னைப் பொறுத்தவரையில் நான் சொல்ல விரும்புவது, அந்தப் புகைப்படத்திலிருந்து எனக்குக் கிடைத்த தகவலை நான் சொன்னேன். நான் என்ன சொல்கிறேன் என்றால் அந்தப் புகைப்படத்தில் அவர்கள் இல்லை. லதாகண்ணன் என்பவர் அந்தப் படத்திலே இருந்திருக்கிறார், அவர்களுக்கு எல்லாம் வேண்டியவர்கள் என்று சொல்லி ஜெயின் கமிஷனிலே விசாரணை நடக்கிறது. அவர்களையெல்லாம் விசாரித்தால்—அதையெல்லாம் சொன்னால் ஜெயின் கமிஷன் விசாரணையிலிருந்து ரிப்போர்ட் வரை சொல்லலாம். ஸ்டேட்மெண்ட் வரைக்கும் சொல்லலாம். அது நீண்ட கதை. எனக்கு அவசியம் இல்லாத கதை. தேவையில்லாததும்கூட. என்னைப் பொறுத்தவரையில் நான் சொல்ல விரும்புவது புகைப்படத்திலே இருக்கிறார்கள் என்று நான் கூறியது அவர்களுக்கு மனவருத்தம் தந்திருக்குமேயானால் அதற்காக நான் உள்ளபடியே வருத்தம் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் என்னைக் கட்டாயப்படுத்தி இதைச் சொல்லச் செய்யவில்லை. நான் சட்டமன்றத்திலே பேசியதற்கு சொல்லித்தான் ஆகவேண்டும் என்கிற அவசியம் இல்லை. என்மேலே வெளியே அவர்கள் வழக்குப்போட முடியாது என்பது எனக்குத் தெரியும். இம்யூனிடி இருக்கிறது. உரிமை இருக்கிறது. இருந்தாலும் அப்படிப் படம் இல்லை என்று



சம்பந்தப்பட்டவர்கள் சொல்கிறபோது இந்தியாவினுடைய அமைச்சராக, மத்திய அமைச்சராக இருந்த, ஒரு ஆதிதிராவிட சமுதாயத்தைச் சார்ந்த, நாட்டுக்கு உழைத்திருக்கிற ஒரு பெரியவர் என்கிற அடிப்படையிலே நான் அவர்களை மதிக்கிறேன் எனவே அவர்களை மதித்து என்னுடைய பண்பு என்கிற அடிப்படையில் நான் என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களை சேர்த்துக் கூறியதற்காக மனம் புண்பட்டிருந்தால் அதற்காக உண்மையில் வருந்துகிறேன். அதே பண்போடு இங்கிருக்கிற தமிழ் மாநில காங்கிரஸ் உறுப்பினர்கள் எழுந்து எங்களுக்கு விவரம் தெரியாமல் சொல்லிவிட்டோம், வேண்டுமென்றே சொல்லவில்லை; நாங்கள் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறோம் என்று அவர்கள் சொல்லவேண்டும். இல்லையென்றால் திட்டமிட்டுத்தான் சொன்னார்கள் என்றுதான் வரும். எனவே அந்தப் பண்பு ஏன் அவர்களுக்கு வரவில்லை? அவர்கள் சொல்லட்டும், தெரியாது சொல்லிவிட்டோம், மன்னித்துவிடுங்கள் என்று. எனவே அவர்கள் வருத்தம் தெரிவிக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். மீண்டும் நான் சொல்வது, திரு. தாமரைக்கனி பிரச்சினையைப் பொறுத்தவரையில் நான் வருத்தம் தெரிவிக்க முடியாது. ஏற்கெனவே பலமுறை விளக்கமாகச் சொல்லி இருக்கிறேன். விவாதத்தின்போது ஏதோ ஒரு வார்த்தையைத் தவறாகச் சொல்லுகிறார்கள். அல்லது சட்டமன்றத்தினுடைய மரபுக்கு உகந்த வார்த்தை இல்லாமல் சொல்லுகிறார்கள் என்றால் நான் எழுந்து தலைவர் என்கிற முறையில் பொறுப்பேற்றுக்கொண்டு ,சாரி சார், அவர்கள் சொன்னதற்காக வருத்தம் தெரிவிக்கிறேன் என்று சொல்லலாம். இது ஒரு ஸ்பெசிபிக் அலிகேஷன். அது உண்மையா இல்லையா என்பதை விவாதம் நடக்கிறபோது மேற்கொண்டு, இன்னும் சொல்வதனால் சபாநாயகரிடமிருந்து**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை நான் அனுமதிக்க முடியாது. நீங்கள் ** என்று கூறியதை அனுமதிக்க முடியாது. அதை நீங்கள் சொல்லக்கூடாது. அது ** கற்பிக்கும்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** தீர்ப்பை நான் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த வார்த்தையை நீங்கள் சொல்லக்கூடாது.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** நான் மேற்கொண்டு இதை நீட்டிக்க விரும்பவில்லை (குறுக்கீடு)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்வதைவிட அவரே அந்த வார்த்தையைத் திரும்பப் பெறுவார் என்று நினைக்கிறேன்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** இவை பல.........

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் ** என்ற தவறான வாதத்தை இந்த அவையில் வைக்கிறார்; அதற்கு முற்படுகிறார். எனவே இது அவைக்குறிப்பில் இடம் பெறக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அவரிடம் வேண்டுகோள் வைத்தேன். அவர் அதை ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் நான் நீக்கப் போகிறேன். நீங்கள் பேசுங்கள்.

முற்பகல் 11-00

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்தது, இன்னும் மேலும் மேலும் அது subject to verification—தாமரைக்கனி அவர்கள் சொல்வது, இன்னும் தொடர்ந்து தவறான தகவலைக் கொடுத்தேன் என்று அவர் ஒத்துக்கொள்ளமாட்டேன் என்கிறார். அந்தச் சூழ்நிலையில் நான் எப்படிப் போய் வருத்தம் தெரிவிக்க முடியும்? தாமரைக்கனி சொன்னது தப்பு, அதற்காக நான் வருந்துகிறேன் என்று சொல்ல முடியாது. (குறுக்கீடுகள்) இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் அமைதி காக்கவேண்டும்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** எனவே இதுகுறித்து தாமரைக்கனிதான் அபிப்பிராயம் சொல்ல முடியும். நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, பிரபலமான வாரப் பத்திரிகைகள்கூட, தாமரைக்கனி அவர்களை இந்தக் கூட்டத் தொடர் முழுவதும் நீக்கி வைத்திருப்பதை, ஜனநாயக விரோதமான செயல், அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும், அது நல்லதல்ல என்ற அபிப்பிராயத்தை எல்லாம் வெளியிட்டு இருக்கின்றன. எனவே, இவற்றை எல்லாம் மனதிலே கொண்டு—அவர்களுக்குக் கொடுத்திருக்கிற தண்டனை போதுமானது, 15 நாட்கள் கொடுத்து விட்டீர்கள், மார்ச் மாதம் முடிந்துவிட்டது. எனவே—இந்தக் கூட்டத் தொடரிலாவது அவர் சட்டமன்றத்திலே பணியாற்ற வாய்ப்புத் தரவேண்டும் என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



கழகத்தின் சார்பாக மீண்டும் மீண்டும் உங்களை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் உட்காருங்கள் (குறுக்கீடு) இருங்கள், நான் பேசுகிறேன். (குறுக்கீடு)

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஐயா, இதிலே நான் ஒன்றைச் சொல்லிவிடுகிறேன். பிறகு நீங்கள் பேசலாம்.

இந்தத் தண்டனையைப் பொறுத்தவரையில், உலகெங்கும் இருக்கிற தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றங்களிலே இந்த முறைதான் கையாளப்படுகிறது. பெயரளவிற்கு முதலிலே அதிக தண்டனையைச் சொல்வார்கள், அதன்பிறகு, தண்டனையைக் குறைப்பார்கள். இது மாமூலாக நடக்கக்கூடிய நடவடிக்கை. அன்றுகூட நான் தீர்ப்புச் சொல்லி, தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு முன்னால், மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் எழுந்தார்கள். அவை முன்னவர் அவர்கள் தீர்மானத்தை முன்மொழிந்த பிறகு, உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன் என்று சொன்னேன். அன்றே 40 நாட்களை 20 நாட்களாக ஆக்கினார்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிந்துரைப்படி. அவர்கள் முதலமைச்சர் என்பதற்காக அல்ல, பெரும்பான்மைக் கட்சியின் தலைவருடைய கருத்து, அந்தத் தண்டனையை பாதியாகக் குறைக்கவேண்டும் என்பது. அடுத்த நாள் வந்து சொன்னார்கள், திரு. தாமரைக்கனிகூட வருத்தம் தெரிவிக்கத் தேவையில்லை, உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் தெரிவித்தால் போதும், அதை 15 நாட்களாக ஆக்கலாம் என்று சொன்னார்கள். ஆகவே, என்னைப் பொறுத்தவரையில், எதுவுமே இறுதியான முடிவு கிடையாது. அடிப்படையிலே 'ஒரு அமைச்சர்' அதற்குப் பிறகு, 'அவர்கள் உறவினர்' என்று சொல்லி, 'ஆதாரம்' என்று சொல்லி, பல அமைச்சர்கள் பல உறுப்பினர்கள் மீது அடிப்படை உண்மை இல்லாத குற்றச்சாட்டைச் சொல்லும்போது, நான் நிச்சயமாக கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கவேண்டிய சூழ்நிலை எனக்கு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கட்சித் தலைவர் பேசியதற்குப் பிறகு நீங்கள் எழுந்திருக்கக்கூடாது. உட்காருங்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் திரும்பத் திரும்ப, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்கள் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று கேட்டார்கள். தினமணி, இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் ஜூனியர் விகடன் போன்ற பத்திரிகைகளைப் பார்த்த நேரத்தில் அந்தப் படத்தில் இருப்பது சிவராசன் மற்றும் தாணு தான் என்று யாருக்கும் தோன்றும். எனவே படத்தில் இருப்பது அவர்கள்தான் என்ற கொதிப்போடுதான் நாங்கள் சட்டசபைக்கு அன்றைக்கு வந்தோம். வந்த நேரத்தில், விளக்கத்தைக் கேட்டோம். பதில் எல்லாம் வந்தது. அதைவிட முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் மீது எங்களுக்கு சந்தேகம் இன்னும் தீரவில்லை, (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மட்டும் நான் தெளிவாக மறுபடியும் சொல்ல விரும்புகிறேன். காரணம் மதுரையிலே நடந்த மாநாட்டிலேயும் சரி, நம்முடைய அருமைத் தலைவர் மறைந்த மாவீரர் ராஜிவ் காந்தி அவர்கள் விமான நிலையத்திற்கு வந்த நேரத்தில், வரவேற்காததும் சரி, இதெல்லாம் எங்களுடைய உள்ளத்தில் இன்னும் கொதித்துக் கொண்டிருக்கிறது என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே தெரிவித்து, எந்தவிதமான மன்னிப்பும் கேட்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினை குறித்து உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் இங்கே பிரச்சினையைக் கிளப்பினார்கள். என்னைப் பொறுத்தவரையில், நான் சார்ந்திருக்கிற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையில், எங்கள் நடவடிக்கைகளில் வருந்துவதற்குரிய அம்சங்கள் வராமல் பார்த்துக்கொள்வது என்பது எங்கள் இயல்பு. வருந்துவதற்குரிய நடவடிக்கைகள் ஏற்பட்டுவிடுமானால், அதற்காக வருத்தம் தெரிவிப்பதில் நாங்கள் ஒருபோதும் வெட்கப்படுவதில்லை. ஆனால், இங்கே கிளப்பப்பட்டிருக்கிற இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், வருந்துவதற்குரிய அடிப்படை ஏதும் இல்லை. ஏதோ ஒரு உள்நோக்கத்தோடு நாங்கள் பிரச்சினையைக் கிளப்பியதாக மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் சொல்வதிலேதான் உள்நோக்கம்



இருக்கிறது என்பது என்னுடைய கருத்து. இங்கே இந்தப் பிரச்சினையை அவர்கள் இன்றைக்குக் கிளப்பினார்கள். ஒரு வேளை நாளைக்குக்கூட கிளப்பக்கூடும். அதுபற்றி நான் அக்கறை கொள்ளவில்லை. ஆனால், இங்கே கிளப்பிவிட்டு அவர்கள் மிக முக்கியமான ஒரு குற்றச்சாட்டை எங்கள்மீது..... கிளப்பிய என்மீதும் முன்வைத்திருக்கிற காரணத்தால், இதில் நான் ஒரு விஷயத்தை குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். நான் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில், தமிழ்நாட்டின் புகழ்மிக்க, மதிப்புமிக்க பத்திரிகைகளிலே வெளிவந்திருந்த ஒரு படம் என்பது, இந்திய நாடு முழுவதும் மதித்த ஒரு தலைவரின் கொலை சம்பந்தப்பட்ட நபர்கள் இடம் பெற்றுள்ளதுபோல் தோன்றுகிறது; அவர்கள் அதில் இடம் பெற்றிருக்கிறபோது அவற்றை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அதன்மீது விசாரணை செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகிற கடமை, பொறுப்பு எங்களுக்கு இருப்பதை உணர்ந்து அவற்றை நாங்கள் வலியுறுத்தினோம்.

முற்பகல் 11-05

அதன்மீது மாநில அரசு விசாரணை செய்து அது சம்பந்தப்பட்ட விஷயத்தை இப்போது அவை முன்னவர் அவர்கள் அவைக்கு அறிவித்திருக்கிறார்கள். இந்த நிலையில் மன்னிப்பு கேட்க வேண்டிய அவசியம் இதில் என்ன இருக்கிறது என்பதை அவரால் உண்மையிலேயே அவையை கன்வின்ஸ் செய்ய முடியவில்லை. இதில் மன்னிப்பு கேட்க வேண்டிய விஷயம் இருந்தால் மன்னிப்பு கேட்பது குறித்து நான் கவலைகொள்ளவேயில்லை. நிச்சயமாக மன்னிப்பு கேட்கத் தயார்தான். ஆனால் இது மன்னிப்பு கேட்பதற்குரிய ஒரு விஷயம் அல்ல என்கிற போது மயிரிழை அளவுகூட மன்னிப்பு கேட்க, வலியுறுத்த வேண்டிய அடிப்படைகளே இல்லாதபோது, திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கொண்டிருப்பதன் நோக்கம் அவர்கள் இந்த விஷயத்தை வேறு எங்கோயிருந்து சொல்லப்பட்ட அடிப்படையில் அவர்களைத் திருப்தி செய்ய வேண்டுமென்பதற்காகவே திரும்பத் திரும்பக் கிளப்புகிறார்கள் என்றுதான் நான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனவே நான் பெரிதும் மதிக்கிற மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் இந்த விஷயத்தில் ஏன் உள்நோக்கம் கொண்டு பேசுகிறார் என்று புரியவில்லை. பத்திரிகைப் படத்திற்காக அவர் இந்தப் பிரச்சினையைக் கிளப்பவில்லை. தாங்கள் தீர்ப்பளித்து முடித்துவிட்ட தாமரைக்கனியின் பிரச்சினையை, இந்த விஷயத்தோடு சேர்த்து முழங்காலுக்கும் மொட்டைத் தலைக்கும் முடிச்சுப்போட முயற்சிக்கிறாரே

தவிர, உண்மையில் இந்தப் பிரச்சினைக்கு அவர் மன்னிப்பு கோர வேண்டுமென்று கிளப்ப வரவில்லை. எனவே நான் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புவது எல்லாம், சொல்லப்பட்டிருக்கிற இந்த விஷயத்தை சம்பந்தப்பட்ட பத்திரிகைகள் வெளியிட்டிருக்கின்றன. மீண்டும் சொல்கிறேன், சட்டமன்ற உறுப்பினர் என்கின்ற முறையில், மதிப்புமிக்க பத்திரிகைகளில் வெளிவருகிற செய்திகளை நாங்கள் ஒரு [illegible] முன் வைத்து இங்கே இந்தப் பிரச்சினையைக் கிளப்புகிறோம். மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்களும் பத்திரிகைகளில் வருகிற செய்திகளை முன்வைக்கிறார். முன்வைப்பது என்பது பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வருவதுதான். முன்வைப்பது என்பது அரசின் கவனத்தை ஈர்த்து, வந்திருக்கிற இந்த விஷயத்தில் உண்மை உண்மை அல்லாத விஷயங்கள் என்ன என்பது உண்மை என்ன, விசாரணைக்கும்தான் நாம் அவற்றை பரிசீலிக்கவும், விசாரிக்கப்பட்டு முடிந்துவிட்டது. எனவே முடிந்து அறிவித்தது மட்டுமல்ல, சம்பந்தப்பட்ட பத்திரிகைகள்கூட மதிப்புமிக்க மறுப்பை வெளியிட்டிருக்கின்றன. மிகுந்த, உயர்ந்த பண்போடு வருத்தம் தெரிவித்திருக்கின்றன. இதற்குப் பின்னரும் இந்தப் பிரச்சினையை கிளப்புவது என்பது ஒரு பொறுப்புள்ள அரசியல் இயக்கத்திற்கு பொறுப்பான நடவடிக்கையாக அமையாது என்பதை மட்டும் சொல்லி முடிக்கின்றேன்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் மந்திரவாதி மாதிரி நான் எதற்காக வந்தேன், என்னுடைய நோக்கம் என்ன என்பது பற்றி இதில் எல்லாம் அவர் ஒரு நோக்கம் கற்பித்துக்கொண்டு, இதற்காக அவர் பேசவில்லை, அதற்காகப் பேசுகிறார் என்றெல்லாம் வியாக்கியானம் செய்துகொண்டிருக்கிறார். அதிகபட்சம் மன்னிப்பு கேட்க வேண்டும். குறைந்தபட்சம் வருத்தமாவது தெரிவிக்க வேண்டும் என்று சொன்னேன். சொன்னதற்குக் காரணம், அவர் சொல்வதைக்கூட நான் வாதத்திற்காக ஏற்றுக்கொள்கிறேன். இப்படி வந்தது, நாங்கள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறோம். சரி விசாரிக்காமல் செய்துவிட்டோம்; அல்லது அவசரத்தில் செய்துவிட்டோம்; அல்லது தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் சொல்கிற மாதிரி உணர்ச்சிவசப்பட்டு, ராஜீவ் காந்தி மரணத்தோடு சம்பந்தப்பட்டிருப்பதால் உணர்ச்சிப் பிழம்பாக வந்து கிளப்பிவிட்டோம் என்றெல்லாம் சொல்கிறார். அவருடைய கட்சியினுடைய தலைவரே சொல்லியிருக்கிறார். அதற்குப் பின்னாலே அவர்கள்கூட சி.பி.ஐ. விசாரணை வேண்டுமென்று அந்தக் கட்சியின் சார்பில், பொதுமக்கள் சார்பிலே கேட்பதுகூட இயல்புதான் என்று



அந்தக் கட்சியினுடைய நிறுவனத் தலைவராக இருக்கிற திரு. மூப்பனார் அவர்களே சொல்லி இருக்கிறார்கள். எனவே இதிலே பாதிக்கப்பட்டவர்கள்—இந்தச் செய்திகள் எல்லாம் வருகிறபோது—பாதிக்கப்பட்டிருப்பது அ.இ.அண்ணா தி.மு.க., அதனுடைய பொதுச் செயலாளர். அந்த அடிப்படையிலே அதற்குப் பின்னாலே இப்போது அரசின் சார்பில் ஒரு அறிக்கை உண்மையில்லை என்று அரசின் சார்பிலே ஒரு அறிக்கை, கொடுத்துவிட்டார்கள். நாங்களும் அ.இ.அண்ணா தி.மு.க சார்பிலே இது தவறான செய்தி என்று 'ப்ரூஃவ்' பண்ணியிருக்கிறோம். எனவே இது மற்றவர்களைச் சங்கடப்படுத்தி யிருந்தால் நாங்கள் வருத்தப்படுகிறோம் என்று சொல்வது ஒரு உயர்ந்த பண்பு. ஆகவே நான் கன்வின்ஸ் பண்ணவில்லை என்றால், இதற்குமேலே என்ன கன்வின்ஸ் பண்ணுவது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள்.

**திரு. ஆர். சொக்கர்:** தலைவர் அவர்களே, இந்த நிகழ்ச்சியோடு தொடர்புடைய ஒரு நிகழ்ச்சி, இந்த அவைக்கு வெளியே நடைபெற்றது என்றாலும் கூட, அதை இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

கடந்த தேர்தலின்போது முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள், முன்னாள் பாரதப் பிரதமர் திரு. நரசிம்ம ராவ் அவர்கள் முன்னிலையில் தேர்தல் பிரச்சாரத்தின்போதே ராஜீவ் காந்தி கொலையில் அருமைத் தலைவர் மூப்பனார் அவர்களை—அவர்கள்மீது சந்தேகம் இருக்கின்றது என்று—சம்பந்தப்படுத்திப் பேசினார்கள், அது அவைக்கு வெளியே நடந்த நிகழ்ச்சியாக இருந்தாலும்கூட, எந்த அடிப்படையில் செல்வி ஜெயலலிதா அவர்கள் அதைப் பேசினார்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது எந்த அளவில் அவைக்குப் பொருத்தம்? அந்தப் பொருத்தத்தை முதலில் சொல்லிவிட்டு, பிறகு தகவலைச் சொல்ல வேண்டும்.

**திரு. ஆர். சொக்கர்:** தலைவர் அவர்களே, அவைக்கு வெளியே பேசியிருந்தாலும்கூட, அவைக்கு வெளியிலாவது அவருடைய தலைவி அதற்கு வருத்தம் தெரிவிப்பார்களா? எந்தவிதமான ஆதாரமும் இல்லாமல், அடிப்படையும் இல்லாமல் வெளியிலே பேசிய தவறுக்கு அவர்கள் வருத்தம் தெரிவிக்கட்டும், ஆனால் இங்கே அவையிலே நாங்கள் எழுப்பிய பிரச்சினை தரம்வாய்ந்த பத்திரிகைகளில் நாங்கள் புகைப்படத்தைப் பார்த்து அதில் மேற்கொண்டு விசாரணை செய்யவேண்டுமென்று சொன்னதில், எள்ளளவும் தவறில்லை. ஆகவே இதில் வருத்தம்

தெரிவிக்கவோ, அதைப்பற்றி வருத்தப்படவோ ஏதுமில்லை என்று கூறி அமைகின்றேன்.

(முற்பகல் 11-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என்ன செய்கிறீர்கள். இது அவையா, இல்லையா? நான் சொல்கிறேன் (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லோரும் இப்படி எழுந்து நின்றால், இது என்ன முறை? (குறுக்கீடு) திரு. கே. சுப்பராயன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. சுந்தரம், நீங்கள் உட்காருங்கள். உங்களுக்கு வாய்ப்பு கிடையாது, உங்கள் தலைவர் பேசிக்கொண்டிருக்கிறார், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள், நீங்கள் உட்காருங்கள் என்றேன். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள், தினம் வெளிநடப்புச் செய்ய வேண்டுமென்ற உத்தேசத்தோடு வந்தால் தாராளமாக இப்பொழுதே நீங்கள் போகலாம். இந்த நாடகத்தை தினமும் நடத்தக் கூடாது இங்கே. நீங்கள் உட்காருங்கள். திரு. திருநாவுக்கரசு, நீங்கள் பேசுங்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. சுந்தரம் அவர்கள் உங்களை மிகவும், ரொம்பவும் மதிக்கிறார். நீங்கள் எழுந்த உடனே அவர் `பட்' என்று உட்கார்ந்து விட்டார். (சிரிப்பு) அவைத் தலைவருக்கு ரொம்ப மரியாதை கொடுக்கக்கூடியவர். இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கர் அவர்கள், இந்த அவைக்கு சம்பந்தம் இல்லாத, வெளியே அரசியல் ரீதியாக ஒருவரையொருவர் விமர்சனம் செய்துகொள்வது சம்பந்தமாக பிரச்சினையை கொண்டு வந்து பேசினால் எந்தவிதத்திலும் அது தொடர்புடையதாகத் தெரியவில்லை. ஒருவரையொருவர் குற்றம் சாட்டுவது, அதற்கு பதில் சொல்வது, இது எல்லாம் வெளியே நடந்திருக்கிறது. ஆக, இந்தச் சபைக்குள்ளே வந்து கேட்க வேண்டியதும் இல்லை. நான் அதற்கு பதில் சொல்ல வேண்டிய அவசியமும் இல்லை. நான் சொன்னது உண்மை என்று தெரிந்ததற்குப் பின்னாலே, `நீங்கள்கூட அப்போது சொன்னீர்கள், பின்னாலே வந்து சொன்னீர்கள், சரி' என்று நாங்கள் அவசரப்பட்டு விட்டோம், உணர்ச்சிவசப்பட்டுவிட்டோம் என்று, இதெல்லாம் சொல்கிறீர்கள். ஆனால், அது நிருபிக்கப்பட்டதற்குப் பின்னாலே, அரசின் சார்பிலும் ஒரு அறிக்கை கொடுக்கப்பட்டதற்குப் பின்னாலேயும்கூட நாங்கள் இதை உள்நோக்கத்தோடு செய்யவில்லை. (குறுக்கீடு) ஒரு நிமிடம் முடித்துவிடுகிறேன், சார். ப்ளீஸ்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையில் உணர்ச்சிவசப்பட்டுவிட்டோம் என்று எதிர்க்கட்சித்



தலைவர் சொன்னாரே தவிர, அவசரப்பட்டு விட்டோம் என்று சொன்னதாக என் காதில் விழவில்லை.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** இல்லை, இல்லை. அவசரத்திலே, உணர்ச்சிவசப்பட்டு விட்டார்கள். வேறு ஒன்றும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என்ன பேசிக்கொண்டே யிருக்கிறீர்கள்? இந்தப் பிரச்சினை மட்டும்தான் இன்றைக்கு இல்லை. இன்றைக்கு வீட்டுவசதித் துறை மானியக் கோரிக்கை இருக்கிறது. கொஞ்சம் சீக்கிரமாகப் பேசி முடியுங்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** எனவே, என்னைப் பொறுத்தவரையில் நான் திரு. சுப்பராயன் சொன்னமாதிரி இதிலே வந்திருக்கிற இந்தப் பிரச்சினையினுடைய நியாயத்தின் அடிப்படையிலேதான் சொல்கிறேனே தவிர யாரையும் சந்தோஷப்படுத்தி வாழ்க்கை நடத்த வேண்டும் என்று எனக்கு ஒன்றும் அவசியம் கிடையாது. அவரும் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர். அவர் ஏதோ தலைமைக்கெல்லாம் கட்டுப்படாமல், தானே முடிவு எடுத்துப் பேசுகிற மாதிரி சொல்கிறார். அவர் சுயமாகச் செயல்பட முடியுமா? ஒரு கட்டுப்பாட்டோடு, ஒரு இயக்கத்தினுடைய கட்டுப்பாட்டுக்குட்பட்டுத்தான் செயல்பட வேண்டும். எனவே, இதற்கெல்லாம் உள்நோக்கம் கற்பிப்பது சரியல்ல என்பதை நான் எடுத்துச் சொல்லி, மீண்டும் அவர்கள் வருத்தம் தெரிவிக்க வேண்டும், இரண்டாவது நம்முடைய தாமரைக்கனி விஷயத்திலும் கொஞ்சம் பரிவு காட்டவேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரத்திற்கு அனுமதி கிடையாது. காரணம், நீங்கள் சொல்கின்றீர்கள் என்று பல உறுப்பினர்களை நான் பேச அனுமதித்தேன். அது உண்மை. ஆனால் எல்லா உறுப்பினர்களும் பேசியதற்குப் பிறகு, உங்கள் கட்சித் தலைவர் பதில் சொல்லிக்கொண்டு இருக்கிறார். அவர் 6 முறை இப்போது எழுந்து நின்று பதில் சொல்லிவிட்டார். ஆக, உங்களுக்கு அனுமதி கொடுக்கத் தேவையில்லை. நான் ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்கிறேன்.(குறுக்கீடு) நான் அனுமதி கிடையாது என்று சொல்லிவிட்டேன். நான் அனுமதி கிடையாது என்று சொன்னதற்குப் பிறகு நீங்கள் உட்கார வேண்டும். நான் ஒரேயொரு கருத்தைத்தான் முடிவாகச் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள், 'அன்று நடந்த நிகழ்ச்சியை 9-30 மணி வரைக்கும் அவர்கள் பார்த்தார்கள், வைத்தார்கள்' என்று சொன்னார்கள். எனக்கு ஒரேயொரு வருத்தம்.

உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்களுடைய திறமையைப் பற்றி எனக்கு ஒரு பெரிய மதிப்பு உண்டு. ஆகவே, அந்தப் புகைப்படத்திலே அவரும் இருக்கிறார். அதைப் பார்த்தவுடனே அது யார் என்று அவருக்குத் தெரிந்திருக்க வேண்டும் என்று எனக்கு எண்ணத் தோன்றுகிறது. அதுதான் நான் சொல்வேன். இதற்கு மேலே...

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொல்கிற தீர்ப்பு, அது ஒரு உள்நோக்கமாக வந்துவிடக் கூடாது. நான் என்ன சொல்கிறேன் என்று சொன்னால், 10 ஆண்டுகளுக்கு முன்னாலே எடுக்கப்பட்ட படம் அது. 1988-லே எடுக்கப்பட்ட படம். அதிலே பலர் எனக்குத் தெரிந்தது. சிலர் தெரியாமல்கூட இருந்தது. எனவே, நான் அன்றைக்கு, பின்னாலேதான் யார் என்று பெயர் எல்லாம் கேட்டு விசாரித்துக் கொண்டு வந்தேன். இந்தப் பிரச்சினையை இவர்கள் எழுப்புவார்கள் என்று எனக்குத் தெரியாது. நீங்கள் அனுமதிப்பீர்கள் என்று எனக்குத் தெரியாது. எனவே, வந்தவுடனே நான் பதில் சொன்னேன். வந்தவுடனே நான் எழுந்து சொல்ல ஆரம்பித்தேன். அதற்குள்ளே டிஎம்சி. உறுப்பினர்கள் எழுந்து பேச ஆரம்பித்தார்கள். அதற்குப் பின்னாடி நான் எழுந்தேன். அதற்குப் பிறகு திரு. சுப்பராயன் எழுந்தார். அதற்குப் பிறகு நீங்கள் அனுமதி கொடுத்தீர்கள். இல்லையென்றால் நான் முதலிலேயேகூட சொல்லியிருப்பேன். நான் மறைத்து, ஏதோ இரகசியத்தைக் கொண்டு வந்து, பின்னாலே நீங்கள் போடுகிற 'பாமை' நான் வந்து 'புஸ்வாணம்' ஆக்குகிற மாதிரிச் சொல்லவில்லை அதை. உண்மையிலேயே நீங்கள் அப்போதுதான் வாய்ப்பு கொடுத்த காரணத்தினாலே அப்படி வந்தது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நான் அதைச் சொல்லவில்லை. பேரவைத் தலைவர் முறையாக அவையை நடத்த வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள் என்று நினைக்கிறேன். இந்தப் படத்தைப் பார்த்தவுடனே, அதிலே என்ன பின்னணி இருக்கிறது என்று தெரிந்து, தொலைபேசியிலே இப்படி ஒரு பின்னணி இருக்கிறது என்று எனக்கு ஒரு தகவல் சொல்லியிருந்தால்கூட நீங்கள் வரும் வரைக்கும் நான் காத்திருந்திருப்பேன்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** இந்தப் பிரச்சினையை இங்கே எழுப்பப் போகிறார்கள், இதுமாதிரி அ.தி.மு.க. ஆட்சியில் என்று சொல்லப் போகிறார்கள் என்று எனக்குத் தெரியாதே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, இந்தப் பிரச்சினை இத்தோடு முடிந்துவிட்டது. No permission to anybody.



## 4. அறிவிப்புகள்

### (அ) நிகழ்ச்சி நிரலிலுள்ள கவன ஈர்ப்பைப் பின்னர் எடுத்துக் கொள்ளுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று வீட்டுவசதி மானியக் கோரிக்கையின் மீது விவாதம் நடக்க வேண்டிய சூழ்நிலையில் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் நாளை எடுக்கப்படும்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவு - அறிமுகம் செய்தல்

### தமிழ்ப் பல்கலைக் கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். 1997-ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக் கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்.

முற்பகல் 11-15

***மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக் கழக (திருத்தச்) சட்டமுன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

[1997 ஏப்ரல் 1

## 6. மானியக் கோரிக்கைகள், 1997-98, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 32 - வீட்டு வசதி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-98-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 32—வீட்டு வசதி, மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வீட்டு வசதி பற்றிய 32-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.50,63,58,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1315, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம், அல்லாபுரம், தொரப்பாடி, சேண்பாக்கம் பேரூராட்சிப் பகுதியில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டி வீடற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,63,58,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2559, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '10 ஆண்டுகளுக்கு மேல் வீடுகட்ட கடன் பெற்றோர் வீட்டின் மதிப்பை விட வட்டியும் அசலும் சேர்ந்திருப்பதால் வட்டியை தள்ளுபடி செய்து அசலை மட்டும் வசூல் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32-ஆம் எண் மானியக் கோரிக்கைகளின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 50,63,58,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2558, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,63,58,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2536, திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,63,58,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2524, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டம், செஞ்சி நகரத்தில் வீட்டு வசதி வாரியத்தால் வீடு கட்டிக்கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,63,58,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2527, திரு. இ. கணேசன்

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சேலம் மாவட்டம், இடைப்பாடி வீட்டு வசதி வாரியம் மூலம் கட்டப்படும் வீடுகளில் ஒரு பகுதியை ஏழை எளிய மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கிக்கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 50,63,58,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1604, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சேலம் மாவட்டம், மேட்டூர் நகரில் நீண்டகாலமாக, வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளில் வாடகைக்குக் குடியிருந்து வரும் ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களுக்கே அரசு நிர்ணயிக்கப்பட்ட குறைந்த விலையில் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,63,58,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2567, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வணிகர்களுக்கும் குடியிருப்பு வசதி செய்து தரப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,63,58,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2535, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நாகையில் வீட்டு வசதி வாரியத்திற்காக வாங்குவதாக உத்தேசிக்கப்பட்டுள்ள இடத்தை உடனடியாக வாங்கி வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளைக் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,63,58,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2568, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், கோட்டூர் ஒன்றியத் தலைநகரில் அரசு அலுவலர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் குடியிருப்பு கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,63,58,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 33 - நகர்ப்பகுதி வளர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 33- நகர்ப்பகுதி வளர்ச்சி, மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய 33-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.30,30,23,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2576, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய 33-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,30,23,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2575, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. கே. சுப்பராயன்] [1997 ஏப்ரல் 1

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய 33-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,30,23,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2572, திரு. நா. பெரியசாமி:

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய 33-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,30,23,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2582, திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சேலம் மாவட்டம், இடைப்பாடி தொகுதி, கொங்கனாபுரம் பேரூராட்சிக்கு ஒரு நவீன பேருந்து நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய 33-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,30,23,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2593, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஏடி. பன்னீர்செல்வம் மாவட்டம், மன்னார்குடி நகராட்சியின் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் மூலம் நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய 33-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,30,23,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2580, திரு. அ.வ. அப்துல் நாசர்.



1997 ஏப்ரல் 1]

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சிதம்பரம் நகர எல்லையிலிருந்து மூன்று கிலோ மீட்டர் சுற்றளவிற்குட்பட்ட புதிய குடியிருப்புகளை சிதம்பரம் நகராட்சியுடன் இணைப்பதன் தேவை குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய 33-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,30,23,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் @ தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதித்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவைகளுக்கு விளக்கம் அளிக்கிறேன் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் தொடங்குகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் 10 பேர் பேச இருக்கின்றார்கள். ஆகவே அருள்கூர்ந்து ஒவ்வொரு உறுப்பினரும் 10 நிமிடத்திற்குள் தங்களுடைய பேச்சை அமைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முதலாவதாக திரு. ப. ரங்கநாதன் அவர்களை அழைக்கின்றேன்.

***திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின்மீது பேசுவதற்கு வாய்ப்பு தந்த தங்களுக்கு நன்றி கூறி தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஒருசில கருத்துக்களை எடுத்துவைக்க விரும்புகிறேன்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் இதுவரையில் 3,33,586 குடியிருப்புகளை உருவாக்கியுள்ளது. அதே நோக்கில் 1978-79-ஆம் ஆண்டு 1,486 குடியிருப்புகளும் 1997-98 ஆம் ஆண்டில் குறைந்த வருமானம்

@ 171 முதல் 229 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் 1 மற்றும் 2-ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

216826. D
சென்னை-600 009
31/V/97
NA7.257.1

உள்ளவர்களுக்கு 1169 குடியிருப்புகளும், அதேபோன்று நடுத்தர வருமானம் உள்ளவர்களுக்கு 5,255 குடியிருப்புகளும் கட்டுவதாக இந்த நிதி ஆண்டிலே கூறியுள்ளீர்கள். பெருகி வருகின்ற, வீடுகள் தேவைப்படுகின்ற இந்தச் சூழ்நிலையில், இந்தக் குறிப்பு, 1486, 1169, 5255 என்ற மூன்று நிலைகளில் குறிப்பிட்டுள்ளதை சற்றுக் கூடுதலாக உயர்த்திக் கட்டினால் வீடு தேவைப்படுவோர் எண்ணிக்கை குறையும் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

முற்பகல் 11-20

அதேபோன்று அரசுப் பணியாளர்கள். குறிப்பாகத் தமிழ்நாடு முழுவதும் இன்றைக்கு அரசுப் பணியாளர்களுக்கு வாடகைக் குடியிருப்புகள் தேவையாக இருக்கிறது. அவை மிகவும் குறைவாக உள்ள காரணத்தினால், 1088 அடுக்கு மாடிக் குடியிருப்புகள் கட்டப்படும் என்பதை 10,000 என்ற அளவில் நீங்கள் உயர்த்த வேண்டுமென்றும் இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

சிறிய மற்றும் நடுத்தர நகர வீட்டு வசதித் திட்டத்தின் மூலமாக, தமிழகத்திலே இருக்கின்ற, நகராட்சிகள், பேரூராட்சிகளில் எல்லாம் அனைத்து அடிப்படை வசதிகளையும் கொண்ட குடியிருப்புகளையும், அதேநேரத்தில் சிறிய, பெரிய, நடுத்தர வீட்டு மனைகளையும் உருவாக்கினால், பெருகி வருகின்ற மக்கள் தொகை, நகரங்களிலேயே இருப்பதற்கு வசதியாக இருக்கும். நகரத்தில் அடிப்படை வசதிகளைக் கொண்ட வீட்டுமனைகளை உருவாக்கினால், சிறிய, பெரிய, நகரங்களில் இருப்பவர்கள், வாழ்பவர்கள் சென்னை நகரை நோக்கி வருவது தடுக்கப்படும் என்பது எங்களுடைய எண்ணம்.

அடுத்து, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் சார்பிலேயே, "தமிழ்நாடு அர்பன் டெவலப்மெண்ட் ஸ்கீம்" என்ற திட்டத்தின் மூலமாகவும் உலக வங்கியின் நிதியுதவியுடன், 88,728 வீட்டுமனைகளை மேம்படுத்துவது என்று காலக்குறியீடு நிர்ணயிக்கப்பட்டு, அதில் 29 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதாகக் கொள்கை விளக்கக் குறிப்பேட்டிலே குறிப்பிட்டுள்ளீர்கள்.

ஒரு திட்டத்தைச் செயல்படுத்துகின்றபொழுது, அந்தத் திட்டத்திற்குக் காலக்குறியீடு எண்கள், ஓராண்டோ அல்லது இரண்டு ஆண்டுகளோ என்று நீங்கள் குறிப்பிடுவது இல்லை. இதனால் காலமும் விரயம் ஆகிறது; பணமும் கூடுதலாகச் செலவாகிறது. திட்டம் முடிவு பெறுகின்ற



நேரத்தில் நீங்கள் நிர்ணயிக்கின்ற தொகை, பெருகி வருகின்ற விலைவாசியின் காரணமாக, அதை பயன் பெறுபவர்களுக்கு ஒதுக்கீடு செய்கின்றபொழுது அந்த மனைகளினுடைய விலையும் அதிகரித்துக் கொண்டே போகிறது. ஆகவே, ஒரு திட்டத்தை இந்த காலகட்டத்திற்குள், அதாவது 3 ஆண்டுகள் என்றால் அந்த 3 ஆண்டுகளுக்குள் முடிக்க வேண்டும். அப்படி முடித்தால்தான் நீங்கள் நிர்ணயிக்கின்ற அந்தக் குறியீட்டு எண் பூர்த்தியாகும் என்பது என்னுடைய கருத்து.

அரசு அலுவலர்கள், குறிப்பாகத் தமிழ்நாட்டிலே உள்ள அரசு அலுவலர்களுக்கு வீடு கட்ட முன்பணம் என்று கடந்த 1996-97-ஆம் ஆண்டு ரூ.69.50 கோடி ஒதுக்கியுள்ளீர்கள் ஆனால் அதை 1997-98-ஆம் ஆண்டு ரூ.47.25 கோடியாகக் குறைத்துள்ளீர்கள். இந்த ஆண்டு கடந்த ஆண்டைக் காட்டிலும் ரூ.20.25 குறைவாக ஒதுக்கியுள்ளீர்கள். அதிலே ஒரு வேறுபாடு பாருங்கள். 1997-98-லே அரசு ஊழியர்கள் கடன் பெறுவதற்கு ரூ.41 கோடி ஒதுக்கியுள்ளீர்கள். ஆனால் கடந்த ஆண்டு, 1996-97-லே அரசு ஊழியர்கள் கடன் பெறுவதற்கு ரூ.60 கோடி ஒதுக்கியுள்ளீர்கள் கடந்த ஆண்டைக்காட்டிலும் இந்த ஆண்டு 19 கோடி ரூபாய் குறைவாக ஒதுக்கியுள்ளீர்களே, அதன் நிலை என்ன? அதையும் தாங்கள் விளக்க வேண்டும்.

தலைமைச் செயலக ஊழியர்களுக்குக் கடந்த ஆண்டு ரூ.4.25 கோடி; இந்த ஆண்டு ரூ.3.75 கோடி. ஊராட்சி ஒன்றியப் பள்ளியாசிரியர்களுக்கு, கடந்த ஆண்டு ரூ.1.5 கோடி; இந்த ஆண்டு ரூ. 5 கோடி. இதை உயர்த்தியுள்ளீர்கள், இதை நாங்கள் வரவேற்கிறோம்.

முற்பகல் 11-25

அடுத்து, கூட்டுறவு வீட்டு வசதி திட்டம். குறிப்பாக அரசும், தனியார் நிறுவனமும் தமிழகத்திலே வீட்டு வசதியைப் பெருக்க முடியாது. கூட்டுறவு வீட்டு வசதியின் மூலமாகத்தான் சென்னை, சென்னையை ஒட்டியுள்ள நகரங்கள், தமிழகம் முழுவதும் உள்ள பெரிய நகரங்கள், சிறிய நகரங்கள் என்ற அனைத்து இடங்களிலும் வீட்டு வசதியை உருவாக்கலாம். அந்த அடிப்படையில் கூட்டுறவு வீட்டு வசதி வங்கியின் சார்பாக 2 லட்சம் ரூபாய் முதல் 3 லட்சம் ரூபாய் வரைதான் கடன் வசதி பெற ரொம்ப நாட்களுக்கு முன்பு நிறைவேற்றப்பட்ட தீர்மானம் உள்ளது, கூட்டுறவு வங்கிகளிலே. அதை மாற்றி 5 லட்ச ரூபாய் என்று கூடுதலாக உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் சென்னை, மதுரை, கோவை, திருச்சி, சேலம், திருநெல்வேலி ஆகிய மாநகராட்சிகளின் எல்லைகளுக்கு உட்பட்டும், மாநகராட்சிகளின் எல்லைகளுக்கு வெளியிலேயும் அடுக்கு மாடி குடியிருப்புகள் வாங்குவதற்கு கூட்டுறவு வீட்டு வசதி வங்கியின் சார்பாக 4 லட்ச ரூபாய், 3 லட்ச ரூபாய் என்று இருந்ததை 4 லட்ச ரூபாய், 5 லட்ச ரூபாய் என்று நீங்கள் உயர்த்தியிருக்கிறீர்கள். அதை 6 லட்ச ரூபாய், 7 லட்ச ரூபாய் என்று மேலும் சற்று கூடுதலாக உயர்த்தினால் பயன்பெறுபவர்களுக்கு மிகவும் வசதியாக இருக்கும்.

அடுத்து தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம். இந்த வாரியம் 1971-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அதற்கு முன்பு காமராசர் ஆட்சிக் காலத்தில், காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் 1971-ஆம் ஆண்டுக்கு முன்பு 7191 குடியிருப்புகளை உருவாக்கினார்கள். அந்தக் குடியிருப்புகளை இப்போது பார்த்தாலும் பெரம்பூரில், வியாசர்பாடி, கொருக்குப்பேட்டை போன்றப் பகுதிகளில் உறுதியான கட்டிடங்களாக, நிலையான கட்டிடங்களாக, ஒழுகாத கட்டிடங்களாக காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் உருவாக்கிக் கொடுக்கப்பட்டது. ஆனால் 1971-க்கு பிறகு நேற்று வரையில், 31-3-1997 வரையில் 50,957 அடுக்கு மாடிக் குடியிருப்புகள் சென்னையில் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அதிலே 1971-லிருந்து கட்டப்பட்ட குடியிருப்புகள் 5 ஆண்டுகளுக்குள்ளாக, அதாவது 1976-ஆம் ஆண்டுக்குள்ளாக மழை பெய்தால் ஒழுகுகிற சூழ்நிலையில் இருக்கிறது. கழிப்பிட வசதி சரியாக இல்லை. கதவுகள் இல்லை. படிகள் இடிந்த சூழ்நிலையில் இருக்கின்றன. அதாவது சீர்கெட்டு இருக்கின்ற குடியிருப்புகளாக இந்த குடிசைப் பகுதி மாற்று வாரியக் குடியிருப்புகள் இருக்கின்றன.

அதாவது கடந்த நிதிநிலை அறிக்கையில்தான், புதிதாக கழக ஆட்சி உருவாக்கப்பட்ட பின்புதான், அவற்றைச் செப்பனிடுவதற்காக, சீர் செய்வதற்காக ஒரு பெரிய தொகையை ஒதுக்கி இப்போது வேகமாக செப்பனிடும் பணி நிறைவேற்றப்படுகிறது. (மணியடிக்கப்பெற்றது)

நான்தான் முதலில் ஆரம்பித்தேன். 10 நிமிடம் எக்ஸ்ட்ரா கொடுங்கள். இதிலே நிறைய பேச வேண்டியிருக்கிறது. அதாவது இதிலே சிறிய கருத்து என்னவென்றால் தேர்தல் நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சரை வைத்துக் கொண்டு மேடையில் நான் சொன்னேன். இந்த குடிசை மாற்று வாரிய அடுக்கு மாடிக் குடியிருப்புகளை நீங்கள் செப்பனிட்டு இலவசமாக ஒதுக்கீட்டாளர்களுக்கு வழங்க வேண்டுமென்று நான் கோரிக்கை கடந்த ஆண்டும் வைத்தேன், இந்த ஆண்டும் வைக்கிறேன். அதைச் செய்து



விட்டால், அதைப் பயன்படுத்துபவர்கள் நிம்மதியாக இருப்பார்கள். அதற்குப் பிறகு ரிப்பேர் எது வந்தாலும் செப்பனிடுவதை எல்லாம் அவர்களே செய்து கொள்வார்கள். தொடர்ந்து அரசாங்கம் அதற்கு 5 கோடி ரூபாய், 10 கோடி ரூபாய் என்று செலவு செய்வது மிச்சமாகும். அதனால் பயன்பெறுபவர்களும் இந்த ஆட்சியை வாழ்த்துவார்கள்; மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வாழ்த்துவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து 1971-ஆம் ஆண்டிலிருந்து, 1992-ஆம் ஆண்டு வரை எல்லா வருடங்களிலும் நிர்ணயம் செய்யப்பட்ட குறியீடு சராசரியாக 1200 வீடுகள் என்று கட்டியிருக்கிறார்கள். ஆனால் 1993-94-ஆம் ஆண்டில் 750 என்றும், 1994-95-ஆம் ஆண்டில் 1098 என்றும், 1995-96-ஆம் ஆண்டில் 986 என்றும் இப்படி குறைந்து கொண்டே வந்திருக்கிறது. இந்த ஆண்டு அதை அதிகப்படுத்தினால், எண்ணிக்கையை கூடுதலாக உயர்த்தினால் பயன்பெறுபவர்களுடைய எண்ணிக்கை கூடும். எனவே 10 ஆயிரம் குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளைக் கட்டினால்— சென்னையில் மட்டும் அல்ல, புறநகர்ப் பகுதியிலும் நீங்கள் அப்படி உருவாக்கினால்—சென்னையினுடைய நெருக்கடி தீரும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11.30

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னைக்கு அருகாமையில் ஒக்கியம், துரைப்பாக்கம், செம்மஞ்சேரி பகுதியில் ஐந்தாண்டுக் காலத்தில் சுமார் 14,500 வீடுகள் கட்டி முடிக்கப்பட வேண்டும் என்பதற்காக 10-வது நிதிக்குழு பரிந்துரையின்படி மத்திய அரசு ஒதுக்கீடு செய்த ரூ. 60 கோடியில் 1997-98-ல் மட்டும் நிதி உதவியாக ரூ. 15 கோடி ஒதுக்கீடு பெற்று, கூடுதலாக ஹட்கோ கடனுதவியுடன் 4,000 குடியிருப்புகளும், மேலும் குடிசை மாற்று வாரியத்தின் குடிசை மாற்று திட்டத்தின்கீழ் இந்த ஆண்டு கட்டபட உள்ள 2,000 குடியிருப்புகளும், ஆக மொத்தம் 6,000 குடியிருப்புகள் இந்த நிதிநிலை ஆண்டில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அதேபோல, சென்னை நகரிலே அரசுக்குச் சொந்தமான இடங்களில்

குடிசை போட்டிருந்த ஏழைகளுக்கு மெட்ராஸ் அர்பன் டெவலப்மெண்ட் ஸ்கீம் அடிப்படையில் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் 1979-ஆம் ஆண்டிலே அடிப்படை வசதிகளை நிறைவேற்றிக் கொடுத்து, அவர்களுக்குக் கடனாகவும் 3500 ரூபாய் வழங்கினார்கள். ஏறத்தாழ அதிலே பெனிஃபிஷியரீஸ் 41,679 பேர். அந்த 3500 ரூபாயை அவர்களாலே கட்ட முடியவில்லை. அதற்குப் பல்வேறு காரணங்கள். வசூல் செய்ய [illegible]களும் போவதில்லை அல்லது தேர்தல் மாறி மாறி வருகின்ற நேரத்தில் எல்லாக் கட்சிக்காரர்களும், நான் உள்பட ஓட்டுக் கேட்கும்பொழுது, உங்களுக்கு ப்ரீயாக வாங்கித் தருகிறோம் என்று சொல்லிவிட்டோம். இப்பொழுது அது என்னவாயிற்று என்று சொன்னால், அந்த 3500 ரூபாய், 2500 ரூபாய், 2000 ரூபாய், 1000 ரூபாய் என்பது 15,000, 20,000, 30,000, 40,000/- ரூபாயாக வட்டி, கூட்டு வட்டி, அதற்குத் தண்ட வட்டி எல்லாம் சேர்த்து—3500 ரூபாய் ஒருவர் வாங்கியிருக்கிறார் என்றால் கடன், அவருக்கு 35,000 ரூபாய்—ஆகியிருக்கிறது தொகை. அதனாலே, மாண்புமிகு குடிசை மாற்று வாரியத்தினுடைய அமைச்சரவர்கள் இந்த வட்டியையெல்லாம் கழித்துவிட்டு, அசலை மட்டும், 3500 ரூபாயை மட்டும் நீங்கள் கட்டுங்கள் என்று சொன்னால் ரொம்ப நன்றாக இருக்கும்; இந்த ஆட்சிக்கும் நல்ல பெயர் வரும். அந்த ஏழைகளெல்லாம் உங்களைப் பாராட்டுவார்கள்; நீண்ட நெடுநாள் வாழ்வீர்கள் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அடுத்து, டிஎன்.யு.டி.பி. ஸ்கீம். இது 1989-லே வந்தது. இதிலேயும் 8000 ரூபாய் கடன் கொடுத்திருக்கிறார்கள். இதிலே 13000 பேர் பெனிஃபிஷியரீஸ் இருக்கிறார்கள். நடைபாதையில் குடியிருப்பு வீட்டு வசதித் திட்டம், இதிலே 5000 பேர். இதற்கு 4000 ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். 1000 ரூபாய் மானியம். இவர்களுக்கெல்லாம், இந்த அசலை மட்டும் கட்டச் சொல்லி நீங்கள் தயவு செய்து அதிகாரிகளுக்கு ஆணையிட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) அடுத்து, இறுதியாக 5 நிமிஷத்திலே முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. செ. இராமலிங்கம்):** இல்லை, இல்லை. ஒரு நிமிஷத்திலே பேசி முடியுங்கள்; 15 நிமிஷத்திற்கு மேல் ஆகிவிட்டது.

**திரு. ப. ரங்கநாதன்:** அடுத்து, பெருநகர வளர்ச்சிக் குழுமம். இதன் சார்பில் கோயம்பேடு கனி, காய்கறி, மலர் மொத்த விற்பனை அங்காடியை



ரொம்ப நாளாகத் திறக்கிறேன், திறக்கிறேன் என்று சொல்லி வருஷா வருஷம் அதற்குச் சுண்ணாம்பு அடிக்க ரூ. 2½ கோடி, சுவரை இவர்களே இடித்து விடுவது, கட்சிக்காரர்கள், வேறு கட்சிக்காரர்கள், காண்ட்ராக்ட்காரர்களெல்லாம் திருப்பி, அந்த சுவரைக் கட்டுவதற்கு ரூ. 4 கோடி கான்ட்ராக்ட், இப்படியெல்லாம் செய்து—மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் 16-12-1996 அன்று அந்த மொத்த விற்பனை அங்காடியைத் திறந்தமைக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, இரும்பு எஃகு விற்பனை வளாகம், சென்னையையொட்டி சாத்தாங்காடு பகுதியில் அமைக்க ரொம்ப நாளைக்கு முன்னால் போட்ட திட்டம். இதுவும் 7, 8, 9 வருஷம் ஆகிவிட்டது. இன்னும் திறப்பதாக இல்லை. ஆனால் இந்த ஆண்டு சொல்லியிருக்கிறார்கள் இந்த வருஷமே திறந்து விடுகிறேன் என்று. திறந்தார்கள் என்றால் ரொம்ப நன்றாக இருக்கும்.

அதேபோன்று பேருந்துகள், பெருகி வருகின்ற நெருக்கடியைப் போக்குகின்ற வகையில் பேருந்துகள், லாரி, கனரக வாகனங்கள், டிராக்டர்கள், இதையெல்லாம் நிறுத்துவதற்கும், சென்னையை ஒட்டியுள்ள ஜி.என்.டி, சாலையில் சி.எம்.டி.ஏ. சார்பிலே ஒரு வளாகத்தை உருவாக்கினார்கள். அதை இன்னும் திறக்கவே இல்லை. அப்படியேதான் இருக்கிறது அந்த வளாகம். திறந்தபாடு கிடையாது. இப்பொழுதெல்லாம் பழசாகிப் போய்விட்டது. அதையும் மீண்டும் உடனடியாகத் திறக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-35

குறிப்பாக, சி.எம்.டி.ஏ. சார்பில் ஏறத்தாழ 850 பேர் அங்கே வேலை செய்கிறார்கள். 850 பேர் வேலை செய்வது மட்டுமல்லாமல், பல நல்ல திட்டங்களை இங்கே நிறைவேற்றுகிற நேரத்தில் 850 பணியாளர்கள் இருந்தும் ஒரு மிகப்பெரிய பிரச்சினை சென்னை நகரிலே. அனுமதி பெறாமல் அடுக்கு மாடிக் கட்டிடங்களை உருவாக்குவது இந்த சி.எம்.டி.ஏ. வந்த காலத்திலே இருந்து இருக்கிறது. அடுக்கு மாடிக் கட்டிடங்களை அனுமதியில்லாமல் கட்டி விடுகிறார்கள். சி.எம்.டி.ஏ. சார்பில், செக்ஷன் 56 டவுன் அண்டு கன்ட்ரி பிளானிங் ஆக்ட்படி இதிலே ஒரு நோட்டீஸ் கொடுக்கிறார்கள். அதை எடுத்துக்கொண்டு போய் நீதிமன்றத்தில் தடையுத்தரவு பெற்றுவிடுகிறார்கள். பூந்தமல்லி ஹை ரோட்டில் ஒரு பில்டிங்கை இடிக்க வேண்டுமென்று சொல்லி நோட்டீஸ்

கொடுத்திருக்கிறார்கள். நானே சி.எம்.டி.ஏ.-வுக்குச் சென்று நீங்கள் ஏன் இடிக்கமாட்டேன் என்கிறீர்கள், அதைச் சீக்கிரம் இடியுங்கள் என்று சொன்னேன். எங்கே கட்டடம் என்றால் 107 பூந்தமல்லி ஹை ரோடு. ஒரு வருடம் ஆகிறது இடியுங்கள் என்று நான் சொல்கிறேன், அதற்கு அந்த அதிகாரி சொல்கிறார், நாங்கள் நோட்டீஸ்தான் கொடுக்கமுடியும், இடிக்க வேண்டுமென்று சொன்னால், அதிலே யார் குடியிருக்கிறார்களோ அவர்களுக்கு ஒரு நோட்டீஸ் கொடுக்க வேண்டும் என்று. அப்போது இந்த 56-வது செக்ஷன் என்ன செய்கிறது. என்னதான் அதற்கு வேலை? அதற்கு ஒரு புதிய சட்டம் நிறைவேற்ற முடியாதா சி.எம்.டி.ஏ.-விலே? சி.எம்.டி.ஏ.வை உருவாக்கும்போது அந்தச் சட்டத்தை ஏன் நிறைவேற்றவில்லை? இது பழைய சட்டம். டவுன் அண்டு கன்ட்ரி பிளானிங் ஆக்ட் பழைய சட்டம். அந்தச் சட்டத்தை எடுத்துக் கொண்டு வந்து சி.எம்.டி.ஏ.வில் வைத்து, அதற்குப் பிறகு அவர்கள் நோட்டீஸ் கொடுத்து முடித்தவுடன், அந்த நோட்டீஸை எடுத்துக் கொண்டுபோய், நீதிமன்றங்களில் தடையுத்தரவு வாங்கிவிடுகிறார்கள். அப்போது, தவறான, அனுமதியில்லாமல் கட்டுகின்ற இத்தகைய கட்டடங்களுக்கு நோட்டீஸ் கொடுக்காதீர்கள். நீங்கள் அதிகபட்சமான அபராதம், அதாவது 100 சதவீதம் அவர்களுக்கு ஃபைன் போட்டு அந்தக் கட்டடங்களை முறைப்படுத்தி, அரசாங்கத்திற்கும், சி.எம்.டி.ஏ.-வுக்கும் வருமானம் வருவதற்கான வழிவகைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வாரா என்பதை நான் அறிய விரும்புகிறேன். (மணியடிக்கபெற்றது)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** நேரம் ஆகிவிட்டது. 20 நிமிடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. நீங்கள் எல்லாம் wind up பண்ணுவதற்கு வந்திருக்க வேண்டும். ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** தமிழ்நாட்டில் நூற்றுக்கு மேற்பட்ட நகராட்சிகள், 600 பேரூராட்சிகள், அதுமட்டுமல்லாமல் சுற்றுலாத் தலங்கள், கொடைக்கானல், ஊட்டி, ஏற்காடு போன்ற மூன்று மலைப் பிரதேசங்கள் இருக்கின்றன. கொடைக்கானலில் டவுன் பிளானிங் மூலமாக அனுமதி பெற்று, அதாவது முறைகேடாக அனுமதி பெற்று, ஏற்கெனவே பிளசன்ட் ஸ்டே ஓட்டல் கட்டினார்கள். உயர்நீதிமன்றத்திலே அதை இடிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அந்த மேல்மாடியை மட்டும் சும்மா தட்டிவிட்டு, அந்தக் கட்டடம் அப்படியே இருக்கிறது. எனக்கு ஒரு தகவல் வந்தது கொடைக்கானலிலிருந்து கடந்த வாரம். அந்த முழுக் கட்டடத்தை ஏன் இடிக்கவில்லையென்று கேட்டபோது, அந்தக்



கட்டடத்தின் உரிமையாளரும், அங்கே இருக்கின்ற நகராட்சியைச் சார்ந்த அலுவலர்களும் இந்த ஒரு கட்டடம் மட்டும் இப்படிக் கட்டப்படவில்லை, கொடைக்கானலில் இருக்கின்ற அனைத்துக் கட்டடங்களும், ஏறத்தாழ 90 விழுக்காடு கட்டடங்கள் டவுன் பிளானிங் அப்ரூவல் இல்லாமல் கட்டியிருக்கிறார்கள், அதே போன்று, ஊட்டியிலும் அப்ரூவல் இல்லாமல் கட்டியிருக்கிறார்கள்., ஏற்காட்டிலும் கட்டியிருக்கிறார்கள் என்ற தகவல் கிடைத்திருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) மணி நாடாருடையதையும் சேர்த்து பேசிவிடுகிறேன்.

ஆகவே, இதை முறைப்படுத்த வேண்டுமென்றால், அரசு முறையான நடவடிக்கை எடுத்து, தமிழகத்தில் நகராட்சிகளிலும், சிற்றூர்களிலும் பேரூராட்சிகளிலும், மாநகராட்சிக்குட்பட்ட நகரங்களிலும் அனுமதி இல்லாமல் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை முறைப்படுத்தி அவர்களுக்கு மிக அதிகபட்சமாக 100 விழுக்காடு ஃபைன் போட்டு அனுமதி வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று தமிழகத்திலே இருக்கின்ற, பெருகி வருகின்ற போக்குவரத்து நெரிசலை கருத்திலே கொண்டு, சென்னை துறைமுகச் சாலை மற்றும் பல்வேறு போக்குவரத்து நெடுஞ்சாலைகளை அகலப்படுத்துவதற்கு நீங்கள் திட்டங்களைத் தீட்டியுள்ளீர்கள். அதை உடனடியாக அமல்படுத்த வேண்டுமென்று நான் சென்னைப் பெரு நகர வளர்ச்சிக் குழுமத்தைக் கேட்டுக் கொள்வதோடு, தமிழகத்திலுள்ள தூத்துக்குடி, திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் இன்னும் பல்வேறு பெரிய சிறிய நகரங்களிலும் இன்றைக்கு தொழிற்பேட்டைகள் உருவாகி வருகின்ற காரணத்தினால், அந்த நகரங்களிலும் சாலைகளை அகலப்படுத்துவதற்கு இந்த அரசு போர்க்கால நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டு, பேச வாய்ப்பு தந்த தங்களுக்கு நன்றி சொல்லி அமைகின்றேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** திரு. இரா. மணிமாறன்.

முற்பகல் 11-40

***திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வீட்டுவசதி ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது பேசுகின்ற வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகவும் சிரமப்பட்டு பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை

மேற்கொண்டிருக்கிறார்கள். அவருக்கு முதலில் எங்களுடைய இதயபூர்வ மான வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1997-98-ஆம் ஆண்டில் ஏறத்தாழ 700 கோடி ரூபாய்க்கு மேல் பல்வேறு துறைகள், அமைப்புகளின் சார்பில் வீடுகள் கட்டுகின்ற திட்டத்தை உருவாக்குவதற்கு இதிலே வழிவகை செய்திருப்பதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். சென்ற ஆண்டு ஏறத்தாழ 600 கோடி ரூபாயாக இருந்தது, இந்த ஆண்டு 700 கோடி ரூபாயாக உயர்ந்திருப்பதை மகிழ்ச்சியோடு பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். 1997-98-ஆம் ஆண்டு நலிவடைந்த பிரிவினருக்கு 80 இலட்சம் ரூபாய் செலவில் 1486 வீடுகளும், குறைந்த வருவாய்ப் பிரிவு மக்களுக்கு 6½ கோடி ரூபாய் செலவில் 1169 வீடுகளும், நடுத்தர வருவாய்ப் பிரிவு மக்களுக்கு சுமார் 44 கோடி ரூபாய் செலவில் 5255 வீடுகளும், உயர் வருமானப் பிரிவு மக்களுக்கு ரூபாய் 56 கோடி ரூபாய் செலவில் 5828 வீடுகளும், அரசுப் பணியாளர்களுக்கு ரூபாய் 20 கோடியும், ஒதுக்கி சிறப்பான ஒரு திட்டத்தை மானியக் கோரிக்கையில் தந்திருக்கிறார்கள். பல ஆயிரம் கோடி ரூபாய் செலவில் இந்த நாட்டில் வாழக்கூடிய மக்களுக்கு வீட்டுவசதியை ஏற்படுத்தித் தர வேண்டும் என்ற உணர்வோடு பல்வேறு திட்டங்களை, அதிலும் குறிப்பாக தொன்மை வாய்ந்த நகரங்களை மேம்படுத்துவதற்கு, அதேபோல் எங்களது திண்டுக்கல்-மன்னர் திருமலை மாவட்டத்தில் பழனியையும் தேர்ந்தெடுத்திருப்பதற்கு என்னுடைய நன்றியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக, நாட்டு மக்களில் வருவாய் குறைவாக உள்ள பிரிவு மக்கள், நடுத்தர வருவாய்ப் பிரிவில் உள்ள மக்கள் ஆகியோர் சொந்தமாக தங்களுக்கு ஒரு வீடு வேண்டும் என்ற அடிப்படையில், பெருமுயற்சி எடுத்து வீட்டுவசதிச் சங்கங்கள் மூலமாக, வீட்டுவசதித் துறை மூலமாக தங்களுடைய நீண்டநாளைய கனவுகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு முன்வருகிறபோது, அவர்களுக்கு அந்த வாய்ப்பினை நீங்கள் அளிக்கிறீர்கள். அது பாராட்டக்கூடியது என்றாலும், அதிலே ஏற்பட்டிருக்கக்கூடிய சில குறைபாடுகளையும் இந்த நேரத்திலே நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமையென்று நினைக்கிறேன்.

எங்கள் மாவட்டத்தில் உள்ள திண்டுக்கல், பழனி, ஒட்டன்சத்திரம், கொடைக்கானல் போன்ற நகரங்களில் வீட்டுவசதித் துறையினுடைய வீடுகள் இருக்கின்றன. ஆரம்பக்காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி மாண்புமிகு கலைஞர் அவர்கள் தலைமையிலே இருந்தபோது கட்டப்பட்ட கட்டடங்கள், இன்று பார்த்தாலும் அவை



பார்ப்பதற்கு அழகாக இன்னும் புதுமைக் கோலத்தில் இருப்பதை நான் பார்க்கிறேன். ஆனால், கடந்த ஐந்து ஆண்டுக் காலத்தில், இதற்கு முன்பாக இருந்த அரசு கட்டிய கட்டடங்களை தயவு செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சற்று நேரிலே வந்து பார்க்கவேண்டும் என்று நான் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அந்த வீட்டிற்கு உரிமையாளர் செல்வதற்கு முன்பாகவே, நாம் பார்த்தோம் என்றால், அங்கே இருக்கக்கூடிய நிலைகள் எல்லாம் கறையான் அரித்து, அவற்றிற்குக் கதவுகள், நிலைகள் என்ற பெயர்கூட இல்லாத அளவிற்கு அவை மோசமாக இருக்கின்றன. ஜன்னல்கள்கூட அப்படித்தான் இருக்கின்றன. அங்கே வீடு இருக்கிறது, அந்த வீட்டிற்கு வேண்டிய நிலையும், கதவுகளும், ஜன்னல்களும் மிகவும் தரம் குறைந்தவையாக இருக்கின்றன. அவைகளை எந்த மரத்தில் செய்கிறார்கள் என்றே எங்களுக்குத் தெரியவில்லை. அப்படியொரு மரம் தமிழ்நாட்டில் விளைகின்றதா என்பதுகூட எங்களுக்குச் சந்தேகமாக இருக்கிறது. அந்த அளவிற்கு மோசமாக இருக்கிறது. இன்னொன்றையும் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பேஸ் மட்டம் என்பது தரை அளவிலேயிருந்து 2 அடி அல்லது 1½ அடி உயரமாக இருந்தால்தான், சாலைகள் போடப் போட அந்தச் சாலை மட்டம் உயருகின்றபோது, மழை நீர் அல்லது வேறு பல காலங்களில் வீட்டிற்கு உள்ளே அந்த நீர் செல்லாமல் இருப்பதற்கான வாய்ப்பு இருக்கும். ஆனால், பேஸ் மட்டம் தரையோடு தரையாக இருக்கக்கூடிய அதிசயத்தை நான் வீட்டுவசதித் துறை அதிகாரிகள் கட்டுகின்ற கட்டடங்களில்தான் பார்க்கிறேன். அந்த அளவிற்கு மோசமாக இருக்கிறது.

இன்னொன்று, திண்டுக்கல்லிலே மூன்று பிரிவுகள் இருக்கின்றன. ஒரு பிரிவு நகராட்சியிடம் இப்போது ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது பிரிவு மற்றும் மூன்றாவது பிரிவு இன்னும் நகராட்சியிடம் ஒப்படைக்கப்படவில்லை. அப்படி ஒப்படைத்தாலும், நகராட்சி ஏற்றுக்கொள்வதாக இல்லை. அதற்கு என்ன காரணம் என்றால், சாலை வசதி செய்து தருவதாகச் சொல்லிக் கொண்டிருப்பதுதான். சாலைகள் இன்னும் குண்டும் குழியுமாகவே இருக்கின்றன. தெரு விளக்கு அமைத்துத் தருகிறேன் என்று சொல்லி கம்பங்களை வைத்தார்களே தவிர, அந்தக் கம்பங்களில் விளக்குகள் இல்லை.

முற்பகல் 11-45

இந்த நிலையில், மோசமான நிதியாதாரங்களைக் கொண்டிருக்கக்கூடிய நகராட்சிகள் இதை எடுத்துக்கொள்ளுமேயானால், மேலும் ஏற்படக்கூடிய

சுமைகளை நகராட்சிகள் தாங்குமா என்று அச்சப்படக்கூடிய நிலையிருக்கிறது. ஏறத்தாழ இரண்டாயிரம் வீடுகள் திண்டுக்கல் நகரில் இருக்கின்றன. அந்த இரண்டாயிரம் வீடுகளுக்கும் குடிநீர் சப்ளை செய்வதற்காக 40 இலட்சம் ரூபாய் செலவில் அங்கே மேல்நிலைத் தொட்டிகளைக் கட்டினார்கள். அங்கே தொட்டிகள் இருக்கின்றனவே தவிர, அந்தத் தொட்டிகளில் தண்ணீர் நிரப்பக்கூடிய சூழ்நிலைகள் இல்லாமல் இருக்கின்றன. அந்தக் காலனியை உருவாக்குகின்றபோதே குடிநீர் சம்பந்தப்பட்ட பிரச்சினையை எடுத்துக்கொள்ளவில்லையோ என்று எண்ணத் தோன்றுகிறது. மேலும் அங்கு 7, 8 கிணறுகள் இருக்கின்றன. அந்தப் பகுதி விவசாயம் நிறைந்த பகுதியாகவும் இருக்கிறது. அந்தப் பகுதியைத்தான் வீட்டுவசதித் துறை கையகப்படுத்தி வீடுகளைக் கட்டியிருக்கிறது. விவசாய நிலங்களுக்குப் பயன்படுத்தி வந்த கிணறுகளை இவர்கள் பயன்படுத்தி, மோட்டார் வைத்து தண்ணீரை விநியோகம் செய்கிறார்கள். அந்தத் தண்ணீரை யாரும் பருக முடியாது. வீட்டைச் சுத்தம் செய்வதற்கோ அல்லது வேறுபல காரியங்களுக்கோதான் அது உகந்ததாக இருக்கிறதே தவிர, வேறு எதற்கும் பயன்படுவதில்லை. எனவே, திண்டுக்கல் நகர மக்கள் குடிநீர் வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். முதலில் திண்டுக்கல் நகரில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். இப்போது இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு ஒருமுறைதான் குடிநீர் கொடுக்கக்கூடிய நிலையிருக்கிறது. அங்கே இரண்டு திட்டங்கள் இருந்தும் குடிநீர் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, புதிதாக உருவாக்கப்பட்ட இரண்டாயிரம் குடியிருப்புகளுக்கு உடனடியாக குடிநீர் வேண்டும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** இன்று காலையில் புகைப்படங்கள் செய்தித்தாள்களில் வந்த பிரச்சினை குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் கூறும்போது ** என்ற தகவலைச் சொன்னார்கள். அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே திரும்பப் பெறுவார் என்று பேரவைத் தலைவர் அவர்கள் தெரிவித்திருந்தார்கள். ஆனால் அவர் திரும்பப் பெறாததால், அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். எனவே, பத்திரிகைகள் அதை வெளியிடக்கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மக்கள் இப்போது குடிநீருக்காக சாலை மறியல் போன்ற போராட்டங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



மாவட்ட ஆட்சித் தலைவர், சட்டமன்ற உறுப்பினர், நகராட்சி நிருவாகம் ஆகிய இந்த அமைப்புகளெல்லாம் இரண்டு, மூன்று முறை அமர்ந்து பேசியும் அவர்களுக்கு நிரந்தரத் தீர்வை ஏற்படுத்த முடியவில்லை. எனவே, நான், மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவது என்னவென்றால், சாலை வசதி, தெருவிளக்கு வசதி, சுகாதார வசதி போன்றவற்றையெல்லாம் ஏற்படுத்தக் கூடிய அதேநேரத்தில், குடிநீர் வசதியையும் அமைத்துத் தர முன்வரவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இப்போது அந்த நகராட்சியில் 23 இலட்ச ரூபாய்க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அதை நடைமுறைப்படுத்தும் நிலை வருகின்றபோது, அதற்குப் பொருளாதார ஆதரவை எதிர்பார்க்கும் சூழ்நிலை இருக்கிறது. அந்தப் பகுதியில் வாழக்கூடிய மக்களுக்கு குடிநீர் வசதி செய்து தரவேண்டுமென்ற உணர்வு இருந்து கொண்டிருக்கிறது. அந்த மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்ற முடியாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. எனவே வருங்காலங்களில் புதிதாக குடியிருப்புகளை உருவாக்கும்போது, குடிநீர்ப் பிரச்சினையையும் கருத்தில் கொண்டு திட்டங்கள் தீட்டப்பட வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நிலங்களைக் கையகப்படுத்துவதில் பல குறைபாடுகள் நடந்துள்ளன. நான் முன்பே அமைச்சரிடம் ஒரு அதிகாரியின் மீது குற்றம் சுமத்தி கொடுத்திருந்த மனுவின்மீது நடவடிக்கை எடுக்கப்பெற்று, அந்த அதிகாரி இப்போது தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். இதையொட்டி தமிழ்நாட்டில் மேலும் மூன்று அதிகாரிகள் தவறு செய்திருக்கிறார்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. ஆனால் இந்த ஊழலுக்கெல்லாம் யார் காரணம் என்று கேட்டால், அப்போது ஆட்சியிலே இருந்தவர்கள்தான். அவர்களெல்லாம் அதிகாரிகளைக் கையில் போட்டுக்கொண்டு இப்படிப்பட்ட காரியங்களைச் செய்திருக்கிறார்கள். அந்த இடங்களுக்கு விலை நிர்ணயம் செய்வதில், ஏக்கருக்கு 50 ஆயிரம் ரூபாய் என்றால், ஏறக்குறைய 3 இலட்சம், 5 இலட்சம் என்று விலை நிர்ணயம் செய்து, பிறகு கொஞ்சம் கொஞ்சமாக குறைத்து 3 இலட்ச ரூபாய் என்று விலை நிர்ணயம் செய்து இடங்களை வாங்கியிருக்கிறார்கள். வீட்டுவசதிச் சங்கத்தில் பல்வேறு இடங்களில் அப்படித்தான் செய்து இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான இடத்தில் நிலம் வாடகை என்று போட்டு அந்தநேரத்தில் ஆளுங்கட்சிக்காரர்கள் ஆக்கிரமிப்பு செய்ததால், பல கோடி பெறுமானமுள்ள தொகை அரசுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது.

அவர்களெல்லாம் நீதிமன்றத்தின் துணையோடு தங்களைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே வழக்குகளை விரைவாக முடித்து ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட நிலங்களை மீட்க வேண்டும்.

முற்பகல் 11-50

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்துப்படி, அப்படிப்பட்ட நிலைகளிலெல்லாம் போலீஸ் துறையின் லஞ்ச ஒழிப்புப் பிரிவு நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறது. கண்டிப்பாக விசாரணை செய்து நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இரா. மணிமாறன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய பதிலுக்கு நன்றி. (மணியடிக்கப்பெற்றது) ஒன்றைச் சொல்லி முடித்து விடுகிறேன். ஊரக வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், வீட்டு வசதிச் சங்கங்கள் ஒரு நபருக்கு அவருடைய பங்குத் தொகையையும் சேர்த்து வீடு கட்டுவதற்கு வழங்கப்பட்டு வந்த தொகையை, சமவெளிப் பகுதிகளுக்கு ரூ.11,000 என்பதை ரூ.14,000/- ஆகவும், மலைப் பகுதிகளுக்கு ரூ.13,000/- என்பதை ரூ.16,000/- ஆகவும் உயர்த்திருக்கிறீர்கள். மாநில அரசு அளித்து வந்த உதவித் தொகையையும் ரூ.1,600-லிருந்து ரூ.2,000/- ஆக உயர்த்தியிருக்கிறீர்கள். இப்போது இருக்கக்கூடிய பொருள்களின் விலைவாசியில், இந்தத். தொகையில் வீடுகட்ட முடியுமா என்ற கேள்வி தொக்கி நிற்கிறது.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தத் தொகை அகில இந்திய அளவிலே, 'ஹட்கோ' நிறுவனத்தால் நிர்ணயிக்கப்பட்டது. அதைத் தமிழக அரசும் ஏற்றுக்கொண்டு அந்தத் தொகையை உயர்த்தித் தந்திருக்கிறது. இந்தியா முழுவதும் ஒரே நிலையினை அவர்கள் நிர்ணயித்திருக்கிறார்கள். ஆகவே, அதற்கு மேல் ஏற்றுவதற்கு வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இரா. மணிமாறன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, நமது தமிழக அரசு ரூ.27,000 செலவு செய்து தொகுப்பு வீடுகளைக் கட்டித் தருகிறார்கள். தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இனாமாக குடியிருப்புகளைக் கட்டித் தருவதற்கு, ஒரு வீட்டிற்கு ரூ.27,000 செலவாகிறது. மத்திய அரசு இந்தத் தொகையை நிர்ணயித்திருக்கிறது, ஒதுக்கியிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அதை உயர்த்தித் தர



வேண்டுமென்று நாம் கோரிக்கை வைப்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன்; வேறல்ல. உதவித் தொகையை ரூ.1,600-லிருந்து ரூ. 2,000-ஆக உயர்த்தியிருப்பதும், மற்ற இனங்களில் ரூ.2,000, ரூ.3,000 என உயர்த்தியிருப்பதும் பாராட்டத்தக்கது. ஆனால் அந்தத் தொகை வீடு கட்டுவதற்கு போதுமானதாக இருக்காது என்பது நிதர்சனமான உண்மை. இதை நாம் மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

மதுரையை மையமாக வைத்து பல்வேறு மாவட்டங்களை இணைத்து நிர்வாகம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த நிர்வாகத்திற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நாங்கள் சந்தித்துப் பேசுவதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. திண்டுக்கல்லில் ஏ.இ. ஒருவர் இருக்கிறார். அவரின்கீழ் 20, 25 பேர்கள் வேலை செய்கிறார்கள். சிறு செலவினங்களுக்குக் கூட—லைட் வாங்க வேண்டுமென்றால் அல்லது மோட்டார் பம்புகள் ரிப்பேர் ஆனால் ரிப்பேர் செய்ய—மதுரையிலிருந்து அனுமதித் தொகையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அப்படியே போராடி, எங்களைப் போன்றவர்கள் மனு கொடுத்து அல்லது நேரில் சந்தித்து அந்தப் பணத்தைப் பெற்றுத் தந்தால், உருப்படியாகக் காரியங்களைச் செய்கிறார்களா என்றால், உருப்படியாகக் காரியங்கள் நடைபெறுவதில்லை. என்னுடைய வேண்டுகோளை ஏற்று பணி மாற்றம் செய்தீர்கள். அங்கிருந்தவர்களை பணி மாற்றம் செய்த பின்னாலும்கூட, அந்த நிலைதான் தொடர்கிறது. அது வருத்தத்திற்குரியது. கிணறுகளில் தூர்வாரித் தர வேண்டுமென்று சொன்னேன். அந்த அதிகாரிகள் இன்னும் செய்து முடிக்கவில்லை. துர்நாற்றம்மிக்க கிணறுகளைச் சுத்தம் செய்து தர வேண்டுமென்று சொன்னேன். அதுவும் நிறைவேற்றப்படவில்லை. தெருவிளக்கு வசதிகள் செய்து தரப்பட வேண்டுமென்று வேண்டுகோள் வைத்தேன். அதுவும் இன்னும் சரி செய்யப்படவில்லை. மின்சாரம் அங்கே முறையாக இயக்கப்படுவதில்லை. மின் அழுத்தக் குறைவு ஏற்படுகிறது. மின் சாதனங்கள் சரியாக பொருத்தப்படவில்லை. அதனால் ரிப்பேர் பண்ணுவதற்கு கை வைக்க இயலவில்லை (மணியடிக்கப்பெற்றது) என்பதையெல்லாம் தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

நிறைய விஷயங்களைச் சொல்ல வேண்டுமென்று விரும்பினேன். ஆனால் கால அவகாசம் இல்லை. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து அந்த விவரங்களைத் தருகிறேன். தகுந்த நடவடிக்கையை நீங்கள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பாராட்டி அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி ஆகிய மானியங்களின் மீது பேச வாய்ப்பு தந்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். 21-ஆம் நூற்றாண்டுக்கு செல்வதற்கு முன்னாலே, தமிழகத்தில் வீடு இல்லாதவர்களே யாரும் இருக்கக்கூடாது என்ற நிலையை அரசு ஏற்படுத்தித் தருவதற்கு, வீட்டுவசதி வாரியத்தை முடுக்கிவிட்டு, விரைந்து செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டு வசதி வாரியத்தின் மூலம் இப்போது கிராமப் புறங்களில் வீடு கட்டுவதற்கு ரூ. 2 லட்சம் கடனும், நகர்ப்புறங்களில் வீடு கட்டுவதற்கு ரூ. 3 லட்சம் கடனும் வழங்கப்படுகிறது. பொருள்களுடைய விலைவாசியைக் கருத்தில் கொண்டு கிராமங்களில் வீடு கட்டுவதற்கு 5 லட்சமும், நகர்ப்புறங்களில் வீடு கட்டுவதற்கு 6 லட்சமும் என கடன் தொகையை உயர்த்தித்தர அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-55

பல வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்களில் பலவிதமான வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. பவுன்டேஷன் போடப்பட்டு 2 வருடங்களான பின்னரும்கூட அடுத்த பணம் பட்டுவாடா ஆகாததால், பல வங்கிகள் மீது இன்றைக்கு வழக்குகள் போடப்பட்டுள்ளன. இதற்கு, வீட்டு வசதி இணையத்தின் மெத்தனப் போக்கே காரணம் என்று பரவலாகப் பேசிக் கொள்கிறார்கள். எனவே, வீட்டு வசதி இணையம் சிறந்த முறையில், வேகமாகச் செயல்பட அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று, பல நகரங்களில், பிளான் அப்ரூவல் பெறாமலேயே வீடுகளைக் கட்டிவிடுகின்றார்கள். பிற்காலத்தில் அதிகாரிகள் அவற்றைப் பார்வையிட்டு, அதற்கு அப்ரூவல் கொடுக்கக் கூடிய ஒரு முறை இருக்கின்றது. இதில் பலவிதமான ஊழல்களும், கையாடல்களும் நடப்பதாகப் பேசுகின்றார்கள். எனவே, பிளான் அப்ரூவல் வாங்கிய பிறகுதான் வீடுகளைக் கட்டவேண்டும் என்ற முறையைக் கடினமாக்கி, அதனை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயக் கூட்டுறவு வங்கிகளிலும்கூட வீடுகள் கட்டுவதற்கு லோன் வழங்கலாம் என்ற முடிவை அரசு இப்பொழுது எடுத்திருக்கிறது. இதனால், விவசாயக் கூட்டுறவு வங்கிகளுக்கு பாதிப்பு ஏற்படுமென்றே கருதுகிறோம்.



அதுமட்டுமல்லாமல், விவசாயக் கூட்டுறவு வங்கிகள், விவசாயத்திற்கே சிறந்த முறையில் லோன் வழங்க முடியாத நிலை இருக்கும்போது, இந்தப் பணி அவர்களுக்கு அதிகச் சுமையை ஏற்படுத்துமோ என்று கருதுகிறோம்.

மற்றொன்று. வீட்டுவசதி வாரியத்திடமிருந்து பிரதம கூட்டுறவுச் சங்கங்கள் கடன் வாங்கும்போது, 6 சதவிகிதப் பணத்தை முதலில் கட்டுகிறார்கள். அவர்கள் பெற்ற லோனை முடித்துவிட்ட பிறகும்கூட, முதலில் கட்டிய பணத்தைப் பிரதம கூட்டுறவுச் சங்கங்களுக்கு வீட்டுவசதி வாரியம் கொடுப்பதில்லை. அந்தப் பணத்தை உடனடியாகத் திருப்பிக் கொடுக்க இயலாத நிலை இருந்தாலும், பிற்காலத்தில் பிரதமச் சங்கங்கள் பணம் கட்டும்பொழுது, ஏற்கெனவே செலுத்திய பணத்தையும் கணக்கில் சேர்த்துக் கொண்டால், பிரதமச் சங்கங்கள் சிறப்பாகச் செயல்பட வாய்ப்பாக அமையும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் 16 பிரதமச் சங்கங்கள் இருக்கின்றன. இந்த 16 சங்கங்களுக்கும் சேர்த்து, வீட்டுவசதி வாரியத்திடமிருந்து திரும்பத் தரப்படவேண்டிய, இந்த 6 சதவிகிதப் பணம் மட்டும் கிட்டத்தட்ட ரூ. 5 கோடி என்று சொல்கிறார்கள். எனவே, இந்தப் பணத்தை இந்தச் சங்கங்களுக்குக் கிடைக்கச் செய்தால், அவை சிறந்த முறையில் செயல்பட ஏதுவாக அமையும்; அதற்கு ஊக்கம் அளிப்பதாக அமையும். எனவே, இந்தப் பணத்தை உடனடியாகத் திரும்பப் பெற அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசுப் பணியாளர்களுடைய எண்ணிக்கை ஆண்டுக்காண்டு உயர்ந்து கொண்டே செல்கின்றது. அந்த விகிதாச்சாரத்திற்கு ஏற்றாற்போல், அவர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்படும் வீடுகளின் எண்ணிக்கையையும் உயர்த்திக் கொடுத்து, அனைவரையும் திருப்திபடுத்த முடியாவிட்டாலும் கூட ஓரளவிற்கு, ஊழியர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில், அவர்களுக்குக் கட்டித் தரப்படும் வீடுகளின் எண்ணிக்கையினை அதிகப்படுத்தி, அவர்களுடைய பிரச்சினையைப் போக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சாதாரணமாக, கிராமப்புறங்களில், வெளியூர்களில் இருந்து பணியாற்ற வருகின்றவர்களுக்கு வாடகைக்கு வீடுகள் கிடைப்பதே பிரச்சினையாக இருக்கின்றது. ஜாதி, மதம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு, ஆங்காங்கே கும்பலாக வாழக்கூடியவர்கள், அரசு அதிகாரிகள் என்ன ஜாதி, என்ன மதம் என்றெல்லாம் கேட்கக்கூடிய ஒரு மோசமான நிலை இப்பொழுதுகூட நிலவுகிறது. எனவே, அரசாங்கம் புதிதாக வீடுகளைக் கட்டும்போது, நகர்ப்புறங்களில் மக்களின் நெருக்கடியைக் குறைக்கக்கூடிய வகையில்,

மேற்சொன்ன கருத்துக்களையும் கருத்தில் கொண்டு, கிராமப்புறங்களில் அதிகமான வீடுகளைக் கட்டிக் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் குறிப்பிட்டதுபோன்று, பல கட்டடங்களுக்கு எங்கிருந்து சன்னல் வாங்கினார்கள், கதவு வாங்கினார்கள் என்று கேள்வி எழக்கூடிய வகையில், தக்கலை ஊராட்சி ஒன்றியத்திற்கு அருகில், பி.டி.ஓ. அலுவலகத்திற்குப் பக்கத்தில் 21 வீடுகள் கட்டப் பட்டுள்ளன. அங்கே சென்று பார்த்தபோது, கட்டடங்களெல்லாம் ஓரளவிற்கு நன்றாகத்தான் இருக்கின்றன. ஆனால், சன்னல்களோ, கதவுகளோ கிடையாது. அவை அனைத்தும் உளுத்துப்போய்விட்டன. நன்றாக இருக்கின்ற வீட்டில், சன்னலில் ஓலை வைத்துத் தடுத்திருக்கிறார்கள். வீட்டிற்கு வாசல் கதவுகள் இல்லாமல், ஓலையை வைத்திருக்கின்ற ஒரு நிலை இருக்கின்றது. எனவே, அரசு இவற்றைக் கருத்தில் கொண்டு, இனிமேல் கட்டக்கூடிய வீடுகளுக்கு நல்லவிதமான மரப்பணிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று, நகர்ப்புறங்களில் வீடுகள் கட்டும்போது, பிற்காலத்தில் என்னென்ன பிரச்சினைகள் வரும் என்பதை ஆய்வு செய்து, தெரு எப்படி அமைய வேண்டும், ரோடு மற்றும் குடிநீர் வசதி எவ்வாறு அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும் என்பதையெல்லாம் முதலிலேயே கருத்தில் கொண்டு, அதற்கான ஏற்பாடுகளைச் செய்த பின்னர், வீடு கட்டுபவர்களுக்குக் கடனுதவி அளிக்கலாம். இதுபோன்ற விஷயங்களையும் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோன்று, கன்னியாகுமரி மாவட்டத்தில் பல இடங்களில் தண்ணீர் கிடைக்காமல் போய்விடுமோ என்று கருதி. விவசாய நிலங்களை, விவசாயத்திற்குச் சிறந்த முறையில் பயன்படக்கூடிய நிலங்களை வீடு கட்டுவதற்காக எடுத்துக்கொள்கிறார்கள். இதனால், விவசாயம் பெரிதும் பாதிக்கப்படுகிறது. எனவே, வீட்டுவசதி வாரியத்தின் மூலம் வீடுகளைக் கட்டிக்கொடுக்கும்போது, வேறு இடங்களில் வீடுகளைக் கட்டிக் கொடுப்பதுடன், அவ்விடங்களில் தண்ணீர் வசதி இல்லாமல் இருந்தாலும்கூட, வேறு இடங்களிலிருந்து தண்ணீரைக் கொண்டு வந்து கொடுக்கக்கூடிய அளவில் ஏற்பாடுகளைச் செய்துவிட்டு, அந்த இடங்களில் வீடுகளைக் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆக மொத்தத்தில், 20-ஆம் நூற்றாண்டின் இறுதியிலே அனைவரும் அவர்களுடைய வீட்டில் சுகமாக வாழக்கூடிய நிலையை—அதாவது, யாருக்கும் வீடு இல்லை என்ற நிலையை



மாற்றி—உருவாக்கித் தர வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி அமர்கின்றேன். பாரத் மாதா கி ஜெய்.

நண்பகல் 12-00

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** திரு. பால. ஆனந்தன்.

**திரு. பால. ஆனந்தன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வீட்டுவசதித் துறை மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், முன்னணி அமைச்சர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் துறை, மக்களின் குறைகளைக் களைகின்ற வகையிலே நடவடிக்கை எடுத்து, நலிந்த மற்றும் நடுத்தர மக்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதிலே மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டிருப்பதை நான் வரவேற்கிறேன்.

இதற்கு முத்தாய்ப்பாக ஒன்று சொல்ல வேண்டுமென்றால், ஏற்காடு பகுதியில், கக்கம்பாடி என்ற இடத்திலே, 7.18 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, அந்தப் பகுதியிலே உள்ள மக்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்க முன்வந்திருப்பதை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வீட்டுவசதிச் சங்கங்களைப் பொறுத்தவரையில், நாங்கள் இணையத் திலிருந்து கடன் வாங்கி, மக்களுக்குக் கொடுத்து, மக்களிடத்திலேயிருந்து அதை வசூல் செய்து, மறுபடியும் இணையத்திற்குக் கட்டுகிறோம். பல நபர்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொள்ள ஏற்பாடு செய்யும் இந்தச் சங்கத்திற்கு— பெரும்பாலான சங்கங்களுக்கு—உரிய சொந்தமான கட்டடம் இல்லை. அதற்கு அரசு முன்வந்து ஒவ்வொரு சங்கத்திற்கும் உதவி செய்வதுடன், உரிய கட்டடம் கட்டிக் கொள்வதற்கான நிதி வசதியை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இணையத்தில் தரப்படும் கடன் மனுக்கள் உடனுக்குடன் பரிசீலிக்கப்பட வேண்டும். ஏனென்று கேட்டால், 3 மாதம், 4 மாதம் ஆன பிறகு ஒரு 'கொரி' போட்டு அனுப்பி விடுகிறார்கள். அந்தக் கடன் மனுக்களில் கேட்கப்பட்டுள்ளபடி, 1½ இலட்சம் ரூபாய் வீட்டின் மதிப்பு என்றால், ஒரு இலட்சம் கேட்டு விண்ணப்பிக்கிறார்கள். 50 ஆயிரம் ரூபாய் கையிலே வைத்து உடனே வேலையைத் துவக்கிவிடுகிறார்கள். வேலையைத் துவக்கிவிட்டு, தினம்தினம் அந்தச் சங்கத்திற்கு அவர்கள் வருகை தந்து, மிகவும் தொந்தரவு செய்கிறார்கள். எனவே, அதில் இருக்கிற குறைகளை

நிவர்த்தி செய்து, உடனடியாக அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடன் கேட்டு விண்ணப்பம் கொடுக்கும்பட்சத்தில், அதன்மீது பாரபட்சமின்றி நடவடிக்கை எடுப்பதற்கு அரசு வழிவகை செய்ய வேண்டும். கடனை வசூல் செய்கிறபோது, அங்கே சென்று வருகிற அலுவலர்களுக்கு போக்குவரத்து வசதிக்கென வாகன வசதி இல்லை. எனவே, அதற்காக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், கூட்டுறவுச் சங்கம் என்பதற்குப் பதிலாக, அதாவது, கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் என்பதற்குப் பதிலாக, கூட்டுறவு வீடு கட்டும் வங்கி என்று மாற்றியமைக்கலாம். காரணம், இதில் பெருவாரியாக 'மணி டிரான்ஸாக்சன்' இருக்கிறது. எனவே, அவ்வாறு மாற்றியமைக்க இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், நலிவடைந்த பிரிவினருக்கு 55,000 ரூபாய் என்றும், நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கு 85,000 ரூபாய் என்றும் இப்போது வீடு கட்ட நிதியுதவி நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. விலைவாசி ஏறியிருக்கின்ற இந்த நேரத்தில், குறைந்த வருவாயிலே, இந்தக் குறைந்த கடனிலே அவர்கள் வீடுகளைக் கட்டிக் கொள்ள வாய்ப்பில்லை. ஆகவே, இந்தக் கடன் தொகையைக் கூடுதலாக்கித் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

கடன் விண்ணப்பங்களைப் பெறுகிறபோது, வில்லங்கச் சான்றிதழ்—'என்கம்பரென்ஸ் சர்டிபிகேட்' — 31 ஆண்டுகளுக்கு இருக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அதைக் குறைத்து, 14 ஆண்டுகளாக இருப்பதற்கு ஒரு வழிவகை செய்ய வேண்டி இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பெறப்படுகின்ற 'சர்வீஸ் சார்ஜ்' இணையத்திற்கு செலுத்தப்படுகிறது. அதற்காக. பிரதானச் சங்கங்கள்தான் மிகவும் அதிகமான சேவையை உண்மையிலேயே செய்கிறார்கள். எனவே, அந்த 'சர்வீஸ் சார்ஜை' இணையத்திடமிருந்து, பிரதானச் சங்கங்களுக்கு அளிக்க வேண்டி விரும்பி இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

வீடுகளை புதிதாகக் கட்டக்கூடிய நிலையில் இல்லாமல், இருக்கின்ற வீடுகளைப் பழுது பார்ப்பதற்கும், தயார் நிலையில் கட்டப்பட்டிருக்கின்ற வீடுகளை வாங்குவதற்கும், வீட்டுவசதித் துறையின் மூலமாகக் கடன் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தக் கடன்கூட, தவணை முறையில் அல்லாமல், ஒரே முறையில் அளிக்கப்பட வேண்டும். ஏனென்று



கேட்டால், கட்டிய வீட்டைக் கொடுப்பவர்கள், தவணை முறையிலே வசூல் செய்வதற்குத் தயாராக இருக்க மாட்டார்கள். எனவே, இதனைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களின் மாவட்ட அமைச்சர் அவர்களும், மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்களும், இந்த மாவட்டத்திலே மிகவும் கடைகோடியிலே இருக்கிற வந்தவாசி தொகுதிக்கு, தயவுகூர்ந்து, வீட்டுவசதித் துறையின் மூலமாக ஒரு குடியிருப்பினைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

நான் தொடர்ந்து மற்ற எல்லா மானியக் கோரிக்கைகளிலும் பேசுவதற்கு பெயர் கொடுத்தும்கூட, வாய்ப்பு கிடைக்காத காரணத்தினால், மற்ற விவரங்களையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

பிற்பகல் 12-05

அடுத்து, வந்தவாசி நகரத்தைப் பொறுத்தவரையிலே நீண்டநாள் கோரிக்கையாக இருந்துவரும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் 3½ கோடி ரூபாய் மதிப்பீட்டிற்கு உத்தரவு வழங்கி இருக்கிறார்கள். அதற்காக இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்காக வேலூரிலிருந்து அலுவலர்கள் வந்திருந்து இப் பணியைச் செய்யவேண்டிய ஒரு நிலை இருக்கிறது. எனவே பணியைத் துரிதப்படுத்தும் வகையிலே அங்கே ஒரு தற்காலிக பகுதி அலுவலகம் ஒன்றை அமைத்துக் கொடுத்து இந்தப் பணியை துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வந்தவாசியில் காய்கறி மார்க்கெட் கட்டுவதற்கான இடம் நகராட்சியில் இருக்கிறது. வீதி ஓரங்களில் இப்போது கடைகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் சுகாதாரக் கேடு விளைவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே மார்க்கெட் கட்டுவதற்காக ஒரு தொகையை ஒதுக்கீடு செய்து, அதற்காக கட்டடம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வந்தவாசி நகரத்தைப் பொறுத்தவரையில் குடிநீர்ப் பிரச்சினை ஓரளவுக்கு ஓய்ந்தது என்றாலும், கிராமங்களைப் பொறுத்தவரையில், அத்தி, மடிப்பாக்கம், நல்லூர், கீழ்க்கொடுங்காலூர் ஆகிய பகுதிகளில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பங்குனி போய் சித்திரை வந்தால் பத்திரிகை வந்துவிடும் என்பார்கள். ஆனால் இந்த பங்குனி போய் சித்திரை வந்தால் இந்தச் சட்டமன்ற உறுப்பினருக்கு நித்திரை போய்விடும். காரணம் அவ்வளவு வறட்சியான பகுதியாக எங்கள் தொகுதி இருக்கிறது. கைப்பம்புகள் வேலை செய்யவில்லை, தண்ணீர் கிடைக்கவில்லை என்று தொடர்ந்து சொல்லுகிறார்கள். எனவே இதனை முதன்மைப் பிரச்சினையாக எடுத்துக்கொண்டு வழிவகை காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுகுறித்து ஒரு உதாரணத்தைக்கூட சொல்லலாம் என்று கருதுகிறேன். புன்னே என்ற கிராமத்திற்கு சப்ளை செய்துகொண்டிருக்கும் ஒரு டேங்கினுடைய நீரேற்றும் பம்ப் கெட்டுப்போய் கிட்டத்தட்ட 120 நாட்கள் ஆகின்றன. இதுபற்றி எடுத்துச் சொல்லியும், எஸ்டிமேட் அதிகமாக வருகிறது, மாவட்ட ஆட்சித் தலைவர் பார்க்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். எனவே, அதைச் சரிசெய்வதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது)

அடுத்து, கூட்டுறவுக் கடைகளிலே பணியாற்றுகின்ற பணியாளர்கள் ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். **District Supply Officer, Taluk Supply Officer** என்று இருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கை என்னவென்றால், கூட்டுறவுக் கடைகளிலே, நியாயவிலைக் கடைகளிலே வேலை செய்பவர்கள் வி.எஸ்.ஓ. பதவி வேண்டுமென்று கேட்கிறார்கள். **Village Supply Officer** என்ற பதவி வேண்டுமென்று கேட்கிறார்கள். இதனால் அரசாங்கத்திற்குக் கூடுதலாக நிதிச்சுமை ஏற்படாது என்ற காரணத்தால் அந்தப் பதவியை அவர்களுக்கு அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, போக்குவரத்துத் துறையிலே கிட்டத்தட்ட 24 ஆண்டுகள் பணியாற்றி தொழிற்சங்கத்திலே பணியாற்றியதனால் ஒரு சிறிய கோரிக்கையை வைக்க விரும்புகிறேன். இதிலே பணியாற்றுகின்ற பணியாளர்கள் மிகவும் கஷ்டத்திற்கு உள்ளாக்கப்பட்டு நலிந்த நிலையில் இருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்லப்போனால், 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை செட்டில்மென்ட் என்று போக்குவரத்துத் துறையிலே போடுகிறார்கள். சென்றமுறை போட்ட செட்டில்மென்டில் நிர்வாகப் பணியாளர்கள் எல்லாம் சேர்ந்து 2-வது சனிக்கிழமையை எங்களுக்கு விடுப்பாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். அதன்படி செட்டில்மென்டில் 2-வது சனிக்கிழமை விடுப்பாக அளிக்கப்படும் என்று சொல்லிவிட்டார்கள். அதில் இரண்டாவது சனிக்கிழமை விடுப்பு, ஆனால் ஒரு நாளைக்கு 15 நிமிடங்கள் அதிகமாக வேலை செய்ய வேண்டும் என்று சொல்லிவிட்டார்கள். அதன்படி பார்த்தால் 30 நாட்களில் 7½ மணி நேரம் அவர்கள் கூடுதலாக வேலை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டு அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே, அந்த ¼ மணி நேரத்தைக் குறைத்திட வேண்டுமாய் இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.



நிதிநிலை அறிக்கையிலே பேசுகின்ற வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை. எனவே நிதிநிலை அறிக்கையை பற்றி ஒரே ஒரு நிமிடத்தில் பேசி முடித்துக்கொள்கிறேன்.

நீதிச் சோழன் ஆண்ட மண்ணிலே பிறந்து, நீண்ட நெடுந்தூரம் அரசியலில் தொடர்ந்து வந்து "மடுத்த வாயெல்லாம் பகடன்னான்" என்று இயம்பியபடி எங்கள் தலைவர் அளித்த நிதிநிலை அறிக்கை பற்றி ஓரிரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

வான்புகழ் வள்ளுவன் அளித்திட்ட திருக்குறளுக்கெல்லாம், ஓவியம் படைத்த, குறளோவியம் படைத்த எங்கள் தலைவர்

*"பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ்*
*சால மிகுத்துப் பெயின்"*

என்ற குறளின் பொருள் உணர்ந்த காரணத்தாலே, ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையிலும் குறைந்தபட்சம் 50 துறைகள் பங்குகொள்கின்றன என்று வைத்துக் கொண்டாலும், அந்த 50 துறைகளிலும் ஒரு விழுக்காடு வரி என்றாலும்கூட மக்கள் மிகவும் கஷ்டப்படுவார்கள் என்பதை அவர்கள் கருத்தில்கொண்டு பல பொருட்களுக்கு இருந்த வரியைக் குறைத்தும், சில பொருட்களின் வரியை ரத்து செய்தும் இருக்கிறார்கள். இது மிகவும் பாராட்டக்கூடிய ஒன்றாகும்.

கடைசியாக ஒன்றே ஒன்று.

"பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன்-கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்கு
சங்கத் தமிழ்மூன்றும் தா"

என்று ஒரு பாடல் இருக்கிறது.

பிற்பகல் 12-10

அந்தப் பாடலிலே, நான்கு வகை அமுதப் பொருட்களை விநாயகருக்குப் படைத்து, இயல், இசை, நாடகம் என்கின்ற மூன்று வகையான தமிழைத் தர வேண்டி பாடல் அமைந்திருக்கின்றது. ஆனால், இதனுடைய நிலைமை இப்போது என்னவென்றால் அந்த இயல், இசை, தமிழ் என்று சொல்லக்கூடிய எங்கள் தலைவர் சட்டை வேட்டி தரித்து சங்கத் தமிழ், தானே நடந்து வந்து, தமிழ்நாட்டு மக்களுக்குப் பால், தெளிதேன், பாகு, பருப்பு, அன்னம் நல்ல ஒரு அமுதப் பொருட்கள் நிறைந்த நிதிநிலை அறிக்கையைத் தந்திருக்கின்றார்கள். இதனை எந்த முறையில் பாராட்டினாலும் தகும் என்று தெரிவித்து நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். இந்தச் சபையிலே தமிழ் மாநில காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்களில் ஒருவரைத் தவிர மற்றவர்களைக் காணவில்லையே. ஏதும் விசேஷ அரசியல் சூழ்நிலை வெளியிலே நிலவுகின்றதா என அறிய விரும்புகிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ் மாநில காங்கிரசுக்கு ஆண்டு நிறைவு விழா, நாளைக்கு கோவையிலே இருக்கிற காரணத்தினாலே, சிலர் இப்போதே புறப்பட்டுப் போய்க் கொண்டிருக்கின்றார்கள். சிலர் இருக்கின்றார்கள். ஆகவே, விசேஷம் ஒன்றும் இல்லை. நாளை கோவைக்குப் போக வேண்டிய காரணத்தினாலேதான் இப்போது கொஞ்சம் அட்டன்டன்ஸ் குறைவாக இருக்கின்றது. (குறுக்கீடு)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** No point of order. திரு. இரா. மூக்கப்பன்.

**திரு. இரா. மூக்கப்பன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி மானியத்திலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்த உங்களுக்கும், நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைக் கூறிக்கொள்கிறேன். இன்றைக்கு, நலிவுற்ற பிரிவினர்களுக்காக வீடு கட்டிக்கொள்வதற்காக, கிராமப்புறங்களிலே வழங்கப்படுகின்ற தொகையை ரூ. 14,000 ஆக உயர்த்தினாலும்கூட ஆதிதிராவிடர்கள்தான், கிட்டத்தட்ட 99% அளவிற்குப் பயன்பெறுகின்றார்கள். இந்தத் தொகையானது அவர்களுக்குப் பற்றாத நிலை இருப்பதன் காரணமாக அவர்கள் எல்லாம் வீடுகளைக்



கட்டிக் கொள்ள முடியாத சூழ்நிலை இருக்கின்றது. கடந்த காலத்திலே கடன் பெற்றவர்கள்கூட, இன்னமும் வீடுகளைக் கட்டிக் கொள்ள முடியாத சூழ்நிலை இருக்கின்றது. அப்படிப்பட்ட இந்தச் சூழ்நிலையில், இந்தத் தொகையினை உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, மலைப் பகுதிகளிலே, வசிப்பவர்களுக்கு கடன் வழங்குவது குறித்து நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலேகூட கூறியிருக்கின்றார்கள். என்னுடைய கள்ளக்குறிச்சிப் பகுதியிலே வட்டக் கூட்டுறவுச் சங்கம், கல்வராயன் மலையில் இருக்கின்றது. இன்றைக்கு அது தனி ஊராட்சி ஒன்றியமாக அறிவித்து, தேர்தல்கள் எல்லாம் கூட நடைபெற்று முடிந்திருக்கின்றன. அந்த மலைப் பகுதியிலே வாழுகின்ற மலைவாழ் மக்களுக்கெல்லாம் கடன் தருகின்ற வசதியினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையில் அறிவிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், அந்த மலைப் பகுதியிலே இருப்பவர்களுக்கெல்லாம் கடன் கொடுக்க முடியாத ஒரு சூழ்நிலை அங்கு இருக்கிறது.

அதைப்போல, இன்றைக்கு கூட்டுறவுச் சங்கத்தின் சார்பில் 14-வது திட்டத்தில் ஒரு வட்டக் கூட்டுறவுச் சங்கத்திலே 60-லிருந்து 100 நபர்கள் வரை கடன் கொடுக்க வேண்டுமென்று ஒரு குறியீட்டை நிர்ணயிக்கின்றார்கள். அதை முதலிலேயே தெரிவித்து...

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மலைவாழ் மக்களுக்குக் கடன்கள் வழங்கவேண்டும் என்று சொன்னார்கள். அதற்காக நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இன்னும் மனுக்கள் வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் மனுக்களை வாங்கி அனுப்பினால் கண்டிப்பாக, அந்தக் கடன்கள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. மூக்கப்பன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்போல, கூட்டுறவுச் சங்கங்களிலே வருகின்ற வட்டியிலே அரை சதவிகிதத்தை வைத்து, அந்தக் கூட்டுறவுச் சங்கங்களையெல்லாம் நிர்வகிக்க வேண்டிய நிலை இருக்கின்றது. அது சங்கங்களை இணையத்திலேயிருந்து உறுப்பினர்கள் கடன் கேட்டு மனு போன்று

தரப்படுகின்றபோது, அதற்கான சேவைக் கட்டணமாக சங்கத்திற்கு ஒரு சதவிகிதம் இணைய வட்டியுடன் சேர்த்து வசூலித்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்தச் சிறிய தொகை சங்கச் செலவினங்களுக்குப் போதுமானதாக இல்லை. எனவே, அந்த ஒரு சதவிகிதக் கட்டணத்தை மூன்று சதவிகிதமாக அறிவிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அந்தச் சங்கம் நடைபெறுவதற்கே நிதிப் பற்றாக்குறையாக இருக்கின்றது. வசூலிக்கப்பட்ட கடன் தொகையினை எடுத்துச் செலவு செய்து விடுகிறார்கள். எனவே, அந்த ஒரு சதவிகிதத்தை மூன்று சதவிகிதமாக உயர்த்தித் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதுபோல 7-வது திட்டம் வரை கடன் பெற்றவர்களில் ஆதிதிராவிடர்கள்தான் அதிகமாக இருக்கின்றார்கள். கிராமப் புறங்களிலே கடன்களைக் கொடுக்கிறோமே தவிர கட்டப்படுகின்ற வீடுகளெல்லாம் கண்காணிக்கப்படுவதில்லை. எனவே, அவைகளைக் கண்காணிப்பதற்கு ஆணையிட வேண்டுமென்று தங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

அதைப்போலவே, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த 1989-90-ஆம் ஆண்டில், கிராமப்புறக் கூட்டுறவுச் சங்கங்களில் பெற்ற கடன்களைத் தள்ளுபடி செய்வதற்கு 25 சதவிகிதம் பணத்தைக் கட்டித் தள்ளுபடி செய்தார்கள். நம்முடைய ஆட்சி கலைக்கப்பட்டதன் காரணமாக அன்றைக்குப் பலபேர் நன்மை அடைய முடியவில்லை. அதன்பிறகு வந்த ஆட்சியிலும்கூட, 50 சதவிகிதம் தள்ளுபடி என்று அறிவித்து, அந்த அறிவிப்பை உடனடியாக முடித்துவிட்டதன் காரணமாகவும், சென்ற காலங்களிலே, அதாவது தனி அலுவலர்கள் இருந்த காலங்களிலே, பல்வேறு சங்கங்களில், மாநிலக் கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தின் அனுமதி பெறாமலேயே, கடன்களைக் கொடுத்து, அவற்றை இன்றைக்கு வசூல் செய்கின்ற நேரத்திலே அங்கே வீடுகள் இல்லை. வீடுகள் கட்டப்படாமலேயே பல்வேறு உறுப்பினர்களுக்குக் கடன் தொகைகளை வழங்கியிருக்கிறார்கள். எனவே, அந்த மாதிரி கடன்களை வழங்கிய அதிகாரிகள்மீது தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தென்னாற்காடு மாவட்டத்தை இன்றைக்கு இரண்டாகப் பிரித்துள்ளார்கள். தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டத் தலைநகரான



கடலூரில் மாவட்டப் பதிவாளர் அலுவலகம் இருக்கிறது. அதுபோல, விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டத்திற்கு ஒரு மாவட்டப் பதிவாளர் அலுவலகம் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு நாங்கள் கடன் பெறுவதற்கான மனுக்களை எடுத்துக்கொண்டு திருச்சி மண்டல அலுவலகத்திற்குச் சென்று, அங்கே அந்த மனுக்களைக் கொடுத்து, கடன்களைப் பெறுவதற்கான அனுமதியைப் பெற்று, அதன்பிறகு சென்னைக்கு வந்து வீட்டு வசதி இணையத்திலே கடன் தொகைகளைப் பெறவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதை மாற்றி, அலுவலகத்தை ஒரே இடத்தில் வைத்தால், இன்றைக்குப் புதிதாக வந்திருக்கிற கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் எல்லாம் கடன்களைப் பெற்று நல்லமுறையிலே நிர்வாகம் செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல, கள்ளக்குறிச்சி பகுதி, கோட்டத்தினுடைய தலைநகரம். அங்கே அரசு அலுவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டப்படவில்லை. தனியார் வீடுகளும் வாடகைக்குக் கிடைப்பதில் மிகுந்த சிரமம் உள்ளது. அங்கே வேலைக்கு வருபவர்களுக்கு வீடு கிடைக்காத சூழ்நிலை இருப்பதைக் கருத்திலே கொண்டு, கள்ளக்குறிச்சியில் வீட்டு வசதி வாரிய அலுவலகத்தை அமைத்து, அதன் மூலமாக வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, நகர்ப்புறங்களிலே உள்ள வீட்டு வசதிச் சங்கங்களிலே மனைகளை வாங்கி, நடுத்தரப் பிரிவினர்களுக்குக் கொடுப்பதற்கு அங்கே நிதி வசதி இல்லாததால், அந்தச் சங்கங்களுக்கெல்லாம் நிதி உதவியினைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அதேபோல, கள்ளக்குறிச்சியிலே புதிதாக வீடு கட்டும் சங்கத்தை ஆரம்பித்து நாங்கள் எல்லாம் அதிலே பொறுப்பிலிருந்தாலும்கூட, இன்றைக்கு அதனுடைய வளர்ச்சிக்காக, நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டின் படி 10 பேர், 15 பேர்களுக்குத்தான் கடன் வழங்கப்படும் என்று கூறுகிறார்கள். அந்தக் கடன் மனுக்களை எல்லாம் நாங்கள் பெற்றுக்கொண்டுபோய், இணையத்திலே அனுமதி பெற்று கடன் கொடுக்க வேண்டியிருக்கிறது. இன்னும்கூட, ஒருசிலர், அவர்களுடைய வீடுகளைக்கட்டி முடித்துவிட்டாலும்கூட, அவர்களுக்குப் பணம் பட்டுவாடா செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது. எனவே, அவர்களுக்கெல்லாம் உடனடியாகப் பணம் கிடைக்க ஆவன

செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, இந்த அளவுக்குப் பேச வாய்ப்புத் தந்ததற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான இரண்டு கொள்கை விளக்கக் குறிப்புகள் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

முதலில், 'அனைவருக்கும் வீடு' என்று, தேசிய அளவிலே வீட்டு வசதி குறித்த ஒரு கொள்கை வகுக்கப்பட்டிக்கிறது என்பது உண்மையிலேயே சிந்திக்க வேண்டிய ஒரு விஷயம்தான். அனைவருக்கும் வீடு என்ற கொள்கை, கேட்பதற்கு மிகவும் நன்றாக இருக்கிறது. ஆனால், துரதிருஷ்டவசமாக, இந்தியாவில் நடைமுறை அனுபவம் என்னவென்றால், நல்ல விஷயங்களை வெறும் எழுத்தில் இலட்சிய முழக்கமாக வைத்துவிடுவது என்பதும், நடைமுறையில் அவற்றை நிறைவேற்றுவதற்குரிய வழிகள் குறித்துச் சிந்திக்காமல் விட்டுவிடுவது என்பதும் ஒரு வசதியான விஷயமாக கடந்த 50 ஆண்டுகாலமாக இருந்து வருகிறது. இந்த நிலையில் ஆக்கபூர்வமான மாற்றம் வர வேண்டும் என்பதற்கான ஜனநாயக எழுச்சியும், கிளர்ச்சியும் அவ்வப்போது வலியுறுத்தப்பட்டு வந்தாலும், அவற்றின் மெய்யான எதிர்பார்ப்புகளை உணர்ந்து, தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளால் மக்களின் தேவைகள் நிறைவேற்றப்படவில்லை என்பதைத்தான் இங்கே நடைமுறையில் நாம் உணர முடிகிறது. எனக்கு முன்னர் பேசிய பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் வேலாயுதன் அவர்கள்கூட 'பாரத் மாதா கி ஜெய்' என்று சொன்னார்கள். ஆனால் பாரத நாட்டில் பாரதப் புத்திரர்களுக்குத் தலை சாய்த்துப் படுப்பதற்கு இடமில்லை. விவிலியத்திலே சொல்வார்கள், 'வானத்திலே பறக்கிற பறவைகளுக்கு மரக்கிளைகளில் கூடுகள் உண்டு; மண்ணில் திரிகிற நரிக்குக்கூட பதுங்கக் குழிகள் உண்டு; ஆனால் மனித குமாரனுக்கோ தலை சாய்க்க இடமில்லை' என்று.

பிற்பகல் 12-20

'பாரத் மாதா கி ஜெய்' என்று வாயில் சொல்ல முடிகிறதே தவிர, பாரத மாதாவினுடைய புதல்வர்களுக்கு, 50 ஆண்டுகளுக்குப் பின்னாலும்கூட வீடு அளிக்க இயலவில்லை என்பது மக்களால்



தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகளுக்கு வெட்ககரமான விஷயம் ஆகும். எனவே, மாநில அரசு இந்த மிக முக்கியமான பிரச்சினை குறித்து, பல்வேறு வழிமுறைகள் குறித்து சிந்திக்க வேண்டும் என்று நான் குறிப்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய நிதிநிலை அறிக்கையில், வீட்டு வசதியைப் பொறுத்தவரையில், எல்லோருக்கும் வீடு கொடுக்க வேண்டுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த அறிவிப்பு எந்த வருஷத்திற்குள் நிறைவேற்றப்படும் என்று அறிவிக்கப்படவில்லை. இந்நிலையில் இந்த அறிவிப்பை எப்படி நிறைவேற்றுவது? உண்மையில் நிறைவேற்றப்பட வேண்டிய அறிவிப்பு என்றால் இந்த அறிவிப்பை எப்படி நிறைவேற்றுவது என்பதற்கான காரியசாத்தியமான திட்டங்கள் முன்மொழியப்பட்டிருக்க வேண்டும். அப்போதுதான் அறிவிக்கப்பட்ட இலட்சிய நோக்கத்தை நிறைவேற்றுகிற திடசித்தத்தோடு அரசாங்கம் இருக்கிறது என்று நம்மால் புரிந்து கொள்ள முடியும். வெறும் கொள்கை முழக்கங்கள் மட்டும் அறிவிக்கப்பட்டுவிட்டு, அவற்றை நிறைவேற்றுவதற்குரிய வழிமுறைகள் அறிவிக்கப்படவில்லை என்றால் பல்வேறு சந்தேகங்களை அது ஏற்படுத்தும் என்பதைத்தான் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதற்கென, என்னுடைய பணிவான வேண்டுகோள்—விரிவாகப் பேசுவதற்கு நேரம் இல்லை, காலம் வரையறுக்கப்பட்டுள்ளது என்பதால், நான் பணிவாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது—முதலிலே, வீட்டு வசதித் திட்டத்தை மேற்கொள்வதற்கு, மாநில அரசுக்குச் சம்பந்தப்பட்ட நிலங்களில் ஏழைகள் வீட்டு மனைகளைப் பெறுவதற்கான வழி முறைகளை எளிமையாக்க வேண்டும்.

தாலுக்கா அலுவலகங்களுக்கும், கலெக்டர் அலுவலகங்களுக்கும், மாநில அரசு மட்டங்களில் உள்ள அலுவலகங்களுக்கும் பொதுமக்கள் விண்ணப்பித்து, விண்ணப்பித்து அவர்களுடைய வாழ்க்கையே முடிந்துவிடுகின்றது. எனவே, ஏழையினுடைய வீட்டுமனை கோரும் மனுக்களில் குறிப்பிட்ட கால வரம்பு தீர்மானிக்கப்பட்டு, அந்தக் கால வரம்புக்குள் தீர்வு காண வேண்டும் என்று மாநில அரசைக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல வருவாய்த் துறைக்குக் கீழே இருக்கக்கூடிய சர்ப்ளஸ் நிலங்கள் நில உச்ச வரம்புச் சட்டத்தின்கீழ் கையகப்படுத்தப்பட்ட உபரி நிலங்கள், அதனுடைய கிளாசிஃபிகேஷன்படி உழவடைக்கு மட்டுமே கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது.

நகர்ப்புறங்களை ஒட்டியும் சரி, கிராமப்புறங்களை ஒட்டியும் சரி, அங்குள்ள இடங்களை குடியிருப்பு மனைகளாக உருவாக்கலாம். கடந்த

காலத்தில் சொல்லப்பட்டிருக்கிற சட்ட நெறிமுறைகள் அல்லது நிர்வாக நடைமுறைகள் போன்றவற்றைக் காரணம் காட்டி, சமூக வளர்ச்சிக்குத் தடையாக இருப்பதை முதலில் தகர்க்க வேண்டும். எனவே அதற்குரிய பொருத்தமான ஒரு அரசாணை பிறப்பிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வீட்டு விஷயத்திலே, கிராமப்புறங்களில் வீடு கட்டுவதற்கு கடன் வசதி ரூ. 9,300 என்றுதான் வரையறுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு இருக்கிற விலைவாசி ஏற்றத்தில் ரூ.9,300 என்பது போதுமானதாக இல்லை. அதை ரூ.15,000 ஆக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, தொழிலாளர்கள் சமூகத்தினுடைய பரிவுக்கு உரியவர்கள், 'வீக்கர் செக்ஷன்', பொருளாதார ரீதியில் பலவீனமானவர்கள் என்ற முறையில் தொழிலாளர்களுக்கு பிரையாரிட்டி பேசிஸில், மலிவு விலையில் வாடகை வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கான ஒரு மாஸ்டர் பிளான் தீட்டப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் தொழிலாளர்கள், அவர்களுடைய ஊதியத்தில் பெரும்பகுதியை வாடகையாகக் கொடுத்துவிடுகிறார்கள். அதுவும், முதலாளிகள், ஏறி வருகிற விலைவாசி ஏற்றத்தினை ஈடு கட்டுவதற்குரிய கூலி உயர்வுகளை எல்லாம் ஜனநாயக மனோபாவத்துடன் அங்கீகரித்து அளிப்பதில்லை. தொழிலாளர் வர்க்கத்தினுடைய நியாயமான கோரிக்கைகளை எந்த வழியிலே ஒடுக்குவது என்கிற வெறியோடு, குறியோடு செயல்படுகிற இத்தகைய முதலாளிகளிடமிருந்து தப்பித்துப் பிழைக்க வேண்டுமானால், குறைந்தபட்சம், மலிவு வாடகையில் வீடுகளை கட்டித்தருவது அவசியமானது. அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நகர்ப்புற வளர்ச்சி. நகர்ப்புற வளர்ச்சி என்பது ஒரு சீரியசான விஷயம். இது மிகத் தீவிரமாகக் கண்காணிக்கப்பட வேண்டிய விஷயம். கிராமப்புறங்களிலிருந்து நகரங்களுக்கு ஏன் பொது மக்கள் வருகிறார்கள்? நகரமயமாவது மிக வேகமாக வளர்ந்து வருகிறது. விரைங்கள் ஏராளமான புள்ளிவிவரங்களோடு சொல்லப்பட்டிருக்கின்றன. நான் நேரம் கருதி அதற்குள்ளே போக விரும்பவில்லை. ஆனால், ஏன் நகரமயம் வேகப்படுகிறது என்றால், கிராமப்புறத்தில் மனிதனுடைய தேவைகள் நிறைவேற்றப்படுவதில்லை.



பிற்பகல் 12-25

மனிதனுடைய தேவைகளை நிறைவேற்றிக்கொள்கிற வாய்ப்பு கிராமங்களில் இல்லை என்பதால், நகரங்களுக்கு மக்கள் படை எடுத்துவிடுகிறார்கள். நகரங்களுக்கு படை எடுத்து வருகிறபோது, நகரத்திற்குக் குடிபெயர்ந்து வருகிற மக்களின் சதவிகிதத்திற்கு ஒப்ப அவர்களின் தேவைகளை ஈடுகட்டுவதற்கான முறையில் கவர்ன்மென்ட் மெஷினரீஸ் முடுக்கிவிடப்படுவது இல்லை. அவர்களாக வந்து, அவர்களுக்கு என்ன உண்டோ அந்த அளவில் குடியிருப்பு போட்டு, அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வதால், நகரங்கள் திட்டமிட்டு தோற்றுவிக்கப்படாததால், இயல்பாகத் தோன்றி வருவதால், அடிப்படைத் தேவைகள் புறக்கணிக்கப் பட்டு வருகின்றன. எனவே, இந்த விஷயத்தில் மாநில அரசு கவனிக்க வேண்டிய ஒரு மிக முக்கியமான விஷயத்தை நான் தொடர்ந்து வலியுறுத்தி வந்து இருக்கிறேன்; அன்-அப்ரூவ்டு லே-அவுட்ஸ் என்பது தொடர்ந்து உருவாகி வருகிறது; அன்-அப்ரூவ்டு லே-அவுட்ஸ் உருவாவதன் மூலம், நகராட்சிகள், உள்ளாட்சி அமைப்புகள் அவர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற மறுக்கிறார்கள்.

இது சமூக ரீதியிலும், சட்ட ரீதியிலும் சரியல்ல. ஜனங்களின் தேவைகளை நிறைவேற்ற, தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு மறுப்பதற்கு தார்மீக ரீதியில் உரிமை இல்லை; ஆனால், மறுக்கிறார்கள். ஏன் மறுக்கிறார்கள்? நிதி இல்லை என்று மறுக்கிறார்கள். நிதி இல்லை என்று மறுப்பது எப்படி ஜனநாயக ரீதியாகப் பொருந்தும்? ஜனநாயக ரீதியில் வாக்களித்து தேர்ந்தெடுத்த மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு கடமைப்பட்டு இருக்கிறதல்லவா? அவற்றை நிறைவேற்றவில்லை என்றால், என்ன அர்த்தம்? ஜனநாயகத்தை கேலிக்கூத்தாக்குவதாகப் பொருள்படும். எனவே, நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, அன்-அப்ரூவ்டு லே-அவுட்ஸ் என்பது தமிழ்நாட்டில் இருக்கிறது; அன்-அப்ரூவ்டு லே-அவுட்ஸ் உருவாக பொது மக்கள் காரணம் அல்ல. அன்-அப்ரூவ்டு லே-அவுட்ஸிலே ஒரு சைட் வாங்கி, வீடு கட்டிக் கொண்டவன் தன்னுடைய வீட்டிலே இருந்து வெளியேற்றுகிற கழிவு, சாக்கடைநீர் வடிந்து ஓடுவதற்குரிய வாய்க்கால் ஏற்பாட்டைச் செய்யவில்லை என்றால், நாங்கள் ஏற்பாடு செய்ய முடியாது; அன்-அப்ரூவ்ட் லே-அவுட்ஸ் என்று சொன்னால், அந்த அன்-அப்ரூவ்டு லே-அவுட்ஸ் உருவாக யார் காரணம்? பொதுமக்கள் காரணமா? உருவாக்கியவர்கள்—அதிகாரிகளும், லே-அவுட் போட்டவர்களும்தான். உருவாக்கிய குற்றவாளிகள் விடப்பட்டு விட்டார்கள்: அப்பாவி

பொதுமக்கள் தண்டிக்கப்படுகிறார்கள். இது என்ன சமூக நீதி? இது சமூக நீதி அல்ல. எனவே, நான் கேட்டுக்கொள்வது ஒரு ஸ்பெஷல் ஆர்டர் போடுங்கள்; இதுவரையிலும் ஏற்பட்டு இருப்பதற்கு பொதுமக்கள் காரணம் அல்ல. எனவே, அன்-அப்ரூவ்டு என்பது இனிமேல் அப்ரூவ்டு ஆக செய்யப்படும்; அதற்குப் பின்னர் அன்-அப்ரூவ்டு உருவாகாதவாறு பொருத்தமான சட்டத் திருத்தத்தைச் செய்யுங்கள் என்று நான் அழுத்தி வலியுறுத்தி விண்ணப்பிக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.) இப்போதும் விண்ணப்பித்துக்கொள்கிறேன். இது ஏற்றுக்கொள்ளப்படுமா என்று எனக்குத் தெரியவில்லை. அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றால், நகர்ப்புற வளர்ச்சி என்று நீங்கள் போட்டு இருப்பதற்கு பொருள் இல்லை. நகர்ப்புற வளர்ச்சி என்று நீங்கள் சொல்லுகிற சொல்லுக்கு உண்மை இருக்க வேண்டுமானால், நடைமுறையில் அது நகர்ப்புற வளர்ச்சியாக இருக்கவேண்டுமானால், நகர்ப்புற வளர்ச்சிக்குத் தடையாக இருக்கிற மிக முக்கியமான பிரச்சினைகளுக்குத் தீர்வு அளிக்க வேண்டும்; அதில் மிக முக்கியத் தீர்வு, அன்-அப்ரூவ்டு லே-அவுட்ஸ், அவற்றை நீங்கள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரே ஒரு விஷயத்தைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். அன்-அப்ரூவ்டை அப்ரூவ் செய்வதற்குரிய நடவடிக்கைகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இறுதியாக ஒன்று. உண்மையிலேயே நகர்ப்புற வளர்ச்சி என்பதும், வீட்டு வசதிகளை உருவாக்குவது என்பதும், சமூகத்தில் விரிவாகவும், அதிக கவனத்தோடும் கவனிக்கப்பட வேண்டிய, ஆராயப்பட வேண்டிய ஒரு விஷயம். அதற்கு காலஅவகாசமே இல்லை. ஆனால், இந்த வீட்டுவசதித் துறையில் என்ன நடக்கிறது என்றால், வட்டி மிக அதிகம். இந்தியாவிலே ஏழ்மை நிறைந்த மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்று. இந்த தமிழ்நாட்டில் ஏழ்மையான மக்கள் வீட்டுவசதிக்காக லோன் வாங்குகிறபோது அதிக வட்டி கொடுத்தே அழிந்து போகிறார்கள். அதுபற்றிய விவரம் என்னிடம் இருந்தாலும், இப்போது அதை நான் படிக்க முடியவில்லை. எனவே வட்டியைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக ஒரே ஒரு விஷயம். நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்கூட கடந்த 4-1-1997-ல் சென்னையில் நடைபெற்ற பல்கலைக்கழக ஆசிரியர்கள் பொன்விழா மாநாட்டிலே தெரிவித்து இருக்கிறார்கள். அதாவது பல்கலைக்கழக ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத ஊழியர்களுக்கு வீடு கட்டுவதற்கான முன்பணம் வழங்கப்படுவது



இல்லை; அந்த முன்பணம் வழங்கப்படும், பரிசீலிக்கப்படும் என்று சொல்லி இருக்கிறார்கள், மாநில அரசு இது குறித்து அக்கறையோடு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, அதே வீட்டுவசதியில் பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் ஒதுக்கீடு பெற்ற வீடுகளுக்கும், தனி வீடாக இருந்தால் அதிலே நான்கில் ஒரு பங்கு மதிப்பீட்டிற்கும்; குரூப் ஹவுஸாக இருந்தால் மூன்றில் ஒரு பங்கு மதிப்பீட்டிற்கும் அவர்களது துறையிலிருந்து வீட்டுக்கடன் முன்பணம் பெறும் வரை வட்டி கட்டுவதற்கு 1991-ம் ஆண்டிலிருந்து சலுகை வழங்க ஆணை பிறப்பிக்க வேண்டும். வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** திரு. பா. கோபால்.

**திரு. சி. வேலாயுதன்:** பாயின்ட் ஆப் ஆர்டர்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள், நான் பாரத் மாதா கி ஜே என்று சொல்வதை சுட்டிக்காட்டினார். பாரத் மாதா கி ஜே என்று சொல்வது, பாரத நாட்டில் வாழக்கூடிய அனைத்து மக்களும் அனைத்துத் துறைகளிலும் பாரத நாட்டினுடைய பண்பாட்டின் அடிப்படையில் உலகின் குருவாக விளங்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் சொன்னது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். பாரத் மாதா கி ஜே என்று சொல்லுவதிலே எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. ஆனால், தாயின் மடியில் தலை சாய்த்து படுப்பதற்குப் பிறந்த குழந்தைக்கு உரிமை இல்லை என்றால், அந்த பெற்ற தாய் தன்னுடைய கடமையை நிறைவேற்றுவாளா? இந்தியாவில் பிறந்த புதல்வனுக்கு குடி இருக்க குடும்பத்திற்கு ஒரு வீடு அளிக்காத தாய் என்ன தாய்?

பிற்பகல் 12-30

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. செ. இராமலிங்கம்):** இதில் ஒழுங்குப் பிரச்சினை இல்லை. அடுத்து திரு. பா. கோபால்.

**திரு. பா. கோபால்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி மற்றும் நகர்ப் பகுதி வளர்ச்சி பற்றிய மானியக் கோரிக்கையில் நான் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு கொடுத்த தங்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறன். முதலிலே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், வீட்டுவசதித் துறையிலே, ஊரக வீட்டுவசதி வாரியம் ஒன்றை அமைத்து பல்வேறு கிராம மக்களும் பயன்பெறும் வகையில், அந்த வாரியத்தின் மூலம் கிராம மக்களுக்கெல்லாம் வீடுகள் கட்டிக் கொடுக்கவேண்டும் என்ற ஒரு நல்ல திட்டத்தை இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவித்திருக்கிறார்கள். அதற்காக என்னுடைய மனமார்ந்த நன்றியை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக, வீட்டுவசதி வாரியத்தின் சார்பாகக் கட்டப்படுகின்ற வீடுகள் மிகவும் தரமற்றவையாக இருக்கின்றன என்பது ஒரு பொதுவான கருத்து. வீட்டுவசதி வாரியம் சார்பாகக் கட்டப்படுகின்ற வீடுகளை நல்லமுறையில் டிசைன் செய்து நல்ல கட்டிடக் கலைஞர்களை வைத்து கட்டிடங்களைக் கட்டி, பொதுமக்களுக்கு வழங்கினால் வீட்டுவசதி வாரியத்திற்கு நல்ல இலாபம் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தனியார் வீடுகளைக் கட்டுகின்றபோது, வீடுகளுடைய முகப்புகள் மிகவும் அழகாகக் கட்டப்பட்டு, அதனுடைய உட்புறச் சுவர்களை எல்லாம் நல்லமுறையில் உறுதியாகக் கட்டி, நல்லமுறையில் அழகாகப் பூசி, தரையெல்லாம் நல்லமுறையில் அமைக்கிறார்கள். எனவே, தனியார்துறை வீடுகளுக்கு நல்ல கிராக்கிகள் வருகின்றன. ஆனால் வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படுகின்ற வீடுகள் விற்கப்படாமல் இருக்கின்றன. எனவே, நல்ல தரமான வீடுகளை அமைத்துக் கொடுத்தால் வெளிச்சந்தையில் வீட்டுவசதி வாரிய வீடுகள் நல்ல இலாபத்தை ஈட்டும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, வீட்டுவசதி வாரிய குடியிருப்புகளைக் கட்டுகின்றபோது, அந்த இடத்தைத் தேர்ந்தெடுக்கிறபோது, நல்ல தரமான நிலமாகத் தேர்ந்தெடுத்து அங்கே தேவையான தண்ணீர் கிடைக்கிறதா என்பதை அறிந்து, வீடுகளை அமைத்துக் கொடுத்தால் அந்தப் பகுதி மக்களுக்கு நல்ல குடிநீர் வழங்க முடியும். மேலும் அங்கே கட்டப்படுகின்ற கட்டிடங்களும் எப்போதும் பழுதடையாமல் இருக்கும் வகையில் அதன் பவுண்டேஷன் நல்லமுறையில் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஒரு பெரிய திட்டம் ஆரம்பித்து, பல கோடி ரூபாயில் வீட்டுவசதி வாரியத்தின் சார்பிலே நடக்கிறபோது, அதன் சார்பில் கட்டப்படுகின்ற வீடுகளுக்கு உபயோகப்படுத்துகின்ற மணல், ஜல்லி, செங்கல், தண்ணீர், கலவை, கான்கிரீட் போன்றவைகளையெல்லாம்



அந்த இடத்திலேயே ஒரு ஆய்வகம் அமைத்து, அந்த ஆய்வகத்தில் அவற்றைச் சோதித்து, அவைகள் தரமான பொருட்கள்தானா என்பதை ஆராய்ந்து பிறகு அவற்றை உபயோகிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எனது மேட்டூர் தொகுதியில், மேட்டூர் நகரம், டி.என்.பட்டி, வீரக்கல்புதூர் பேரூராட்சிகள் மிகவும் அதிகமாக மக்கள் தொகை கொண்ட பகுதிகளாகும். இந்தப் பகுதிகளில் அரசுக்குச் சொந்தமானவை களாக, பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான, வருவாய்த் துறைக்குச் சொந்தமான, புறம்போக்கு நிலங்களாக ஏராளமான இடங்கள் இருக்கின்றன. அந்த நிலங்களை எல்லாம் வீட்டுவசதி வாரியத்திற்கு அளித்து, அந்த இடங்களிலே எல்ஐஜி., எம்ஐஜி. போன்ற வீடுகளைக் கட்டி அந்தப் பகுதியில் இருக்கின்ற தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டும். அந்தப் பகுதிகளில் மின்வாரியத் தொழிலாளர்கள், மேட்டூர் அலுமினியம் கம்பெனித் தொழிலாளர்கள், கெம்பிளாஸ்ட் தொழிலாளர்கள் அதிக அளவில் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் வீடுகள் கேட்டு விண்ணப்பிக்கிறார்கள். ஆகவே, அந்த நிலங்களை வாரியம் எடுத்து, அந்த நிலத்திலே வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டூர் நகரைப் பொறுத்தவரையில் பல்வேறு அரசு நிலங்கள் தனியாருடைய ஆக்கிரமிப்பிலே இருக்கின்றன. கடந்த 30 ஆண்டுகளாக அந்த ஆக்கிரமிப்புகளை அகற்ற முடியாமல் இருந்து கொண்டிருக்கிறது. அங்கே பல தனியார்கள் நிரந்தரமாக வீடுகளைக் கட்டிக்கொண்டு 30 ஆண்டுகளாக குடி இருக்கிறார்கள். அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றவும் முடியாமல், அந்த நிலத்தை அரசே எடுத்துக்கொள்ளவும் முடியாமல் இருக்கும் நிலை இருப்பதால், அவர்களிடம் உரிய தொகையை அரசுக்கு செலுத்துமாறு ஆணையிட்டு, அந்தப் பணத்தைப் பெற்று, அந்த நிலத்தை அனுபவிப்பவர்களுக்கே பட்டா வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-35

மேலும், என்னுடைய மேட்டூர் தொகுதியில், மேட்டூர் நகராட்சியிலே துப்புரவுப் பணியாளர்கள் 200-க்கும் மேற்பட்டவர்கள் மேட்டூர் தூக்கராம்பட்டிப் பகுதியிலும், சேரன்குளம் பகுதியிலும் வாழ்ந்து வருகின்றார்கள். அந்தப் பகுதியிலே ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட பழைய வீடுகளில் குடியிருந்து வருகின்ற அந்தத் தொழிலாளர்களுக்கு வீட்டுவசதி மிகவும் குறைவாக உள்ளது. அந்தப் பழைய வீடுகள்

எல்லாம் மழைக்காலங்களில் மிகவும் ஒழுகி அவர்கள் குடியிருக்க முடியாமல் இருக்கின்றது. அந்த வீடுகளிலே மின்சார ஒயர்கள் எல்லாம் பழுதடைந்துள்ளதால் அங்கே மின்கசிவு ஏற்பட்டு உயிருக்கு ஆபத்தான நிலை ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது. எனவே, நம்முடைய வாரியத்தின் சார்பாக அந்தத் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு வீட்டுவசதி செய்து கொடுக்க வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், என்னுடைய தொகுதியில், கொளத்தூர் மற்றும் நங்கவள்ளி, வனவாசி, ஜலகண்டபுரம் ஆகிய பேரூராட்சிப் பகுதிகள் நெசவாளர்கள் நிறைந்த பகுதிகளாகும். அந்த நெசவாளர்களுக்கெல்லாம் நம்முடைய வீட்டுவசதி வாரியத்தின் சார்பாக வீடுகளைக் கட்டிக் கொடுத்துத் தவணை முறையிலே அவர்களுக்கு அந்த வீடுகளை அளித்து உதவ வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியைப் பொறுத்தவரையில், பொதுவாக பல்வேறு பகுதிகளில் குடிநீர்ப் பிரச்சினை இருந்தாலும்கூட, நங்கவள்ளி ஒன்றியத்திலே கோளூர் பஞ்சாயத்து இருக்கின்றது. அதற்குப் பக்கத்திலே யுள்ள இரசாயனத் தொழிற்சாலைகளினால் குடிநீர் இன்று மிகவும் பாதிக்கப்பட்டு, மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்தப் பகுதிக்கு நீங்கள் உடனடியாக குடிநீர் வசதி செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

என்னுடைய தொகுதியில் டி.என்.பட்டி, வீரக்கல்புதூர் ஆகிய பேரூராட்சிகளில் ஒரு நிரந்தர கூட்டுக்குடிநீர்த் திட்டத்தை நமது அரசு இந்த ஆண்டு அறிவித்திருக்கின்றது. அதற்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்துக்கொண்டு (மணியடிக்கப்பெற்றது) வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** திரு. எல். சந்தானம்.

***திரு. எல். சந்தானம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மனிதனுடைய அடிப்படைத் தேவைகளில் ஒன்றாக இருக்கின்ற வீட்டுவசதி வாரியத்தின் மானியத்திலே பேசுகின்ற



வாய்ப்பினை அளித்தமைக்கு உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பாரதி குறிப்பிடுகின்ற நேரத்திலே, "காணி நிலம் வேண்டும், பராசக்தி காணி நிலம் வேண்டும், அந்தக் காணி நிலத்திடையே ஒரு மாளிகை கட்டித்தருதல் வேண்டும்" என்று சொன்னார். மனிதன் உண்பதற்கு உணவினை விளைவிப்பதற்குக் காணி நிலமும், அதிலே அவன் சுகமாக உழைத்துவிட்டு அலுப்போடு வரக்கூடிய நேரத்திலே அவனுடைய உழைப்பின் பலனை அனுபவிக்கின்ற வகையிலே அயர்ந்து உறங்குவதற்கு நல்லதொரு வீடு வேண்டும் என்கின்ற எண்ணத்தோடு பாரதி அன்றைக்கே இதைக் குறிப்பிட்டார்கள். ஆனால், நாம் 50 ஆண்டு சுதந்திரத்தைக் தாண்டிய பின்பும் இன்றைக்கும் நம்முடைய மக்கள் ஆயிரக்கணக்கானோர் வீடுகளில்லாத நிலையிலே தெருக்களிலே தூங்கக்கூடிய ஒரு அவலமான நிலையைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது மிக வருத்தமான செய்தி என்கின்ற நிலையை நான் என்னுடைய இயக்கத்தின் சார்பிலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்றைக்கு நமது கொள்கை விளக்க ஏடுகளிலே கிராமப்புறங்கள் தமிழகத்திலே பெருவாரியாக இருந்தாலும்கூட, நகர்ப்புறங்களைத்தான் மக்கள் நாடிவருகிறார்கள். ஏறத்தாழ 34 சதவிகிதம் நகர்ப்புறங்களில் வாழுகின்றவர்கள் இருந்த நிலை மாறி, இன்றைக்கு 50 சதவிகித மக்கள் நகர்ப்புறங்களிலேயே வாழ்வதற்கு வந்து சேருகிறார்கள் என்கின்ற நிலையை இன்றைக்கு நமது அறிக்கை குறிப்பிட்டுக் காட்டுகிறது. இது, கிராமப்புறங்களிலே அவர்களுக்குப் போதிய வாய்ப்பு வசதிகள் அளிக்கப்படவில்லை என்பதை எடுத்துக்காட்டுவதாக அமைந்திருக்கிறது. ஆகவே, கிராமங்களிலே இருக்கின்றவர்களுக்கும் அடிப்படைத் தேவையாகிய வீடு போன்றவைகளை அமைத்துத் தருவதற்கு நமது அரசு முனைப்போடு பல திட்டங்களைத் தீட்டியிருந்தாலும்கூட அதை இன்னும் சிறப்பாகச் செய்ய வேண்டும். கிராமங்களிலே இருக்கின்றவர்கள் பெறக்கூடிய கடன் தொகை குறித்து எனக்கு முன்னால் பேசிய அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். ஏறக்குறைய 9,000 ரூபாய்தான் வீட்டுக்கு கடனாகக் கொடுக்கப்படுகிறது என்பது மிகவும் குறைந்த அளவுகோலாகும். இன்றைக்கு நாம் இலவசமாக உள்ளாட்சித் துறையின் மூலமாக கட்டித் தருகிற வீடுகளுக்கே 27,000 ரூபாய் ஒதுக்குகிற நிலை இருக்கிறபோது கிராமப்புறங்களில் வீடு கட்டுவதற்கு 9,000 ரூபாய்தான் நாம் கடனாகத் தருகிறோம் என்பது மிகுந்த குறைவான ஒதுக்கீடு என்பதை நான் தெரிவித்து, அதை எப்படியும் கூடுதலாக ஒதுக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

இன்றைக்கு வங்கிகளில் பல இடங்களில் ஒரு லட்சத்து 20 ஆயிரம் தான் உயர்ந்தபட்சமாக வீடுகளுக்கு கடன் வழங்கப்படுகிறது. இன்றைக்கு இருக்கிற பொருள்கள் விலைவாசி ஏற்றத்தில் அது போதுமானதாக இல்லையென்பதால் அந்தக் கடன் அளவை உயர்த்தித் தர வேண்டும். கடன் அளவை உயர்த்தித் தருவதோடு வட்டி விகிதத்தையும் குறைத்துக் கொடுத்தால்தான் அவர்கள் பயன்பெறுகிற அளவுக்கு அது அமையும்.

கடன்களைப் பொறுத்த வரையில் 3 தவணைகளில் அந்தக் கடன்கள் வழங்கப்படுகின்றன. ஒரு தவணையைப் பெற்று அந்த வீட்டைக் கட்டுகிற நபர் தன்னுடைய வீட்டை பாதி அளவுக்கு அரைகுறையாக கட்டி முடித்துவிட்ட நிலையில் இரண்டாவது தவணையை அவர் பெறச் செல்கிற நேரத்தில் அவருக்கு உரிய நேரத்தில் தவணை கிடைக்காத நிலை இருக்கிறது. இன்றைக்கு நிதி ஒதுக்கீடு செய்கிறபோது முழுமையாக, அந்த வீட்டுக் கடன் எவ்வளவு தொகை இருக்கிறதோ அதை முழுமையாக ஒதுக்கீடு செய்தால்தான் அந்தத் தவணை முறைகளின் பயனை முறையாகப் பெறுகிறவர்கள் பெற்று, அவர்கள் செய்கிற காரியத்தை முறையாகச் செய்து முடிக்க முடியும்.

கடந்த ஆண்டில் எல்லாம் ஒரு தவணையைப் பெற்றுவிட்டு அடுத்த தவணையைப் பெறுவதற்கு ஏறத்தாழ ஓராண்டுக் காலம் கடந்து விட்டது. ஓராண்டுக் காலம் கடக்கிற நேரத்தில் இன்றைக்கு இருக்கிற விலைவாசியைக் காட்டிலும் அடுத்த ஆண்டில் இரட்டிப்பாக அத்தனை விலையும் ஏறிவிடுகிற நிலையில் அவர்கள் அந்தக் கடனைப் பெற்று கடனுடைய பலனை முழுமையாகப் பெற முடியாத நிலையிலே அவர்கள் கட்டுகிற வீடு பாதியிலே அரைகுறையாக நிற்கிற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதனால் நமது அரசாவது கடந்த காலங்களில் நடந்தது மாதிரி இல்லாமல், ஒரு கடன் கொடுப்போம் என்று சொன்னால் முழுத் தொகையையும் ஒரே நேரத்தில் வங்கிகளுக்கு கொடுக்கப்பட்டு, கூட்டுறவுச் சங்கங்களுக்கு கொடுக்கப்பட்டு, அது உடனடியாக அவர்களுக்குக் கிடைக்கிற நிலையை ஏற்படுத்தித்தரவேண்டும்.

அதைப்போல இன்றைக்கு நகர்ப்புறங்களில் இருக்கிற அலுவலர்கள் ஏறக்குறைய எல்லா இடங்களிலும் அவர்கள் தங்குவதற்கு போதுமான குடியிருப்பு வசதிகள் இல்லையென்கிற நிலையிருக்கிறது. கிராமப்புறங்களில் கூட என்னுடைய தொகுதியில் எல்லாம் ஒரு வட்டாட்சியர் அலுவலகம் இருக்கிறது, ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் இருக்கின்றன. ஆனால்



இதுவரையில் வீட்டுவசதி வாரியத்திலிருந்து எந்தக் குடியிருப்புகளும் அந்தப் பகுதிக்கு கட்டிக் கொடுக்கப்படுகிற நிலை இல்லையென்ற காரணத்தால் அங்கே இருக்கிற அலுவலர்கள் எல்லாம் பக்கத்திலே இருக்கிற நகர்ப்புறங்களுக்குச் சென்று வருகிறார்கள். ஆகவே அங்கேயிருக்கிற மக்கள் தங்களுடைய குறைகளை உரிய நேரத்தில் அலுவலர்களிடத்தில் சொல்வதற்கு வாய்ப்பு இல்லாமல் போகிறது. எனவே, எல்லாப் பகுதிகளிலும், ஒரு தாலுகா அலுவலகம் இருந்தால், ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் இருந்தால், அந்த ஊழியர்களுக்கு எல்லாம் அரசு சார்பில் வீடு கட்டித் தருகிற ஒரு நிலையை அரசு ஏற்படுத்த வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

இன்றைக்கு பழுதுபட்டிருக்கிற வீடுகளுக்கு கிராமப்புறங்களில் ஏறத்தாழ 2,500 ரூபாய்தான் வழங்கப்படுகிறது. ஆனால் 2,500 ரூபாய் ஒரு வீட்டை பழுது பார்ப்பதற்கு என்பது ஒரு மூட்டை சிமெண்ட் விலை இன்றைக்கு 200 ரூபாயாக இருக்கிற சந்தர்ப்பத்தில் மிகக் குறைவான தொகையாக இருக்கிற காரணத்தால், குறைந்தபட்சம் அத்தகைய வீடுகளைப் பழுது செய்வதற்கு 10,000 ரூபாயாவது நிதி ஒதுக்கீடு செய்து தர வேண்டுமென்று கேட்டு, இந்த நல்ல வாய்ப்பினைக் கொடுத்த உங்களுக்கு நன்றியைச் சொல்லி அமர்கிறேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** அடுத்து, திரு. மீ.அ. வைத்தியலிங்கம்.

பிற்பகல் 12-45

*** திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி குறித்த மானியத்திலே பேசுகிற வாய்ப்பினைத் தந்தமைக்காக முதலிலே நான் தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் துறை, சென்னையை ஒட்டியிருக்கிற வளர்ந்து வருகிற நகர்ப்புறப் பகுதியில் வாழ்கிற மக்களுக்கு, சென்னையினுடைய ஜனத்தொகையைக் குறைப்பதற்கு மட்டுமல்லாமல் சென்னையிலே இருக்கிற நெருக்கடியோடு வாழ்கிற மக்கள் சற்று சுற்றுப்புற சுகாதார சூழ்நிலையோடு வாழ்வதற்கான வாய்ப்பினை உருவாக்கித் தருவதோடு கிராமப்புறங்களிலே வாழ்கிற மக்கள், குறிப்பாக புறநகர்ப் பகுதியில் வாழ்கிற மக்கள் தங்களுக்கும் ஒரு சிறந்த வீடு கிடைக்காதா அல்லது வீட்டுமனை கிடைக்காதா என்று ஏங்குகிற ஏக்கத்தைப் போக்குகின்ற அளவிற்கு அரசு, சுற்றுப்புறத்திலே மிகச்சிறந்த நிலங்களை

வாங்கி அதை மனைப்பிரிவுகளாக்கி, அதை பிரிவு வாரியாக, வாழ்க்கையிலே நலிந்திருக்கிற பிரிவினருக்கு, நடுத்தர வர்க்கத்தினருக்கு, அரசு அலுவலர்களுக்கு, மிகவும் வசதி படைத்தவர்களுக்கென்று பிரித்து, அந்த வகையிலே வீடுகளை அமைத்துக் கொடுத்து, மனைகளைப் பிரித்துக் கொடுத்து புறநகர்ப் பகுதிகளிலே வாழ்கிற மக்களும் கிராமப் பகுதிகளிலே வாழ்கிற மக்களும்-நாமும் நகர்ப்புறத்திலே இருக்கிற வசதிகளைப் பெறமுடியும் என்று எண்ணுகிற வகையில் பல்வேறு பணிகளையாற்றி வருவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். அதுமட்டுமல்லாமல் அப்படி அவர்கள் குடியிருப்புகளை அமைக்கத் தேர்ந்து எடுக்கிறபோது அதற்கு போக்குவரத்து வசதி செய்யக்கூடிய வாய்ப்பு இருக்கிறதா என்று பார்ப்பதோடு, அங்கே சுகாதாரக் கேடு இல்லாமல் அவர்களுக்கு தக்க கால்வாய்கள் அமைத்து, சாலைகள் அமைத்து, விளக்குகள் அமைத்து, இதுபோன்ற வசதிகளை முன்கூட்டியே செய்து நடுத்தர மக்களுக்கு சமூகக் கூடங்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பட்ட வசதிகள் செய்து கொடுப்பது இன்னுமொரு பாராட்டத்தக்க அம்சமாகும். இந்தத் துறைக்கு என்று ஒரு தனி அமைச்சரையே நியமித்து, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தப் பகுதியிலே வாழ்கிற மக்களுக்கு, அதிலும் குறிப்பாக தமிழ்நாட்டிலேயிருக்கிற ஏழை எளிய மக்களுக்கு, நடுத்தர மக்களுக்கு, அரசு அலுவலர்களுக்கு மிகச்சிறந்த ஒரு வாய்ப்பாக அமைத்துத் தந்திருக்கிறார் என்று சொன்னால் அது மிகையாகாது.

ஆனால் பல ஆண்டுகளுக்கு முன்பாக வீட்டுவசதித் துறை மூலமாக நாம் இப்படிப்பட்ட நிலங்களை வாங்குகிறபோது, விற்கிறவர்கள் வழக்குமன்றத்திற்குச் சென்று, சில இடங்களிலே வழக்கு தொடுத்து விடுகிறார்கள். ஆனால் அரசு அந்த இடங்களை ஒதுக்கியோ அல்லது வீடுகளை கட்டிக் கொடுத்தோ ஒரு உரிய விலையினை நிர்ணயித்து விடுகிறார்கள். நிர்ணயித்ததற்குப் பின்னால் அந்த விலையையும் யார் வீடுகளை வாங்குகிறார்களோ அவர்கள் அரசுக்குச் செலுத்திவிடுகிறார்கள். அப்படி செலுத்திவிட்டதற்குப் பின்னால் அந்த நிலத்திற்கு உரிமையாளர்கள் வழக்கு தொடுத்த காரணத்தாலே அரசுக்கு ஏற்படுகிற இழப்பும் சேர்ந்து ஒன்றுக்கு இரண்டாக விலையினை மாற்றி அந்தப் பணத்தை செலுத்தியதற்குப் பின்னால்தான் உங்களுக்கு உரிமை அளிக்கமுடியும் என்று அரசு கூறுகிறது. இன்றைக்கு இதுபோன்ற பல்வேறு இடங்கள் இருக்கின்றன. குறிப்பாக, தாம்பரம் தொகுதியில் திருவள்ளுவர் நகர் என்றவொரு பகுதியிருக்கிறது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சியிலேதான் அந்த மனைப்பிரிவுகள் ஒதுக்கப்பட்டு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. அந்த இடத்தில்



இருக்கிற மக்களில் பலபேர் தாங்கள் செலுத்த வேண்டிய தொகை முழுவதையுமே செலுத்தியதற்குப் பின்னால்கூட இன்னும் உரிமைகள் பெறாமல் இருக்கிறார்கள். ஏனென்று அரசிடத்திலே அணுகிக் கேட்கிறபோது அந்த மனைப்பிரிவுகளைத் தந்தவர்கள் வழக்குமன்றத்திலே வழக்கு தொடுத்து அதனுடைய விளைவாக இரட்டிப்புச் செலவு அரசுக்கு ஏற்பட்டு இருக்கிற காரணத்தால் நீங்கள்தான் அந்தப் பணத்தைச் செலுத்தவேண்டும் என்று குறிப்பிட்டு அதனால் உரிமங்கள் தரப்படாமல் இருப்பதாக இன்றைக்கு அந்தப் பகுதியில் வாழ்கிற மக்கள் அரசிடத்திலே மனு செய்துகொண்டு இருக்கிறார்கள், கோரிக்கைகள் தந்துகொண்டு இருக்கிறார்கள். எனவே நம்முடைய அரசு ஒதுக்குகிறபோது நிர்ணயிக்கிற விலையில்-அப்படிக் கொடுக்கிற விலையில் மீண்டும் அரசுக்கு ஏற்படுகிற இழப்பின் காரணமாக அவர்களிடத்திலேயே பெற வேண்டுமென்ற எண்ணம் வருகிறபோதுதான் நிர்ணயித்த விலையை விட இரண்டு மடங்கு விலை தருவதற்கு பொதுமக்கள், குறிப்பாக நடுத்தரப் பகுதி மக்கள் தயாராக இல்லை என்பதினால் இன்றைக்கு பல்வேறு இடங்களிலே பணம் செலுத்தியதற்குப் பின்னால்கூட உரிமங்களைப் பெறாமல் இருக்கிறார்கள் என்பதை நான் இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விழைகிறேன்.

அதுபோல இன்றைக்கு சென்னையைச் சுற்றியுள்ள புறநகர்ப் பகுதிகளில் ஏழை எளிய மக்களுக்கு வீடுகளை கட்டிக் கொடுப்பதற்கு வாய்ப்பாக அரசினுடைய தரிசு நிலங்கள் பல இருக்கின்றன. அவைகளை சமூக விரோதிகள் கையகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமன்றி, நம்முடைய வீட்டுவசதி வாரியமோ அல்லது குடிசைமாற்று வாரியமோ அதை எடுத்துக்கொள்வதன் மூலமாக இந்த நாட்டிலே வீடில்லாமல் இருக்கிற, குறிப்பாக சென்னை மாநகராட்சியிலே, சிங்காரச் சென்னையை உருவாக்கிடவேண்டும் என்ற நம்முடைய வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் எண்ணுகிறபோது அதற்கு இடைஞ்சலாக இருக்கிற குடிசைவாழ் பெருமக்களை அங்கே குடியமர்த்துவதற்கு மிகச்சிறந்த இடங்கள் இருக்கின்றன. குறிப்பாக தாம்பரம் தொகுதியில் 'ஒட்டியம்பாக்கம்' என்ற கிராமத்திலே 90 ஏக்கர் இருக்கிறது. ஒன்றல்ல, இரண்டல்ல, 90 ஏக்கர் மிகவும் சமமான நிலப்பரப்பு இருக்கிறது. அவற்றை எடுத்துக் கொள்ளலாம் என்று அந்த ஊராட்சி மன்றத்திலேகூட தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட இடங்களைத் தேர்வு செய்வதன் மூலமாக அரசுக்கு நிலம் வாங்குகிற பணம் மிச்சப்படுவதோடு ஏழை எளிய மக்களுக்குக் குறைந்த விலையிலே வீடுகளைக் கட்டித் தருவதற்கு அதுவொரு வாய்ப்பாக அமையும் என்கிற காரணத்தால் அந்த இடத்தை

எடுத்துக் கொள்வதற்கு மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்கள் ஆலோசனை செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன். அதேபோல அரசு அலுவலர் களின் குடியிருப்புகளைப் பொறுத்தவரையில் அவர்களை மாற்றி அமைக்கிறபோது—சில இடங்களை அரசு அலுவலர்கள் வாடகைக்கு எடுக்கிறார்கள், வீட்டுவசதி வாரியத்தினுடைய வீடுகளை வாடகைக்கு எடுத்துக் கொள்கிறார்கள். அப்படி எடுக்கிறவர்களுடைய குடும்பம் திடீரென்று மாறுதல் வருகிறபோது, அவர்கள் பள்ளியில் பயிலுகின்ற குழந்தைகளை வைத்துக் கொண்டிருக்கிறவர்கள்; அவர்களுடைய குடும்பத்திலே இருக்கிற வேறு சிலர் இங்கேயே பணியாற்றுகிற நிலையில் இருப்பவர்கள், அவர்கள் எல்லாம் எந்தக் குடும்பத் தலைவர் பெயரிலே அந்த வீட்டை எடுத்திருக்கிறார்களோ, அவர்கள் பணிமாற்றம் பெறுவதால் உடனடியாக காலி செய்ய முடியாத நிலை வருகிறபோது, நம்முடைய அரசு சிறப்புச் சலுகைகளை அளித்து, அந்த வீடுகளை அவர்களுக்கு அளிப்பதற்கான வாய்ப்புகளை உருவாக்கித் தரவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

அதேபோல் அரசு வாடகைக்கு அளிக்கிற இடங்களில் ஆண்டுதோறும் அதைச் சரி செய்து, ரிப்பேர் செய்து கொடுப்பதற்கு பதிலாக, எப்படி குடிசைமாற்று வாரியத்திலே நீண்ட நாட்களுக்கு முன்பாக கொடுத்தவர்களுக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தாய் உள்ளத்தோடு ஒரு குறிப்பிட்ட விலையை நிர்ணயித்து அவர்களே எடுத்துக் கொள்ளவேண்டும் என்று சொல்கிறார்களோ, அதைப்போல, வாடகை வீடுகளிலே அரசு அலுவலர்களாக இருந்தாலும் அல்லது நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்களுக்கும் அப்படி அளிக்கிற ஒரு திட்டத்தைக் கொண்டு வருவதன் மூலம் இன்னும் சிறப்பாக அமையும் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய வீட்டுவசதித் துறை அமைக்கிற அந்த நிலங்களைப் பிரிக்கிற இடங்களிலே, அதற்குத் தரமாக பூங்காக்கள் அமைக்கிற பணிகளை, பொது இடங்களை ஒதுக்குகிற பணிகளை எல்லாம் மிகச் சிறந்த முறையிலே செய்து, பூங்காக்களுக்காக 2½ லட்சம் ரூபாய் என்று ஒதுக்கி, அதிலே 1,75,000 ரூபாயை உள்ளாட்சித் துறைக்கு ஒப்படைக்கிறார்கள் என்று சொன்னாலும், அதை ஒப்படைக்கிற நேரத்தில், அதனுடைய தரம் என்ன என்பதை, அந்த ஒப்பந்தக்காரர்கள் எந்த



அளவிற்கு அதைச் சரி செய்திருக்கிறார்கள் என்பதை எல்லாம் கண்காணிக்கிற வகையில்—இப்போது எல்லாவற்றிற்கும் ஒரு கமிட்டியை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கண்காணிப்புக் குழு என்று அமைப்பதைப் போல் - இதற்கும் ஒரு குழுவை அமைத்து, அவைகள் தரமானவைகளாகச் செய்யப்பட்டு இருக்கின்றனவா என்று அவர்களிடத்திலே சான்று பெற்றதற்குப் பின்னாலே அதை உள்ளாட்சி மன்றங்களுக்கு ஒப்படைக்கிற ஒரு வாய்ப்பினை உருவாக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே வேண்டி விரும்பி கேட்டுக் கொண்டு, இந்தத் துறையின் மீது பேசுகின்ற வாய்ப்பைப் பெற்றமைக்கு மகிழ்ச்சி அடைந்து நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** திரு. எஸ். எஸ். மணிநாடார்.

**திரு. எஸ்.எஸ். மணிநாடார்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வீட்டுவசதி வாரிய மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்த உங்களுக்கு என்னுடைய நன்றியைச் சொல்லி, என்னுடைய பேச்சைத் தொடங்குகிறேன். 1961-லே தலைவர் காமராஜர் அவர்கள், அசோக் நகர், அண்ணா நகர், கொரட்டூர், பெசன்ட் நகர், வியாசர்பாடி போன்ற இடங்களில் எல்லாம் நிலங்களைக் கையகப்படுத்தி, அதிவேகமாக வீடு கட்டும் பணிகளை ஆரம்பித்து, ஓரளவிற்கு மனிதர்களுக்கு, மக்களுக்குத் தேவைப்படுகின்ற அளவிற்கு வீடுகளைக் கட்டித் தந்தார்கள். அதேபோல் 1967-க்குப் பின்னால் பேரறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர் — இன்றைய முதல்வர் — அவர்களுடைய காலத்திலே தலைவர் காமராஜர் அவர்கள் விட்டுச் சென்ற பணிகளைத் தொடர்ந்து செய்து மக்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக எந்த அளவிற்கு வீடுகளைக் கொடுக்க முடியுமோ, அந்தளவிற்குக் கொடுப்பதற்கு நடவடிக்கைகளை வேகப்படுத்தி, வீடுகளை நல்லமுறையில் கட்டி முடித்தார்கள். 1972-லே ராமாபுரம், வளசரவாக்கம், மதுரவாயல் மற்றும் உள்ள இடங்களிலே எல்லாம், அதற்குப் பின்னால் வந்தவர்கள் அக்யூசிஷன் நோட்டீஸ் கொடுத்தார்கள்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

ஆனால், தலைவர் காமராஜர் அவர்கள் எப்படி நோட்டீஸ் கொடுத்து, உடனடியாக நிலங்களைக் கையகப்படுத்தினார்களோ அதைப்போல கையகப்படுத்த பின்தங்கிவிட்டார்கள். 1972-லே நோட்டீஸ் கொடுத்தும்,

இன்றைய வரைக்கும் நிலங்களைக் கையகப்படுத்தவில்லை. நிலங்கள் எல்லாம் காலியாக, 50 செண்ட், 1 ஏக்கர் வைத்திருக்கிற விவசாயிகள் அவர்களுடைய கஷ்ட நிலைகளை முன்வைத்து, தனியார்களுக்கு விற்றுவிட்டார்கள். நான் சொல்லுகின்ற இடங்களில், அந்த நிலங்களை கையகப்படுத்தி, அங்கே அன்-அப்ரூவ்டு லே-அவுட்டுகளைப் போட்டு, வீடுகள் எல்லாம் பில்ட்-அப் ஆகிவிட்டன. இன்னும் கொஞ்சம் கொஞ்சம் காலி இடங்கள் இருக்கின்றன. எனவே, தயவுகூர்ந்து 1972-லே நீங்கள் கொடுத்த அக்யூசிஷன் நோட்டிசைப் பயன்படுத்தி, இன்றைக்கு அரசுக்கு எது தேவை என்று படுகிறதோ, அந்தச் சொத்தை அக்கொயர் பண்ணுங்கள், இல்லை என்றால், அந்த நோட்டிசை ரத்து செய்து மக்களுக்கு வீடு கட்டுவதற்கு வாய்ப்புகளை தேடிக் கொடுங்கள். அப்படி இருந்தால் முறையோடு பஞ்சாயத்துக்களிலே பிளான் பெற முடியும். பஞ்சாயத்துக்கும் உரிய நல்ல வருமானம் வரும். ஆகவே, தயவுகூர்ந்து நீங்கள் அக்யூசிஷன் நோட்டிசை - நான் மீண்டும் ஒருமுறை சொல்கிறேன் - 1972-லே கொடுத்ததை நீங்கள் நிச்சயமாக ரத்து செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், தமிழகத்திலே இருக்கின்ற 234 சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிற ஒவ்வொரு பகுதியிலும் இருக்கிற ஹவுசிங் போர்டு—வீட்டுவசதி வாரியத்தின் வீடுகளை நீங்கள் செப்பனிட வேண்டும். அங்கே ஒரு தொகுதிக்கு 20 ஏக்கர் நிலத்தை நீங்கள் அக்கொயர் பண்ணி, 250 வீடுகள் கொண்ட ஒரு சிறிய நகரமாகக் கட்டினால், தமிழகத்திலேயுள்ள ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் உட்பட்ட இடங்களிலே 250 வீடுகள் கட்டினால், அங்கேயிருக்கின்ற அதிகாரிகளும், மற்றவர்களும், பொதுமக்களும் பயன்படுத்துவதற்கு ஒரு வாய்ப்பாக அமையும் என்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

அதுமட்டுமல்ல, நம்முடைய சென்னையிலே மக்கள் நெரிசல் அதிகமாகிக்கொண்டே வருகிறது. வளர்ந்து வருகின்ற சென்னைக்குப் பக்கத்திலே இருக்கின்ற ஸ்ரீபெரும்புதூரிலே நிறைய காலி இடங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட நிலங்களை, 1000 ஏக்கர் நிலங்களை அரசு அக்கொயர் பண்ணி, நல்லவிதத்தில் ஒரு நகரத்தை நீங்கள் உருவாக்கலாம். அதற்குப் போக்குவரத்து வசதியும் செய்து கொடுக்கலாம். ஆகவே நெரிசலை நாம் குறைக்கின்ற வகையில், அப்படிப்பட்ட நிலங்களைப் பெற்று, 20 கிலோ மீட்டருக்கு அப்பால் இருக்கின்ற நிலங்களைப்பெற்று,



ஏழைகளுக்கும், நடுத்தரவாசிகளுக்கும், வீடில்லாத மக்களுக்கும் வீடுகளைக் கட்டித் தருவதற்கான திட்டங்களை இந்த அரசு உடனடியாக எடுக்க வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்கிறேன். அப்படி அங்கே நல்ல நகரத்தை உருவாக்கினால் அந்த நகருக்கு நம்முடைய தலைவர், ராஜீவ் காந்தி நகர் என்ற பெயர் வைக்க வேண்டும் என்று சொல்லி, எனக்குப் பேச வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி சொல்லி, விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கை சிவம். 7 நிமிடத்தில் உரையை முடிக்க வேண்டும்.

***திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுவசதி மானியக் கோரிக்கைமீது எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

1957-ல் கட்டப்பட்ட சர்மாநகர், திரு. வி.க. நகர் உட்பட 4,117 வீடுகளுக்கு சென்ற நிதிநிலை விவாதத்தின்போது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பட்டா வழங்குவதாகவும், ரூ. 9600-க்கு வழங்குவதாகவும் அறிவித்தார்கள். அதற்கு 24-3-1997-ல் அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டு, அங்கே நலிந்த தொழிலாளர்களுக்கான வீடுகளை ரூ. 9600-க்கு, குறைந்த விலையில் அளித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், அதற்கான முயற்சிகளை மேற்கொண்ட நம்முடைய மத்திய அமைச்சர், திரு. முரசொலி மாறன் அவர்களுக்கும், மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு. பிச்சாண்டி அவர்களுக்கும், இந்த நேரத்திலே என்னுடைய நெஞ்சார்ந்த வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஜெயலலிதா ஆட்சியில், 5 ஆண்டுக் காலத்தில் ரூ. 1985 கோடிதான் இந்த மானியத்திற்காக ஒதுக்கினார்கள். ஆனால் இரண்டு ஆண்டுக் காலத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள், நம்முடைய அரசு ரூ. 1307 கோடி ஒதுக்கியிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. தமிழ்நாடு அரசுப் பணியாளர்களுக்கு 1997-98-ல் 1,088 அடுக்கு மாடி வீடுகளைக் கட்ட ரூ. 20 கோடி பணம் ஒதுக்கியிருப்பதை நான் வரவேற்கிறேன்.

தெற்கு ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்பவர்களுக்காக கட்டப்பட்ட வீடுகளில் மிகப் பெரிய ஊழல் நடைபெற்றிருக்கிறது என்று பத்திரிகைகளில் எல்லாம் செய்தி வந்தது.

சட்டம் இயற்றப்படவில்லை. 30 சதவிகிதம் தான் அந்த அங்காடிகள் அங்கே மாற்றப்பட்டன. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு போட்டு இங்கிருக்கிற கொத்தவால்சாவடி மொத்த விற்பனை அங்காடி 90 சதவிகிதம் மாற்றப்பட்டிருக்கிறது. இது ஒரு மிகப் பெரிய சாதனை. ஒரு நாளைக்கு 250 லாரிகள் கோயம்பேட்டிலிருந்து சென்னைக்கு வருகின்றன. இதிலே, இன்னமும் கொத்தவால்சாவடிக்கு 50 லாரிகள் வந்து கொண்டு இருக்கின்றன. அதை உடனடியாகத் தடுக்க வேண்டும். இல்லை என்று சொன்னால் மீண்டும் இன்னொரு கொத்தவால்சாவடி உருவாகிவிடும். ஆகவே, இதைத் தடுத்து, அனைவரும் அங்கிருக்கிற வியாபாரிகளுடைய பிரச்சினை என்ன என்பதை நியாயத்தோடு அணுகி உடனடியாக அதை கோயம்பேட்டிற்கு மாற்ற ஏற்பாடு செய்ய வேண்டும். மீதியுள்ள கடைகளை யாருக்காவது காத்திருக்காமல், உடனடியாக அதைக் கேட்கிறவர்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் டெக்ஸ்டைல் மார்க்கெட் கட்டுவதற்கு நிலம் ஆர்ஜிதம் செய்வதில் உயர்நீதிமன்றத்தினுடைய தடையாணை இருந்தது. அது இப்போது நீங்கிவிட்டது. உடனடியாக 'ஹோல் சேல் டெக்ஸ்டைல் மார்க்கெட்' அங்கு கட்ட வேண்டும். 'அயர்ன் மற்றும் ஸ்டீல்' மார்க்கெட் கட்டுவதற்கு அவர்கள் அங்கே 'மூவ்' பண்ண மாட்டேன் என்று சொல்லி தடையாணை வாங்கியிருந்தார்கள். சென்ற வாரம்தான் அதற்கு அனுமதியைக்கூட உயர்நீதிமன்றம் வழங்கிவிட்டது. உடனடியாக அதையும் கட்டவேண்டும். பிராட்வே பேருந்து நிலையம், உயர்நீதிமன்றத்திற்கு அருகே உள்ள திருவள்ளுவர் பேருந்து நிலையம், மூலக்கொத்தளம் பக்கத்திலே இருக்கின்ற பேருந்து நிலையம், இவைகளையெல்லாம் அகற்ற கோயம்பேட்டிற்குப் பக்கத்திலே 25 ஏக்கர் நிலத்தில் ரூ. 88 கோடியிலே நீங்கள் கட்டவிருக்கிறீர்கள்; ஒரு மேம்பாலம்கூட ரூ. 10 கோடிக்குக் கட்டப்படவிருக்கிறது. இது மிகவும் வரவேற்கப்படத்தக்கது. ஒரு கொத்தவால்சாவடி, ஒரு பஸ் ஸ்டாண்டு, இப்படி எல்லாவற்றையும் ஒரேயிடத்திலே 'டம்ப்' பண்ணினால் ஓவர் கன்ஜெஷன் ஆகிவிடும். ட்ராஃபிக் அதிகமாக ஏற்படும். இட நெரிசல் ஏற்படும். ஆகவே வட சென்னையில் மாதவரத்திலே ஒரு பகுதியில் நீங்கள் நவீனப்படுத்துகின்ற பகுதியில், பஸ் ஸ்டாண்டை மாற்ற வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



பிற்பகல் 1-05

அடுத்து, வண்டலூர், பூந்தமல்லி, மாதவரத்தை இணைப்பதற்காக அவுட்டர் ரிங் ரோடு வருகிறது. அந்த அவுட்டர் ரிங் ரோடை உடனடியாக மத்திய அரசோடு தொடர்பு கொண்டு நேஷனல் ஹைவேஸ் ரோட் மற்றும் பைபாஸ் ரோடையும் அமைக்க வேண்டும், நீண்டகால தொலை நோக்கோடு இதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அரசு நிலங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்படுகின்றன. இந்த அரசு நிலங்களில் குடிசைகளோ, கல் வீடுகளோ கட்டிக்கொண்டு உடனடியாக பிரிக்கச் சென்றால் கோர்ட்டுக்குச் சென்று விடுகிறார்கள். உடனே தடையாணை வாங்கி விடுகிறார்கள். Caveat எல்லாம் போட முடியாது. ஆகவே இன்றைக்கிருக்கின்ற நம்முடைய சட்ட அமைச்சர் மற்ற துறை அமைச்சர்கள் எல்லாம் வல்லுநர்களோடு, அரசு வழக்குரைஞர்களோடு கலந்து பேச வேண்டும். இப்போது உடனடியாக ஸ்டே கொடுக்காமல், உயர்நீதிமன்றம் ஸ்டே கொடுக்காமல் அரசை கலந்து நோட்டீஸ் இஷ்யூ செய்த பின்னாலே ஸ்டே வழங்க வேண்டுமென்ற முயற்சியை நீங்கள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம். இந்த தமிழ்நாடு குடிசைமாற்று வாரிய குடியிருப்புகள் சென்னை பூராவும் இருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் தொகுதி சேப்பாக்கம், வணக்கத்திற்குரிய மேயர் தொகுதி ஆயிரம்விளக்கு அதைப்போல திருவல்லிக்கேணி பகுதி இப்படி பல இடங்களில் டிஃபென்ஸ் லேண்ட், டெம்பிள் லேண்ட் அதுமட்டும் அல்லாமல் வக்ப் போர்டு லேண்ட், ரெயில்வே லேண்ட்—என்னுடைய தொகுதியிலே கூட 4 இடங்களில் ரெயில்வேக்குச் சொந்தமான இடங்கள் இருக்கின்றன—இவைகளில் எல்லாம் வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. 50 ஆண்டுகாலமாக இருக்கின்றன. ஆகவே கோயில் நிலம் என்றால் அதற்கு பட்டா வழங்க முடியவில்லை. இரயில்வே லேண்ட் என்றால் அதற்கு ஒரு மாற்று இடம் கேட்கிறார்கள். இப்படிப் பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அந்த மானியத்திலே அதைச் சொல்லுங்கள். அந்த அமைச்சருக்குத் தனி நாள் இருக்கிறது. அன்றைக்கு அந்த அமைச்சரிடம் சொல்லுங்கள்.

**திரு. செங்கை சிவம்:** தலைவர் அவர்களே, குடிசைமாற்று வாரியமும் வருகிறது. எம்.எம்.டி.ஏ.-க்கு குடிசை மாற்று வாரியத் துறையின் அமைச்சர்தான் பதில் சொல்கிறார். ஆகவே இந்த லேண்டுகளுக்கு எல்லாம் உடனடியாக நீங்கள் பட்டா கொடுக்க வேண்டும். இன்னொரு

பெரிய ஆபத்தும் நமக்கு இருக்கிறது. இந்த அரசுக்குச் சொந்தமான
நிலங்களில் பட்டா கொடுக்க வேண்டும் அல்லது ஸ்ட்ரீட் லைட் போட
வேண்டும், ட்ரெயினேஜ் போட வேண்டும் என்றால் உலக வங்கி
டி.என்.யூ.டி.பி. ஸ்கீமிலே பணம் கொடுத்திருந்தது. அது 31-3-1997 அன்று
எக்ஸ்பையர் ஆகிவிட்டது. இனிமேல் சென்னையில் இருக்கிற இந்த
நிலங்களிலே கட்டியிருக்கின்ற ஏழைகளினுடைய நிலைமை என்ன ஆவது?
அதற்காகத்தான் இந்த அரசை நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.
உடனடியாக 6 மாதத்திற்கு நீங்கள் இதை எக்ஸ்டென்ட் செய்வதற்கான
எண்ணத்தை உலக வங்கிக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். இன்னொன்று,
தனியார் இடங்கள். எங்கள் பகுதியிலேகூட தனியாரிடத்திலே வீடு
கட்டிக்கொண்டு, குடிசை போட்டுக்கொண்டு 50, 60 வருடமாக
இன்றைக்கும் இருக்கிறார்கள். ஆக அந்த லேன்டை அக்கொயர் பண்ண
முடியவில்லை. கோர்ட்டுக்குப் போகிறார்கள். ஆனால் அக்கொயர்
பண்ணுகிற ஒரே ஒரு இலாகா ரெவின்யூ இலாகாதான். (மணியடிக்கப்
பெற்றது) ஒரே ஒரு நிமிடம். ஆகவே அந்த லேன்டை எல்லாம்
அக்கொயர் செய்து ஏழை மக்களுக்கே கொடுக்க வேண்டும்.

அடுத்து கிருஷ்ணா நதிநீர். சென்னைக்கு வர இருக்கிறது. இங்குள்ள
குடிசைவாழ் மக்களுக்கெல்லாம் கிருஷ்ணா நதிநீர் வழங்குவதற்கான
ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். ஒரே ஒரு கோரிக்கை. எல்லா
உறுப்பினர்களுடைய - சென்னையிலே இருக்கிற உறுப்பினர் கிட்டு
உட்பட அனைவருடைய - கோரிக்கையும் அதுதான். ஆகவே அடுக்குமாடி
வீடுகளை எல்லாம் நீங்கள் கட்டியிருக்கிறீர்கள். இந்த அடுக்கு மாடி
வீடுகளில் யாரும் வரி கட்டுவதில்லை. யாரும் ஹயர் பர்சேஸ்
திட்டத்திற்கும் பணம் கட்டுவது கிடையாது. கட்டங்களைப் பழுதுபார்க்க
ஒவ்வொரு ஆண்டும் ரூ. 5 கோடி பணம் ஒதுக்குகிறோம். நாம்
எப்போதெல்லாம் ஆட்சிக்கு வருகிறோமோ அப்போதெல்லாம் இதற்கு
நிதி ஒதுக்குகிறோம். ரூ. 5 கோடி விரையமும் ஆகிறது. பணமும் வசூலும்
ஆவது இல்லை. கடந்த முறை நம்முடைய முதலமைச்சர் அவர்கள்கூட
அறிவித்தார்கள். ஆக நீண்டகால தவணையில் அவர்களுக்கு பட்டா
செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டார்கள். சென்னையிலே
இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரின் சார்பாக கேட்டுக்
கொள்கிறேன். சென்னையிலே இருக்கிற அடுக்குமாடி குடிசைமாற்று
வீடுகளை அவர்களுக்கே இலவசமாகப் பட்டா செய்துவிடுங்கள்.
எங்களுக்கும் தொல்லை இருக்காது. தினம் தினம் அந்தத் தொல்லைதான்
எங்களுக்கு பெரும் தொல்லையாக இருக்கிறது. மேயருக்கும் அதுதான்,



எல்லோருக்கும் அதுதான் என்று சொல்லி வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர்.

பிற்பகல் 1-10

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர், முத்தமிழ் அறிஞர், கலைஞர் அவர்களின் தலைமையில் இந்தப் பெருமைமிக்க பேரவையில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி குறித்த மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்திற்கு இரண்டாவது முறையாக பதிலளிக்கின்ற வாய்ப்பினைத் தந்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், என்னுடைய தொகுதி மக்களுக்கும், தங்களுக்கும் இந்தப் பேரவைக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தந்தை பெரியாரின் தன்மானப் பாசறையில் வெந்து, புடமிட்டு வெளிவந்த தங்கமாய், தமிழ் ஆசான் அண்ணாவின் தம்பிகளில் முதல்வராய் தன்னை ஆக்கிக்கொண்டு, “வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்” என்ற லட்சியத்துடன், கடலில் தூக்கி எறிந்தாலும் தமிழ் மக்களை சுமக்கும் கட்டு மரமாக மிதப்பேன்” என்ற கடமை உணர்வுடன், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, அடக்கப்பட்ட மக்களின் உரிமை வாழ்வு ஒன்றையே அல்லும் பகலும் நினைவில் கொண்டு, “ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்” எனச் சபதமேற்று தன்னையே தமிழ்நாட்டு மக்களுக்காக அர்ப்பணித்துக் கொண்டுள்ள முதல்வர் கலைஞர் அவர்கள் நாட்டுக்கு நலம் பயக்கும் திட்டங்களை நிதிநிலை அறிக்கையிலே அளித்துள்ளார்கள்.

இந்த நிதிநிலை அறிக்கையினை எதிர்க்கட்சிகள் எல்லாம் ஏகோபித்துப் பாராட்டுகின்றன. எல்லாத் தரப்பு மக்களும் வாயார வாழ்த்துகின்றனர். ஆனால் யாரோ ஒருசிலர், ஊரை அடித்து உலையில் போட்டவர்கள், நாட்டு மக்களின் வரிப்பணத்தை நாசமாக்கியவர்கள், ஏழை மக்களின் வரிப் பணத்தை உறிஞ்சிக் கொழுத்தவர்கள், இந்த நிதிநிலை அறிக்கையினை ஏழைகளின் நலனில் அக்கறை காட்டாத நிதிநிலை அறிக்கை எனக் குறை கூறுகிறார்கள்.

ஆமாம். இந்த நிதிநிலை அறிக்கை பத்தாயிரம் பட்டுப் புடவைகளை வைத்துக்கொண்டிருக்கும் ஏழைகளுக்காக அல்ல; கட்டுவதற்கு நல்ல

துணியின்றி வாடும் ஏழைக்களுக்காக. பதினெட்டு ஆடம்பர பங்களாக்களைக் கட்டியுள்ள ஏழைகளுக்காக அல்ல; குந்தக் குடிசையின்றி வாழுகின்ற ஏழைகளுக்காக. (மேசையைத் தட்டும் ஒலி) பன்னாட்டுக் கார்கள் பல வைத்துள்ள ஏழைகளுக்காக அல்ல; காதவழி செல்வதற்கும், கால்களையே நம்பியுள்ள ஏழைகளுக்காக.

பாத அணிகள் பல நூறு பகட்டுக்காக வைத்துள்ள ஏழைகளுக்காக அல்ல; காலிலே செருப்பின்றி கஷ்டப்படும் ஏழைகளுக்காக. கிலோ கணக்கில் தங்கமும், வைரமும் வைத்துள்ள ஏழைகளுக்காக அல்ல, கிராம் கணக்கில்கூட தங்கம் வாங்க வசதியற்ற (மேசையைத் தட்டும் ஒலி) ஏழைகளுக்காக. ஆயிரம் கார்களில் பவனிவரும் ஏழைகளுக்காக அல்ல; அடுத்த வேளை கஞ்சிக்குக் கஷ்டப்படும் ஏழைகளுக்காக. உப்பரிகையில் வாழும் உல்லாசிகளுக்காக அல்ல; (மேசையைத் தட்டும் ஒலி) உழைத்து வாழும் மக்களுக்காக. அரண்மனைத் தோழிகளுக்கும் அரசிளங்குமரனுக்கும் அல்ல, ஏழைகளுக்கே எல்லாம் என்று முதலைக் கண்ணீர் வடித்துவிட்டு (மேசையைத் தட்டும் ஒலி) கோடி கோடியாய் வரிப்பணத்தை, கூடஇருப்போர் சுருட்டிக் கொள்ள, தமிழ்நாட்டுப் பணத்தை தம் வீட்டுப் பணமாய் மாற்றிக்கொள்ள போடப்பட்ட நிதிநிலை அறிக்கை அல்ல. இது, வீதியோரத்து ஏழைகளுக்கு, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, ஆலைத் தொழிலாளிகளுக்கு, அடிமட்ட மக்களுக்கு, மொத்தத்தில் தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கு, கோடையிலே வருகின்ற குளிர் நிலவாய், ஒளிவீசும் தெளிவான நிதிநிலை அறிக்கை.

இப்படிப்பட்ட நிதிநிலை அறிக்கையினை ஏழைகளின் நலனில் அக்கறை காட்டாத நிதிநிலை அறிக்கை எனக் குறை கூறுவதைப் பார்க்கும்போது, ஒரு கதைதான் என் நினைவுக்கு வருகிறது.

ஒரு பாலைவனம். பாலைவனத்தின் அருகாமையில் பசுமை நிறைந்த ஊர் ஒன்று. அந்த ஊரிலே, உயிர் குடிக்கும் ஓநாய் ஒன்றும், உழைத்து வாழும் ஒட்டகம் ஒன்றும் இருந்து வந்தன.

அதிலே ஓநாய் ஊர் மக்களுக்குப் பொல்லாத தொல்லை அளித்தது. ஓநாயின் தொல்லை தாங்காத ஊர் மக்கள், ஓநாயை விரட்டி அடித்தார்கள். உழைக்கும் ஒட்டகத்தைப் பாராட்டி மகிழ்ந்தார்கள். விரட்டப்பட்ட ஓநாய் பாலைவனத்திலே போய் படுத்து பதுங்கிக் கிடந்தது. ஒட்டகமோ, வறண்ட பாலைவனத்தில் பயணம் செய்யும் ஊர் மக்களுக்கு சுமை தூக்கியாய், சுமைதாங்கியாய், களைத்து வரும் பயணிகளுக்கு கவலை தீரப் பால் கொடுத்தது, பருக நீர் கொடுத்தது,



களைப்பாற நிழலும் கொடுத்தது. இதைப் பார்த்த, பதுங்கி படுத்துக்கிடந்த, பொறாமை கொண்ட ஓநாய், ஒட்டகத்தைப் பார்த்துக் கூறியதாம்,

“ஒட்டகமே ஒட்டகமே,
பால் கொடுக்கும் ஒட்டகமே,
பாரம் சுமக்கும் ஒட்டகமே,
நிழல் கொடுக்கும் ஒட்டகமே,
நீர் கொடுக்கும் ஒட்டகமே”

உன் உழைப்பைப் பார்த்து, உன் தியாகத்தைப் பார்த்து ஊரில் இருப்பவர்கள் உன்னைப் புகழ்வது எனக்குப் பொறாமையாக இருக்கிறது. அதை என்னால் சகித்துக்கொள்ள முடியவில்லை என்று சொல்லி ஒட்டகத்தைப் பார்த்து ஓலமிட்டதாம் ஓநாய். அந்தக் கதைதான் என்னுடைய நினைவுக்கு வருகிறது.

நாகரீகம் வளர வளர, கிராம மக்களின் எண்ணங்களிலும் பரிணாம வளர்ச்சி ஏற்பட்டு, விஞ்ஞான வளர்ச்சியால் நகரங்களில் ஏற்பட்டுள்ள பலவித வசதிகளைத் தாங்களும் பெறும் பொருட்டு நகரப் பகுதிகளுக்கு கிராம மக்கள் குடிபெயர்ந்து வரும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் நகரப் பகுதிகள் நெரிசல் மிக்க பகுதிகளாக மாறி வருகின்றன. இதைத் தவிர்க்கும்பொருட்டு நகரங்களை ஒட்டிய கிராமப் புறங்களை முன்னேற்றம் செய்து, அந்தப் பகுதிகளில் வசதியான முறையில் வாழ்வதற்கேற்ற வீட்டு வசதிகளைச் செய்ய வேண்டும் என்ற சிறந்த நோக்கத்தில் ஆரம்பிக்கப்பட்டதே வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் திட்டமாகும்.

இதன் அடிப்படையில் சென்னை மாநகருக்கருகில் மறைமலைநகர் எனும் புறநகர் உருவாகிட மாண்புமிகு முதல்வர் அவர்கள் அன்றைக்கு வழிகாட்டினார்கள். இன்றைக்கு சோழிங்கநல்லூர், செம்பரம்பாக்கம், ஆவடி, பருத்திப்பட்டு, மற்றும் ஜமீன்பல்லாவரம் ஆகிய நான்கு இடங்களில் சார்பு நகரங்கள் அமைக்கத் திட்டம் தந்துள்ளார்கள். மேற்கண்ட திட்டத்தை நடைமுறைப்படுத்த ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

அதன் தொடர்பாக 1996-97 ஆம் நிதி ஆண்டில் 20,500 வீடுகள் கட்டுவதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அதில் 12,794 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. மீதமுள்ள 7,706 வீடுகள் கட்டி முடிக்கப்படும் தருவாயில் உள்ளது.

அதேபோல் இந்த அரசு பொறுப்பேற்ற நேரத்தில் வீட்டுவசதி வாரியத்தால் பல்வேறு இடங்களில் கட்டப்பட்ட வீடுகள் விற்கப்படாமல் இருந்து வந்தன. அவைகளை விற்பனை செய்வதற்காக செய்தித்தாள்கள், தொலைக்காட்சி மற்றும் திரை அரங்குகளில் விளம்பரம் செய்தும், பல்வேறு இடங்களில் சுவரொட்டிகள் ஒட்டியும் ஏறத்தாழ 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகளை இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு விற்பனை செய்துள்ளது.

அதைப்போலவே சென்னை கோயம்பேட்டில் தெற்காசிய விளையாட்டு கிராமத்தில் 560 வீடுகள் கட்டப்பட்டன. இதில் 116 வீடுகள் வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களுக்காக முந்தைய அரசால் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது: ஆனால் வெளிநாட்டில் வாழும் இந்தியர்களிடமிருந்து அவ்வீடுகளைக் கோரி மனுக்கள் ஏதும் வரவில்லை. எனவே, அந்த வீடுகளை மத்திய அரசின் கீழ் இயங்கும் பொது நிறுவனங்களுக்கு விற்பனை செய்துள்ளோம். இதே இடத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்காக 48 வாடகை வீடுகளைக் கொடுத்திருக்கிறோம்.

பிற்பகல் 1-15

தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் நடந்தபோது, விளையாட்டு வீரர்கள் உணவருந்த கட்டப்பட்ட சமையலறையுடன்கூடிய மிகப் பெரிய இரண்டு கூடங்கள் விற்கப்படாமல் இருந்தன. வாரியம் எடுத்த முயற்சியின் காரணமாக தற்போது மத்திய அரசின் பயிற்சி நிறுவனம் ஒன்று 13.2 கோடி ரூபாய்க்கு அதனை வாங்க முன் வந்துள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, தெற்காசிய விளையாட்டுக் கிராமத்தில் கட்டப்பட்ட வீடுகளை விற்றதன் பயனாக வாரியத்திற்கு இதுவரையில் ரூபாய் 90 கோடிக்கு மேல் வருவாய் வரப்பெற்றுள்ளது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வீட்டுவசதி வாரியம், சென்னைப் பெருநகர், மதுரை, கோவை, திருச்சி, சேலம், வேலூர், ஈரோடு, திருநெல்வேலி, திருப்பூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய நகரங்களில் வாழும், பொருளாதாரத்தில் நலிவுற்ற மற்றும் குறைந்த வருவாய்ப் பிரிவைச் சார்ந்த மக்களின் வீட்டுமனைத் தேவைகளை



நிறைவு செய்வதற்காக சலுகை விலையில் வீட்டு மனைகளை வழங்கும் திட்டத்தை உலக வங்கியினுடைய உதவியுடன் நிறைவேற்றி வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 88 ஆயிரத்து 728 மனைகளை மேம்படுத்த உலக வங்கி அனுமதி அளித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மனைகளை விற்பனை செய்ய வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் வீட்டுவசதித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான கடன் உதவிகளை ஹட்கோ, எல்.ஐ.சி., தேசிய வீட்டுவசதி வங்கி போன்ற நிறுவனங்கள் வழங்கி வருகின்றன.

கடந்த காலங்களில் வீடு கட்டுவதற்கான கடன்களை வழங்குவதில் கால தாமதம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, விரைவில் தாமதமின்றிக் கடன் வழங்கவும், அதிகமான நிதியுதவியை வேண்டி மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆலோசனைப்படி மத்திய நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் மற்றும் ஹட்கோ நிறுவனத்தின் தலைவர் ஆகியோருடன் நான் நேரில் பேச்சுவார்த்தை நடத்தி, கூடுதலாகக் கடன் பெற்று, பயனாளிகளுக்குப் பணம் பட்டுவாடா செய்யப்பட்டு வருகிறது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுபோலவே புதிதாகத் துவக்கப்பட்டுள்ள மாவட்டத் தலைநகரங்களில் அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகள் கட்டுவதற்காக 'ஹட்கோ' கடன் உதவி வழங்கிட முன்வந்துள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் ஒப்பந்தப்புள்ளி வழங்கும் விஷயத்தில் ஒப்பந்தப்புள்ளி நடைமுறையில் நிர்வாகம் தலையிட்டு, அதன் அடிப்படை நோக்கத்தையே மாற்றிய முந்தைய ஆட்சியின் முறைகேடுகள் தொடராமல் இருக்க வேண்டும் என்பதற்காக ஒப்பந்தப்புள்ளிகள் வழங்குவதில் ஒளிவு மறைவு இல்லாத, நேர்மையான வழிமுறைகளைக் கையாள வேண்டும் என மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் வலியுறுத்தியுள்ளதை வீட்டுவசதி வாரியம் தவறாது பின்பற்றி வருகிறது.

இந்த அரசு பொறுப்பேற்றதற்கு முன்னால், திட்ட மதிப்பீட்டுத் தொகையை விட 10 அல்லது 15 விழுக்காடு அதிகமாகக் குறிப்பிட்டுத் தான் வீட்டுவசதி வாரியத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கப்பட்டன. ஆனால், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்த திறந்த

முறை ஒப்பந்த முறையின் காரணமாக, தற்பொழுது திட்ட மதிப்பீட்டுத் தொகையைவிட குறைவாகக் கேட்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதன் பயனாக கடந்த பத்து மாதங்களில் சுமார் 4 கோடி ரூபாய் அளவிற்கு அரசுக்குச் சேமிப்பு ஏற்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தரம் வாழ்க்கையின் அடித்தளம் என்ற வகையில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்படும் வீடுகள் தரத்தில் சிறந்ததாக இருக்க வேண்டும் என மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அளித்த அறிவுரைக்கிணங்க இந்த அரசு பொறுப்பேற்றபிறகு, நானே பணி நடைபெறும் பல்வேறு இடங்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டு, கட்டுமானப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படுகிற சிமென்ட், மணல், ஜல்லி, செங்கல் போன்றவற்றைத் தரக் கட்டுப்பாடு மையத்தின் மூலம் சோதனையிடச் செய்து அதில் தரம் குறைவாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் அதற்குப் பொறுப்பானவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தியுள்ளேன்.

மேலும், வாரியத்தால் கட்டப்படும் வீடுகள் தரத்தில் சிறந்ததாகவும், தேவையான அடிப்படை வசதிகளைக் கொண்டதாகவும் இருக்க வேண்டுமென்பதிலே இந்த அரசு விழிப்புடன் இருக்கிறது.

சென்னையில் பட்டினப்பாக்கம், கீழ்ப்பாக்கம், தாட்ண்டர் நகர், வெங்கடாபுரம் காலனி, ஈரோடு, சம்பத் நகர், திருப்பத்தூர், உடுமலை, திருச்சி, கோவை ரேஸ்கோர்ஸ் சாலை போன்ற தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களிலுள்ள அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகளைப் பார்வையிட்டு, அதிலுள்ள குறைகளைக் களையவும், தேவைகளை நிறைவு செய்யவும், குறிப்பாக குடிநீர்த் தேவைகளை உடனே பூர்த்தி செய்யவும், பராமரிப்புப் பணிகளில் கவனம் செலுத்தவும் தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாட்டில் உள்ள பெரிய நகரங்களில் வீட்டு வசதிகளைச் செய்து தருவதில் முனைப்புடன் செயலாற்றும் வீட்டுவசதி வாரியம் தமிழகத்திலுள்ள சிறிய மற்றும் நடுத்தர நகரங்களிலும் வீட்டு வசதியைச் செய்து தர 36 நகரங்களைத் தெரிவு செய்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் 70 ஆயிரம் குடும்பங்களுக்கு வீட்டுவசதி செய்து தரப்படும்.

அதுபோலவே ரூபாய் ஆயிரத்து ஐம்பத்து ஐந்து கோடி மதிப்பீட்டில் உறைவிடம் மற்றும் உள்ளமைப்புத் தேவைகளை நிறைவு செய்யவும்



திட்டமிடப்பட்டு மத்திய அரசின் மூலம் திட்ட அறிக்கை ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நமது மாண்புமிகு முதல்வர் அவர்களும், மத்திய நிதி அமைச்சர் அவர்களும் தொடர்பு கொண்டு இத்திட்டத்தை நிறைவேற்ற முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அது ஆசிய வங்கியின் பரிசீலனையில் உள்ளது.

வீடு இல்லாத மனிதன் முகவரி இல்லாத கடிதம். என்று சொல்வார்கள். அந்த முகவரி இல்லாத மனிதர்களுக்கும் முகவரி வழங்கி அவர்களின் முகங்களிலும் புன்னகை மலரச் செய்திட, பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்களின் ஏக்கத்தைத் துடைத்திட அவர்களும் வீடு கட்டி அடிப்படை வசதிகளுடன் வாழ்ந்திட "பொருளாதாரத்தில் நலிவுற்றோர் வீட்டுவசதித் திட்டத்தை" இந்த அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில் வழங்கி வந்த மானியத் தொகையான ரூபாய் 1600 என்பதை ரூ. 2000 ஆக உயர்த்தி மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

ஊரக வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் கட்டப்படும் வீடுகளுக்கு ஹட்கோ நிறுவனம் 9 சதவிகித வட்டி விகிதத்தில் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையத்திற்குக் கடனாக அளிக்கிறது.

கூட்டுறவு வீட்டுவசதி இணையம் 1.5 சதவிகிதத்தை மட்டுமே சேவைக் கட்டணமாகச் சேர்த்து, பயனீட்டாளர்களுக்கு 10.5 சதவிகித குறைந்த வட்டி விகிதத்தில் கடனை வழங்குகிறது. இதைவிடக் குறைந்த வட்டி விகிதத்தில் வேறு எந்த நிறுவனமும் தமிழ்நாட்டில் வீடு கட்டக் கடன் வழங்க முன்வருவதில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இதன்பயனாக, கிராமப் பகுதிகளிலுள்ள, பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்கள் மத்தியில் வீடு கட்டும் ஆர்வம் இன்றைக்கு வளர்ந்து வருகிறது என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். கிராமப் பகுதியில் வாழும் மக்கள் வீடு கட்டுவதற்கு உதவிட "ஊரக வீட்டுவசதிக் கழகம்" தொடங்கப்படும் என மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டதற்கிணங்க அந்தக் கழகம் ரூபாய் ஒரு கோடி மூலதனத்துடன் தனது பணியை விரைவில் தொடங்க உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-20

கிராமப்புறங்களில் வாழும் மக்களுக்கு வீடுகள் அமைத்துத் தருவதை மையக் கருத்தாகக் கொண்டு இந்தக் கழகம் செயல்படும். மாவட்டத்

தலைநகரங்களிலுள்ள கட்டிட மையங்களின் உதவியுடன் குறைந்த செலவில் வீடு கட்டும் தொழில் நுட்ப வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்களாட்சி முறையில் நம்பிக்கை கொண்ட தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், தேர்தல் காலத்தில் அளித்த வாக்குறுதியின்படி உள்ளாட்சித் தேர்தல்கள் நடந்து முடிந்த உடனேயே, பல்லாண்டு காலமாக தனி அதிகாரிகளின் நிர்வாகத்தின்கீழ் செயல்பட்டு வந்த கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களுக்கும் தேர்தல்களை நடத்தி, இன்றைக்கு ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளால் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நகரங்களின் ஒட்டுமொத்தமான வளர்ச்சியினை கருத்தில் கொண்டு நகர அபிவிருத்தி திட்டங்களை முறைப்படுத்துவதற்காக நகரப் பகுதி வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் சென்ற நிதியாண்டில் திருபுவனம் நகரத்திற்கான முழுமைத் திட்டம் தயாரிக்கப்பட்டது. மேலும் தூத்துக்குடி, செங்கல்பட்டு, ஏற்காடு, திண்டுக்கல், காஞ்சிபுரம், பொள்ளாச்சி, பெரியகுளம், போடிநாயக்கனூர் ஆகிய நகரங்களுக்கு முழுமைத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

34 நகரங்களுக்கு எடுக்கப்பட்ட வான்வழி புகைப்படங்களைப் பயன்படுத்தி அந்தந்த நகரங்களின் நிலப் பயன்பாடுகள் குறித்த முழுமைத் திட்டங்கள் மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

இதுவரை செங்கல்பட்டு, காஞ்சிபுரம், அரக்கோனம், விழுப்புரம், குன்னூர், கோத்தகிரி, ஊட்டி, சிவகாசி, வேலூர், ஒசூர் ஆகிய நகரங்களுக்கு நிலப்பயன் வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழிலாளர் வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் 1975-ல் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் கட்டப்பட்ட 4,117 வீடுகளும், அவ்வீடுகளில் குடியிருக்கும் தொழிலாளர்களுக்கே சொந்தமாக்கப்படும் என சென்றமுறை மானியக் கோரிக்கையில் இந்த மாமன்றத்தில் அறிவித்தேன். அதன்படி கருணையுள்ளம் கொண்ட தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் ரூ. 40 ஆயிரம், ரூ. 50 ஆயிரம் பெறுமானமுள்ள அந்த வீடுகளை வெறும் 9,600 ரூபாய் விலையில் குடியிருப்போர்களுக்கே சொந்தமாக்கி ஆணை



வெளியிட்டு இருக்கிறார்கள் என்பதனை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக ஆலோசனை வழங்கி ஊக்கமளித்த மத்திய தொழில் துறை அமைச்சர் மாண்புமிகு முரசொலி மாறன் அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இம்மாமன்றத்தில் உள்ள மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியான செய்தி ஒன்றினைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சென்றமுறை, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு புதிய குடியிருப்புகள் கட்டப்படுமா என்று, குறிப்பாக ஆயிரம் விளக்குத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர், வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் தளபதி ஸ்டாலின் அவர்கள் கேட்டார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அரசினர் தோட்டத்தில் ஐந்து ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் 45 கோடி ரூபாய் செலவில் சகல வசதிகளுடன்கூடிய 240 அடுக்குமாடி வீடுகள் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள் என்பதையும், விரைவில் கட்டுமானப் பணிகள் தொடங்க உள்ளன என்பதையும் மெத்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் வழியில் அயராது உழைக்கும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் அடிச்சுவட்டில் வளர்ந்து வருகிற நாங்கள் 'சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்' என்ற கோட்பாட்டில் கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட திட்டங்களையெல்லாம் நிறைவேற்றிட நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்பதைத் தெரிவித்து, சில புதிய திட்டங்களை இந்த மாமன்றத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் அனுமதியுடன் அறிவிக்க விரும்புகிறேன்.

நிலவள வங்கித் திட்டத்தின்கீழ் அரூர், ஆரணி, இராஜபாளையம், அருப்புக்கோட்டை, மணப்பாறை, திருவில்லிப்புத்தூர், திருவண்ணாமலை, பாலக்கோடு, போளூர், பெரியகுளம், தேனி, ஒட்டன்சத்திரம், தென்காசி, திருமங்கலம், சங்ககிரி, ஆகிய 15 நகரங்களில் பொருளாதார நிலையில் நலிந்த பிரிவினருக்கு ரூ.80 இலட்சம் செலவில் 1,486 மனைகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

அதேபோல சென்னை வில்லிவாக்கத்தில் 124 அடுக்குமாடி வீடுகளும், 16 கடைகளும் அடங்கிய பலமாடிக் கட்டிடம் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல ஏற்காடு வட்டத்தில் உள்ள கக்கம்பாடி கிராமத்தில் 7.18 ஹெக்டேர் நிலப்பரப்பில் 389 வீடுகள் கட்டப்படும்.

கோயம்புத்தூருக்கு அருகே பெரியநாயக்கன்பாளையத்தில் 2,076 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் பெரிய அளவிலான நில மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும்.

ஊரகப் பகுதிகளுக்கு தக்க வசதிகளைத் தரக்கூடிய வகையில் நடுத்தர நகரங்கள் ஏற்படுத்த, பொன்னேரி, செங்கம், உளுந்தூர்பேட்டை, தேன்கனிக்கோட்டை, பெருந்துறை, உசிலம்பட்டி, வேடசந்தூர், பாபநாசம், பெரம்பலூர், கொளத்தூர் ஆகிய 10 வட்டங்களை ஆய்வு செய்து நடுத்தர நகரங்கள் அமைக்க ஆய்வு செய்யப்படும்.

விழுப்புரம், திருவண்ணாமலை ஆகிய மாவட்டத் தலைநகரங்கள் மிக வேகமாக வளர்ச்சி அடைவதால், இந்த இரண்டு நகரங்களிலும் உள்ள சுற்றுப்புறப் பகுதிகளை உள்ளடக்கி, கூட்டு உள்ளூர் திட்டக் குழுமங்கள் அமைக்க முயற்சி மேற்கொள்ளப்படும்.

புதியதாக உருவாக்கப்பட்டுள்ள மாவட்டத் தலைநகரங்களான கரூர், நாகப்பட்டினம், திருவாரூர், நாமக்கல், பெரம்பலூர், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய 7 இடங்களில் அரசு ஊழியர்களுக்காக 738 அடுக்குமாடி வீடுகள் சுமார் ரூ.24 கோடி மதிப்பீட்டில் ஹட்கோ நிதி உதவியுடன் கட்டப்படும். மேலும், பெரம்பலூர், திருவள்ளூர், தேனி ஆகிய புதிய மாவட்டத் தலைநகரங்களில் அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகள் இதுவரையில் கட்டப்படவில்லை என்பதால் இந்த மாவட்டத் தலைநகரங்களில் வீடுகள் கட்டுவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்பதையும், திருவாரூரில் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திற்கு அருகாமையில் 100 வாடகைக் குடியிருப்புகள் கட்டுவதற்கு உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், சென்னை நகரைப் பொறுத்தவரையில் 4 ஆயிரம் அரசு ஊழியர்கள் வாடகைக் குடியிருப்பு வேண்டி காத்திருப்போர் பட்டியலில் உள்ளனர். எனவே, சைதாப்பேட்டை தாடண்டர் நகரில் 240 அடுக்குமாடி வீடுகளும், சென்னை பட்டினப்பாக்கத்தில் பழைய அடுக்குமாடி வீடுகளை இடித்துவிட்டு புதியதாக 192 அடுக்குமாடி வீடுகளும் கட்டப்படும். அதேபோல, பட்டினப்பாக்கத்தில் இரண்டாவது கட்டமாக கூடுதலாக 80 குடியிருப்புகள் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அதேபோல, அண்ணா சாலை அரசினர் தோட்டத்தில் சுமார் 250 அடுக்குமாடி வீடுகள் கட்டுவதற்கு இப்போது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



அதோடுமட்டுமின்றி சென்னை அண்ணாநகர் மேற்கு விரிவாக்கப் பகுதியில் 192 வீடுகளும், மொகப்பேர் பகுதியில் 88 வீடுகளும் அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ் கட்டி முடிக்கப்பட்டு விட்டன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், வாடகை வீடு கேட்டு வருகின்ற மனுக்கள் கணினி மூலம் பதிவு செய்யப்பட்டு, ஒதுக்கீடுகள் செய்வது முறைப்படுத்தப்படும்.

அரசு ஊழியர்களில் கடைநிலை ஊழியர்களான அலுவலக உதவியாளர்கள் மற்றும் ஓட்டுநர்களின் வீட்டுவசதித் தேவையை கருத்தில் கொண்டு சென்னை, மதுரை, கோவை, சேலம், திருச்சி போன்ற பெரிய நகரங்களில் ஒரு தனித் திட்டம் செயல்படுத்தப்பட்டு, முதற்கட்டமாக சென்னையிலும், மதுரையிலும் ரூ.1½ கோடி செலவில் 100 அடுக்குமாடி குடியிருப்புகள் இந்த ஆண்டு கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-25

அதேபோல், திருவாரூர்-ஏடி. பன்னீர்செல்வம் மாவட்டத்தில் உள்ள கோட்டூர் மற்றும் வெவ்வேறு மாவட்டங்களில் உள்ள செஞ்சி, மேட்டூர், பேராவூரணி, இடைப்பாடி, வந்தவாசி, செய்யார் போன்ற இடங்களில் வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டித் தர வேண்டும் என்ற கோரிக்கையை வெட்டுத் தீர்மானங்கள் மூலம் வெளிப்படுத்திய மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்தினை கவனத்தில் கொண்டு, போதிய தேவைகள் உள்ளதா, வேண்டிய நிலம் கிடைக்குமா என்பதை அறிந்து தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் வீட்டுவசதி வாரியம் எப்பொழுது வாணியம்பாடியில் நுழையப் போகிறது, நாங்கள் காத்துக்கொண்டிருக்கிறோம் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் சென்ற ஆண்டு விடுத்த கோரிக்கை ஏற்கப்பட்டு, இந்த ஆண்டு வாணியம்பாடியில் வாரியம் நுழையும் என்றும், அங்கு வீடுகள் கட்டுவதற்கு நிலம் கையகப்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள் கிறேன்.

மேலும், வீட்டுவசதி வாரிய ஊழியர்களின் நலன் கருதி, அவர்களுக்கு வாடகை வீடுகள் கட்டி வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில், சென்னை கலைஞர் கருணாநிதிநகர் பகுதியில் காலியாகவுள்ள வாரியத்திற்குச் சொந்தமான 30 மனைப்பரப்பில், முதற் கட்டமாக 15 மனைப்பரப்பில், சுமார் இரண்டு கோடி ரூபாய் செலவில் 48 அடுக்கு மாடிக் குடியிருப்புகளைக் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பணியில் இருக்கும்போது உயிர்நீத்த வாரிய ஊழியர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டத்தின்கீழ், ஆறு இளநிலை உதவியாளர்கள் மற்றும் 12 அலுவலக உதவியாளர்கள் பணிகளில் வேலைவாய்ப்பு அளிக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு போதிய தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கும்பொருட்டு, தரமணியில் உள்ள மத்திய அரசு நிறுவனம் மூலம் பயிற்சி அளிக்கப்படும். அதேபோல், வாரியத்தில் பணிபுரியும் 200 பணியாளர்களுக்கு அண்ணா மேலாண்மை நிறுவனத்தின் மூலம் நிர்வாக முறைகள் குறித்து கணிப்பொறிப் பயிற்சியும் 80 பொறியாளர்களுக்கு வேலை பழகுதல் பயிற்சியும் அளிக்கப்படும்.

வேலூர் மற்றும் மதுரை சிறப்புக் கோட்டம் ஆகிய இடங்களில் 'ஒதுக்கீடு பணி மேலாளர்' பதவி புதிதாக ஏற்படுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் வரலாற்றுச் சிறப்பும், மரபுவழிப் பெருமையும், தொன்மை மிக்க வழிபாட்டுத் தலங்களும், சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த நகரங்களும் பல இருப்பதால், அவற்றின் சிறப்பினைப் பாதுகாத்திடும் வகையில் 'வரலாற்றுச் சிறப்புமிக்க நகரங்கள் மேம்பாடு திட்டம்' என்னும் ஒரு புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்படும். இத்தகைய நகரங்களில் கட்டுமானப் பணிகளை வரைமுறைப்படுத்துதல், சுற்றுச்சூழல் மற்றும் தூய்மையைப் பாதுகாத்தல், சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்ற வசதிகளைச் செய்து தருதல் போன்றவற்றை அடிப்படையாக வைத்து, திட்ட அறிக்கைகளும், வரைபடங்களும் தீட்டிட முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக, இந்த நிதியாண்டில் பழனி, திருத்தணி, கும்பகோணம், இராமேசுவரம், திருச்செந்தூர், கன்னியாகுமரி, திருவண்ணாமலை, காஞ்சிபுரம், பூம்புகார், சிதம்பரம் மற்றும் மாமல்லபுரம் ஆகிய நகரங்களுக்கு மேம்பாடு திட்ட அறிக்கை தயாரிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், நகர்புறத்தைச் சுற்றியுள்ள சிறிய நகரங்கள் மற்றும் பெரிய கிராமங்கள் ஆகியவற்றில் வசிக்கும் பொருளாதாரத்தில் நலிவுற்ற பின்தங்கிய மக்கள் வீட்டுவசதி பெறும் வகையில் கடனுதவி அளிக்கும் புதியதொரு திட்டம் இந்த ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் வீடு கட்ட, 15 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும்



கடனாக ரூ.28,000/- வழங்கப்படும். இதில் பயனீட்டாளர்களின் பங்கு 3,000 ரூபாயாக இருக்கும். இத்திட்டத்தின்கீழ் பத்தாயிரம் நபர்களுக்குக் கடன்தொகை இந்த ஆண்டு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், புதிதாக பிரிக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் ஏற்படுத்தப்படும் புதிய வருவாய் வட்டங்களில், வட்டத்திற்கு ஒரு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

ஊரக வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு ரூ.2000/- அரசு மானியத்துடன் 45,000 வீடுகள் கட்டுவதற்கு ரூ.63.23 கோடி கடனுதவி அளிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், சென்னை மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுகின்ற வகையில் திட்டமிடவும், திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் பல்வேறு முறைகளில் பணியாற்றி வருகிறது. அதன் தொடர்ச்சியாக, சென்னை ஜார்ஜ் டவுன் பகுதியிலுள்ள இரும்பு மற்றும் எஃகு அங்காடியை புறநகர்ப் பகுதியான சாத்தான்காடுக்கு மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது. இப்படி சென்னையின் மையப்பகுதியில் உள்ள அங்காடியை மாற்றுவதன் மூலம், சென்னை நகரின் போக்குவரத்து நெரிசல் கணிசமாகக் குறையும் என்பதையும், இதற்காக 206 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும், 17 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தபடவுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்தினால் 800-க்கு மேற்பட்ட இரும்பு மற்றும் எஃகு வியாபாரிகள் பயன்பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் துணிகளை விற்பனை செய்வதற்காக கோயம்பேடு மொத்த விற்பனை வளாகத்தில் 21.5 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப் பட்டுள்ளது. இவ்வளாகத்தில் ரூபாய் 165 கோடி செலவில் சுமார் 1500 கடைகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை நகரின் மையப் பகுதிகளிலுள்ள துணி மொத்த விற்பனை அங்காடிகள் இந்த புதிய வணிக வளாகத்திற்கு மாற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், பரங்கிமலை-பூவிருந்தவல்லி சாலையில் 10.5 கிலோ மீட்டர் தூரமுள்ள சாலை, ரூபாய் 9.02 கோடி மதிப்பீட்டில் அபிவிருத்தி செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், சென்னை பேருந்து நிலையங்களிலும், சாலைகளிலும் ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் பொருட்டு, கோயம்பேடு பகுதியில் புறநகர் பேருந்து நிலையமும், உள்வட்டச் சாலையில் ஒரு மேம்பாலமும் ரூ.98 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும் என்பதையும், அதன் மூலம் போக்குவரத்துக் கழகங்கள் எரிபொருள் சிக்கனம் மற்றும் நடைமுறைச் செலவு மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூ.2 கோடி சேமிக்கும் நிலை உருவாகும்.

சென்னை மாநகர் மற்றும் குறிப்பிட்ட சில நகரங்களில் உள்ள குடிசைப்பகுதிகளை மேம்படுத்தியும், அங்கு தன்னிறைவான சுகாதாரமான வீடுகளை அமைத்தும், குடிநீர், வடிகால் வசதி போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்தியும் குடிசைப்பகுதி மாற்று வாரியம் செயல்பட்டு வருகிறது.

சென்னை மாநகரத்தில் கூவம், பக்கிங்காம் கால்வாய், அடையாறு, ஓட்டேரிநல்லா, மெரினா கடற்கரை மற்றும் துரித இரயில் போக்குவரத்துப் பகுதி-2-ல் வசிப்பவர்கள் மற்றும் நடைபாதைகளில் குடும்பம் நடத்தும் ஏழைகள் ஆகியோரின் நலனில் அக்கறை கொண்டு அவர்களை மாற்று இடங்களில் குடியமர்த்த, 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணும்' கலைஞர் அவர்களின் அரசு திட்டம் தீட்டியுள்ளது. சென்னை நகரின் இந்தப் பகுதிகளில் 62,300 குடும்பங்கள் உள்ளதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இத்திட்டத்தின்கீழ் வரும் ஐந்து ஆண்டுகளில் ரூபாய் 204 கோடி செலவில் 14,500 குடியிருப்புக்கள் கட்டப்படும். இந்த ஆண்டு 12 கோடி ரூபாய் செலவிலே கட்டப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். முதல் கட்டமாக நடப்பு நிதியாண்டில் செம்மஞ்சேரி, ஒக்கியம்-துரைப்பாக்கம் ஆகிய பகுதிகளில் 145 ஏக்கர் நிலப் பரப்பில் 3750 வீடுகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** தலைவர் அவர்களே, ரூபாய் 1.53 கோடி செலவில் இரண்டாயிரம் குடியிருப்புக்கள், குடிசைமாற்று வாரியத் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் சென்னையில் குடிசைமாற்று வாரிய வீடுகளுக்குக் குடிநீர் வசதி செய்துதர திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி



இந்த நிதியாண்டில் 18 குடிசைமாற்று வாரியப் பகுதிகளுக்கு குடிநீர் வசதி செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, அரசு அலுவலர்களுக்கு வாடகை வீடு அதிகமாகத் தேவையிருக்கிற காரணத்தால், இன்றைக்கு 'சப்-லெட்'டில் இருக்கின்றவர்களை காலி செய்து கொண்டிருக்கிறோம். அதுபோன்று, கொட்டிவாக்கம், சீனிவாசபுரம் பகுதியில் பத்திரிகையாளர்கள் புதிய வீடுகளைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். வீட்டுவசதி வாரிய வீடுகளைக் காலி செய்து கொடுத்தால், வீடில்லாத பத்திரிகையாளர்களுக்கு ஒதுக்கீடு செய்ய வசதியாக இருக்கும். அதற்காக அவர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, பொதுமக்களும் வீடுகளை காலி செய்தால்தான், வீடு கேட்டிருக்கிற அரசு அலுவலர்களுக்கு நாங்கள் வீடுகளை ஒதுக்கீடு செய்ய முடியும். இதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள பல்வேறு கோரிக்கைகளை நாங்கள் ஏற்றுக்கொண்டு அவைகளை ஒவ்வொன்றாக நிறைவேற்றுவோம். வீட்டுவசதி வாரிய வீடுகள் தரமானதாக அமைவதற்கு இந்த அரசு தகுந்த நடவடிக்கையை மேற்கொள்ளும். மேலும், மாண்புமிகு உறுப்பினர்கள் அவரவர் பகுதிகளில் காலியாக உள்ள இடங்களைப் பற்றித் தெரிவித்தால், அந்தப் பகுதிகளில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் உடனடியாக வீடுகளைக் கட்ட நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் இங்கு முன்மொழிந்துள்ள இரண்டு மானியக் கோரிக்கைகளின் மீதும் தங்கள் மேலான கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வழங்கிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் தெரிவித்துள்ள கருத்துக்களுக்கு ஏற்புடைய வகையில் என்னுடைய விளக்கங்களை அளித்துள்ளேன் என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானத்தின் மூலம் சுட்டிக்காட்டியவற்றை பரிசீலித்து உரிய வகையில் பதிலளித்துள்ளேன் என்றும் கருதுகிறேன். இந்த அவையில் உறுப்பினர்கள் தெரிவித்துள்ள நல்ல கருத்துக்கள் குறிப்பேட்டில் என்றென்றும் நிலையான இடம் பெற்றிருக்கும் என்பதால், சம்பந்தப்பட்ட துறைகள் அவற்றின்மீது உரிய கவனம் செலுத்தி, நடவடிக்கையைத் தொடர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் அளித்த

வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று "வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி" மானியக் கோரிக்கைகளை ஏற்று முழுமையாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு என்னுடைய பதிலுரையை நிறைவு செய்கிறேன், நன்றி, வணக்கம்.

## (அ) கோரிக்கை எண் 32 - வீட்டுவசதி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது, இப்போது வாக்கெடுப்பு. மானிய கோரிக்கை எண் 32 - வீட்டுவசதி. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன், திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.



**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை.

திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"வீட்டு வசதி பற்றிய 32ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.50,63,58,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**(ஆ) கோரிக்கை எண் 33 - நகர்ப்பகுதி வளர்ச்சி**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 33 - நகர்ப்பகுதி வளர்ச்சி. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை.



திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய 33-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.30,30,23,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) பேரவை அலுவல்கள் குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. நாளை காலை 11-00 மணியளவில் அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டம் என்னுடைய அறையில் நடைபெறவிருக்கிறது. அலுவல் ஆய்வுக் குழுவில் மாண்புமிகு உறுப்பினர்கள் அதில் கலந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (2-4-1997) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-34 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

128. 1995-96-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு எஃகு நிறுவனத்தின் பதினைந்தாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

[1997 ஏப்ரல் 1

129. 1995-96-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் ஆண்டு கணக்குகள் [1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்).

130. 1995-96-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. [1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (ஆங்கிலம்).

131. 1995-96-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் இருபத்தைந்தாவது ஆண்டறிக்கை. [1971-ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971 49 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்)

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

94. மானியக் கோரிக்கை எண் 5 - முத்திரைத்தாள் - நிர்வாகம் மற்றும் மானியக் கோரிக்கை எண் 6 - பத்திரப் பதிவு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள், 1997-98. (தமிழ், ஆங்கிலம்)

95. மானியக் கோரிக்கை எண் 47-ன் கீழ் பட்டு வளர்ச்சித் துறை மற்றும் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் பற்றிய கொள்கையும் திட்டங்களும், 1997-98.(தமிழ், ஆங்கிலம்)

96. ஊரக மற்றும் சிறு தொழில்கள் பற்றிய சாதனைத் திட்டம், 1997-98. (தமிழ், ஆங்கிலம்)

97. பட்டு வளர்ச்சித் துறை பற்றிய சாதனைத் திட்டம், 1996-97. (தமிழ், ஆங்கிலம்)

98. வீட்டுவசதி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1997-98. (தமிழ், ஆங்கிலம்)

99. நகர்ப்புற வளர்ச்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1997-98. (தமிழ், ஆங்கிலம்)

100. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் (எட்டாவது பட்டியல்) (வரிசை எண்கள்: 1 முதல் 50 வரை)



1997 ஏப்ரல் 1]

# இணைப்பு-1

*(101 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## மானியக் கோரிக்கை எண் 32

## வீட்டுவசதி

## கொள்கை விளக்கக் குறிப்பு 1997-98

### 1. முன்னுரை

**1.1.** மக்கள் தொகைப் பெருக்கத்தாலும், கிராமப்புறத்திலிருந்து நகர்ப்புறத்தில் மக்கள் குடியேறுவதாலும், ஊரக மற்றும் நகர்ப்புறங்களில் அதிகரித்து வரும் வீட்டு வசதிப் பற்றாக்குறையினைப் போக்க பல நிலைகளில் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இப்பிரச்சினையின் அவசரத் தன்மையை உணர்ந்து, தமிழ்நாடு அரசு " குடும்பத்திற்கு ஒரு வீடு " என்ற குறிக்கோளை இலக்காகக் கொண்டுள்ளது. அந்தக் குறிக்கோளை எய்த தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் போன்ற நிறுவனங்கள் பல்வேறு வருமானப் பிரிவினருக்கு வீட்டுவசதி அளிக்க திட்டங்களை நிறைவேற்றி வருகின்றன.

### 1.2 தேசிய அளவில் நிலைமை

1994 ஆகஸ்ட் திங்கள் நாடாளுமன்றத்தின் இரு அவைகளாலும், ஏற்று நிறைவேற்றப்பட்ட தேசிய வீட்டுவசதிக் கொள்கை, அரசும், அரசுத்துறை சார்ந்த முகவரமைப்புகளும் வீட்டு வசதி பற்றாக்குறையை குறைக்க எடுக்க வேண்டிய திட்டச் செயல்முறையினைத் தெளிவுபடக் கூறுகிறது. தொடக்க மதிப்பீட்டின்படி ஒன்பதாம் திட்ட காலத்தில் நகர்ப்புறப் பகுதியில் மட்டுமே சுமார் 1.67 கோடி வீடுகளைக் கட்ட அல்லது மேம்படுத்த வேண்டியுள்ளது. இதற்கு ரூ. 1,21,000 கோடிக்கும் அதிகமாக நிதி உதவி தேவைப்படும். ஊரகப் பகுதிகளில் வாழும் நலிவுற்ற பிரிவினர்களுக்கான ஊரக வீட்டுவசதிக்காக மட்டும் கூடுதலாக ரூ. 29,000 கோடி தேவைப்படும். மொத்தத்தில், வீட்டுவசதிக்காக ரூ. 1,50,000 கோடி தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதில், முறைசார்ந்த நிதி நிறுவனங்கள், வங்கிகள் போன்றவற்றிலிருந்து நிதி

சுமார் ரூ. 50,000 கோடி மட்டுமே பெற முடியும். இதனால் நிதி தேவையில் ஒரு பெரிய இடைவெளி ஏற்படுகின்றது. அதுபோலவே விலைக்குத் தகுந்ததாக நீடித்து உழைக்கக்கூடிய கட்டுமான பொருட்கள் மற்றும் கட்டிட தொழில்நுட்பங்கள் பெறுவதிலும் பல பிரச்சினைகள் உள்ளன. கிடைக்கக்கூடிய பல தொழில்நுட்பங்களுக்கும் களத்தில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பங்களுக்கும் இடையே இன்னும் பெரிய இடைவெளியுள்ளது. எனவே முனைப்பான கட்டடத் தொழில் நுட்ப மாற்றம் தேவைப்படுகின்றது. நிலம், குறைந்தபட்ச அடிப்படை வசதிகள், குடிநீர் வழங்கல், சுகாதாரம், வடிகால் வசதி, போக்குவரத்து வசதி போன்றவை மக்கள் வாழும் குடியிருப்பிற்கு முக்கியமானவை.

**1.3** இவையாவற்றையும் அளிக்க பொதுத்துறை, தனியார், கூட்டுறவு, அரசு சாரா நிறுவனங்கள் போன்ற வெவ்வேறு முகவரமைப்புகள் ஆகியவற்றின் பங்களிப்பு மிக அவசியம் ஆகும். இங்குதான், பொதுத்துறை சார்ந்த வீட்டுவசதி முகவரைப்புகள் 'வசதி செய்தல்' (Facilitator) எனும் வகையிலும் 'ஊக்குவித்தல்' (Enabler) எனும் வகையிலும் ஆற்றவேண்டிய பங்கினைச் செய்தல் குறித்த கோட்பாட்டை செயலுக்குக் கொண்டுவர வேண்டியுள்ளது.

**1.4** நிறைவான வீட்டுவசதி என்பது மனிதனுக்கு மேல்கூரை ஒன்றை உருவாக்குவது மட்டுமல்ல. பிறர் குறுக்கீடின்றிப் போதிய அளவிலான தனிமையும் சுகாதாரமும், வெளிச்சமும், காற்றோட்டமும், பாதுகாப்பும் உள்ள வீடுகளை உருவாக்குவதே ஆகும். மேலும் குடிநீர் வசதி, சுகாதாரம், கழிவுநீர் வடிகால், கழிவுப் பொருட்களை அகற்றும் வசதி ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டதாகவே நமது கொள்கை இருக்க வேண்டும். பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர்களுக்கு குறிப்பாக பெண்கள், குழந்தைகள் மற்றும் வசதி வாய்ப்புகளற்றோர் ஆகியோருக்கு சேவை செய்வதை நோக்கமாகக் கொண்டதாகவும் இருக்க வேண்டும். இதன்படி பொதுத்துறை, தனியார் துறை மற்றும் சமுதாய நலனில் அக்கறை உள்ள அமைப்புகள் ஆகியவை ஒருங்கிணைந்த புதியதொரு கூட்டாண்மை அமைப்பை உருவாக்குவதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். இருப்பினும், ஏழைகள்' மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களின் நலன்களை மனதில் கொண்டே கொள்கை வகுப்பவர் செயல்பட வேண்டியுள்ளது. நாம் 21-ஆம் நூற்றாண்டில் அடியெடுத்து வைக்கும் இத்தருணத்தில் பெரிய அளவிலான வீட்டுவசதித் திட்டங்களை வகுத்து செயல்படுத்துவதே அரசின் பெரும் பணியாக இருக்கும்.



## 2.' மாநிலத்தின் வீட்டுவசதிக் கொள்கை

**2.1** வீட்டுவசதித் தேவைகளின் உண்மை நிலை மற்றும் மாநிலத்தின் வெவ்வேறு பகுதிகளின் மாறுபாடுகளைக் கருத்தில் கொண்டு வீட்டுவசதித் தேவை குறித்து மதிப்பீடு செய்ய வேண்டியதன் அவசியத்தைக் கருத்திற்கொண்டு வீட்டுவசதி தேவைகள் குறித்த மெய்ப்பாட்டு நோக்கில் அமைந்ததொரு ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. இந்த ஆய்வில் தற்போதையை வீட்டுவசதிகள், அவற்றின் தன்மை, வீடுகளின் தரம் குடும்பங்களின் எண்ணிக்கையில் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய வளர்ச்சி ஆகியன குறித்து மதிப்பிடுவதில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. இந்த ஆய்வின்படி, 2011-ஆம் ஆண்டில் தேவையளவு 175 இலட்சம் வீடுகளாக இருக்கும் எனத் தோராயமாக மதிப்பிடப்பட்டுள்ளது. மக்கள் தொகை அதிகரிப்பு, மக்கள் கிராமங்களிலிருந்து நகரங்களுக்குக் குடிபெயர்தல், நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில் காணப்படும் வீடுகளின் பற்றாக்குறை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது வீட்டு வசதி என்பது சமுதாயத்தின் தேவை குறித்த ஒரு சவால்விடும் பணியாக மாறி வருகிறது. எனவே, தற்போது பல்வேறு நிலைகளில் கவனம் செலுத்தி விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசர அவசியம் ஏற்பட்டுள்ளது. இச்சூழ்நிலையில் தமிழ்நாடு அரசு சமுதாயத்தின் பல்வேறு நிலைகளில் உள்ள மக்களுக்கு வீட்டுவசதி ஏற்படுத்தும் கொள்கையினை மேற்கொண்டுள்ளது.

## 2.2. மாநில அரசு பின்வரும் நோக்கங்களை வரையறுத்துள்ளது

1. சமுதாயத்தில் வாழும் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் வாங்கும் திறனுக்கேற்ற விலையில் குறைந்த அளவு அடிப்படை வசதிகளுடன் கூடிய வீட்டு வசதிகளை உருவாக்குதல்.

2. பொருளாதாரத்தில் நலிவடைந்த ஏழைமக்கள், வீடில்லாத, சரியான வீட்டுவசதி பெற்றிராதோர் அனைவருக்கும் சொந்தமாகக் குடியிருப்புகள் விரைவாகப் பெறுவதற்கான வழிவகைகள் செய்தல்.

3. சமுதாயத்தின் பலதரப்பு மக்களுக்காகவும், புதிய வளர்ச்சித் திட்டங்களை உருவாக்கி, அத்திட்டங்களில் அவர்களை முதலீடு செய்யுமாறு ஊக்குவித்தல்.

4. ஏழைகள், கீழ்மட்டத்திலுள்ள மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை உருவாக்கி அவர்களது சமுதாய, பொருளாதார நிலையை உயர்த்துதல்.

5. தேசிய அளவில் வீட்டு வசதி குறித்து நிலையான வளர்ச்சியை எய்தும் பொருட்டு, வீட்டுவசதியில் முதலீடு செய்ய ஊக்கமளித்தல், வீடுகளை உரியவாறு பாதுகாத்தல், புதுப்பித்தல், நிலை உயர்த்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துதல்.

6. அதிகரித்துவரும் வாடகை வீட்டுவசதித் தேவையை சமாளிக்கும் வகையில் திட்டமிடல்.

7. வீட்டுவசதித் திட்டங்களுக்கு தடைக்கற்களாக உள்ள சட்டச் சிக்கல்கள், நிதிப்பற்றாக்குறை, ஏனைய தடைகளைக் களைதல்.

8. வீட்டுவசதித் தொழில் நுட்பத்துறையில் ஆய்வு, வளர்ச்சிப் பணிகளுக்குப் புதிய ஊக்கம் அளித்தல்.

9. ஆங்காங்குள்ள கட்டிடத் தொழிலாளர்களின் திறமையை உபயோகித்து, சுற்றுப்புறத்திற்கேற்ற வீட்டுவசதித் திட்டங்களைக் கொணர்தல் மற்றும் ஊக்குவித்தல்.

## 2.3 வீட்டுவசதித் தேவைகளின் மதிப்பீடு

சிறந்த வீட்டுவசதித் திட்டமென்பது, மக்களின் தேவைகளை மதிப்பிட்டு, பல்வேறு வீட்டுவசதிப் பிரச்சனைகளைத் தீர்க்கும் வழிமுறைகளை அவர்கள் ஏற்றுக் கொள்ளும் திறனின் அடிப்படையிலும் கால வரையறைக்குள் முடிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டதாகவும் இருக்க வேண்டும். தீர்வுகளை ஏற்றுக் கொள்ளும் திறன் விரிவானதாக, அதாவது அவர்களின் தற்போதைய வருமான நிலை, கடனைத் திருப்பிச் செலுத்தும் திறன், வீட்டினைத் தொடர்ந்து தக்க வைத்து வருவதற்குரிய வருங்காலத் திறன் ஆகிய கூறுகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

## 2.4 வசதி செய்தல் மற்றும் ஊக்குவித்தல்

செலவுக்கேற்ற பயனளிக்கும் வீட்டுவசதிக்கு வகை செய்து அவற்றின் பயன்கள் மக்களுக்குச் செவ்வனே சென்று சேர்வதை உறுதிப்படுத்த, சாதகமான சூழ்நிலையை உருவாக்குவதில் அரசு கவனம் செலுத்தும். அதன்படி, வீட்டுவசதிக்கு ஏற்பாடு செய்யும்பொழுது தேவையான இடுபொருள்கள் கிடைக்கும் வகையில் அனைத்துக் கூறுகளும் ஊக்குவிக்கப்படும். இவை, நெறிமுறைப்படுத்தப்பட்ட நகர்ப்பகுதி வளர்ச்சி மற்றும் நிலம் இணைப்பு ஆகிய கூறுகளையும் கொண்டிருக்கும் என்பதோடு, குறைந்த செலவிலான கட்டிடப் பொருட்கள் குறித்து ஆராய்ச்சி செய்து, அவற்றை உருவாக்குதல், கட்டுமானத் திறனை



மேம்படுத்துதல், வீடு கட்டும் நடவடிக்கைகளுக்குத் தடைகளாக உள்ளவற்றை நீக்க சட்டங்களையும், ஒழுங்குமுறை விதிகளையும் மாற்றியமைத்தல் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்கும். கூட்டுறவு சங்கங்களும், தொகுதி வீட்டுவசதி மேம்பாட்டு அமைப்புகளும், வீடு கட்டுவதில் ஊக்குவிக்கப்படும். அரசு சாரா நிறுவனங்கள் இதில் பங்கேற்பது அமைப்பு ரீதியில் கொண்டு வரப்படும்.

## 2.5 இலக்கிடப்பட்ட தொகுதிகள்

தனியார் துறை விற்பனையை நோக்கமாகக் கொண்ட முறையில், வீடுவாங்க இயலாத, அரசின் உதவி பெற்றால்தான் வீடு வாங்க இயலும் என்போர், வீடற்ற குடிசை வாழ்மக்கள், பொருளாதார வகையில் நலிந்த பிரிவினர் ஆகியோர் உட்பட இலக்கிடப்பட்ட சிறப்புத் தொகுதியினருக்கு வீடு கட்டித் தரும் பணியை அரசு தொடர்ந்து செய்யும்.

## 2.6 வீட்டு வசதிக்கு நிலம்

மக்களுக்கு வசதியானதாகக் கருதப்படும் இடங்களில் வீட்டுவசதிக்காக நியாயமான விலைகளில் மேம்படுத்தப்பட்ட மனைகளை உரிய காலத்தில் வழங்குவது பெரும் பணியாகும்.

## 2.7 வீட்டுவசதிக்காக நிறுவன நிதியுதவி

தற்போதுள்ள வீட்டுவசதி நிதியுதவி அமைப்பில் முறையான மற்றும் முறைசாராத் துறைகளில் பொருளாதாரப் பணிகளில் ஈடுபட்டிருப்பவர்களில் கடன் பெறப் பொதுவாகத் தகுதி பெற்றிராத பிரிவினருக்கு தேசிய வீட்டுவசதி வங்கி, வீட்டு வசதி நிதியுதவி நிறுவனங்கள் கட்டமைப்பு மூலமாக, நிறுவன வீட்டுவசதி நிதியுதவி முறை சென்றடைய வேண்டும். வெளிநாட்டு இந்தியர்களிடமிருந்து வீட்டுவசதிக்காக நிதி பெறுவதும் ஊக்குவிக்கப்படும்.

## 2.8 வீட்டுவசதியின் இன்றைய நிலை

தமிழ்நாட்டில் உள்ள மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் நகர்ப்பகுதிகளில் வசிக்கின்றனர். 434 நகர்ப்பகுதி மையங்களில், சென்னைப் பெருநகர் பகுதி, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் ஆகியவை உட்பட வகை 1 நகரங்கள் 21-ல் 80 இலட்சம் மக்களும் (இது நகர்ப்பகுதி மக்கள் தொகையில் 45 சதவிகிதம் ஆகும்) வகை 2 நகரங்கள் 41-இல் 20 இலட்சம் மக்களும் வகை 3 நகரங்கள்

[1997 ஏப்ரல் 1

90-இல் 30 இலட்சம் மக்களும் வாழ்கின்றனர். ஆக, நகர்ப்பகுதி மொத்த மக்கள் தொகையில் 90 சதவிகிதம் 152 மாநகரங்கள் மற்றும் நகரங்களில் வாழ்கின்றனர். நகரங்கள் வகை 1, 2, 3 ஆக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

நகர்ப்பகுதி வளர்ச்சியில் வீட்டுவசதி மிக முக்கியமான பகுதியாகும். வீட்டு வசதியற்றவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக உள்ளது. பழைய சேதமடைந்த வீடுகளைப் புதுப்பித்தல், குடிசை வீடுகளை மாற்றி நிரந்தர வீடுகளைக் கட்டுவதன் அவசியமும் அதிகரித்துள்ளது. வருங்கால நகர்ப்பகுதியில் மக்களுக்கு வீடு அளிக்கவும், வீட்டுவசதியில் நடப்புப் பற்றாக்குறையை நீக்கவும், ஆண்டொன்றுக்கு 2,65,000 வீடுகள் என்ற வீதத்தில் கட்டப்பட வேண்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நகர்ப்பகுதி மக்கள் தொகையில் எதிர்பார்க்கப்படும் உயர்வுக்கு வகை செய்வதுடன் பற்றாக்குறையை நீக்குவதற்கு பெரிய அளவில் முயற்சிகளும், முதலீடும் தேவைப்படுகிறது.

மொத்தத் தேவையில், 80 சதவீதம் வீடுகள் பொருளாதார வகையில் நலிந்த பிரிவினருக்கும் குறைந்த வருமானத் தொகுதியினருக்கும் தேவைப்படுகிறது. இதில் ஒரு பகுதி தனியார் முயற்சி மற்றும் நிதியுதவி அளிப்பதன் மூலம் நிறைவு செய்யப்படும் என்றாலும், இவ்விரு வகையினருக்கான வீட்டுவசதியில் கணிசமானதொரு பகுதியை அரசு அளிக்க வழிவகை செய்ய வேண்டும்.

மேற்குறிப்பிட்ட முறையில் தயார் நிலை வீடுகளை அளிப்பது கடினமான பணியாக இருக்கும் என்பதால், பொருளாதார வகையில் நலிந்த பிரிவினருக்கும், குறைந்த வருமானத் தொகுதியினருக்கும், மேம்படுத்தப்பட்ட மனைகளை வழங்கி, வீடுகளைக் கட்டுவதற்குத் தனியாரை ஊக்குவிப்பதற்கு வலியுறுத்தப்படலாம்.

## 3. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்

**3.1.** தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், கடந்த 35 ஆண்டுகளில், நிலம் பெற்று அளிப்பதிலும், வீடுகளைக் கட்டி முடிப்பதிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளது. வாரியம், பல்வேறு வீட்டுவசதித் திட்டங்களை மிகப் பெரிய அளவில் செயல்படுத்தி, இதுவரை 3,33,856 குடியிருப்புகளை மாநிலம் முழுவதும் உருவாக்கியுள்ளது. வாரியத்தின் முதலீட்டுச் செலவு 1970 ஆம் ஆண்டில் ரூ.4.83 கோடியிலிருந்து, 1997-98 ஆம் ஆண்டில் ரூ.250 கோடியாக உயர்ந்துள்ளது.



1997 ஏப்ரல் 1]

மாநிலத்தில் அதிகரித்துவரும் வீட்டு வசதித் தேவைகளைப் பூர்த்தி செய்ய, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் தனது செயல்பாடுகளை மேலும் தீவிரப்படுத்தி வருகிறது. வாரியம் வீடுகளை அழகாகவும், நேர்த்தியாகவும் அமையும் வகையில் கட்டிடத்தில் உள்ள இடப்பரப்பை நன்கு பயனுள்ள வகையில் பயன்படுத்திக் கொள்ளும் வகையிலும் வீடுகளை வடிவமைக்க சிறப்பு வாய்ந்த கட்டிடக் கலைஞர்களை ஈடுபடுத்தி வருகிறது.

தனது திட்ட மதிப்பீட்டில் 55 சதவீதத்தை பொருளாதாரத்தில் நலிவுற்றோர் மற்றும் குறைந்த வருமானத் தொகுதியினருக்கு செலவிடுவதும், நடுத்தர வருமானத் தொகுதியினர் மற்றும் உயர் வருமானத் தொகுதியினருக்கு 45 சதவீதத்தை செலவிடுவதும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் கொள்கையாக உள்ளது.

தேசிய வீட்டுவசதிக் கொள்கையின்படி வீட்டுவசதிக்குத் தேவையான நிலம், நிதி, கட்டிடப் பொருட்கள் மற்றும் தொழில்நுட்ப உத்திகள் ஆகியவற்றை பொதுமக்கள் பெறுவதற்காக பொதுத்துறை நிறுவனங்கள் வீட்டு வசதிக்கு வழிவகை செய்யும் முகவமைப்புக்களாக செயல்பட வேண்டும். இக்கொள்கையின்படி, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் சமுதாயத்தின் பல்வேறு பிரிவினருக்கும் மேம்படுத்தப்பட்ட வீட்டு மனைகள் கிடைக்கும் வகையில் பல்வேறு நில மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

### 3.2. திட்டங்கள்

வீட்டுவசதி வாரியம் கீழ்க்கண்டோர் பயனடையும் வகையில் திட்டங்களைச் செயல்படுத்தக் கருதியுள்ளது. (1) பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர், (2) குறைந்த வருவாய் பிரிவினர், (3) நடுத்தர வருவாய் பிரிவினர், (4) உயர்வருவாய் பிரிவினர் மற்றும் (5) அரசுப் பணியாளர்.

### 3.2.1. பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கான வீட்டுவசதித் திட்டம்

இத்திட்டம் ஆண்டொன்றிற்கு ரூ.25,200 வரை வருமானம் பெறும் குடும்பத்தினர்களுக்கென உருவாக்கப்பட்டுள்ளது. தவணைக் கொள்முதல் திட்டத்தில் முழுத் தொகையில் 10 சதவீதத்தை முன் பணமாகவும் மீதித் தொகையை 9 சதவீத வட்டியுடன் கூடிய சமமான மாதாந்திரத்

[1997 ஏப்ரல் 1

தவணையாக 15 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும்படியும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் 1971-72 ஆம் ஆண்டிலிருந்து 31-1-1997 முடிய 1,13,179 குடியிருப்புகளை ஏற்படுத்தியுள்ளது. இதற்காக ரூ.24.52 கோடி செலவிடப்பட்டுள்ளது. 1997-98 ஆம் ஆண்டில் நில வங்கித் திட்டத்தின் கீழ் (லேண்ட் பேங்க் ஸ்கீம்) ரூ. 80 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் 1,486 குடியிருப்புகளை உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 3.2.2. குறைந்த வருவாயினருக்கான வீட்டுவசதித் திட்டம்

இத்திட்டம் ஆண்டொன்றிற்கு ரூ.25,200 முதல் ரூ.54,000 வரை வருமானமுள்ள குடும்பத்தினர் பயன்பெறும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. தவணைக் கொள்முதல் திட்டத்தில், முழுத் தொகையில் 30 சதவீதம் முன் பணமாகவும், மீதித் தொகையை 13 சதவீத வட்டியுடன் கூடிய சமமான மாதாந்திரத் தவணையாக 15 ஆண்டுகளில் (கட்டுமானக் காலம் இரண்டு ஆண்டுகள் உட்பட) திருப்பிச் செலுத்தும்படியும் வகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டம் செயல்படத் தொடங்கிய நாளிலிருந்து 1997 ஜனவரி வரையில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் 78,828 குடியிருப்புகளை (மனைகள் மற்றும் வீடுகள்) கட்டியுள்ளது. குறைந்த வருமானத் தொகுதியினருக்கான குடியிருப்புகளைக் கட்டிய வகையில் ரூ.127.86 கோடி செலவிட்டுள்ளது. 1997-98 ஆம் ஆண்டில் குறைந்த வருமானத் தொகுதியினருக்கு ரூ.6.50 கோடி செலவில் 1,169 குடியிருப்புகளைக் கட்டக் கருதியுள்ளது.

### 3.2.3. நடுத்தர வருமானத் தொகுதியினருக்கான வீட்டுவசதித் திட்டம்

நடுத்தர வருமானத் தொகுதியினருக்கான திட்டம் ரூ.54,000-க்கும் ரூ.90,000-க்கும் இடையேயான ஆண்டு வருமானம் பெறுபவர்களுக்குரியதாகும். குடியிருப்பிற்கான விலையில் முழுத் தொகையில் 35 சதவீதத் தொகையை முதற்கண் செலுத்தவும், எஞ்சியுள்ள தொகையை 16.5 சதவீத வட்டியுடன் சமமான மாதத் தவணைகளில் 10 ஆண்டுகளில் செலுத்தவும் (கட்டுமானத்திற்குரிய கால அளவான 2 ஆண்டுகள் உட்பட) தவணைக் கொள்முதல் திட்டத்தின் கீழ் வகை செய்யப்பட்டுள்ளது. 1997-98 ஆம் ஆண்டில், இந்த வகைப்பாட்டின் கீழ், ரூ.44.04 கோடி செலவில் 5,255 குடியிருப்புகளைக் கட்டுவதற்குக் கருதப்பட்டுள்ளது.



1997 ஏப்ரல் 1]

### 3.2.4. உயர் வருமானத் தொகுதியினருக்கான வீட்டுவசதித் திட்டம்

உயர் வருமானத் தொகுதியினருக்கான வீட்டுவசதித் திட்டம் ரூ. 90,000-க்கும் மேலாக ஆண்டு வருமானம் பெறுபவர்களுக்குரியதாகும். குடியிருப்பிற்கான விலையின் முழுத் தொகையில் 40 சதவீதத் தொகையை முதற்கண் செலுத்தவும் எஞ்சியுள்ள தொகையை 17 சதவீத வட்டியுடன் சமமான மாதத் தவணைகளில் 10 ஆண்டுகளில் (கட்டுமானத்திற்குரிய கால அளவான 2 ஆண்டுகள் உட்பட) செலுத்தவும் தவணைக் கொள்முதல் திட்டத்தின்கீழ் வகை செய்யப்பட்டுள்ளது. 1997-98 ஆம் ஆண்டில், இந்த வகைப்பாட்டின் கீழ் ரூ.56 கோடி செலவில் 5,828 குடியிருப்புகளைக் கட்டுவதற்குக் கருதப்பட்டுள்ளது.

இத்திட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து 31-1-1997 வரையில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் ரூ.607.92 கோடி செலவில் 88,878 குடியிருப்புகளை (வீட்டு மனைகள், அடுக்கு மாடிக் குடியிருப்புகள், வீடுகள்) நடுத்தர வருமானத் தொகுதியினருக்காகவும், உயர் வருமானத் தொகுதியினருக்காகவும் கட்டியுள்ளது.

### 3.2.5. தமிழ்நாடு அரசுப் பணியாளர்களுக்கான வாடகை வீட்டுவசதித் திட்டம்

இத்திட்டம் மாநிலத் தலைநகர், மாவட்டம் மற்றும் வருவாய்க் கோட்டத் தலைமையிடங்களில் வாடகைக் குடியிருப்புகளுக்கு வகை செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் அரசின் சார்பாக இத்திட்டத்தைச் செயல்படுத்துகிறது மற்றும் மேற்சொன்ன கட்டிடங்களைப் பராமரித்து வருகிறது.

இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து 31-1-1997 வரையில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் ரூ.151.68 கோடி செலவில் 26,113 குடியிருப்புகளைக் கட்டியுள்ளது. 1997-98 ஆம் ஆண்டில், 1,088 அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டி முடிக்கக் கருதப்பட்டுள்ளது. 1997-98 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.20.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.2.6. சிறிய மற்றும் நடுத்தர நகர் வீட்டுவசதித் திட்டம்

நிலை 1 **(Phase I)**

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் வீட்டு வசதியைச் செய்து தரும் நோக்குடன், அரசு இம்மாநிலத்திலுள்ள அனைத்து சிறிய மற்றும்

நடுத்தர நகரங்களிலும் வீடுகளைக் கட்டுவதற்கான திட்டத்தை 1989-90 ஆம் ஆண்டு முதல் தொடங்கியுள்ளது.

14 நகரங்களில் ரூ. 63.66 கோடி செலவில் 2,937 வீடுகள் மற்றும் 2,119 வீட்டுமனைகள் அடங்கிய திட்டங்கள் நடந்தேறி வருகின்றன. 1997-98 ஆம் ஆண்டில் விழுப்புரம், கும்பகோணம் ஆகிய இரு நகரங்களில் ரூ.13.61 கோடி செலவில், 280 வீடுகளையும் 609 மனைகளையும் வழங்குவதற்கான திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. கோவில்பட்டி, அறந்தாங்கி, பொன்னேரி ஆகிய மூன்று நகரங்களிலும், நிலை 2 (Stage 2) திட்டங்களில் தென்காசி, தாராபுரம், ஒட்டன்சத்திரம் ஆகிய நகரங்களிலும் ரூ. 9.58 கோடி செலவில் 1,176 வீடுகள்/மனைகளை உருவாக்கும் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

எஞ்சிய 24 நகரங்களில், நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

### நிலை II (Phase II)

அருப்புக்கோட்டையில் ரூ. 1.08 கோடி செலவில் 50 வீடுகளையும், 40 மனைகளையும் உருவாக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது. ஒதுக்கீடு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. தூத்துக்குடி, பெருந்துறை ஆகிய இரு நகரங்களில் ரூ. 9.96 கோடி செலவில் 129 வீடுகளைக் கட்டும் பணிகளும், 1498 மனைகளை மேம்படுத்தும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. கண்ணன்குறிச்சி, திருநகர், சோளிங்கர் ஆகிய மூன்று நகரங்களிலும், நிலை-2 (Stage 2) திட்டங்களில் பெருந்துறை, தூத்துக்குடி ஆகிய நகரங்களிலும் ரூ. 11.93 கோடி செலவில் 277 வீடுகளைக் கட்டும் பணியும், 1,141 மனைகளை மேம்படுத்தும் பணியும் தொடங்கப்படவுள்ளன. செங்கற்பட்டிலுள்ள ஆலப்பாக்கம் மற்றும் சின்னாளப்பட்டி ஆகிய இடங்களில் ரூ. 2.54 கோடி செலவில் 26 வீடுகளைக் கட்டுவதற்கும், 329 மனைகளை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 21 நகரங்களில், கையகப்படுத்துவதற்கான நிலங்கள் கண்டறியப்பட்டு வருகின்றன.

### 3.2.7 தமிழ்நாடு நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

தமிழ்நாடு நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் செயல்படுத்தப்படும் தன்னிறைவு வீட்டுமனை திட்டத்தின்கீழ் பொருளாதார நிலையில் நலிந்த பிரிவினர் என்ற அடிப்படையில் மாத வருமானம் ரூ. 1.300-க்குக் குறைவாக



உள்ளவர்களுக்கு குடிநீர் வழங்கல், கழிவுநீர் வடிகால், சாலை வசதி, தெருவிளக்கு போன்ற அனைத்து அடிப்படை வசதிகளுடன் கூடிய உறைவிடம் அமைக்கும் நோக்கத்துடன் அவர்கள் வாங்க இயலக்கூடிய விலையில் மனைகளை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

ஒதுக்கீடுதாரர்களில் பொருளாதார நிலையில் நலிந்த பிரிவினருக்கும், குறைந்த வருமானத் தொகுதியினருக்கும் வீடு கட்டுவதில் உதவும் பொருட்டு, இத்திட்டத்தின் ஒரு பகுதியாக ரொக்கக் கடன் வழங்கப்பட்டு வருகிறது. கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் ஒவ்வொரு திட்டத்திலும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம், வேலூர், ஈரோடு, தூத்துக்குடி, திருநெல்வேலி, திருப்பூர் ஆகிய 10 நகரங்களில் ரூ. 246.41 கோடி செலவில் மனையிட வசதிகள் பெற்ற 70,000 மனைகளை வழங்கும் இலக்குடன், உலக வங்கியின் நிதியுதவியைக் கொண்டு இத்திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டங்களில் அம்பத்தூரில் ரூ. 42.5 கோடி செலவில் 9,786 மனைகள் மேம்படுத்தப்பட்டு வழங்கப்பட்டுள்ளது மிகப்பெரும் திட்டமாகக் கருதப்படுகிறது.

வரையறுக்கப்பட்ட கால அளவிற்கு முன்னதாகவே திட்ட இலக்கான 70,000 மனைகளை மேம்படுத்துவது எய்தப்பட்டுவிட்டதால், கூடுதலாக 18,728 மனைகளை உருவாக்கும் திட்டத்தையும் இந்த இலக்குடன் சேர்த்து மொத்த இலக்கு 88,728 மனைகள் என நிர்ணயிக்கப்பட்டது. இதுவரையில் 88,728 மனைகளை மேம்படுத்துவதற்காக இந்த 10 நகரங்களில் 33 திட்டங்களுக்கு உலக வங்கி அனுமதியளித்துள்ளது. அவற்றில் 29 திட்டங்கள் அனைத்து நிலைகளிலும் முடிக்கப்பட்டு விட்டன. எஞ்சிய 4 திட்டங்களும் இறுதிக் கட்டத்தில் உள்ளன.

### 3.2.8 நிலவள வங்கித் திட்டங்கள்

1997-98 ஆம் ஆண்டில், அரூர், பாலக்கோடு, ஆரணி, போளூர், திருவண்ணாமலை, திருவில்லிபுத்தூர், சங்ககிரி, பெரியகுளம், தேனி, ஒட்டன்சத்திரம், இராஜபாளையம், தென்காசி, திருமங்கலம், அருப்புக்கோட்டை, மணப்பாறை ஆகிய 15 நகரங்களில் உள்ள பொருளாதார நிலையில் நலிந்த பிரிவினருக்கு ரூ. 80 இலட்சம் செலவில் 1,486 மனைகளை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும். திருமங்கலம், அருப்புக்கோட்டை, மணப்பாறை ஆகிய நகரங்களில் இத்திட்டங்கள் தற்போது ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

[1997 ஏப்ரல் 1

## 3.3 1997-98 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்

1997-98 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படவிருக்கும் முக்கிய புதிய திட்டங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

### 3.3.1 சென்னை வில்லிவாக்கத்தில் பலமாடிக் கட்டிடம்

சென்னைப் பெருநகரில் அதிகரித்து வரும் வீட்டுவசதித் தேவையைச் சமாளிப்பதற்கு குடியிருப்பு மாடி வீடுகள், கடைகள் அடங்கிய பதினோரு மாடிக் கட்டிடம் ஒன்றை 1997-98 ஆம் ஆண்டில் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

வில்லிவாக்கம் கிராமத்தைச் சேர்ந்த புல எண்கள் 17/1 மற்றும் 249/3ஏ 22 கிரவுண்டு, 779 சதுர அடி (4978 சதுர மீட்டர்) பரப்பளவுள்ள இந்த இடம், தற்போதுள்ள வில்லிவாக்கம் மனைகள் - மனையிடப் பணிகள் திட்டப் பகுதியின் அருகே, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. இங்கு அமையவிருக்கும் பலமாடிக் கட்டிடக் குடியிருப்பில் 16 கடைகளும், உயர் வருவாய் தொகுதியினருக்கான 69 சதுர மீட்டர், 119 சதுர மீட்டர் கொண்ட 124 அடுக்ககங்களும் (இரண்டு, மூன்று படுக்கை அறைகளைக் கொண்டவை) இடம் பெறும். இந்தப் பலமாடிக் கட்டிடக் குடியிருப்பில் வாழ்வோரின் பயனுக்காக 450 சதுர மீட்டர் பரப்பில் சமுதாயத் திறந்த வெளிப்பகுதி கடைகள் அமைந்திருக்கும் பகுதியின் மேல் அமைக்கப்படும்.

இத்திட்டத்திற்கான மதிப்பீட்டுச் செலவு சுமார் ரூ. 25 கோடி ஆகும். இத்திட்டத்திற்கு வீட்டுவசதி மேம்பாட்டு நிதியுதவிக் கழகம் நிதியுதவி அளிக்க ஒப்புக் கொண்டுள்ளது.

### 3.3.2 சேலம் நகரில் வீட்டுவசதித் திட்டம்

சேலம் நகரப் பேருந்து நிலையத்திற்கு அருகில் 1.07 ஹெக்டேர் நிலத்தை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் கையகப்படுத்தி உள்ளது. இந்த நிலத்தில் உயர் வருமானக் குடும்பங்களுக்கு 93 "ஏ" வகை அடுக்குமாடி வீடுகளும், நடுத்தர வருமானக் குடும்பங்களுக்கு 75 "ஏ" வகை அடுக்குமாடி வீடுகளும் அனைத்து அடிப்படை வசதிகளுடன் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான மதிப்பீட்டுச் செலவு ரூ. 950.67 இலட்சமாகும். வீட்டுவசதி மேம்பாட்டு நிதியுதவிக் கழகம் இத்திட்டத்திற்காக நிதி உதவி அளிக்க ஒப்புக் கொண்டுள்ளது.



1997 ஏப்ரல் 1]

### 3.3.3 ஏற்காடு மலைப் பகுதியில் வீட்டுவசதித் திட்டம்

1997-98 ஆம் ஆண்டில் ஏற்காடு மலைப் பகுதிகளில் வீட்டுவசதித் திட்டம் ஒன்றை நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. ஏற்காடு வட்டத்தில் உள்ள, கக்கம்பாடி கிராமத்தில் இத்திட்டத்திற்குத் தேவைப்படும் 7.18 ஹெக்டேர் நிலத்தை வருவாய்த் துறையிடமிருந்து தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் பெற்றுள்ளது.

இந்த நிலத்தில், 72 தொகுப்பு வீடுகளும், நடுத்தர வருமானப் பிரிவினருக்கு 140 சதுர மீட்டர் மனைகளில் 58 வீடுகளும் மற்றும் உயர் வருமானப் பிரிவினருக்கு 180 சதுர மீட்டர் மனைகளில் 259 வீடுகளும் கட்டித் தரக் கருதப்பட்டுள்ளது.

### 3.3.4 புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மாவட்ட தலைமையிடங்களில் அரசுப் பணியாளர்களுக்கான வாடகை வீட்டுவசதித் திட்டம்

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மாவட்டத் தலைநகரங்களான கரூர், நாகப்பட்டினம், திருவாரூர், நாமக்கல், பெரம்பலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய இடங்களிலும், திருவண்ணாமலையிலும் 1997-98 ஆம் ஆண்டில் 738 அடுக்கு மாடி வீடுகளை ரூ. 2368 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசும் 'அட்கோ' நிறுவனமும் இத்திட்டங்களுக்குத் தேவையான நிதியுதவி அளிக்கும். மேலும் வைகை வீரன் அழகு முத்து மாவட்டம் மற்றும் திருவள்ளூர் எம்.ஜி.ஆர். மாவட்டம் ஆகிய இரு மாவட்டங்களுக்கான திட்டங்கள் தயாரிப்பில் உள்ளன.

### 3.3.5 கோயம்புத்தூருக்கு அருகே பெரியநாயக்கன் பாளையத்தில் பெரிய அளவிலான நில மேம்பாட்டுத் திட்டம்

1997-98 ஆம் ஆண்டில் கோயம்புத்தூரிலிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும் பெரியநாயக்கன் பாளையத்தில் பெரிய அளவிலான நில மேம்பாட்டுத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்குத் தேவைப்படும் நிலம், நிலச் சொந்தக்காரர்களிடம் பேச்சுவார்த்தை மூலம் வாங்கப்பட்டு வருகிறது. ரூ. 288.62 இலட்சம் செலவில் 105 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தக் கருதப்பட்டுள்ளது. வீட்டுமனைகளை மேம்படுத்தும் இத்திட்டத்தின் மூலம் குறைந்த வருமானம் பெறும் 1,095 குடும்பங்களும், நடுத்தர வருவாய் பெறும் 1,165 குடும்பங்களும், உயர் வருவாய் பெறும் 446 குடும்பங்களும் பயன்பெறும். இவ்வகையில் மொத்தம் 2,076 குடும்பங்கள் பயன் அடையும்

[1997 ஏப்ரல் 1

எனக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிக்கு, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் நிதியுதவி அளிக்கும்.

### 3.3.6 ஓசூரில் நில மேம்பாட்டுத் திட்டம் (நிலை XVI)

ஓசூரில் பெரிய அளவிலான மனை மேம்பாட்டுத் திட்டம் ஒன்று செயல்படுத்த எடுத்துக் கொள்ளப்படும். இதற்குத் தேவையான 85.60 ஹெக்டேர் பரப்புள்ள நிலம் ஏற்கெனவே கையகப்படுத்தப்பட்டு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் வசம் உள்ளது. இங்கு செயல்படுத்தக் கருதப்பட்டுள்ள திட்டம் 1583 மனைகள் கொண்டதாகவும் பல்வேறு வருமான பிரிவினரும் பயனடையும் விதத்திலும் கீழ்க்கண்டவாறு அமையும்.

| | |
|---|---|
| குறைந்த வருமான பிரிவினருக்கான மனைகள் | 97 (72 சதுர மீட்டர் பரப்பு) |
| நடுத்தர வருமான பிரிவினருக்கான மனைகள் | 642 (90-180 சதுர மீட்டர் பரப்பு) |
| உயர் வருமான பிரிவினருக்கான மனைகள் | 844 (216-480 சதுர மீட்டர் பரப்பு) |

இத்திட்டச் செலவின் மதிப்பீடு ரூ. 2085 இலட்சம் ஆகும். இரண்டு ஆண்டுகளில் இத்திட்டம் நிறைவேற்றி முடிக்கப்படும். இத்திட்டத்திற்கு நிதியுதவி அளிக்க வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் முன்வந்துள்ளது.

### 3.3.7 கோயம்புத்தூரில் நில மேம்பாட்டுத் திட்டம்

தொழில் நகரமான கோயம்புத்தூரில் அதிக அளவிலான வீட்டுவசதித் தேவையை நிறைவேற்றும் பொருட்டு கோயம்புத்தூருக்கு அருகிலுள்ள காளப்பட்டியில் பெரிய அளவிலான நில மேம்பாட்டுத் திட்டத்தை நிறைவேற்றக் கருதப்பட்டுள்ளது. இதற்கு, 23.105 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, இங்கு குறைந்த வருமான பிரிவினருக்கு 218 மனைகளும், நடுத்தர வருமான பிரிவினருக்கு 549 மனைகளும் மற்றும் உயர் வருமான பிரிவினருக்கு 159 மனைகளும் ஆக மொத்தம் 926 மனைகளை மேம்படுத்தும் திட்டம் மேற்கொள்ளப்படும். இதற்கான



1997 ஏப்ரல் 1]

மொத்த திட்ட மதிப்பீட்டுச் செலவு ரூ. 473.80 இலட்சமாகும். வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் இத்திட்டத்திற்கு நிதி உதவி அளிக்க ஒப்புக் கொண்டுள்ளது.

### 3.3.8. காரைக்குடியில் நில மேம்பாட்டுத் திட்டம்

காரைக்குடி வட்டத்திலுள்ள கழனிவாசல் கிராமத்தில் 11.20 ஹெக்டேர் நிலத்தில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் நில மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது. இதில் 484 மனைகள் கீழே குறிப்பிட்டுள்ள பல்வேறு அளவுகளில் மேம்படுத்தப்படும்.

| | |
|---|---|
| 216 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட மனைகள் | 92 எண்ணிக்கை |
| 135 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட மனைகள் | 166 எண்ணிக்கை |
| 113 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட மனைகள் | 107 எண்ணிக்கை |
| 72 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட மனைகள் | 119 எண்ணிக்கை |

இத்திட்டத்திற்கான மதிப்பீட்டுச் செலவு ரூ. 205.00 இலட்சமாகும். இத்திட்டத்திற்கு வீட்டுவசதி மேம்பாட்டு நிதியுதவிக் கழகம் நிதியுதவி அளிக்க ஒப்புக் கொண்டுள்ளது.

### 3.4. 1997-98 ஆம் ஆண்டிற்கான திட்டம்

1997-98 ஆம் ஆண்டில் 9,756 மனைகளை மேம்படுத்தவும், 5,084 வீடுகளை/அடுக்குமாடி வீடுகளைக் கட்டித் தரவும் கருதப்பட்டுள்ளது. இந்த வீட்டுவசதித் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் ரூ. 250 கோடி செலவிடும். இதில் ரூ. 18.00 கோடி மாநில அரசிடமிருந்து, வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடாகப் பெறப்படும்.

## 4. கூட்டுறவு வீட்டு வசதி

### 4.1. வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்கள்

ஊரகப் பகுதிகளிலும், நகர்ப் பகுதிகளிலும் வாழுகின்ற மக்களுக்கு, வீட்டுவசதி செய்து கொடுப்பது தொடர்பாக எடுக்கப்படும் முயற்சியில்

கூட்டுறவு வீட்டுவசதித் துறை விருப்பத்துடனும், திறமையுடனும் பங்கேற்றுப் பணியாற்ற முடியும் என்பது பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள ஒரு கருத்தாகும். "குடும்பத்திற்கு ஒரு வீடு" என்ற கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்த மாநில வீட்டுவசதி கொள்கையின் நோக்கங்களையும், குறிக்கோள்களையும் எய்துவதில் இத்துறை தன்னுடைய பங்கைச் சிறப்புற ஆற்றி வருகிறது.

கூட்டுறவு வீட்டுவசதித் துறையில் இரட்டை அடுக்குமுறை நடைமுறையிலுள்ளது. உயர்நிலையில், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையமும், நகர்ப்பகுதிகளில் 858 நகர்ப்பகுதி வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்களும், வட்ட அளவில் 167 வட்ட வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்கள், ஊரக ஏழை எளியோர் பயனுக்கென்றே, ஊரகப் பகுதியில் வீட்டுவசதித் திட்டங்களை மேம்படுத்தும் நோக்குடன் சென்னை மாவட்டம் நீங்கலாக வட்டத்திற்கு ஒரு சங்கம் என்ற வீதத்தில் தொடக்க நிலையிலும் செயல்பட்டு வருகின்றன. கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களின் பதிவாளருடைய கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகின்ற இவை, தமிழ்நாடு வீட்டுவசதிக் கூட்டுறவு இணையத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இச்சங்கங்களின் உறுப்பினர்களின் பொருளாதார வகையில் நலிவுற்றவர்களுக்கு தமிழ்நாடு வீட்டுவசதி கூட்டுறவு இணையம் வீடுகட்ட நிதியுதவி அளித்து வருகிறது.

### 4.2 தேர்தல்

830 வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிர்வாகக் குழுத் தேர்தல் முடிந்துவிட்டது. எஞ்சிய 195 சங்கங்களுக்கான தேர்தல்கள் விரைவில் நடத்தப்படும்.

### 4.3 ஊரக வீட்டுவசதித் திட்டம்

ஊரக வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் பயனீட்டாளர்களின் பங்குத் தொகையையும் சேர்த்து வீட்டுவசதிச் சங்கங்கள் நபர் ஒருவருக்கு சமவெளிப் பகுதிகளில் ரூ. 11,000/- ஆகவும், மலைப் பகுதிகளில் ரூ. 13,000/- ஆகவும் தற்போது அளிக்கப்பட்டு வந்துள்ளதை முறையே ரூ. 14,000/- ஆகவும், ரூ. 16,000/- ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கு மாநில அரசு ரூ. 1,600/- என அளித்து வந்த உதவித் தொகையும் ரூ. 2,000/- என உயர்த்தப்பட்டுள்ளது.





### 4.4 ஊரகப் பகுதிகளில் குறைந்த வருவாய் தொகுதியினர்/ நடுத்தர வருவாய் தொகுதியினருக்கான வீட்டுவசதித் திட்டம்

குறைந்த வருவாய் தொகுதியினர் மற்றும் நடுத்தர வருவாய் தொகுதியினருக்கான தேவைகளைப் பூர்த்தி செய்ய ஒரு தனியான திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது குறைந்த வருவாய் தொகுதியினருக்கு உயரளவாக ரூ. 55,000-மும் நடுத்தர வருவாய் தொகுதியினருக்கு ரூ. 80,000-மும் அட்கோ நிறுவனமிடமிருந்து நிதியுதவி பெறப்பட்டு கடன் வழங்கப்படுகிறது. இந்தக் கடன் வரம்பு முறையே ரூ. 70,000/- ஆகவும், ரூ. 1,20,000/- ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

### 4.5. நகர்ப்பகுதி வீட்டுவசதித் திட்டம்

தமிழ்நாடு வீட்டுவசதிக் கூட்டுறவு இணையமானது, நகர்ப்பகுதி வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு வீடுகள் கட்டக் கடன் வழங்குகிறது. கடந்த மூவாண்டுகளாக வீட்டுவசதி இணையமானது ஒவ்வோராண்டும் ரூ. 100 கோடிக்கும் அதிகமாகக் கடனுதவி அளித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் பயனடைவோரின் திருப்பிச் செலுத்தும் திறனையும், உத்தேச வீட்டின் மதிப்பீட்டுச் செலவையும் அடிப்படையாகக் கொண்டு அவர்களுக்கு ரூ. 2 இலட்சம் முதல் ரூ. 3 இலட்சம் வரையில் நிதியுதவி அனுமதிக்கப்பட்டு வருகிறது. மேலும், அடுக்ககங்கள் / கட்டப்பட்ட வீடுகளை வாங்கும் பொருட்டு சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம் மற்றும் திருநெல்வேலி மாநகராட்சி எல்லைக்குள் நான்கு இலட்ச ரூபாயும், மாநகராட்சி எல்லையோரப் பகுதிகளுக்கு மூன்று இலட்ச ரூபாயும் கடனாக வழங்கப்படுவதை முறையே ரூ. 5 இலட்சமாகவும், ரூ. 4 இலட்சமாகவும் தற்போது உயர்த்தப்பட்டுள்ளது.

### 4.6 தமிழ்நாடு வீட்டுவசதிக் கூட்டுறவு இணையம்

இம்மாநிலத்தில் உள்ள அனைத்து வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தலைமை அமைப்பாக விளங்கும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையமானது தொடக்கக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு வீடுகளைக் கட்டித் தருவதற்காகக் கடன்களைத் திரட்டுகிறது. தொடக்க வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் மாநில அரசின் பங்கு மூலதன முதலீடுகள், ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் 'அட்கோ' நிறுவனம், தேசிய வீட்டுவசதி வங்கி, வீட்டுவசதி மேம்பாட்டு நிதிக்கழகம், வணிக மற்றும் கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றிடமிருந்து

பெறப்படும் கடன்கள் ஆகியவையே தமிழ்நாடு வீட்டுவசதிக் கூட்டுறவு இணையத்தின் நிதி ஆதாரங்கள் ஆகும். உறுப்பினர்களுக்குக் கடன்கள் வழங்குவது நிதியுதவி பெறும் வீடுகளின் எண்ணிக்கை ஆகியவற்றில் நாட்டிலுள்ள மாநில வீட்டுவசதி இணையங்களுக்கிடையே தமிழ்நாடு வீட்டுவசதிக் கூட்டுறவு இணையம் முதலாவது இடத்தை வகிக்கிறது. இந்நாட்டில் வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கட்டப்பட்ட மொத்த வீடுகளில் தமிழ்நாட்டில் மட்டும் 50 சதவீதத்திற்கும் மேற்பட்டுள்ள வீடுகள் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தின் நிதியுதவியுடன் கட்டப்பட்டுள்ளன. கடன் உதவி அளிப்பதைப் பொறுத்தவரையில் அட்கோ நிறுவனம் உடனடி நிதியுதவி வழங்கும் வசதி முறையை (Green Channel) இந்த இணையத்திற்கு அளித்துள்ளது.

## 4.7 வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் எய்தப் பெற்ற சாதனை

### 4.7.1 ஊரக வீட்டுவசதித் திட்டம்

ஊரக வீட்டுவசதித் திட்டத்தை 1978-79 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் பெருமளவில் செயல்படுத்திக் கொண்டு வருகிறது. 1997 ஆம் ஆண்டு பிப்ரவரி வரையில் இத்திட்டத்தின் கீழ் ரூ. 284.52 கோடி நிதியுதவியுடன் 4,84,682 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

### 4.7.2 ஊரகப் பகுதிகளில் குறைந்த வருவாய் தொகுதியினர் / நடுத்தர வருவாய் தொகுதியினருக்கான திட்டங்கள்

1997 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரையில் ரூ. 111.37 கோடி நிதியுதவியுடன் 31,713 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

### 4.7.3 நகர்ப்பகுதி வீட்டுவசதித் திட்டம்

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் தொடங்கப்பட்டதிலிருந்து அதாவது 1959 ஆம் ஆண்டிலிருந்து 1997 பிப்ரவரி வரையில் நகர்ப் பகுதிகளில் 2,01,084 வீடுகளைக் கட்டுவதற்கு ரூ. 1047.86 கோடி கடனுதவி வழங்கியுள்ளது.

### 4.7.4 கிராமப் பகுதிகளுக்கு வீட்டுவசதி மேம்பாட்டுத் திட்டம் (Shupra)

கிராமப் பகுதிகளைச் சேர்ந்த பொருளாதார ரீதியில் நலிந்த பிரிவினர்கள் ஓலை வேய்ந்த வீடுகளை ஓட்டு வீடுகளாக மாற்றுதல், சுவர்களை வலுப்படுத்துதல், துப்புரவு, குடிநீர் வழங்கல் வசதிகள்



போன்றவற்றின் மூலம் தங்கள் வீடுகளின் நிலையை உயர்த்திக் கொள்ள கடன் தொகை ரூ. 2,080, மாநில அரசு உதவித்தொகை ரூ. 500 உட்பட, வீடு ஒன்றுக்கு ரூ. 2,580 என்ற வீதத்தில் நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி பயனீட்டாளரின் பங்குத் தொகை ரூ. 500 ஆகும். இதுவரையில் இத்திட்டத்தின் கீழ் 40,000 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

## 4.8 ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட மதிப்பீடுகள்

கிராமப் பகுதிகளில் 3,00,000 வீடுகளுக்கும், நகர்ப் பகுதிகளில் 70,000 வீடுகளுக்கும் உதவிடும் வகையில் மொத்தம் ரூ. 1513.50 கோடியும், கிராமப் பகுதியில் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 65,000 வீடுகளின் நிலையை உயர்த்த ரூ. 33.48 கோடியும் அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீட்டைக் காட்டிலும் இது 84 சதவீதம் அதிகமாகும்.

## 4.9 1997-98 ஆம் ஆண்டுக்கான திட்டங்கள்

கூட்டுறவு வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் 1996-97 ஆம் ஆண்டு செய்த ஒதுக்கீட்டு அளவு ரூ. 249.06 கோடியை ரூ. 356.97 கோடியாக 1997-98 ஆம் ஆண்டு உயர்த்தி ஒதுக்கீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இது 1996-97 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டளவை விட 43 சதவீதம் கூடுதலாகும்.

ஊரக வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் பொருளாதார வகையில் நலிந்த பிரிவினருக்கு 45,000 வீடுகளைக் கட்டுவதற்கு ரூ. 63.23 கோடி நிதியுதவி அளிக்கப்படும்.

ஊரகப் பகுதிகளில் குறைந்த வருவாய் தொகுதியினருக்கு 6,500 வீடுகளைக் கட்டவும், நடுத்தர வருவாய் தொகுதியினருக்கு 3,000 வீடுகளைக் கட்டவும் ரூ. 81.50 கோடி கடனுதவி அளிக்கப்பட உள்ளது.

தமிழ்நாடு வீட்டுவசதிக் கூட்டுறவு இணையமானது, நகர்ப்பகுதி வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் நகர்ப் பகுதிகளில் 12,000 வீடுகளைக் கட்டுவதற்காக ரூ. 200.00 கோடி நிதியுதவி வழங்கும்.

மாநில ஊரகப்பகுதி வீட்டுவசதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 1997-98-ல் ரூ. 9.24 கோடி மொத்தச் செலவில் 30,000 வீடுகள் நிலை உயர்த்தப்படும்.

மகளிர் மேம்பாட்டினை ஊக்குவிக்கும் பொருட்டு மகளிர் வீட்டுவசதித் திட்டம் 1997-98 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். அதுபோன்றே நீலகிரி, கொடைக்கானல் மற்றும் ஏற்காடு ஆகிய மலைப் பகுதிகளில் வீடுகளின் நிலையுயர்த்தும் திட்டத்தை 1997-98 ஆம் ஆண்டிலும் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## 5. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்

**5.1.1.** நாடு சுதந்திரம் பெற்ற பின்னர், நகர்மயமாதல் வாயிலாக நகரங்கள் விரைந்து வளர்ச்சியடைந்தன. மேலும், நகரப் பகுதிகளில் பொருளாதார நடவடிக்கைகள் பல்கிப் பெருகின. இதன் காரணமாக மக்கள் வாழ்க்கை நடத்துவதற்கு வேலை தேடி கிராமப்புறங்களில் இருந்து நகரங்களுக்குக் குடிபெயரத் தலைப்பட்டனர். வேலைவாய்ப்பினைத் தவிர, கிராமப்புறங்களில் கிடைக்கப்பெறாத சமுதாயப் பணி வசதிகள் மற்றும் அவற்றின் அனுகூலங்கள் நகரங்களில் அமைந்துள்ளதன் காரணமாக கிராமத்து உழைப்பாளி மக்கள் நகரங்களுக்கு குடிபெயர்ந்தனர். குடிசைப் பகுதிகளில் பெரும்பாலும் காணப்படும் பிரச்சினைகள், மக்கள் நெருக்கம் அதிகம் இருத்தல், இளங்குற்றவாளிகள் இருத்தல், எழுத்தறிவின்மை, வேலைவாய்ப்பின்மை ஆகியன.

5.1.2 சென்னை நகரில் மொத்தம் 996 பெரிய மற்றும் சிறிய குடிசைப் பகுதிகள் ஏறக்குறைய 7.73 சதுர கிலோமீட்டர் பரப்பளவு நிலத்தில் அமைந்துள்ளன. இக்குடிசைப் பகுதிகளில், மாநகரின் மக்கள் தொகையில் 30 சதவீத மக்கள் கொண்ட சுமார் 1.87 இலட்சம் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். இக்குடிசைப் பகுதிகள், அரசு நிலங்களில் மட்டுமல்லாது தனியார் நிலங்களிலும் கோவில் மற்றும் ஏனைய அமைப்புகளுக்குச் சொந்தமான நிலங்களிலும் அமைந்துள்ளன. இக்குடிசைப் பகுதிகள், பல ஆண்டுகளாக சமுதாய, சுற்றுப்புற மற்றும் நிர்வாகப் பிரச்சினைகளை உருவாக்குகின்றன. குடிசைப் பகுதிவாழ் மக்கள் வாழ்வதற்கு நல்லதொரு சூழ்நிலையினை அமைத்துத் தருவதை அரசு தனது முதன்மையான கடமையாகக் கொண்டுள்ளது. சமூகப் பொருளாதார, சுற்றுப்புறச் சூழல் மற்றும் நகர வளர்ச்சி ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் துவங்கப்பட்டது. இவ்வாரியம், நாட்டின் முன்னோடியாக விளங்குவதுடன், சென்னை மாநகரில் உள்ள குடிசைப் பகுதிகளை அகற்றி மேம்படுத்தும் பணியைக் கொண்டுள்ளது.



### 5.2 தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் முக்கிய குறிக்கோள்கள் . பின்வருமாறு

1. சென்னை மாநகர் மற்றும் தெரிந்தெடுக்கப்பட்ட நகரங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்படும் பகுதிகளிலும் இதர பகுதிகளிலும் குடிசைகளை அகற்றி, அவ்விடங்களில் தன்னிறைவான சுகாதாரமான வீடுகளைக் கட்டுதல்;

2. புதிதாகக் குடிசைகள் உருவாக்குவதையும் மற்றும் ஆக்கிரமிப்புகளையும் தடுத்தல்;

3. தனியார் நிலங்களில் உள்ள குடிசைவாசிகளை, நிலச் சொந்தக்காரர்கள் வெளியேற்றுவதைத் தடுத்தலும் மற்றும் குடிசை வாசிகளுக்கு மனை உடைமை உரிமை வழங்குதலும்;

4. எல்லாக் குடிசைப் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்குதல், தெரு மின்விளக்கு, மழைநீர் வடிகால், சாக்கடை வசதி போன்ற அடிப்படை வசதிகளை அளித்தல்.

### 5.3 குடிநீர் வசதி

சென்னைக்கு கிருஷ்ணா நிதிநீர் முழு அளவில் வரப்பெற்றவுடன், நகரில் உள்ள எல்லா அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டப் பகுதிகளுக்கும் குடிநீர் விநியோகம் வழங்கக் கருதப்பட்டுள்ளது. மாநகரில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் குடியிருப்புகள் எண்ணிக்கை அதிகம் உள்ளதால் இக்குடிநீர் வழங்கும் திட்டம் படிப்படியாக மேற்கொள்ளப்படும். எல்லாத் திட்டப் பகுதிகளுக்கும் போதுமான குடிநீர் வழங்கப்படும்.

### 5.4 குடியிருப்புகளில் பழுதுபார்க்கும் பணிகள்

கடந்த 26 ஆண்டுகளாக, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டி வருகின்றது. இயற்கையாக ஏற்படும் தேய்மானம், மாறுபட்ட தட்பவெப்பநிலை காரணமாக பெரும்பாலான குடியிருப்புகளின் மேல்தளங்கள், சாளர விதானங்கள், மாடிப்படிகள் போன்றவைகள் பழுது செய்யப்பட வேண்டியுள்ளன. தற்போது இக்குடியிருப்புகளை மக்கள் வாழ்வதற்கேற்ப சீரமைக்கும் பொருட்டு, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், மாநில அரசு மானியம் ரூ. 5 கோடியில் பழுதுபார்க்கும் பணிகளை மேற்கொண்டுள்ளது.

1996-97 ஆம் ஆண்டில் 12,850 குடியிருப்புகள் மக்கள் வாழ்வதற்கேற்பச் சீரமைக்கப்பட்டுள்ளன.

## 5.5 குழந்தைத் தொழிலாளர் புனரமைப்பு

குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்கும் நோக்குடைய தமிழக அரசின் கொள்கையினைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்ற ஒரு செம்மையான திட்டம் தீட்டியுள்ளது. இப்பணிகளுக்காக ரூ. 1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசு சாரா நிறுவனங்களால் நடத்தப்படும் ஆய்வினை நடத்தி, பின்னர் குழந்தைத் தொழிலாளர்கள் முறையை அகற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 5.6 சென்னை விரைவு இரயில் போக்குவரத்து வழித் தடத்தில் (நிலை II) அமைந்துள்ள குடிசைவாழ் குடும்பங்களை மாற்றிடங்களில் குடியமர்த்துதல்

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், சென்னை விரைவு இரயில் போக்குவரத்துத் திட்டம் நிலை II (லஸ் முதல் வேளச்சேரி வரை) சீரிய முறையில் நடைபெற இரயில் போக்குவரத்து வழித்தடம் மற்றும் அதையொட்டியுள்ள கால்வாய்களிலும், குடிசையமைத்து வாழ்ந்து வரும் சுமார் 14,500 குடும்பங்களை அகற்றி, அவர்களை ஒக்கியம் துரைப்பாக்கம் மற்றும் செம்மஞ்சேரி ஆகிய மாற்று இடங்களில் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மத்திய அரசு இத்திட்டத்திற்கு ரூ. 60 கோடி மானியம் அளித்துள்ளது. 1997-98 ஆம் ஆண்டு இத்திட்டத்திற்கான பணிகள் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் துவக்கப்படும்.

## 5.7 குடிசைப் பகுதிகளை மேம்படுத்தும் கொள்கை

குடிசைப் பகுதிகள் குறித்த தமிழ்நாடு அரசின் கொள்கை பின்வரும் சிறப்பு அம்சங்களைக் கொண்டதாகும்:

1. எளிய தவணையில் வாங்கக்கூடிய விலையில் குடிசைப் பகுதியில் வாழும் மக்களுக்கு குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் இதன் நோக்கமாகும்.

2. தீ, வெள்ளம், புயல் ஆகியவற்றைத் தாங்கும் வகையில், நகர்ப் பகுதிகளிலுள்ள குடிசைகளை மேம்படுத்துவதுடன், குடிசைப் பகுதி வாழ் மக்களின் சுற்றுப்புறத்தையும் மேம்படுத்துகிறது.



3. குடிசைப்பகுதி வாழ் மக்களுக்கு சமநீதியின் அடிப்படையில் வீடுகள் கிடைப்பதை உறுதி செய்கிறது.

4. மறுப்புக்குரிய பகுதிகளிலுள்ள குடிசைகளின் எண்ணிக்கையைக் குறைத்து, நகர்ப் பகுதிகளிலுள்ள நெரிசலைக் குறைக்க முயற்சி செய்கிறது.

5. குடியிருப்பு, வேலைவாய்ப்பு வசதி, எழுத்தறிவித்தல், தூய்மையான சுற்றுப்புறம் போன்ற வசதிகளை அமைப்பதன் மூலம், பல்வேறு கோணங்களில் குடிசைப் பகுதிப் பிரச்சினைகளைக் களைதல்; மற்றும்

6. குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதில் அரசு சாரா நிறுவனங்கள் பங்கேற்பதை ஊக்குவித்தல்.

**5.8** மனிதாபிமான முறையிலும், சமூக ரீதியாகவும் குடிசைவாழ் குடும்பங்களின் வாழ்க்கை முறையைச் சீராக்குதல், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் முதன்மையான நோக்கமாகும். அடுக்குமாடி குடியிருப்புகளில் குடியமர்த்துதல் அல்லது சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்துதல் தவிர, சமுதாய வளர்ச்சித் திட்டங்களைச் சீரிய முறையில் செயல்படுத்துவதன் மூலம், குடிசைவாழ் மக்களின் பொருளாதார நிலை, சமூக நிலை மற்றும் ஒழுக்க நெறி ஆகியவற்றினை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் மேம்படுத்தும்.

**5.9** ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்ற கருத்திற்கிணங்க, ஏழைக் குடிசை வாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்குக் குடிசைப்பகுதி மாற்று வாரியம் கடுமையான முயற்சி செய்கின்றது.

**5.10** மேற்குறிப்பிட்ட கொள்கையினைக் கட்டுக்கோப்பாக, உறுதியான திட்டங்களாக மாற்ற, பின்வருமாறு புதிய செயல்திறன் உருவாக்கப்பட்டுள்ளது:

(அ) நகர்ப்பகுதி நெரிசல் மிக்க பகுதிகளிலும், சுகாதாரக் குறைவான பகுதிகளிலும் குடிசைகளில் குடியிருப்பவர்கள் அடுக்குமாடி குடியிருப்புகளில் குடியமர்த்தப்படுகின்றனர். இது குடிசைப்பகுதி மாற்றுத் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

(ஆ) குடிசைப் பகுதிகளை மேம்படுத்துவதற்கான வாய்ப்புள்ள பகுதிகளில், அடிப்படை வசதிகளுடன் இப்பகுதிகள் மேம்படுத்தப் படுகின்றன. உடைமை உரிமையும் அளிக்கப்படுகிறது.

இ) சென்னை துரித வேக இரயில் திட்டப் பகுதிகள், பொது நீர் வழிகள், நடைபாதைகள், பொதுப் பூங்காக்கள் போன்ற பொது மக்கள் பயன்படுத்தும் பகுதிகளில் குடியிருக்கும் குடிசை வாழ் குடும்பங்கள் மேம்படுத்தப்பட்ட மனை/குடியிருப்புகளில் நகர எல்லைக்கு அருகிலுள்ள மாற்றிடங்களில் குடியமர்த்தப்படுகின்றனர்.

## 5.11 அமைப்பும் நிர்வாகமும்

1970 ஆம் ஆண்டில் துவங்கப்பட்ட தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், ஒரு நிர்வாகக் குழுவால் அரசு வகுக்கும் கொள்கை வரம்பிற்குட்பட்டு நிருவகிக்கப்படுகிறது. இக்குழுவில் தலைவர், மற்றும் மேலாண்மை இயக்குநர், பல்வேறு துறைகள், நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளான 10 உறுப்பினர்களும் உள்ளனர்.

**5.12** குடிசைப்பகுதி வாழ் மக்களின் துயரினைப் போக்க 1970 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகின்றது. இதுகாறும் 73,045 அடுக்குமாடி குடியிருப்புகள்/வீடுகள்/மனைகள் அமைக்கப்பட்டுள்ளன. 1,60,756 குடும்பங்களுக்கு மனை உரிமத்துடன் கூடிய குடிசை மேம்பாட்டுப் பணிகள் அமைக்கப்பட்டுள்ளன. வாரியத்தின் மூலதனச் செலவு 1997-98 ஆம் ஆண்டில் ரூ.45.96 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

## 5.13 தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் செயல்படுத்திய பெருந்திட்டங்கள்

### 5.13.1 குடிசை மாற்றுத் திட்டம்

குடிசைகளை அகற்றி விட்டு, அந்த இடங்களில் பலமாடிக் கட்டிடக் குடியிருப்புகளைக் கட்டுவதற்காக இத்திட்டம் வகுக்கப்பட்டது. இவ்வாறு கட்டப்படும் குடியிருப்புகள், குலுக்கல் முறையில் மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இத்திட்டம் அரசிடமிருந்து 30 சதவீதம் தொடக்கமானியம் பெற்றும் மற்றும் வீட்டு வசதி நகர்ப்பகுதி வளர்ச்சிக் கழகத்திடமிருந்து 70 சதவீதத் தொகையைக் கடனாகப் பெற்றும் நிறைவேற்றப்படுகிறது.

இவ்வாறு பெறப்படும் கடன் தொகை, வீட்டுவசதி நகர்ப்பகுதி வளர்ச்சிக் கழகத்தின் நிதியுதவி முறையின்படி 15 ஆண்டுகளில் 13 சதவீத வட்டியுடன் திருப்பிச் செலுத்தத்தக்கதாகும். 1977 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் வரையில், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் 61,550





பலமாடிக் கட்டிடக் குடியிருப்புக்களைக் கட்டியுள்ளது. இத்திட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து அரசின் மானியம் ரூ.89.45 கோடி செலவிடப்பட்டுள்ளது.

### 5.13.2 தமிழ்நாடு நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டம்

தற்போதுள்ள குடிசைப் பகுதிகளில், 'அவை எங்கு உள்ளனவோ, அதே இடத்தில் என்ற அடிப்படையில்' நிலத்தின் உடைமை உரிமை வழங்கவும், சாலைகள், குடிநீர் வழங்கல், கழிவு நீர் அகற்றல், துப்புரவு, சமுதாய நலவசதிகள் போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கவும், இத்திட்டம் வகை செய்கிறது. இத்திட்டம், உலக வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டுள்ளது. சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம், வேலூர், ஈரோடு, திருப்பூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, ஆகிய இடங்களில் ரூ.46.40 கோடி செலவில் ஆறு ஆண்டுக்கால அளவில், நிலத்தைப் பங்கீடு செய்யும் திட்டத்தின்கீழ், தனியார் நிலக்குடிசைப் பகுதிகளில் வாழும் 10,000 குடும்பங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பது உட்பட 94,000 குடிசைவாழ் குடும்பங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க கருதப்பட்டுள்ளது. இத்திட்டம், 1988-89 ஆம் ஆண்டிலிருந்து தொடங்கப்பட்டுள்ளது. 75,666 குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. 1997 பிப்ரவரி வரையில் ரூ.32.28 கோடி செலவிடப்பட்டுள்ளது.

### 5.13.3 நகரிலுள்ள குடிசைப்பகுதிகளில் சுற்றுச் சூழல் மேம்பாடு

குடிசைப் பகுதிகளின் பொதுவான சுற்றுச் சூழலை மேம்படுத்த அரசின் மானியத்துடன் பொதுநீர் வழங்கு குழாய்கள், சாலைகள், தெருவிளக்குகள் போன்ற அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. தமிழ்நாடு நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டத்தின் குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டப்பணியின்கீழ் வராத பகுதிகளில் மேம்பாடுகளைச் செய்வதற்கு இத்திட்டம் பொதுவாக நிறைவேற்றப்படுகிறது. 1997 பிப்ரவரி வரையில் ரூ.22.92 கோடி செலவில் 1,87,250 குடும்பங்கள் இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

### 5.13.4 ரொக்கக் கடன் திட்டம்

தகுதியுள்ள குடும்பங்கள் வீடுகளைக் கட்டிக் கொள்வதற்குக் கடன் வழங்க இத்திட்டம் வகை செய்கிறது. பெற்ற கடன் தொகையை 15 ஆண்டுகளில் எளிய தவணைமுறையில் செலுத்துவதற்கு வகை செய்கிறது. 1997 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் வரையில், "அட்கோ" வின் கடன் நிதியுதவி மூலம் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் 15,800 குடும்பங்களுக்கு ரூ. 11.40 கோடி கடன் வழங்கியுள்ளது.

[1997 ஏப்ரல் 1

**5.13.5. நடைபாதையில் வசிப்பவர்களுக்கான வீட்டுவசதித் திட்டம்**

சென்னை பெருநகரில் பல்வேறு பகுதிகளில் சாலை ஓரங்களில் நடைபாதைகளில் குடியிருப்பவர்களை மாநகர எல்லைக்கருகில் மேம்படுத்தப்பட்ட மனைகளில் மறு குடியமர்த்துவதை இத்திட்டம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. மத்திய அரசு மற்றும் மாநில அரசு ஆகியவற்றின் மானியத்துடனும் "அட்கோ"வின் கடனுதவியுடனும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் 1997 பிப்ரவரி வரையில் இத்திட்டத்தின் கீழ் 7,150 வீட்டுமனைகளை வழங்கியுள்ளது. ரூ. 7.44 கோடி செலவிட்டுள்ளது.

**5.13.6. வீடு இல்லாதோருக்கு வீடு கட்டித் தருதல்**

இத்திட்டத்தின் கீழ் குடிசைகளில் வாழுகின்ற குடும்பங்களுக்கு, உள்ளூரில் கிடைக்கின்ற கட்டுமானப் பொருட்களைப் பயன்படுத்தி, குறைந்த செலவாகும் தொழில்நுட்ப உத்திகளைப் பின்பற்றி, அடிப்படை வசதிகளுக்கு வகை செய்யப்பட்ட மனைகளில் "அட்கோ" நிறுவனத்தின் கடன் உதவியுடன் வீடுகள் கட்டப்படுகின்றன. இவ்வீடுகள், தகுதிவாய்ந்த குடிசைவாழ் குடும்பங்களுக்குத் தவணைக் கொள்முதல் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், இதுவரையில் இத்திட்டத்தின் கீழ் 2,982 வீடுகளைக் கட்டியுள்ளது. இதன் பொருட்டு, 1997 பிப்ரவரி வரையில் ரூ. 5.25 கோடி செலவிட்டுள்ளது.

**5.14. 1997-98 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்**

1997-98-ல் 4,000 குடியிருப்புகளைக் கட்டவும், குடிசைகளில் வாழுகின்ற 13,500 குடும்பங்களுக்கு குடிசைப்பகுதி மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது. குடிசைப்பகுதிகளில் வீடுகள் கட்டிக் கொடுத்து அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கும் திட்டத்தை நிறைவேற்ற, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் ரூ. 45.96 கோடி செலவிடும். இத்தொகையில் மாநில அரசின் வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கம் ரூ. 21.65 கோடியாக இருக்கும். தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் 1997-98-ல் செயல்படுத்தவுள்ள பல்வேறு திட்டங்களின் விவரம் வருமாறு:-



1997 ஏப்ரல் 1]

**5.14.1. குடிசைமாற்றுத் திட்டம்**

1997-98 ஆம் ஆண்டில் அரசு மானியம் ரூ. 3.45 கோடியுடன் ரூ. 21.53 கோடி செலவில் 2,000 குடியிருப்புகள் கட்டப்படும்.

**5.14.2. மறுப்புக்குரிய பகுதிகளில் வாழ்கின்ற குடிசைவாழ் குடும்பங்களை வேறிடங்களில் குடியமர்த்துதல்**

சென்னை மாநகரில், ஆற்றங்கரைகள், சாலையோரங்கள், மெரீனா கடற்கரை மற்றும் விரைவு இரயில் போக்குவரத்துக்காக இரயில் பாதை அமைத்தல் முதலிய பொது நோக்கத்திற்காகத் தேவைப்படுகின்ற பகுதிகள் போன்ற மறுப்புக்குரிய பகுதிகளில் சுமார் 65,000 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இக்குடிசைகள் மறுப்புக்குரிய பகுதிகளில் அமைந்துள்ளதால் நீண்டகாலமாக இவற்றை மேம்படுத்த இயலவில்லை. இக்குடும்பங்களைச் சென்னை மாநகர் எல்லைக்கு அருகிலுள்ள குடியிருப்புகளில் குடியமர்த்தக் கருதப்படுகிறது. இத்திட்டத்திற்குத் தேவைப்படுகின்ற நிலங்கள் கண்டறியப்பட்டுள்ளன. பத்தாம் நிதிக் குழு சென்னையில் குடிசைப்பகுதி மேம்பாட்டிற்காக ரூ. 60 கோடி "தனிப்பிரச்சினை மானியம்" வழங்கப் பரிந்துரைத்துள்ளது. இம்மானியத்தைப் பயன்படுத்தி 1997-2002-ல் 14,500 குடும்பங்களை வேறு இடங்களில் குடியமர்த்தக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக 1997-98-ல் ரூ. 15 கோடி செலவிடப்படும்.

**5.14.3. பழுதுபார்த்தல் - புதுப்பித்தல் திட்டம்**

கட்டப்பட்ட 59,898 குடிசைப்பகுதி குடியிருப்புகளில், 47,025 குடியிருப்புகளுக்கு, பல்வேறு அளவில் பழுதுபார்ப்புப் பணிகள் அவசியமாகின்றன. அவற்றை வசிக்கத்தக்க அளவுக்குக் கொண்டுவர உடனடி நடவடிக்கை மேற்கொள்வது அவசியமாகும். பழுதுபார்ப்புப் பணிகளை படிப்படியாக மேற்கொள்ள வாரியம் ரூ. 14.50 கோடி செலவிடக் கருதியுள்ளது. 1997-98-ல் இத்திட்டத்திற்காக, ரூ. 1.45 கோடி செலவிட கருதப்பட்டுள்ளது.

**5.14.4. நகர்ப்பகுதியிலுள்ள குடிசைப்பகுதிகளில் சுற்றுச்சூழலை மேம்படுத்துதல்**

குடிசைகளில் வாழுகின்ற 13,500 குடும்பங்களுக்கு, குடும்பம் ஒன்றுக்கு ரூ. 2,000 என்கிற விதத்தில் சாலைகள், தெரு விளக்குகள், பொதுநீர் வழங்கு குழாய்கள், பொதுக் கழிப்பிடங்கள் போன்று குடிசை மேம்பாட்டு வசதிகள் ரூ. 2.70 கோடி செலவில் செய்து தரப்படும்.

[1997 ஏப்ரல் 1

### 5.14.5. நடைபாதைகளில் வாழுகின்றவர்களுக்கு விடுகள் கட்டித் தரும் திட்டம்

நடைபாதைகளில் வாழுகின்ற ஏறக்குறைய 2132 குடும்பங்களுக்குப் பள்ளிக்கரணையில் வீட்டுமனைகள் வழங்கப்பட்டுள்ளன. இக்குடும்பங்களுக்கு 1997-98 ஆம் ஆண்டில் வீடுகள் கட்டித் தரப்படும். இதற்காக ரூ. 0.50 கோடி செலவிடப்படும்.

### 5.14.6. விடுகள் இல்லாதவர்களுக்கு விடுகள் கட்டித்தருதல்

குடிசைகளில் வாழுகின்ற ஏறக்குறைய 176 குடும்பங்களுக்கு, அடிப்படை வசதிகளுடன் வீடுகள் கட்டித் தரப்படும். இதற்காக ரூ. 24.00 இலட்சம் செலவிடப்படும்.

### 5.14.7. விரைவு இரயில் போக்குவரத்து திட்டத்தில் இரயில் பாதை அமையும் இடங்களில் உள்ள குடிசைகளில் வாழுகின்ற குடும்பங்களை வேறிடங்களில் குடியமர்த்துதல்

விரைவு இரயில் போக்குவரத்துத் திட்டத்தின் இரயில் பாதை அமையும் இடங்களிலுள்ள 100 குடிசைவாழ் குடும்பங்களுக்கு சென்னை மாநகர் அருகில் அமைந்த மேம்படுத்தப்பட்ட மனைகளில் மங்களூர் ஓடு வேய்ந்த வீடுகள் கட்டிக் குடியமர்த்தக் கருதப்பட்டுள்ளது. இதற்காக மானியம் ரூ. 50 இலட்சம் செலவிடப்படும்.

### 5.14.8. சமுதாய மேம்பாட்டுத் திட்டம்

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், அரசு சாரா அமைப்புகளின் உதவியுடன் மருத்துவ வசதிகள், முதியோர் கல்வி, மகப்பேறு குழந்தை நலக் காப்பு முதலிய வசதிகளைத் தெரிந்தெடுக்கப்பட்ட குடிசைப்பகுதிகளில் செய்து தருகிறது. வருமானத்தைப் பெருக்குகின்ற திட்டமும் மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தின்படி, குடிசைப்பகுதிகளில் வாழுகின்ற வேலைவாய்ப்பில்லாத இளைஞர்களுக்கு உற்பத்தித் திறனை அடிப்படையாகக் கொண்ட தொழில்களில் தேர்ச்சிபெற பயிற்சி அளிக்கப்படுகிறது.

### 5.14.9. சென்னை மாநகரில் குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழித்தல்

சென்னை மாநகரில் குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்கும் திட்டம் ரூ. 1.00 கோடி செலவில் 1997-ல் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பின்வருவன அடங்கும்:—

அ) அரசுப் பணியாளர்கள், அரசு சாராப் பணியாளர்கள், சமுதாயப் பிரதிநிதிகள் ஆகியோருக்கு இத்திட்டம் குறித்து பயிற்சி அளித்தல் மற்றும் புத்தறிவுப் பயிற்சி அளித்தல்.



1997 ஏப்ரல் 1]

ஆ) குழந்தைத் தொழிலாளர்களின் தாய்மார்களுக்கு, வருமானத்திற்கு வகை செய்யும் நடவடிக்கைகள், அவர்களுக்கு வீடுகள் கட்டித் தருதல்/ தற்போதுள்ள வீடுகளை மேம்படுத்தல்.

இ) குழந்தைத் தொழிலாளர்களுக்கான பள்ளிகளும், மேம்பாட்டுப் பணிகளும்.

சென்னை மாநகரில் குழந்தைத் தொழிலாளர்கள் எத்தனை பேர் உள்ளனர் என்பதைக் கண்டறிவதற்கான ஆய்வு நடைபெற்று வருகிறது. குழந்தைத் தொழிலாளர்களுக்கு 2 ஆண்டுகள் குழந்தைகள் நல மேம்பாட்டுப் பணிகள் குறித்த இடத்தங்கல் பள்ளிகளின் புதுவாழ்வு அளிக்கப்படும்.

## 6. ஊரக விட்டுவசதிக் கழகம்

6.1. மாண்புமிகு முதல் அமைச்சர் 1996-97 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் ஊரகப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு வீடு கட்டுவதற்கு முயற்சிகளை மேற்கொள்வதற்கு உதவிடும் நோக்கத்துடன் ஊரக வீட்டு வசதி வாரியம் தொடங்கப்படும் என அறிவிப்பு செய்தார்கள். அத்தகைய அமைப்பு தன்னிச்சையாக செயல்படவும், போதுமான நிதி ஆதாரங்களைத் திரட்டவும், உடனடியாக ஏற்படுத்தவும் "ஊரக வீட்டு வசதி வாரியம்" என்பதற்குப் பதிலாக "ஊரக வீட்டு வசதிக் கழகம்" என துவங்கப்பட ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதற்கான மூலதனம் ரூ. 1 கோடியாகும்.

### 6.2. இந்த விட்டு வசதிக் கழகம்,

1. ஊரகப் பகுதிகளில் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கான தற்போதுள்ள வீட்டுவசதி நிலைமைகளைக் கண்டறியும் மற்றும் வீட்டு வசதியை மேம்படுத்த தேவையான நீண்டகால திட்டத்தை தயாரிக்கும்.;

2. ஊரகப் பகுதிகளில் வீடுகள் கட்டப்படுவது குறித்து தகுந்த ஆய்வு மேற்கொண்டு பயனீட்டாளர்கள் மற்றும் அவர்களுக்கான வீடுகளின் அமைப்பு குறித்து ஆலோசனை வழங்கும்;

3. குறைந்த செலவில் வீடு கட்டுவதற்கு பயனீட்டாளர்களுக்கு தொழில் நுட்ப ஆலோசனை வழங்கும்;

4. கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் மற்றும் பிற முகவர்கள் மூலம் நிதியுதவி பெறுகின்ற பயனீட்டாளர்கள் விரும்பினால் அவர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்கும்.

## 7. கட்டிட மையங்கள்

7.1 மத்திய அரசின் அட்கோ திட்டத்தின் கீழ் "தேசிய கட்டிட மைய அமைப்பு" என்கிற ஓர் அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் தமிழ்நாடு அரசு, மாவட்டத் தலைமை இடங்கள் ஒவ்வொன்றிலும் "கட்டிட மையம்" ஒன்றை அமைப்பது என முடிவு செய்துள்ளது. மேலும் இத்தகைய கட்டிட மையங்கள், ஆரோவில், திருப்பூர் போன்ற தெரிந்தெடுக்கப்பட்ட சில இடங்களிலும், காந்தி கிராமம் ஊரக நிலையம் போன்ற நிறுவனங்களிலும், அரசு சார்பற்ற சில அமைப்புகளிலும் அமைக்கப்பட்டுள்ளன. இதுவரை 30 கட்டிட மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

இருபத்தியொரு கட்டிட மையங்கள் மாவட்ட நிர்வாக கட்டுப்பாட்டில் செயல்படுகின்றன. புதிய மாவட்டங்களில் கட்டிட மையங்கள் துவங்குவது பற்றி மாவட்ட ஆட்சியர்களால் அனுப்பப்படும் செயற்குறிப்புகளின் அடிப்படையில் பரிசிலித்து ஆணை வழங்கப்படும். இவை தவிர அரசு சாரா நிறுவனங்களின் கட்டுப்பாட்டின் கீழ் ஒன்பது கட்டிட மையங்கள் செயல்படுகின்றன.

### 7.2. இக்கட்டிட மையங்களின் அடிப்படை நோக்கங்கள் பின்வருமாறு:

1. கட்டிடத்தொழில் நுட்பத்தை "ஆய்வுக்கூட" நிலையிலிருந்து "கட்டிட மனை" நிலைக்கு கொண்டு வருதல்.

2. கட்டிட கலைஞர்களின் திறமையை உயர்த்துதலும், பயிற்சி அளித்தலும்.

3. முன்னரே வடிவமைக்கப்பட்ட கட்டுமானப் பொருட்களைத் தயாரித்தலும், அவற்றை விற்பனை செய்ய சில்லரை விற்பனை நிலையங்கள் அமைத்தலும்.

4. அரசு சார்பிலும் பொதுமக்கள் சார்பிலும் வீட்டுவசதி கட்டிடத் திட்டங்களை நிறைவேற்றுதல்.

5. பொதுமக்களுக்கு, வீடு கட்டுவதில் வழிகாட்டுதல், ஆலோசனை அளித்தல் மற்றும் அறிவுரை கூறுதல்.

7.3 தமிழ்நாடு ஊரக இளைஞர் சுயவேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் நேரு வேலை வாய்ப்புத் திட்டம் (கட்டுமானத்தைத் தரமுயர்த்தல்) ஆகியவற்றின் கீழ் கிராமம் மற்றும் நகர்ப்புற இளைஞர்களுக்கு செலவுக்கேற்ப பயன்தரும் கட்டிடத் தொழில்நுட்பம், உற்பத்தி, கட்டுமானம்



ஆகியவற்றில் இக்கட்டிட மையங்கள் பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகின்றன. இதுவரை 3,500 கைவினைஞர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். ரூ.23.69 கோடி மதிப்புள்ள வீடுகள் இத்திட்டத்தின் மூலம் கட்டப்பட்டுள்ளன. இதில் பள்ளிக் கட்டிடங்கள், மதிய உணவுக் கூடங்கள், அங்கன்வாடிகள், பால்வாடிகள் (Balvadis), போக்ரா ஷெட்டுகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருத்துவ இல்லங்கள் அடங்கும். இவை பரவலாக்கப்பட்ட மாவட்ட திட்டங்களின் கீழ் (Decentralised District Planning) கட்டப்பட்டவையாகும். புதிதாக உண்டாக்கப்பட்ட மாவட்டங்களிலும் கட்டிட மையங்கள் தொடங்கப்பட உள்ளன.

7.4 முன்னரே வடிவமைக்கச் சாத்தியமான செலவுக்கேற்ற பயன்கிட்டும் வகையில் கட்டுமானப் பொருட்களைத் தயாரித்து அரசுத் துறைகளுக்கும், பொது மக்களுக்கும் இக்கட்டிட மையங்கள் வழங்குகின்றன.

இக்கட்டிட மையங்கள் புதிய முறையில் திட்டமிட்டு கட்டிடங்கள் வடிவமைக்கப்படுகின்றன. மேலும், இத்திட்டத்தின் கீழ் கட்டிடங்களைக் கட்டுவதில் செலவுக்கேற்ப பயனளிக்கக்கூடிய சாத்தியமான அனைத்து கட்டிடத் தொழில் நுட்ப உத்திகளையும் பின்பற்றி வருகின்றன. இதன் காரணமாக, கட்டுமானச் செலவு 15 சதவீதம் முதல் 25 சதவீதம் வரையில் குறைந்துள்ளது. இவ்வாறு கட்டுமானச் செலவு குறைந்ததன் வாயிலாகக் கிடைத்த மீதித் தொகை இதே திட்டத்திற்குக் கூடுதல் வசதிகளை ஏற்படுத்துவதில் மீண்டும் பயன்படுத்தப்படுகிறது.

7.5 கீழ்க்கண்ட கட்டிட மையங்கள் தொடங்குவதற்கான கருத்துரு அட்கோவின் பரிசீலனையில் உள்ளது.

1. விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டம்.
2. காஞ்சிபுரம்-அண்ணா மாவட்டம்.
3. நாமக்கல்-இராஜாஜி மாவட்டம்.
4. திருவள்ளூர்-எம்.ஜி.ஆர். மாவட்டம்
5. திருவாரூர்-ஏ.டி.பன்னீர்செல்வம் மாவட்டம்
6. வைகை வீரன் அழகுமுத்து மாவட்டம்
7. பொள்ளாச்சியில் ஒரு துணை மையம்.

## 8. அரசு அலுவலர்களுக்கு வீடு கட்ட முன்பணம்

8.1. அரசு அலுவலர்கள் வீடு கட்ட முன்பணம் வழங்கும் திட்டத்தின் கீழ் அரசு அலுவலர்களுக்கும், அனைத்திந்திய பணித்தொகுதி உள்ளிட்ட

அதிகாரிகளுக்கும், மனை வாங்குவதற்கு அல்லது அதில் வீடு கட்டுவதற்கு அல்லது ஏற்கனவே கட்டப்பட்ட வீடு/அடுக்ககம் வாங்குவதற்கு அல்லது கட்டப்பட்டு வரும் வீடு/அடுக்ககம் வாங்குவதற்கு, மொத்த உச்ச வரம்புத் தொகையான ரூ.4.00 இலட்சம் வழங்கப்படுகிறது. ஏற்கனவே கட்டப்பட்ட வீட்டு வசதியினை விரிவாக்கவும், மேம்படுத்தவும் ரூ.2.00 இலட்சம் உச்சவரம்பிற்கு உட்பட்டு அரசினால் கடனுதவி வழங்கப்படுகிறது. இவ்வாறு வழங்கப்படும் கடன் தொகையானது மொத்த உச்சவரம்புத் தொகையான ரூ.4.00 இலட்சத்திற்கு உட்படும், அரசு ஊழியர்களின் திரும்பச் செலுத்தும் திறனுக்கு ஏற்றவாறும் இருக்கும்.

இத்திட்டத்திற்கு 1997-98-ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 47.25 கோடி கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

| | | (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1. | அனைத்திந்திய பணி அலுவலர்கள் | 00.50 |
| 2. | பிற அரசு ஊழியர்கள் | 41.00 |
| 3. | தலைமைச் செயலக ஊழியர்கள் | 04.25 |
| 4. | ஊராட்சி ஒன்றிய பள்ளி ஆசிரியர்கள் | 01.50 |
| | மொத்தம் | 47.25 |

**8.2. விட்டு வசதி மேம்பாட்டு நிறுவனம் (HDFC)/இந்தியன் வங்கி (IND BANK) விட்டு வசதி நிறுவனம், கனரா வங்கி விட்டு வசதி நிறுவனம் (CAN FIN HOMES LTD)**

வீடு கட்டுவதற்கான வசதியை மேலும் பல அரசு ஊழியர்களுக்கு நீட்டிக்கும் நோக்கத்துடன், வீட்டு வசதி மேம்பாட்டு நிறுவனம், கனரா வங்கி வீட்டு வசதி நிறுவனம், இந்தியன் வங்கி வீட்டு வசதி நிறுவனம் ஆகிய நிறுவனங்கள் மூலமாக நேரடியாக நிதியுதவி வழங்கும் திட்டத்தை அரசு கொண்டு வந்தது. அந்நிறுவனங்கள் முறையே ரூ.15/-கோடி /5.00 கோடி/5.00 கோடி கடனுதவி வழங்கியுள்ளது.

**8.3. தமிழ்நாடு அரசு ஊழியர் விடு கட்டும் முன் பணம் சிறப்பு குடும்ப பயனளிப்பு நிதித் திட்டம்**

தமிழ்நாடு அரசு ஊழியர் வீடு கட்டும் முன்பணம் சிறப்பு குடும்ப பயனளிப்புத் திட்டம் 1-4-1986 முதல் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் வீடு கட்ட முன்பணம் பெற்ற அனைத்து அரசு



ஊழியர்களுக்கும் கடன் தொகையினை திரும்பச் செலுத்தும் தொகையில் 1 விழுக்காடு தொகையை மாத சந்தாவாக கடன் பெற்ற மாதத்திற்கு அடுத்த மாதம் முதல் செலுத்த வேண்டும். ஓய்வு பெறுவதற்கு முன் 5 ஆண்டுகளுக்கு மேல் பணிக்காலம் உள்ள அலுவலர்கள் மட்டுமே இத்திட்டத்தின் கீழ் பயன் பெற முடியும். கடன் பெற்றவர் பணிக்காலத்தில் மரணமடைந்தால் அவரது கடன் முழுவதுமாக செலுத்தப்படாமலிருப்பின் இத்திட்டத் தொகையினால் மீதக் கடன் தொகைக்கு சரிக்கட்டப்படும்.

## 9. இடவசதிக் கட்டுப்பாடு

**9.1.** குடியிருப்பதற்குரிய மற்றும் குடியிருப்பதற்கு அல்லாத கட்டிடங்களை வாடகைக்கு விடுவது மற்றும் அவற்றிற்கான வாடகை ஆகியவற்றை முறைப்படுத்தும் பொருட்டும் குடியிருப்பவர்கள், நியாயமற்ற முறையில் வீட்டின் உரிமையாளர்களால், வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாக்கும் நோக்குடனும், தமிழ்நாடு 1960-ஆம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை மற்றும் வாடகைக் கட்டுப்பாடு) சட்டம் இயற்றப்பட்டது. சென்னை மாநகரைப் பொறுத்தவரையில், மாவட்ட ஆட்சித் தலைவரும், தமிழ்நாட்டின் ஏனைய மாவட்டங்களைப் பொறுத்தவரையில் கோட்டாட்சியர்களும், இச்சட்டத்தின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரிகளாவர்.

**9.2.** இச்சட்டத்தின் கீழ், எடுத்துக் கொள்ளப்பட்ட கட்டிடங்கள், இடவசதி நோக்கங்களுக்காக தமிழ்நாடு அரசுப் பணியாளர்களுக்கும், தமிழ்நாடு அரசுத் துறை அலுவலகங்களின் இடவசதிக்காக அரசுத் துறைகளுக்கும், ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. மேற்படி கட்டிட உரிமையாளர் அவருடைய சொந்த பயனுக்காக அல்லது அக்கட்டிடத்தின் பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக அல்லது அக்கட்டிடத்தை இடிப்பதற்காக/மாற்றிக் கட்டுவதற்காக உண்மையில் தேவைப்பட்டு அக்கட்டிடத்தைத் திரும்பக் கேட்பாராயின், வாடகைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள அக்கட்டிடத்தை மீண்டும் அவற்றின் உரிமையாளர்களுக்குத் திருப்பிக் கொடுக்க, இச்சட்டத்தின் விதிமுறைகளின் கீழ் வகை செய்யப்பட்டுள்ளது.

**9.3.** அதே சமயத்தில், வீட்டின் உரிமையாளர்களும் குடியிருப்பவர்களும் நியாய வாடகையை நிர்ணயம் செய்தல் அல்லது அதனைப் பரிசீலித்தல், குடியிருப்பவர்களைக் காலிசெய்தல் போன்றவற்றிற்கு எதிராக மேல் முறையீடு செய்கின்ற விஷயத்திலும், நியாய வாடகையை நிர்ணயிக்கும் விஷயத்திலும் எதிர்நோக்கிய சில நடைமுறை இடர்ப்பாடுகள் அரசின்

[1997 ஏப்ரல் 1

கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. டெல்லி நிருவாகம் அண்மையில், புதிய சட்டம் ஒன்றை இயற்றியுள்ளது. மாநில அரசு சட்டத்தில் இதே போன்ற மாற்றங்களைச் செய்ய பரிசீலிப்பதற்காக, மாதிரி வாடகை கட்டுப்பாட்டுச் சட்டத்தின் நகல் ஒன்றை மத்திய அரசு இவ்வரசுக்கு அனுப்பியுள்ளது. ஆகவே, தற்போதுள்ள சட்டத்தில் விரிவான திருத்தங்களைச் செய்வதற்கான செயற்குறிப்பு ஒன்று பரிசீலனையிலுள்ளது.

**9.4.** இடவசதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தைச் செயல்படுத்துவதற்காக அனுமதிக்கப்பட்ட பணியாளர்களின் செலவுக்காக, 1997-98-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.13.83 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 10. வீட்டு வசதிக்கு மொத்த மதிப்பீடு

1997-98-ஆம் ஆண்டில், பொதுத்துறை நிறுவனங்களின் மூலம் புதிய வீடுகள் கட்டுவதற்காகவும், பழைய வீடுகளை மேம்படுத்தவும் ரூ.700.32 கோடி கீழ்க்கண்டவாறு வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது சென்ற ஆண்டில் (1996-97) வழங்கப்பட்ட ரூ.607.36 கோடியை விட 15.3 விழுக்காடு அதிகமாகும்.

| நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|
| தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் | 250.00 |
| வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் | 356.97 |
| தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் | 45.96 |
| அரசு அலுவலர்களுக்கு வீடு கட்ட முன்பணம் | 47.25 |
| இடவசதிக் கட்டுப்பாடு | 0.14 |
| மொத்தம் | **700.32** |

"குடும்பத்திற்கு ஒரு வீடு" எனும் உயர்ந்த இலட்சியத்தை எய்திடும் வகையில் பல்வேறு திட்டங்களின் மூலம் மேற்கூறிய வீட்டுவசதித் திட்டங்களை திறம்பட நிறைவேற்றிட ஒரு சிறந்த வீட்டுவசதிக் கொள்கையை அரசு செயல்படுத்த உள்ளது.



1997 ஏப்ரல் 1]

# இணைப்பு-2

*(101 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## நகர்ப்புற வளர்ச்சி

## மானியக் கோரிக்கை எண் 33

## கொள்கை விளக்கக் குறிப்பு 1997-98

### 1. நகர்மயமாதல்

**1.1** இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டை நோக்கிச் செல்லும் நாம், இருபதாம் நூற்றாண்டில் முடிக்கப்படாத பணிகளுடன் இன்னும் சில ஆண்டுகளில் அடுத்த நூற்றாண்டில் அடியெடுத்து வைக்க வேண்டியுள்ளது. நகரமயமாதல் என்பது உலகளாவியது என்றாலும் இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் "நகரமயமாதல்" மிக வேகமாக ஏற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். நகரமயமாதல் என்பது நகர்ப்புறங்களில் மக்கள் தொகை வளர்ச்சியை அதிகரிப்பதோடு மட்டும் அல்லாது, நகர மையங்களின் எண்ணிக்கை வளர்ச்சி அடைவதையும் பிரதிபலிப்பதாக அமைகிறது. தமிழ்நாட்டில், நகர்மயமாதல் போக்குவரத்து வழித்தடங்களை ஒட்டிய பகுதிகளில் சமச்சீரான முறையில் வளர்ச்சியடைந்து வருகிற தன்மையுடையதாக உள்ளது. இம்மாநிலம் நிலவியல் அமைப்பில் அதிக நகர்ப்புற மக்கள் தொகையையும், நகரங்களையும் பெற்றிருந்தாலும், மேற்படி சில குறிப்பிட்ட பகுதிகளில் முழு வளர்ச்சி அடைந்த நகரப்பகுதி ஏதும் இல்லாதது மற்றொரு குறிப்பிடத்தக்க அம்சமாகும். குறைந்த பயணக் கட்டணம் மற்றும் பயண நேரம் ஆகியவையுடன் பயணம் செய்யதக்க தொலைவில் சிறு நகரங்கள் அமைந்தால் மட்டுமே, ஊரகப் பகுதியில் வாழும் பெரும்பகுதி மக்களுக்கு வசதிகள் அளித்திட இயலும்.

**1.2** இம்மாநிலத்திலுள்ள மக்கள்தொகை தற்போது 5.58 கோடியாக இருப்பினும் வரும் 2011-ஆம் ஆண்டில் அது 7.32 கோடியாக இருக்கக்கூடும். மேலும், தற்போதுள்ள நகர்ப்புற மக்கள்தொகை 1.90 கோடியிலிருந்து 3.80 கோடியாக அதாவது இரு மடங்கு அளவுக்கு இந்தக் காலகட்டத்தில் உயரும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போதுள்ள மொத்த மக்கள் தொகையில் 34 விழுக்காடு நகர்ப்புறங்களில் வசிக்கும் நிலை மாறி, 50 விழுக்காடு நகர்ப்புறங்களில் வாழ்வர் என்னும் நிலை உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

[1997 ஏப்ரல் 1

**1.3** பெருகி வரும் மக்கள்தொகைக்கு ஏற்ப உறைவிடம் அளிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறபோது, குறிப்பாக நகர்ப்புற மக்களுக்கு உறைவிடம் அளிக்க, உணவு உற்பத்தியில் உள்ள வேளாண் நிலங்களை பாதிக்கா வண்ணம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்திய நாட்டில் சராசரியாக ஒருவருக்கு 0.50 ஹெக்டேர் நிலப்பரப்பு உள்ளது. இதுவே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 0.20 ஹெக்டேர் என்ற அளவில்தான் உள்ளதால் தேவைக்குரிய நிலப்பரப்பு கிடைப்பது என்பது அரிதாக உள்ள நிலையில் இப்பணியை நிறைவேற்றுவது கடினமானது எனலாம். இதுவே வரும் 2011-ஆம் ஆண்டில் 0.15 ஹெக்டேராகக் குறையும் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது. எனவே விளை நிலங்களைப் பாதுகாக்கவும் பிற இனங்களுக்குக் கிடைக்கும் நிலத்தினை முழுமையாகப் பயன்படுத்தவும் விரைந்து நடவடிக்கை எடுத்திடல் வேண்டும் மேலும் தமிழ்நாட்டில் உள்ள மலைப் பகுதிகளும், சற்றேறக்குறைய 1000 கி.மீ. நீளமுள்ள கடற்பகுதி நிலப்பரப்பினையும், அதன் சுற்றுச்சூழல் முக்கியத்துவத்தையும் கருத்தில் கொண்டு பேணிப்பாதுகாக்கப்பட வேண்டும்.

**1.4** மேற்குறிப்பிட்ட நிலையில்

(அ) பெருகி வரும் மக்கள்தொகை

(ஆ) விரைந்து வரும் நகர்ப்புறமாதல்

(இ) மாநில நிலப்பரப்பினை அதிகரிக்க இயலாத தன்மையும், மிகக்குறைந்த தனிநபர் நிலப்பகுதியும்

(ஈ) சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டியதன் தேவை ஆகியவை பொதுவாக திட்டமிடுவோருக்கும், குறிப்பாக நகர்ப்புற திட்டமிடும் வல்லுநர்களுக்கும் ஒரு சவாலாகவே அமைகிறது. எனவே தமிழ்நாட்டில் நகர்ப்புற வளர்ச்சியை எதிர்நோக்கி நகர்ப்புற வளர்ச்சிக் கொள்கை அல்லது வழிமுறை ஒன்றினை விரைந்து வகுத்திட வேண்டியுள்ளது. இதன் அடிப்படையில் ஒரு நகர்ப்புற வளர்ச்சி வழிமுறை தயாரிக்கப்பட்டுள்ளது.

## 2. இந்த வழிமுறையின் நோக்கங்களாவன:

(1) பொருளாதார வளர்ச்சிக்கு உந்துகோலாக விளங்கிடும் வகையில் வட்டார வளர்ச்சி மையங்களுடன் உள்ளடக்கிய சீரான நகர்ப்புற மக்கள் பரவலுக்கான திட்டம்.



1997 ஏப்ரல் 1]

(2) தமிழ்நாட்டிலுள்ள போக்குவரத்து வழித்தடங்களை சரியான முறையில் பயன்படுத்தி அவற்றில் நகரங்களின் மேம்பாடுகளைக் கண்டறிந்து அவற்றை மக்கள்தொகை அடர்த்தி மிகுந்ததாகவும், உயரக் குறைவான கட்டிடங்களுடனும் மேம்பாடு செய்து பொருளாதார மேம்பாட்டிற்கு வகை செய்தல்.

(3) தமிழ்நாட்டில் போக்குவரத்து வழித்தடங்களில் தேவைப்படும் இணைப்புகளைக் கண்டறிந்து மாநிலத்தின் சீரான வளர்ச்சிக்கு வழி கோலுதல்.

(4) வட்டாரத்தை ஒரு நிலையாகக் கொண்டு நகர்ப்புற அடிப்படைக் கட்டமைப்பு இல்லாத பகுதிகளைக் கண்டறிந்து அப்பகுதியை 20,000 - 50,000 வரை மக்கள் தொகை உள்ள நகரங்களாக அபிவிருத்தி செய்து ஊரக மக்கள் நகர்ப்புற வசதிகளையும் பயன்களையும் பெற வகை செய்தல்.

(5) எதிர் கொள்ளவிருக்கும் நகரமயமாதலை சந்திக்கும் வகையில் சட்ட, நிதி மற்றும் நிர்வாக அமைப்புகளைக் கண்டறிந்து, அது குறித்து மத்திய திட்டக் குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ள வரைவு அறிக்கைக்கு ஒப்புதல் பெறுதல். வரைவு அறிக்கைக்கு மத்திய திட்டக்குழு தன் பாராட்டைத் தெரிவித்துள்ளது. மத்திய அரசின் மூலம் அதற்கு இறுதி வடிவம் கொடுக்கவும். அரசினால் ஒப்பளிக்கப்படவும், செயல்படுத்தவும், நடவடிக்கை எடுத்து, அரசியலமைப்புச் சட்டத்திருத்தம் 73,74 மற்றும் மாநிலச் சட்டங்களுக்கு ஏற்ப செயல்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

## 3. நகர் ஊரமைப்புத் துறை

### 3.1. நகர் ஊரமைப்புத் துறையின் பங்கு

3.1.1 1971-ஆம் ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்டத்தை அமல்படுத்தும் பொறுப்பு நகர் ஊரமைப்புத் துறையைச் சார்ந்தது. உள்ளூர் திட்டக் குழுமங்களால் தயாரிக்கப்பட வேண்டிய சட்டப்பூர்வ முழுமைத் திட்டம், மற்றும் விரிவு மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றைத் தயாரிக்க உதவுதல், குடியிருப்பு பகுதி, வணிகப் பகுதி, தொழிற் பகுதி போன்று பல்வேறு நிலப்பயன்பாடு குறித்த அபிவிருத்திகளை நெறிப்படுத்துதல், நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டங்களை நிறைவேற்றுதல் போன்றவற்றை இத்துறை செய்து வருகிறது. அவற்றின் மூலம் நகரங்களில் ஏற்படும் வளர்ச்சிகளை நெறிப்படுத்தி, சீரானதும் மக்களுக்குத் தூய்மையான சூழலுடன் கூடிய

[1997 ஏப்ரல் 1

குடியிருப்புப் பகுதிகள் ஏற்படுத்திடவும் இத்துறை உறுதுணையாக செயல்படுகிறது.

**3.2. நகர் ஊரமைப்புத் துறை பின்வரும் சட்டப்பூர்வமான திட்டங்களையும் தயாரித்து வருகிறது**

**3.2.1.** முழுமைத் திட்டம்

சிறு நகரங்களுக்கு அதன் எல்லைக்கும், பெரிய நகரங்களுக்கு நகர் மற்றும் அதைச் சார்ந்துள்ள பகுதிகளுக்கும் முழுமைத் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. நகரப் பகுதிகளில் உள்ள நிலங்களின் பயன்பாட்டை நெறிப்படுத்துதல், அவற்றை போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்புகளுடன் இணைத்தல் ஆகியவை முழுமைத் திட்டங்களின் நோக்கமாகும். ஒவ்வொரு நகரத்தின் தேவைகளுக்கு ஏற்ப நிலப்பயன்கள், குடியிருப்புப் பகுதி, வணிகப் பகுதி, கல்விப் பகுதி, தொழிற்பகுதி, சிறப்புப் பகுதி என ஒவ்வொரு முழுமைத் திட்டத்திலும் பாகுபடுத்தப்படுகிறது. இத்தகைய முழுமைத் திட்டங்கள் 105 நகரங்களுக்கு தயாரிக்கப்பட்டுள்ளன.

**3.2.2.** விரிவு மேம்பாட்டுத் திட்டங்கள்

விரிவு மேம்பாட்டுத் திட்டங்கள் வளர்ந்து வரும் நகரத்தின் குறிப்பிட்ட பகுதிகளுக்கு தயாரிக்கப்படுகின்றன. நகரத்தில் வேகமாக வளரும் வாய்ப்பும், சூழலும் கொண்ட பகுதிகளாக தெரிவு செய்யப்பட்டு விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் திட்டமிடப்படுகின்றன. தற்போதுள்ள நிலப்பயன், உத்தேச நிலப்பயன், பல்வேறு பயன்களுக்குத் தேவையானதும், சமூக, கல்வி, பொழுதுபோக்கு, செய்தித் தொடர்பு மற்றும் சாலைகள் ஆகிய அடிப்படை கட்டமைப்புக்குத் தேவையான நிலங்களையும் ஒதுக்கீடு செய்வதே இத்திட்டத்தின் முதன்மை நோக்கமாகும். இத்துறை, இதுகாறும் 1384 விரிவு மேம்பாட்டுத் திட்டங்களைத் தயாரித்துள்ளது. அவைகள் தற்போது அறிவிக்கை செய்தல், இசைவு அளித்தல் மற்றும் இறுதி ஒப்புதல் அளித்தல் என்ற பல நிலைகளில் உள்ளன.

**3.2.3.** புது நகர் வளர்ச்சித் திட்டங்கள்

இத்தகைய திட்டங்கள் மாமல்லபுரம் போன்ற மரபு வழி பெருமையடைந்த பகுதிகளுக்கும், தொழில் துறையில் மிக விரைவாக



1997 ஏப்ரல் 1]

வளர்ந்து வரும் ஓசூர் போன்ற நகரங்களுக்கும் தயாரிக்கப்படுகின்றன. இதுகாறும் ஐந்து புது நகர் வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட திட்டங்கள் நகர் ஊரமைப்புச் சட்டத்தின்படி தயாரிக்கப்பட வேண்டிய திட்டங்களாகும்.

**3.3. இவை தவிர, பின்வரும் திட்டங்களையும் இத்துறை தயாரித்து வருகிறது**

**3.3.1.** வட்டாரத் திட்டங்கள்

ஊரகப் பகுதி மக்களுக்குத் தேவையான குறைந்தபட்ச அடிப்படைத் தேவைகளைக் கண்டறிந்து ஊராட்சி ஒன்றிய அளவிலான திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. இத்திட்டங்கள், வளர்ச்சி முனையங்கள், போக்குவரத்து, கட்டமைப்பு ஆகியவற்றையும் கண்டறிந்து, குறிப்பிட்ட அளவுக்குத் தேவையான வசதிகளையும், சேவைகளையும் உள்ளடக்கியதாக அமையும், இத்தகைய திட்டங்கள் இதுகாறும் இருபத்தி ஒன்பது தயாரிக்கப்பட்டுள்ளன.

**3.3.2.** கட்டமைப்புத் திட்டங்கள்

நகரங்களுக்குத் தயாரிக்கப்படும் முழுமைத் திட்டங்களைத் தொடர்ந்து கட்டமைப்புத் திட்டங்கள் தயாரிக்கப்பபடுகின்றன. இவை நகர்ப்புற வளர்ச்சிக்குத் தேவையான குறுகிய கால மற்றும் தொலைநோக்குத் திட்டங்களைக் கண்டறிகின்றன. இவை, நகரங்களில் காணப்படும் கட்டமைப்புகளின் குறைகளை ஆராய்ந்து அவற்றைச் சரி செய்வதற்குத் தேவைப்படும் முதலீடுகளையும் தெளிவுபடுத்துகின்றன. இதுகாறும் 60 கட்டமைப்புத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

**3.4. திட்டங்கள்**

இத்துறையில், தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டங்களாவன:

(அ) ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான திட்டங்கள்.

(ஆ) மாநில ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்கள்.

(இ) பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத் திடல்கள் மேம்பாடு.

[1997 ஏப்ரல் 1

**3.4.1.** ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான திட்டங்கள்

ஊரகப் பகுதிகளிலிருந்து பெரு நகரங்களுக்கு மக்கள் குடி பெயர்வதைத் தடுக்கும் வகையில் மத்திய மாநில அரசு நிதியுதவியுடன் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின் வளர்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களின் வழியாக உள்ளாட்சிகளின் நிதி ஆதாரங்களை மேம்படுத்துவதற்கு ஏற்ற நிலையான சொத்துக்கள் ஏற்படுத்தப்படுகின்றன. எட்டாவது திட்டக் காலத்தில் 1995-96-ம் ஆண்டு வரை 38 நகரங்களில் ரூ.39.75 கோடி முதலீட்டில் 197 திட்டங்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் வேலைவாய்ப்பிற்கு முன்னுரிமை அளிப்பதுடன் அடிப்படைக் கட்டமைப்பை மேம்படுத்தவும் வகை செய்கிறது. அண்மையில் மத்திய அரசால் திருத்தியமைக்கப்பட்ட நெறிமுறைகளின்படி இத்தகைய திட்டங்களுக்கு 48:32 என்ற விகிதத்தில் மத்திய மற்றும் மாநில அரசால் மானியமாக நிதியுதவி வழங்கப்படுகிறது. மீதமுள்ள தொகை நிதி நிறுவனங்களிடமிருந்து கடனுதவியாக பெறப்படுகிறது. ஒவ்வொரு நகரத்திற்கும் உரிய உயரளவு மூலதனச் செலவு ரூ.10 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. திட்டங்களைத் தயாரிக்கும் செலவினத்தை சரிகட்ட மத்திய அரசினால் மானியமாக வழங்கப்படவும் வழிவகை உள்ளது.

**3.4.2.** மாநில ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்

மாநில அரசினால் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் மூலம் சிறிய நகராட்சிகளுக்கும், பேரூராட்சிகளுக்கும் திட்டம் ஒன்றுக்கு உயரளவாக ரூ. 30 இலட்சம் நிதி உதவி வழங்கப்படுகிறது. இதன் மூலம் பேருந்து நிலையம், வணிக வளாகங்கள் போன்ற வருவாய் தரத்தக்க திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு உள்ளாட்சிகளின் வருவாயைப் பெருக்க வகை செய்யப்படுகிறது. எட்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 60 நகரங்களில் ரூ.12.42 கோடி முதலீட்டில் 60 திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு அவற்றில் பல்வேறு கட்டங்களில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**3.4.3.** முதல், இரண்டாம் நிலை நகரங்களில் பூங்காக்கள் மேம்பாடு

மக்கள் நெரிசல் நிறைந்த நகர்ப் பகுதிகளில் பூங்காக்களும் விளையாட்டுத் திடல்களும் முதன்மையான மனமகிழ்வு இடங்களாக விளங்குகின்றன. அநேகமாக அனைத்து நகர்ப்புற பகுகளிலும் பூங்காக்கள்



1997 ஏப்ரல் 1]

இருப்பினும் நிதி ஆதாரம் இன்மையால் அவை செவ்வனே பராமரிக்கப்படாமல் உள்ளன. இத்திட்டத்தின் வாயிலாக பூங்கா ஒவ்வொன்றுக்கும் ரூபாய் 2.50 இலட்சம் செலவில் அவை முழுமையாக பராமரிக்கப்பட்டு உரிய பயனுக்குக் கொண்டுவரப்படுகிறது. இதில் ரூ.1.25 இலட்சம் உள்ளாட்சி மன்றங்களுக்கு மானியமாக வழங்கப்படும். எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் 10 நகராட்சிப் பகுதிகளில் 10 பூங்காக்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

**3.5. சிறப்புத் திட்டங்கள்:**

**3.5.1.** நகரங்களுக்கு வான்வழிப் புகைப்படங்கள்

திட்டங்கள் தயாரிக்கத் தேவையான விவரங்களை அதி நவீனமானதும், துல்லியமாகவும் தர வல்லதுமான வான்வழிப் புகைப்படங்களை பல வகைகளில் இத்துறை பயன்படுத்திக் கொள்கிறது. உலக வங்கித் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்ட நிதி உதவி இதற்குப் பயன்படுத்தப்பட்டு 30 நகரங்களுக்கு புகைப்பட விவரங்கள் பெறப்பட்டுள்ளன. தனித் திட்டமாக நீலகிரி மாவட்டத்திற்கும் புகைப்படங்கள் பெறப்பட்டுள்ளன. இப்புகைப்படங்களைப் பயன்படுத்தி நகரங்களில் நிலப்பயன் வரைபடங்கள் தயாரிக்கப்படுகின்றன. தற்போது திருவண்ணாமலை மற்றும் வேலூர் நகரங்களுக்கு அத்தகைய படங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

**3.5.2.** கடலோரப் பகுதி மேலாண்மைத் திட்டம்

கடலோரப் பகுதிகளில் இயற்கையாக அமைந்துள்ள நில இயல் வனங்களான தில்லை வனம் (சதுப்பு நிலக்காடுகள்) பவழப் பாறைகள் மற்றும் இயற்கை எழில் கொஞ்சும் பகுதிகள் ஆகியவற்றினை பாதுகாத்திடும் பொருட்டு மைய அரசால் அறிவிக்கப்பட்ட வழிகாட்டு முறைகளின்படி கடலோர மேலாண்மைத் திட்டத்தினைத் தயாரிக்கும் பணியினை இத்துறை ஏற்றுள்ளது. இது கடலோரப் பகுதி கட்டுப்பாட்டுத் திட்டத்தின் தொடர்ச்சியாகும். தயாரிக்கப்பட்ட அறிக்கை மைய அரசுக்கு அனுப்பப்பட்டு, மைய அரசால் கொள்கையளவில் ஏற்கப்பட்டுள்ளது. மைய அரசு இத்திட்டத்தில் சில மாற்றங்கள் செய்யுமாறும், அம் மாற்றங்களை இந்திய கடல் இயல் மையம் மற்றும் மத்திய தொல்பொருள் ஆய்வுத் துறையின் ஆலோசனையைப் பெற்று செய்யுமாறும் கேட்டுக் கொண்டுள்ளது. திருத்திய திட்டம் தயாரிக்கும் பணியின் ஒரு பகுதியாக சென்னையில் ஒரு நாள் - கருத்தரங்கு (One day workshop) ஒன்று

ஏற்பாடு செய்யப்பட்டு, அரசுத் துறைகள், கல்வியாளர்கள் ஆகியோரது கருத்துக்கள் அறியப்பட்டன. அதில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் கவனத்தில் கொள்ளப்பட்டு, திருத்திய மேலாண்மைத் திட்டம் உருவாக்குவதற்கு பயன்படுத்தப்படும். திருத்தப்பட்ட திட்டம் குறுகிய காலத்தில் மைய அரசுக்கு அனுப்பி வைக்கப்படும்.

**3.5.3. போக்குவரத்து இயக்கம் மற்றும் மேலாண்மைத் திட்டம்**

நகரங்களில் உள்ள போக்குவரத்துப் பிரச்சினைக்குரிய பகுதிகளை ஆய்ந்து அவற்றினை சீராக்க இத்துறை போக்குவரத்துச் செயல்முறை மற்றும் மேலாண்மைத் திட்டங்களைத் தயாரித்து வருகிறது. இதுகாறும் 26 சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கும் நான்கு பெரு நகரங்களுக்கும் ரூ.58.95 லட்சம் செலவில் பல்லவன் போக்குவரத்து ஆலோசனை நிறுவனத்தின் உதவியுடன் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இதுகாறும் 22 நகரங்களுக்கு போக்குவரத்து செயல்முறை மற்றும் மேலாண்மைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு திட்டங்களை செயலாக்கும் வகையில் விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

**3.5.4. நகர்ப்புற தகவல் விவரம்**

முழுமைத் திட்டங்கள், விரிவு அபிவிருத்தித் திட்டங்கள், பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல்கள், தொழிற் பகுதிகள் மற்றும் நகர் அளவிலான புள்ளிவிவரங்கள், வட்டாரத் திட்டங்கள் ஆகியவற்றினை உள்ளடக்கிய நகர்ப்புறத் தகவல் மையம் இத்துறையில் அமைக்கப்பட்டுள்ளது. 100 முழுமைத் திட்டங்கள் மற்றும் விரிவு அபிவிருத்தித் திட்டங்களுக்குரிய புள்ளிவிவரங்கள் கணிப்பொறியில் பதிக்கப்பட்டுள்ளது. இவற்றின் தொழில் தொடர்பான தகவல்கள், மாவட்ட தொழில் மையங்களுக்கும், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்திற்கும் ஏனைய முகமைகளுக்கும் பயனுள்ள வழிகாட்டியாக அமைகிறது. ஒவ்வொரு ஆண்டும் இத்தகவல்கள் புதுப்பிக்கப்படுகின்றன.

**3.6. 1997-98-ம் ஆண்டிற்கான செயல்பாடுகள்**

**3.6.1. சட்டபூர்வமான திட்டங்கள் தயாரித்தல்**

நகர்ப்புறங்களில் கட்டுப்பாடுடன் கூடிய வளர்ச்சியை உறுதிப்படுத்த இத்துறை நகர்ப்புறங்களுக்கு முழுமைத் திட்டங்கள் தயாரிப்பதிலும், விரைந்து வளரும் வாய்ப்புடைய நகரின் பகுதிகளுக்கு விரிவு மேம்பாட்டுத் திட்டங்கள் தயாரிப்பதிலும் தனிக்கவனம் செலுத்தி வருகிறது. தொழில்



முனைவோர் மற்றும் தனி நபர்களின் பல்வேறு தன்மையுடைய கோரிக்கைகளினால் முழுமைத் திட்டங்களையும், விரிவு மேம்பாட்டுத் திட்டங்களையும் செயலாக்குவதில் இடையூறுகள் தோன்றுகின்றன எனவே, இவற்றை கருத்தில் கொண்டு ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் தயாரிக்கப்பட்ட முழுமைத் திட்டங்களைக் கூர்ந்து ஆராயவும், திருத்தி அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. அது போலவே 10 ஆண்டுகளுக்கு முன்னால் தயாரிக்கப்பட்ட விரிவு மேம்பாட்டுத் திட்டங்களைத் திருத்தி அமைத்திடவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்தகைய ஆய்வினை நகர் ஊரமைப்புச் சட்டப்படி செய்திடல் வேண்டும். சுமார் 60 முழுமைத் திட்டங்களும், 500 விரிவு மேம்பாட்டுத் திட்டங்களும் இத்தகைய மறு ஆய்வு மேற்கொள்ளத் தகுதி வாய்ந்ததாக உள்ளன. மறு ஆய்வு செய்யும்போது, வல்லுநர்களுடனும், தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி உறுப்பினர்களுடனும் கலந்து ஆலோசிக்கப்படும். இத்தகைய மறு ஆய்வு ஐந்து முழுமைத் திட்டங்களுக்கும் 75 விரிவு மேம்பாட்டுத் திட்டங்களுக்கும் 1997-98-ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும். மேலும் ஐந்து புதிய முழுமைத் திட்டங்களும், 50 புதிய விரிவு மேம்பாட்டுத் திட்டங்களும் தயாரிக்கப்படும். அரசு அண்மையில் உதகமண்டலம் முழுமைத் திட்டத்தினை மாற்றியமைக்க ஆலோசனைகள் வழங்கும் பொருட்டு வல்லுநர் குழு ஒன்றினை அமைத்துள்ளது. இந்த முழுமைத் திட்டத்தில் மக்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துக்களை ஆய்ந்து தக்க பரிந்துரைகளை வழங்கிடுமாறு இக்குழுவினை அரசு கேட்டுள்ளது. முழுமைத் திட்டம் 1997-98-ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்படும்.

**3.6.2. புது நகர் திட்டங்கள் மற்றும் விரிவு மேம்பாட்டுத் திட்ட அமலாக்கம்**

முழுமைத் திட்டங்கள், புது நகர் வளர்ச்சித் திட்டங்கள், விரிவு மேம்பாட்டுத் திட்டங்களில் கண்டறியப்பட்ட உத்தேசங்களை அமலாக்க உள்ளூர் திட்டக் குழுமங்களுக்கு அரசு நிதி உதவி அளித்து வருகிறது. நகர்ப்புறப் பகுதிகளின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் திட்டங்களுக்கு இதன் வழியே நிதி உதவி அளித்து விரைந்து வளர்ச்சிக்கு வழி கோலப்படும். ஏற்கனவே உள்ள ஓசூர், மாமல்லபுரம், குறிச்சி, சித்தோடு ஆகியவை தவிர திருப்பெரும்புதூர், திருமங்கலம் ஆகிய பகுதிகளையும் புது நகர் வளர்ச்சிப் பகுதிகளாக அறிவிக்கை செய்யப்படும்.

**3.6.3. தொன்மை மற்றும் வரலாற்றுச் சிறப்பு நகரங்கள்**

தொன்மை வாய்ந்த, வரலாற்றுச் சிறப்பு மிக்க பகுதிகள் முறையான திட்டமின்றி வளருவதால், ஏற்படும் சுற்றுப்புறச் சூழல் சீர்கேட்டை

[1997 ஏப்ரல் 1

கருத்தில் கொண்டு அவை "வரலாற்றுச் சிறப்புப் பகுதிகள்" என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த வகையில், இத்தகைய நகரங்களை சிங்கார நகர்ப்புறங்களாகத் திட்டமிட்டு, கட்டுமானப் பணிகளை நெறிப்படுத்தியும், அடிப்படை வசதிகளைப் பெருக்கியும் உரிய முறையில் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும். இத்தகைய திட்டங்களைத் தயாரிக்க வல்லுநர்கள் ஒத்துழைப்பைப் பெற்று, ஏழு நகரங்களுக்கு வரும் ஆண்டில் இத்திட்டங்கள் தயார் செய்யப்படும். அரசு இத்திட்டங்களை பின்வரும் நகர் பகுதிகளுக்கு தயாரிக்க ரூ.4.90 இலட்சம் அனுமதி வழங்கிட உள்ளது.

1. காஞ்சிபுரம்
2. சிதம்பரம்
3. பூம்புகார்
4. திருவண்ணாமலை
5. பழனி
6. திருத்தணி
7. கும்பகோணம்

**3.6.4.** மிகக் குறைந்த நகர்ப்புற வளர்ச்சியுள்ள வட்டங்களில் நடுநிலை நகரங்கள் அமைத்தல்

தமிழ்நாட்டிற்குத் தயாரிக்கப்பட்டுள்ள நகர்ப்புற வளர்ச்சி வழிகாட்டி செயல்திட்டம் பல வட்டாரங்களில் ஊரகப் பகுதிகளுக்கு தக்க வசதிகளைத் தரக்கூடிய நடுத்தர நகரங்கள் ஏதும் இல்லை எனக் கண்டறிந்துள்ளது. எனவே குறைந்தது 10 வட்டங்களை ஆய்வு செய்து தக்க நடுத்தர நகரம் ஒன்றை ஏற்படுத்தவும், அவற்றிற்கு திட்டமிடவும் தேவைப்படும் முதலீட்டைக் கண்டறியவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. பின்வரும் வட்டங்களில் உள்ள சிறு நகரங்களுக்கான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு திட்டங்கள் தயாரிக்கப்படும்:

| | | |
|---|---|---|
| 1. | பொன்னேரி | எம்.ஜி.ஆர். மாவட்டம் |
| 2. | செங்கம் | திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் |
| 3. | உளுந்தூர்பேட்டை | விழுப்புரம்-ராமசாமி படையாச்சியார் மாவட்டம் |
| 4. | தேன்கனிக்கோட்டை | தர்மபுரி மாவட்டம் |



1997 ஏப்ரல் 1]

| | | |
|---|---|---|
| 5. | பெருந்துறை | பெரியார் மாவட்டம் |
| 6. | உசிலம்பட்டி | மதுரை மாவட்டம் |
| 7. | வேடசந்தூர் | திண்டுக்கல்-மன்னர் திருமலை மாவட்டம் |
| 8. | பாபநாசம் | தஞ்சை மாவட்டம் |
| 9. | பெரம்பலூர் | பெரம்பலூர் - திருவள்ளுவர் மாவட்டம் |
| 10. | கொளத்தூர் | புதுக்கோட்டை மாவட்டம் |

இத்தகைய திட்டங்களை நிறைவேற்ற நிதி உதவி தரத் தக்க நிறுவனங்களையும் கண்டறிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**3.6.5.** மாநகர மத்திய பகுதிகளில் மறு அமைப்பு

மாநகரங்களில் மையப் பகுதிகளின் மறு அமைப்பு பின்வரும் நோக்கங்களை உள்ளடக்கி மேற்கொள்ளப்படும்:

1. மையப் பகுதியில் நெரிசலைக் குறைத்தும் அவற்றின் செயல் திறனை மேம்படுத்துதல்.

2. மொத்த வணிக நடவடிக்கைகளை புறநகர்ப் பகுதிகளில் மாற்றி அமைத்தல்.

3. கட்டுமானங்களால் ஏற்பட்டுள்ள தடைகளை அகற்றி சாலைகளை அகலப்படுத்துதல்.

4. சாலை அகலப்படுத்துதல், சாலைகளை நீட்டித்தல், தேவைப்படும் இணைப்புகளை அமைத்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய திட்டம் தயாரித்தல்.

5. வரலாற்றுச் சிறப்பு வாய்ந்ததும், மரபுச் சிறப்பு வாய்ந்த கட்டடங்களையும், பகுதிகளையும் பராமரித்தல்.

6. நகரின் பகுதிகளில் காணப்படும் நெரிசலைக் குறைக்க வழிவகைகளைக் காணுதல்.

7. அரசுத் துறைகளிலும், தனியார் துறையிலும் இணைந்து செயல்பட்டு மேற்கொள்ளத்தக்க நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல்.

**3.6.6. விழிப்புணர்வுக்கான விளம்பரங்கள்**

நகரங்களும், புற நகர்ப் பகுதிகளும் விரைந்து வளர்வதைக் கருத்தில் கொண்டு பல திட்டங்களை இத்துறை தயாரிக்கிறது. இத்தகைய திட்டங்கள் மக்களுக்கு எளிதில் கிடைத்திடவும், துறை பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. கட்டிட விதிகளை எளிதாக்கவும், கட்டிட விண்ணப்பங்கள் மீது குறித்த காலத்திற்குள் அனுமதி வழங்க விரைந்து நடவடிக்கை எடுக்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

**3.6.7.** மாமல்லபுரம் கடற்கரைப் பகுதிகளுக்கு வளர்ச்சிப் பணிகளை நெறிப்படுத்த சிறு குழு அமைத்தல்

கிழக்கு கடலோரப் பகுதிகளில் அனுமதிக்கப்படாத கட்டட வளர்ச்சி அதிக அளவில் ஏற்படுவதை கருத்தில் கொண்டு மைய அரசினால் அறிவிக்கப்பட்ட கடலோரப் பகுதிகளுக்கான கட்டுப்பாட்டு விதிகளின்படி வளர்ச்சியினை ஒழுங்குபடுத்தவும், சீரான வளர்ச்சிக்கு வழிகோலும் பொருட்டும் முட்டுக்காடு முதல் சலவன்குப்பம் வரையில் உள்ள 11 கிராமங்கள் முன்னுரிமையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு வளர்ச்சிகளை நெறிப்படுத்த சிறு குழு ஒன்று ஏற்படுத்தப்படும்.

**3.6.8. புதிய கூட்டு உள்ளூர் திட்டக் குழுமங்கள்**

விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை ஆகியவற்றினை மாவட்டத் தலைமையகங்களாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்நகரங்களில் மிக வேகமான வளர்ச்சி நடவடிக்கைகள் காணப்படுகின்றன. இந்நகரங்களின் நகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகள் முன்னமேயே வளர்ச்சியடைந்துள்ளதால் இவற்றின் வெளியே அமையும் கிராமங்களில் வருங்காலத்தில் வளர்ச்சி அடைய வாய்ப்பு உள்ளது. எனவே சீரான வளர்ச்சியினை ஏற்படுத்தும் முகத்தான் விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய இரு நகரங்களின் சுற்றுப்புறப் பகுதிகளையும் கூட்டு உள்ளூர் திட்டப் பகுதிகளாக அறிவிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த உள்ளூர் திட்டப் பகுதி மாவட்ட தலைமையக வளாகத்திற்குத் தேர்வு செய்யப்பட்ட பகுதிகளையும் இதர சுற்றுப்புறப் பகுதிகளையும் உள்ளடக்கியதாக இருக்கும்.

## 4. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

இந்தியாவிலுள்ள நகர்மயமான மாநிலங்களில், தமிழ்நாடு மூன்றாவது இடத்தைப் பெற்றிருக்கிறது. இம்மாநிலத்தில் 34.2 சதவிகித மக்கள்



நகர்ப்புறங்களில் வாழ்ந்து வருகிறார்கள். நகர்ப்புற மக்கள் தொகையில் கால் பகுதிக்கும் அதிகமானவர்கள் சென்னைப் பெருநகர்ப் பகுதியில் வசிக்கின்றனர். இம்மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் பத்தில் ஒரு பகுதியினர், இப்பெருநகர் பகுதியில் வாழ்ந்து வருகிறார்கள். சென்னை நகரத்தில் 1991-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 37.9 இலட்சமாக இருந்தது. 1991-2001-க்குள், மக்கள் தொகை 11.57 இலட்சம் கூடுதலாக அதிகரித்து அடுத்த நூற்றாண்டு ஆரம்பத்திற்குள் சென்னை நகர மக்கள் தொகை 49.47 இலட்சமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதே சமயத்தில், சென்னைப் பெருநகரப் பகுதியின் மக்கள் தொகை 75 இலட்சமாக இருக்கும் என்றும், இது 2011-ல் 95 இலட்சமாக மேலும் அதிகரிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

நகர்மயமாக்கத்தின் தேசிய ஆணைக்குழு, நாட்டிலுள்ள முன்னுரிமை நகரங்களில் ஒன்றாக சென்னையை அங்கீகரித்துள்ளது. சென்னை நகரின் முக்கியத்துவத்தினால், அது பெரியதாகவும், விரைவாகவும் வளரும் வாய்ப்புள்ளது. நகர்மயமாக்கலின் தேசிய ஆணைக்குழுவின் பார்வையின்படி நகர்மயமாதல் தொடர்ச்சியான மற்றும் வலிமையான இயங்கு நிலையாகவும், தவிர்க்கமுடியாத நிகழ்வாகவும் இருக்கிறது. இங்கு செய்யப்படும் மூலதனமும், பல்வேறு துறை வளர்ச்சிக்குப் பெற்றுவந்த தொடர்பான முன்னுரிமையும் ஒவ்வொரு காலக் கட்டத்தில் கையாளப்படும் அரசின் கொள்கையினால் பெரிதும் தாக்கம் பெற்றுள்ளது. தற்போதைய தாராளமயமாக்கப்பட்ட சூழ்நிலை மற்றும் தொழில்துறை வளர்ச்சியின் தனித்துவம், பன்னாட்டு நிறுவனங்களின் நுழைவினால் ஏற்பட்ட தற்போதைய நிலை, ஆகியவற்றின் அடிப்படையில், நகர்மயமாதலின் நடப்பு நிலையை ஒரு அறிகுறியாக எடுத்துக் கொண்டால் சென்னைப் பெருநகரப் பகுதியின் வளர்ச்சியின் வேகம் மிக அதிகமாக இருக்கும். இந்த நிலையில் சென்னைப் பெருநகரப் பகுதியின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுகின்ற வகையில் திட்டமிடவும், திட்டங்களை நடைமுறைப்படுத்தவும், வளர்ச்சிக்கு வழிகாட்டவும், துரித நடவடிக்கைகள் எடுப்பது அவசியமாகின்றது.

இதன் அடிப்படையில், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், இரண்டாவது முதன்மை திட்டத்தை தயார் செய்து அரசுக்கு சமர்ப்பித்துள்ளது. தவிர, நகர அபிவிருத்தியைச் சீரமைக்கும் நோக்கமாகவும், இப்பெருநகரப் பகுதியின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றமடையச் செய்யவும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் பல அபிவிருத்தித் திட்டங்களை வடிவமைத்துள்ளது.

[1997 ஏப்ரல் 1

இந்தப் பெருநகர்ப் பகுதியில், அடிப்படை வசதிகளும், பயன்பாடுகளும், அனைத்து குடியக்களுக்கும் கிடைப்பதற்கு, உள்ளமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களுக்கு கட்டாயமாக முக்கியத்துவம் கொடுத்தாக வேண்டும். எனவே, நகர்மயமாதலில், அரசின் பங்கு அபிவிருத்தியாளராக இருப்பதைவிட, தனியார் துறையினர் வளர்ச்சியை ஊக்குவிக்கும்படி இருக்கின்ற வகையில், பெருநகர் வளர்ச்சித் திட்டங்களின் கொள்கை மாற்றியமைக்கப்பட வேண்டியிருக்கிறது. மேற்படி கருத்துக்களை முன்னிறுத்தி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், பலவிதமான மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

## 4.1 நெரிசலை தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள்

சென்னைப் பெருநகரில் பல பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் கடுமையாக உள்ளது. மொத்த விற்பனை நடவடிக்கைகள் அமைந்துள்ள மத்திய வர்த்தகப் பகுதிகளில் இதன் தாக்கம் அதிகமாகவே உள்ளது. எனவே, மத்திய வர்த்தகப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள நெரிசலைத் தவிர்க்க அரசு ஒருங்கிணைந்த வழிகளில் நடவடிக்கை எடுக்க உறுதி பூண்டுள்ளது. இக்குறிக்கோளை அடையும் நோக்கில் மத்திய வர்த்தகப் பகுதியின் மொத்த விற்பனை நடவடிக்கைகளை சென்னைப் பெருநகரை யொட்டியுள்ள புறநகர்ப் பகுதிகளுக்கு மாற்ற அரசு முடிவு செய்தது. காய், கனி மற்றும் மலர் மொத்த விற்பனை அங்காடிகளின் விற்பனை நடவடிக்கைகள் கோயம்பேட்டில் 14-12-1996 முதல் துவங்கின. மேலும், ஜவுளி மற்றும் தானியங்களுக்கு முறையே தனித்தனியே வணிக வளாகங்களை கோயம்பேட்டிலேயே நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 4.1.1. துணி வகைகளுக்கான வளாகம்

துணி வகைகளுக்கான வணிக வளாகத்தை அமைப்பதற்காக கோயம்பேடு மொத்த விற்பனை வளாகத்தில் 21.5 ஏக்கர் நிலப்பரப்பு கையகப்படுத்தப்பட்டுள்ளது. வளாகம் அமைப்பதற்கான உத்தேச மதிப்பீடு ரூ. 165 கோடிகள் ஆகும். இத்திட்டம், பெருநகர் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்தின் கடனுதவியுடனும், பயனடைவோரிடமிருந்து பெறப்படும் நிதியுடனும் நிறைவேற்றப்படும். சுமார் 1,500 கடைகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மத்திய வர்த்தகப் பகுதியில் இருக்கும் துணி வகைகளுக்கான மொத்த விற்பனை அங்காடிகள் இந்த நவீன வளாகத்திற்கு மாற்றப்படும். வடிவமைப்புப் பணிகள் துவங்கப்பட்டுள்ளன. இந்த வளாகத்தை மாற்றியமைப்பதற்கு வணிகர்களின் ஒத்துழைப்பு பெறப்பட்டுவிட்டது.



1997 ஏப்ரல் 1]

### 4.1.2. இரும்பு மற்றும் எஃகு விற்பனை வளாகம்

சென்னையின் புறநகர்ப் பகுதியான சாத்தங்காட்டில் இரும்பு மற்றும் எஃகு மொத்த விற்பனை வணிக வளாகம் மேம்படுத்தப்பட்டுள்ளது. இந்த வளாகம், 1989-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டும்கூட, தமிழ்நாடு குறித்துரைக்கப்பட்ட வணிகப் பொருட் சந்தைகள் அமைவிடத்தை முறைப்படுத்துதல் சட்டம் நடைமுறைக்குக் கொண்டுவராததால் வர்த்தக நடவடிக்கைகள் இதுவரையில் தொடங்க முடியவில்லை. இச்சட்டத்தை செயல்படுத்த இந்த அரசு, துரித நடவடிக்கைகள் எடுத்ததின் காரணமாக, தற்போது சாத்தங்காட்டில் வர்த்தக நடவடிக்கைகள் தொடங்க இயலும். நடப்பு நிதியாண்டில், இரும்பு மற்றும் எஃகு அங்காடி, சாத்தங்காடு புதிய வளாகத்தில் இயங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

### 4.1.3. சென்னைப் பெருநகர பேருந்து முனையம்

தற்போது, நகரில் வெளியூர் பேருந்து நிலையங்கள், நகரின் பல்வேறு பகுதிகளில் பிராட்வே பேருந்து நிலையம், உயர் நீதிமன்றத்தின் அருகிலுள்ள விரைவுப் பேருந்து நிலையம், பேசின் பாலம் பேருந்து நிலையம் என பல இடங்களில் இயங்கி வருகின்றன. இப்பேருந்து இயக்கங்களினால் நகரின் உட்புறச்சாலைகளில் ஏற்படும் நெரிசலை குறைக்கும் பொருட்டு தேவையான இடவசதியுடன் கூடிய புதிய பேருந்து முனையத்தை (பேருந்து இயக்கத்திற்கும், பயணிகளுக்கும் தேவையான நவீன வசதிகளுடன்) கோயம்பேட்டை ஒட்டியுள்ள உள்வட்டச் சாலையில் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இப்பேருந்து முனையத்தை, சுமார் 25 ஏக்கர் நிலப்பரப்பில் மேம்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இப்புதிய பேருந்து முனையத்திற்கான உத்தேச செலவு சுமார் ரூ. 88.00 கோடிகள் என்றும், மேம்பாலம் அமைக்க சுமார் ரூ. 10.00 கோடிகள் என்றும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை, மாநகர திட்டத்தின் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் பணிகள் 1997-98-ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

## 4.2. வெளிவட்டச் சாலைக்கும், உள்வட்டச் சாலைக்கும் இடையே புறநகர் அபிவிருத்தித் திட்டம்

எதிர்காலப் போக்குவரத்தை மனதில் கொண்டு, ஒரு முறையான நெரிசலற்ற போக்குவரத்தை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தில், வண்டலூரிலிருந்து மீஞ்சூர் வரையிலும், சுமார் 62.0 கி.மீ. நீளத்திற்கு ஒரு வட்டச்சாலை (வெளி வட்டச் சாலை) திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கு அரசின் ஒப்புதல் பெறப்பட்டு வேலை தொடங்கப்பட்டுவிட்டது. மேலும், தேசிய புறவழிச் சாலை ஒன்று தாம்பரத்திலிருந்து புழல் வரையில் செல்லும் வகையில் நெடுஞ்சாலைத் துறையினால் அமைக்கப்பட உள்ளது. இந்த இருபெரும் சாலைகள் அமைக்கப்படும்பொழுது, இவற்றின் இருமருங்கிலும், நகர்ப்புற வளர்ச்சி விரைவாக நடக்கும்.

ஆகவே, திட்டமிடப்பட்ட, விரும்பத்தக்க வளர்ச்சியை உறுதி செய்வதற்காக ஒரு பெரும் புதுநகர்த் திட்டம், இப்பகுதியில் உருவாக்குவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன. இது சென்னைப் பெருநகரத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கக்கூடிய தொழில்களை அமைக்க வழி வகுக்கும். நகரத்தின் அடர்ந்த மக்கள் தொகையை பரவலாக்கி உள்கட்டமைப்பு வசதிகளின் நெரிசலைப் பெருமளவு குறைக்கும். இத்திட்டப் பகுதியில் சுமார் 15 லட்சம் மக்கள் குடியமர்த்தப்படுவார்கள். இத்திட்டம், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் 10 ஆண்டுகளில் நிறைவேற்றப்பட உள்ளது. நிலம் கையகப்படுத்துதல், உள்கட்டமைப்பு அபிவிருத்தி ஆகியவற்றுக்கான உத்தேச செலவீனம் ரூ. 1200 கோடிகள் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும், இத்திட்டம் நூதன முறையில் பொது மற்றும் தனியார் நிறுவனங்களின் கூட்டு முயற்சியுடன் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தை லாபகரமாக செயல்படுத்துவதற்கான ஆய்வு, இந்த நிதியாண்டில் மேற்கொள்ளப்படும். இதற்காக, அரசு இந்த நிதியாண்டில் ரூ. 10 இலட்சம் மான்யமாக வழங்கியுள்ளது.

## 4.3. போக்குவரத்து அடிப்படை வசதிகள்

பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படை வசதிகள் குறிப்பாக போக்குவரத்து அடிப்படை வசதிகள் மிக அவசியமானதாகும். பொருளா தாரம், தொழில்துறை, வர்த்தகம் முதலியவைகளின் உலகமயமாதல், மற்றும் பன்னாட்டுமயமாதல் தொடர்பாக மத்திய, மாநில அரசுகள் உறுதியான நடவடிக்கை எடுத்து வருகின்றன. சீருந்து தொழிற்சாலை, கண்ணாடி தொழிற்சாலை, கணிப்பொறி தொழிற்சாலை மற்றும் சுற்றுப்புறத்தை மாசுபடுத்தாத தொழிற்சாலைகள் முதலியவைகளில் பன்னாட்டு நிறுவனங்கள் மூலதனங்கள் இடுவதை நமது நாடு தற்பொழுது கண்கூடாக காண்கிறது. பெருநகரங்களில் விமானநிலையம், துறைமுகம் முதலியவற்றுக்குச் செல்ல வழிகள், நன்கு நிர்மாணிக்கப்பட்ட தொடர் சாலைகள் மற்றும் இருப்புப்பாதை உள்ளமைப்புகள், முதலியவைகள் பன்னாட்டு நிறுவனங்களின் முதலீட்டை ஈர்த்துள்ளன.



பொருளாதார வளர்ச்சியை உருவாக்குகின்ற சக்திவாய்ந்த பொறியாக மாபெரு நகரங்கள் இருக்கின்றன என்ற உண்மையின் காரணமாக, வெளிநாட்டு மூலதனங்கள் மாபெரு நகரங்களில் ஈர்க்கப்படுகின்றன. இதற்கு, சென்னை விதிவிலக்கல்ல. மேலும், இயக்கூர்திகள் மாபெரும் நகரங்களில் அதிகமாக உள்ளது. (சென்னையில் 31 சதவிகிதம்). எனவே, மாபெரு நகரங்களில் போக்குவரத்து அடிப்படை வசதிகளின் தரத்தை தொடர்ச்சியாக உயர்த்த வேண்டிய அவசரத் தேவை உள்ளது. தற்போதைய போக்குவரத்து அடிப்படை வசதிகளை பராமரிப்பது மட்டுமின்றி, சென்னைப் பெருநகர்ப் பகுதியில் அதிகரிக்க இருக்கின்ற போக்குவரத்துத் தேவைகளை சந்திக்கும்வண்ணம், போதிய நிதி ஆதாரங்களை கண்டுகொள்ள வேண்டிய அவசரத்தேவை ஏற்பட்டுள்ளது. சென்னைப் பெருநகர்ப் பகுதியின் போக்குவரத்து உள்ளமைப்புக் கட்டுமானத்தை பலப்படுத்த மேற்கொண்டுள்ள முயற்சியில் கீழ்க்காணும் வழிமுறைகள் உத்தேசிக்கப்பட்டுள்ளன:

### (1) சென்னைப் பெருநகர் சாலை அபிவிருத்தி நிதி

சென்னை நகரின் சாலை ஒருங்கிணைப்புப் பணிகளுக்கென, ஒரு நிதி ஆதாரத்தை ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஆராய்ந்து வருகிறது.

### (2) நெடுஞ்சாலைத் திட்டங்களுக்கான கடனுதவியை பெருநகர் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் பெறுவது

உள்வட்டச் சாலையில் திருமங்கலத்தில் அமையவிருக்கும் பலநிலைப் பாலங்கள் மற்றும் உள்வட்டச்சாலை, பூந்தமல்லி நெடுஞ்சாலையில் அமையவிருக்கும் சாலைச்சந்திப்புகள், நகர எல்லையிலிருந்து பூந்தமல்லி வரை அபிவிருத்தி, பரங்கிமலை-பூந்தமல்லி நெடுஞ்சாலையை அபிவிருத்தி செய்தல் முதலிய திட்டங்களைச் செயல்படுத்த மாபெரு நகர் திட்டங்களின் கீழ் சென்னைப் பெருநகர் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்திடம் கடனுதவி பெறுதல், மற்றும் அதற்கு இணையான கடன் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி நிறுவனத்திடம் பெறுதல் ஆகியவை உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனால் ஏற்படுகின்ற கடனுக்கு ஆண்டுதோறும் திருப்பிச் செலுத்தவுள்ள கடன்களுக்காக, 15 வருட காலத்திற்கான தொடர்மானியம் பெற எண்ணப்பட்டுள்ளது.

### (3) சென்னைப் பெருநகர்ப் பகுதியின் சாலைகள் ஒருங்கிணைப்பு மேம்பாட்டிற்கான எதிர்காலத் திட்டம்

பெருநகரங்களின் எதிர்கால வளர்ச்சியை மேலாண்மை செய்யவும், பொருளாதார திட்டமிடுதலை நிலைப்படுத்தவும், ஒரு திறன்மிக்க போக்குவரத்து ஒருங்கிணைப்பு மேம்பாட்டுக்கான திட்டத்தை உருவாக்குவது கடினமான செயலாகும். பெருநகரத்தின் முக்கிய பெருவழிச் சாலைகளில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும், சாலை அமைப்பில் நிலைத்தன்மை அமைக்கவும், ஒரு உச்ச அளவு ஒருங்கிணைப்புப் பணிக்கான திட்டம் அவசியமாகிறது. இது தற்போதைய சாலைகளின் ஒருங்கிணைப்பு நிலையை நிலைப்படுத்துவதுடன் விடுபட்ட சாலைகளுக்கு இணைப்புகளை உருவாக்கி சாலைத்திறனை மேம்படுத்துவதற்கான மொத்த அமைப்பாக விளங்கும். அடுத்த 20 வருடங்களுக்கான சாலை ஒருங்கிணைப்புத் திட்டம் தயார் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 4.4. முக்கியத்துவம் வாய்ந்த சாலைகள் அகலப்படுத்தும் திட்டம்

சென்னைத் துறைமுகத்தில் பெட்டகப் போக்குவரத்து மிகுதியாக நடைபெறுகின்றது. இத்தகைய பெட்டகப் போக்குவரத்திற்கு, அகலமானதும், திடமானதுமான சாலை வசதிகள் தேவைப்படுகின்றன. எனவே, சென்னையிலும் அதைச் சுற்றியும் ஏற்படுகின்ற பெட்டகங்களின் இயக்கங்களை ஆய்வு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், சாலைப் போக்குவரத்தை மேம்படுத்தவும், ஏற்கெனவே அமைந்துள்ள சாலைகளை ஒழுங்குபடுத்தி அகலப்படுத்தவும் உண்டான சாத்தியக் கூறுகளையும் ஆய்வு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு தமிழக அரசு நடப்பு ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 10 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

### 4.5. திரளான துரித இரயில் போக்குவரத்து முறை - பகுதி இரண்டு

திரளான துரித இரயில் போக்குவரத்து முறை கடற்கரையிலிருந்து சேப்பாக்கம் வரை ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது. இதனை, லஸ்முனை வரை அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது. இப்பணி விரைவில் முடிந்து போக்குவரத்து தொடங்கிவிடும். தமிழக அரசும், இந்திய அரசும், இத்திட்டத்தினை வேளச்சேரி வரை நீட்டிக்க பகுதி இரண்டில் ஒப்புக்கொண்டுள்ளன. லஸ் முதல் வேளச்சேரி வரையிலான 10.306 கி.மீ. நீளப்பகுதிக்கான திட்டச் செலவு ரூ. 605 கோடிகளாகும். இதனை, தமிழக அரசு மூன்றில் இரண்டு பங்கு செலவினையும், இந்திய





அரசு மூன்றில் ஒரு பங்கு செலவினையும் ஏற்க உள்ளன. நடப்பு நிதியாண்டில், இத்திட்டத்திற்காக தமிழக அரசு ரூ. 50 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டத்தின் செயலாக்கத்தை சென்னைப பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஒருங்கிணைத்து மேலாண்மை செய்யவுள்ளது.

### 4.6 வெளிவட்டச் சாலை

மேலும், போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் வகையில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், இரயில் தடம் அமைப்பதற்கான இடமும் சேர்ந்த புதிய சாலை அமைக்க கவனம் செலுத்தி வருகிறது. சென்னை - திருச்சி சாலை (ஜி.எஸ்.டி. சாலை), சென்னை - திருவள்ளூர் சாலை, சென்னை - பெங்களூர் சாலை, சென்னை - நெல்லூர் சாலை மற்றும் திருவொற்றியூர் - பஞ்செட்டி சாலை ஆகியவற்றை இணைக்கும் வெளிவட்டச்சாலை ஒன்றை அமைக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. தெற்கில் வண்டலூரையும், வடக்கில் மீஞ்சூரையும் இணைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள சாலையின் உத்தேச மதிப்பீடு ரூ. 317 கோடிகளாகும். இந்தச் சாலையின் நீளம் சுமார் 62.0 கி.மீ. ஆகும். நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

இத்திட்டத்தை, அமைத்து இயக்கி அளித்தல் (பி.ஓ.டி.) என்ற முறையில் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை மேற்படி கோட்பாட்டின் கீழ் வியாபார ரீதியில் செயல்படுத்துவதற்கான ஆய்வு அறிக்கையினை தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்வறிக்கையினை தயாரிப்பதற்கான செலவு ரூ. 1.5 கோடியாகும். அவ்வறிக்கையானது ஆலோசகரின் மூலம் நடப்பு நிதியாண்டில் தயாரிக்கப்பட உள்ளது.

### 4.7. சென்னைக்கான வளம் குன்றா வளர்ச்சித் திட்டம்

சென்னைக்கான வளம் குன்றா வளர்ச்சித் திட்டம், சென்னையின் சுற்றுச் சூழல் பிரச்சினைகளைக் கண்டறிந்து பகுப்பாய்வு செய்வதற்கேற்ற தனிநபர் மற்றும் நிறுவனங்களின் திறனை மேம்படுத்துதல் மற்ற துறைகளின் வளர்ச்சித் திட்டமிடல் பணிகளில் மறுபயன்களை ஒருங்கிணைத்தல் ஆகிய நோக்கங்களைக் கொண்டது. ஐக்கிய நாடுகள், மனித குடியேற்ற மையத்தின் வளம் குன்றா வளர்ச்சித் திட்ட நகரங்களின் கூட்டமைப்பில், தெற்காசியாவிலேயே இணைக்கப்பட்ட ஒரே மாநகரமாக சென்னை மாநகரம் விளங்குகிறது. சென்னைக்கான வளம் குன்றா வளர்ச்சித் திட்டத்திற்கு ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டமும் (UNDP), தமிழக அரசும் இணைந்து நிதி உதவி வழங்குகிறது. இத்திட்டத்தின் மொத்த செலவினம் ரூ. 2.46 கோடிகளாகும். இதில், தமிழக அரசின் பங்கு சுமார் ரூ 45.70 இலட்சங்களாகும்.

விரைவில், நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள மாநகர அளவிலான கருத்தரங்கில் கீழ்க்காணும் பிரச்சினைகள் விவாதிக்க தேர்வு செய்யப்பட்டுள்ளன:

1. நீர்வழிகளைச் சுத்தப்படுத்துதல்.

2. துப்புரவு மேம்படுத்துதல் (ஏழைகள் குடியிருப்பு மற்றும் புறநகர்ப் பகுதி).

3. சாலையில் போக்குவரத்து நெரிசலைக் குறைத்தல்.

**4.8. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்**

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்ட சென்னைப் புறநகர் வளர்ச்சித் திட்டம் - 1 மற்றும் 2 ஆகியவற்றில், கிடைத்த அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு 1988- ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் என்னும் பெரிய அளவிலான திட்டம் உலக வங்கி உதவியுடன் தொடங்கப்பட்டது. தொடக்கத்தில், இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு சுமார் ரூ. 632.60 கோடிகளாகும். இத்திட்டம் பின் ரூ. 988.50 கோடிகளாக மறுமதிப்பீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் தமிழகத்தில் பத்து நகர்ப்புறங்களுக்குத் தன்னிறைவு வீட்டுமனைகள் உருவாக்குதல், சாலை மற்றும் போக்குவரத்து வசதி, குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்காக புதிய பேருந்துகள் வாங்குதல் ஆகியவை இத்திட்டத்தில் அடங்கும். இத்திட்டத்தின்கீழ் உள்ளாட்சி நிறுவனங்களில் உள்ள வருவாய் உள்ள மற்றும் வருவாய் இல்லாத திட்டங்களுக்கு நிதி உதவியுடன் தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்குவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளன. திட்ட கண்காணிப்புக்காக தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளரை, தலைவராகக் கொண்டு ஓர் உயர் மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

(அ) தன்னிறைவு வீட்டுமனை திட்டப்பிரிவில் 29 திட்டங்கள் முடிக்கப்பட்டு மனைகள் ஒப்படைக்கும் வேலைகள் நடந்து கொண்டும் மற்றும் 4 திட்டங்களுக்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டும் இருக்கின்றன. திட்டமிடப்பட்ட 88,634 மனைகளில், இதுவரை 87,024 மனைகளுக்கான பணிகள் முடிவடைந்துவிட்டன. 31-12-96 வரை ரூ. 275.32 கோடி செலவிடப்பட்டுள்ளது.



(ஆ) குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மொத்த திட்ட மதிப்பீடான ரூ. 32.60 கோடிகளில், 31-12-96 முடிய ரூ. 31.96 கோடி செலவிடப்பட்டுள்ளது. 31-12-96 வரை 75,666 மனைகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

(இ) சாலை மற்றும் போக்குவரத்துத் திட்டத்தில், மொத்த மதிப்பீடான ரூ. 195.91 கோடியில், 42 வேலைகள் வெவ்வேறு நிலைகளில் உள்ளன. இதில், 24 வேலைகள் முடிவடைந்துவிட்டன. இந்த உறுப்பினத்தின் கீழ் 31-12-96 வரை ரூ. 190.32 கோடி செலவழிக்கப்பட்டுள்ளது.

இது தவிர ரூ. 11.24 கோடி மதிப்பீட்டில் நகரத்தை ஒட்டியுள்ள மருத்துவமனைகள் கட்டுதல் மற்றும் விபத்துகளுக்கான அவசர சிகிச்சைப் பிரிவுகள் ஆகியவற்றிற்காக செலவு செய்யப்பட உள்ளது.

புற மருத்துவமனைகள் கட்டுவதற்காக சென்னை நகரில் பல்வேறு பகுதிகளில், 5 இடங்கள் தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளன. மேலும், விபத்திற்கான அவசர சிகிச்சைப் பிரிவுகளைப் பயன்படுத்தும் வகையில் சென்னை ராயப்பேட்டை, கீழ்பாக்கம் மருத்துவமனைகளில் பணிகள் முடிவடைந்துவிட்டன. மற்றும் எழும்பூர் குழந்தை நல மருத்துவ மனைகளில் குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றுதல் சம்பந்தமான பணிகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. மற்றும் போக்குவரத்து மேலாண்மைச் சாதனங்கள், இரண்டு சக்கர வாகனங்கள், வீடியோ படச் சாதனங்கள், வானொலி நிலையச் சாதனங்கள் சேகரிப்பதற்காகவும், காவல்துறைக்கு ரூ. 1.89 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில், இதுவரை ரூ. 0.89 கோடி செலவிடப்பட்டுள்ளது.

(ஈ) பல்லவன் போக்குவரத்துக் கழகமும், டாக்டர் அம்பேத்கர் போக்குவரத்துக் கழகமும் இணைந்து 1,595 பேருந்துகளுக்கான அடிப்பீடங்கள் வாங்கப்பட்டு, பேருந்து கட்டமைப்பு செய்வதற்கான பணிகளும் முடிவடைந்து உள்ளன. பேருந்து நிலையம் கட்டும் பணிகளில், மொத்த இடங்களான 7-ல் 4 இடங்களில் பணிகள் முடிவடைந்துள்ளன. மீதியுள்ள 3 இடங்களில் பணிகள் நடைபெறுகின்றன. 31-12-96 முடிய ரூ. 92.86 கோடி செலவிடப்பட்டுள்ளது.

(உ) நகராட்சி நகர்ப்புற வளர்ச்சி நிதியின் கீழ், பல்வேறு பொதுசேவை நிறுவனப் பணிகளுக்கென 31-12-96 வரை ரூ. 210.46 கோடி செலவிடப்பட்டுள்ளது.

[1997 ஏப்ரல் 1

## 5. நகர்ப்புற வளர்ச்சிக்காக புதிய நிதி நிறுவனம்

உலக வங்கியுடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தின்படி தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் ஒரு உறுப்பினமான நகராட்சி நகர்ப்புற வளர்ச்சி நிதியை மறுவடிவமைப்பு செய்து தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி என்ற புதிய அறக்கட்டளை நிதி நிறுவப்பட்டு, அதன் மூலம் உள்ளாட்சி நிறுவனங்கள் பரிந்துரைக்கும் நகர்ப்புற அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது. வறுமையை அகற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் குறைந்த வருமானம் உள்ள மக்கட் தொகை கொண்ட வருமானம் அதிகம் இல்லாத உள்ளாட்சி நிறுவனங்களுக்கு நிதியுதவி அளிக்கும் பொருட்டு மானிய நிதி என்றதொரு நிதியும் 'நிறுவப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியின் நிர்வாகப் பொறுப்பு அரசின் பிரதிநிதிகள் மற்றும் நிதி அளிக்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் அடங்கிய நம்பகர் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த புதிய நிதி நிறுவனம் நன்கு இயங்க அதன் இன்னொரு அங்கமான சொத்து மேலாண்மை நிறுவனத்துடன் நம்பகர் குழு ஒரு மேலாண்மை ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. நம்பகர் குழு வகுத்துக் கொடுக்கும் வழிமுறைகளின்படி சொத்து மேலாண்மை நிறுவனம் இந்த நகர்ப்புற வளர்ச்சி நிதியை அளிக்கும். சொத்து மேலாண்மை நிறுவனம் மானிய நிதியையும் நிர்வகிக்கும். இந்தியத் தொழில் கடனுதவி முதலீட்டுக் கழகம் (ஐசிஐசிஐ) அடிப்படை வசதிக்கான கடன் வசதி நிதியுதவிப் பணிகள் நிறுவனம் (ஐஎல்எப்எஸ்) வீட்டுவசதி மேம்பாட்டு நிதியுதவி கழகம் (எச்.டி.எப்.சி.) போன்ற தனியார் நிதியுதவி நிறுவனங்கள் இதில் பங்கேற்றுள்ளன. நம்பகர் நிறுவனம் மற்றும் சொத்து மேலாண்மை நிறுவனம் ஆகியவை முறையே தமிழ்நாடு நகர்ப்புற அடிப்படை வசதி நம்பகர் நிறுவனம் என்றும் தமிழ்நாடு நகர்ப்புற அடிப்படை வசதி நிதிப்பணிகள் நிறுவனம் என்றும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் நம்பகர் நிறுவனத்திற்குத் தலைவராக இருக்கிறார். தமிழ்நாடு நகர்ப்புற அடிப்படை வசதி நம்பகர் நிறுவனத்தில் அரசின் பிரதிநிதிகளாக நான்கு அரசுச் செயலாளர்களும், தமிழ்நாடு நகர்ப்புற அடிப்படை வசதி நிதிப்பணிகள் நிறுவனத்தில் அரசின் பிரதிநிதிகளாக 3 அரசுச் செயலாளர்களும் இடம் பெற்றுள்ளனர்.

இந்த நிதியின் மூலம் 1997-98-ஆம் ஆண்டு நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களுக்கு ரூ. 60 கோடி கடன் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.



1997 ஏப்ரல் 1]

## 6. பெருநகர் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம்

விரைந்து மேற்கொள்ளப்படும் நகர்மயமாக்கல் திட்டத்தினால், சென்னை, டெல்லி, மும்பை, கல்கத்தா போன்ற பெரிய நகரங்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்த வேண்டிய நிலை உருவாகியுள்ளது. மேற்படி தேசிய நகரங்களில் எவ்வளவு வேகமாக நகர்மயமாக்கல் நடைபெறுகிறதோ அவ்வளவு அதிகமாக அடிப்படை வசதிகளை வளர்ச்சியடையச் செய்ய வேண்டியுள்ளது. எனவே இது மிகவும் இன்றியமையாத முக்கியத்துவம் பெறுகிறது. நிதி ஒதுக்கீட்டினால் மட்டும் அதிகரித்துக்கொண்டே வரும் அடிப்படை வசதித் தேவைகளை நிறைவு செய்ய முடியாது. மேலும் இத்திட்டத்திற்காக செலவு செய்யப்படும் தொகைக்கேற்றவாறு பிரதிபலன் இல்லாததாலும், நிறைவேற்ற காலம் அதிகமாவதாலும், இதற்கான நிதி ஒதுக்கீடு குறைந்து கொண்டே வருகிறது.

இதனைக் கருத்தில் கொண்டு அடிப்படை வசதிகளைப் பெருக்க மத்திய அரசு, பெருநகரத் திட்டம் ஒன்றினை வகுத்துள்ளது. இந்த மைய நிதியுதவித் திட்டம் சென்னையைத் தவிர மும்பை, கல்கத்தா, ஐதராபாத் மற்றும் பெங்களூர் நகரங்களில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், மைய, மாநில அரசுகள் முறையே திட்டச் செலவில் 25 சதவிகிதத்தைக் கடனாக வழங்குகிறது. மீதமுள்ள 50 சதவிகிதத்தை, செயல்படுத்தும் முகமைகள், தங்களுடைய நிதியிலிருந்தோ, அல்லது நிதி நிறுவனங்களிடமிருந்தோ ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.

1994-ஆம் ஆண்டு மே திங்களில் தமிழ்நாடு அரசு ஏற்படுத்தியுள்ள சென்னைப் பெருநகர் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்திடம், சென்னைப் பெருநகரில் பெருநகரங்கள் திட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், சென்னை மாநகராட்சி மற்றும் சென்னைப் பெருநகர் குடிநீர் வடிகால் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் ஆகிய செயல்படுத்தும் முகமைகள் உள்ளன. பெருநகர் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம் திட்டங்களைக் கீழ்க்காணும் மூன்று வகைகளாகப் பிரித்து அவைகளுக்கு நிதி உதவி வழங்குகிறது:

1. ஆதாயம் தரும் திட்டங்கள் (வணிக வளாகம், ("அ" வகை)
   அங்காடி வளாகம், அலுவலக வளாகம்
   மற்றும் கல்யாண மண்டபம் கட்டுதல்
   போன்றவை).

2. செலவுத் தொகை வசூலிக்கும் திட்டங்கள் (குடிநீர் வழங்கல், நீர்நிலை தொட்டிகள் மற்றும் பொழுதுபோக்கு பூங்காக்கள் போன்றவை). ("ஆ" வகை)
3. சேவை அடிப்படையிலான திட்டங்கள் (மழை நீர் வடிகால்குழாய்கள் அமைத்தல், சாலைகள் மேம்படுத்துதல் மற்றும் பாலங்கள் கட்டுதல் போன்றவை). ("இ" வகை)

இதற்காகும் வட்டி வீதங்கள் முறையே 15:14:14 சதவீதமாகும். இக்கழகத்தின் நிதி, இவ்வகைத் திட்டங்களுக்கு 40:30:30 என்ற விகிதாச்சாரத்தில் ஒதுக்கப்படுகிறது. சேவை அடிப்படையிலான திட்டங்களுக்கு அனுமதித்த கடனில் 10 சதவீதத் தொகை மானியமாகப் பெறலாம்.

இத்திட்டத்தின்கீழ், 1994-95-ல் இக்கழகம் 14 திட்டங்களுக்கு ரூ. 102.16 கோடி மேற்கூறிய மூன்று முகமைகளுக்கும் கடனாக வழங்கியுள்ளது. 1995-96-ல் 27 திட்டங்களுக்கு ரூ. 29.55 கோடி சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், சென்னை மாநகராட்சி மற்றும் தாம்பரம், பல்லாவரம், ஆலந்தூர், அம்பத்தூர் நகராட்சிகளுக்கு வழங்கியுள்ளது. 1996-97-ஆம் ஆண்டிற்கு இக்கழகம் ரூ. 194.75 கோடிக்கு பெரிய திட்டங்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது. எனவே இதுவரை இக்கழகம் ரூ. 326 கோடி மதிப்பீட்டிலான திட்டங்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

1993-94 முதல் 1995-96 வரை இத்திட்டத்திற்காக ரூ. 86 கோடி (தமிழ்நாடு அரசு ரூ. 43 கோடி + இந்திய அரசு ரூ. 43 கோடி) பெருநகர் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு இத்திட்டத்திற்கு 1996-97-ல் ரூ. 50 கோடி நிதி ஒதுக்கியுள்ளது. இதில் ரூ. 8.5 கோடி ஏற்கனவே இக்கழகத்திற்கு கொடுக்கப்பட்டுவிட்டது. மீதமுள்ள ரூ. 41.5 கோடியினை மைய அரசு தனது பங்குத் தொகையினை விடுவித்தவுடன், மாநில அரசும் விடுவிக்கும். இத்திட்டத்தின்கீழ் 1997-98-ஆம் ஆண்டில் ரூ. 200 கோடி மதிப்பீட்டிலான கூடுதல் திட்டங்களுக்கு அரசின் அனுமதி வழங்கப்படவுள்ளது.

7. நகர்ப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு நல்ல சுகாதாரமான இருப்பிடங்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும், நகரங்களின் திட்டமிட்ட வளர்ச்சிக்கும் 'நகர்ப்புற வளர்ச்சி' என்ற பகுதியின் கீழ் இந்த கொள்கை விளக்கக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது போன்ற பல திட்டங்கள் சிறந்த முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 1997-98-ஆம் நிதியாண்டிலும் பல முன்னேற்றத் திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்த உள்ளது.

24826